


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..டக்களப்பு புனித செபஸ்தியார் [illegible] வெளியீடு.

0374

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயம் — 2

நாவல்:
மஞ்சு நீ மழை முகில் அல்ல
(பாகம் ஒன்று)

ஆக்கம்:
"திமிலைத்துமிலன்"

பதிப்புரிமை:
புனித செபஸ்தியார் அச்சகம்
65, லேடி மனிங் டிறைவ்,
மட்டக்களப்பு. 065 - 2086.

ரூபா: 20/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயம்

ஒளி: 1 ❉ வைகாசி - புரட்டாதி 1988 ❉ கதிர்: 2


## எமது கருத்து

எமது கன்னி வெளியீட்டில் உறுதியளித்தபடி 'உதயம்' இரண்டாவது இதழை வைகாசித் திங்களில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். ''சொல்வது எளிது. செய்வது கடினம்'' என்பார்கள். நாம் சொன்னவற்றைச் செயலில் காட்டியுள்ளோம். இதற்கு எடுத்துக் காட்டாக 'தமிழைத் துமிலன்' எழுதிய 'மஞ்சு நீ மழைமுகில் அல்ல'' என்ற முழு நாவலை எமது இரண்டாவது வெளியீடாகச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

'உதயம் இரண்டாவது வெளியீடு பற்றி எமது கன்னி வெளியீட்டில் குறிப்பிட்டிருந்த குறுநாவல்களாகிய ''தீபச் சுடர்'' , ''மணற்கேணி'' ஆகியன எழுத்தாளர்களால் குறுநாவல்களாக எழுத முற்பட்டும் அவை முழு நாவல் களாக உருவெடுத்து விட்டன. ஆதலால் அவை காலக்கிரமத்தில் எம்மால் வெளியிடப்படும்.

''மஞ்சு நீ மழைமுகில்அல்ல'' மட்டக்களப்புக்கே உரித்தான பேச்சு வழக்கில் மட்டக்களப்பு பட்டணத்தையும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களையும் மையமாகக்கொண்டு பின்னப்பட்ட கதையாகும். பட்டணத்தின் நாகரீக வளர்ச்சி - கிராமத்தின் இயற்கை எழில் களங்கமற்ற மனிதனின் மனதை எப்படித் தாக்கத்திற்குள்ளாக்குகின்றது என்பதை இலக்கியச் சுவை ததும்பும் கிராமியப் பாடல்கள் ஒவ்வொன்றை ஒவ்வொரு அத்தியாயத்திலும் புகுத்தியதன் மூலம் அந்தக் காட்சியைப் பல கோணங்களில் படம் பிடித்துக்காட்டி நாவலாசிரியர் நம்மையும் தன்பின்னே அழைத்துச் செல்கின்றார். மட்டக்களப்பு மண்வாசனைக்கு இந்த நாவலும் ஒரு மைல் கல்லாக அமைகின்றது. இந்த நாவல் இரண்டு பாகங்களாக எழுதப்பட்டுள்ளன. பாகம் ஒன்று இன்று உங்கள் கரங்களில் தவழ்கிறது. பாகம் - இரண்டுகாலக்கிரமத்தில்வெளிவருமென உறுதிகூறுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்தில்இலக்கிய தாகங்கொண்ட பொருந்தொகையான வாசகர்கள் இருக்கின்ற போதிலும் எமது முயற்சிக்கு எதிர்பார்த்த ஆதரவு கிட்டவில்லை. 23 - 01 - 88ல் ஆரம்பிக்கப்பட்ட ''உதயம்'' வாசகர் வட்டத்தில் 15 - 05 - 88 வரை நூறு உறிப்பினர்கள் மட்டுமே ரூபா 100 /- வீதம் செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள் என்பதை வேதனையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

''உதயம்'' கன்னி வெளியீட்டு விழாவில் உரையாற்றிய களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர் இரா. நாகலிங்கம் (அன்புமணி) அவர்கள் எமது திட்டத்தைப் பாராட்டி ''இப்படிப்பட்ட முயற்சிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் (500) ஐநூறு வாசகர்களாவது முன் வந்து உறுப்பினர்களாகச் சேராவிட்டால் நாம் இலக்கியத்தைப் பற்றிப் பேச அருகதையற்றவர்களாகி விடுவோம்'' என்று கூறியதை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

எமது மூன்றாவது வெளியீடு 15 - 09 - 88ல் வெளிவர விருக்கின்றது. அதற்கு முன்னர் வாசகர் வட்ட உறுப்பினர் தொகையை 500ற்கு உயர்த்த உதவுமாறு எழுத்தாளர்களையும், வாசகர்களையும் மிகப்பணிவன்புடன் வேண்டுகின்றோம். எழுத்தாளர்களே! வாசகர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் பத்து உறுப்பினர் வீதம் சேர்த்துக்கொடுத்தால் 15-09-88ற்கு முன்னர் 500 உறுப்பினர்களை நிட்சயமாகச் சேர்த்து விடலாமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

வாசகர்களே! எமது வெளியீடுகள் பற்றி உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். தொடர்ந்து ''உதயம்'' நல்லமுறையில் வெளிவரக்கூடிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் எமக்கு எழுதுங்கள் என அன்புடன் கேட்டுக்கொண்டு ''மஞ்சு'' விடம் உங்களை அழைத்துச் செல்கின்றோம்.

**ஆசிரியர்.**

**புனித செபஸ்தியார்**

**பிரசுராலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சு நீ மழை முகில் அல்ல



"திமிலைத் துமிலன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ண மயிலைக் காண.........

''மஞ்சு நீ மழைமுகில் அல்ல...'' எனத்தனது நெஞ்சத்து உருகியவன் நேசன்,—முருகேசன்

எப்போது சொன்னான்?

ஏன் சொன்னான்? என்றறிய நெஞ்சத்தில் ஆசை நெருப்பு முளைக்கிறதா? மஞ்சுளா என்ற வண்ணமயிலைக் காண நீங்கள் துடிப்பது என் நெஞ்சுக்குக் கேட்கிறது.

இந்த நெடுங்கதை......

நான் எழுதத் தொடங்கிய நாள்,...09-10-1960

எழுதி முடித்த தினம்,...17- 06- 1961

ஏறக்குறைய இருபத்து எட்டாண்டு.

இறக்கைகளைப் பின்னோக்கி ஏன் அடிக்க மாட்டீர்கள்? முடியவில்லை;......அப்படியா?

மோசமொன்றுமில்லை அதில்.

இன்றை உலகை மறந்து எழுந்திருங்கள்.

வாசியுங்கள்.

நன்றாய் மனமொன்றி வாசியுங்கள்.

'ஈழத் தமிழினத்தின் இன்னல் வரலாற்றில்; மீன்பாடும் தேனாட்டின் விதியின் விளையாட்டில், ஒருதனிக் கட்டத்தை உள்ளம் உணர்ந்து உருக காலக் கண்ணாடி இந்தக் கதை என்று ஓர் உணர்வு பிறக்குமேயானால், அதுவே பெரிதெனக்கு. அதிகமேன்?......'

இஃது அச்சுவாகனமேறி உங்கள் கரங்களிலே உலவ விதிபடைத்த ''உதயம்'' நிறுவனத்தை உளமார வாழ்த்துகிறேன்.

—திமிலைத்துமிலன்—

திமிலதீவு,
மட்டக்களப்பு.
10 - 05 - 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1. மணமகன் எங்கே?

கடலுக் கலங் காரம்
கப்பலும் பாய்மரமும்
ஊருக் கலங்காரம்
உயர்ந்த நல்ல ஆலமரம்.

அந்த ஆலமர நிழலிலே களைத்துப்போய்வந்து குந்தினன் முருகேசன்.

கிராமப் புறமென்றுல் இந்த முருகனும் வள்ளியும் தானு? வேறு பெயரே கிடைப்பதில்லையா இந்த எழுத்தாளர்களுக்கு? என்று வியக்கும் வாசகர்கள் பலர்.

முருகேசனுக்குக்கூட வியப்பாய்த்தானிருந்தது அவள் அன்று பேசியபேச்சு.

''மச்சான்; உன்னைத்தானே''... என்றுள் அவள்.

''என்ன வள்ளி?''... முருகேசன் ஆவலோடு அவள் முகத்தை நோக்கினுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதுதான் கடைசிமுறை. இனிநான் இந்தக் குளத்துக்கு வரப்போறதேயில்ல''

''ஆம்?''... முருகேசன் துணுக்குற்முன்.

அவள் இனி வரவே மாட்டாளா?

அவள் கொடுப்புக்குள்ளே சிரித்தாள்.

''நான் ஏன் வரணும்? எங்க முத்தத்திலேதான் கிணறு கட்டியாச்சே''... அவள் கலகலத்துச் சிரித்தாள். அப்பாடா; போன உயிர் திரும்பிவந்தது அவனுக்கு.

''கள்ளி!''... என்று திரும்பினுன். அவள் இல்லே. குடத்தை இடுப்பிலே தூக்கிவைத்தவள் காற்முய்ப் பறந்துவிட்டாள்.

அன்று போனவள்தான்;...

அதை விளையாட்டாகவே எண்ணியிருந்தான் அவன்.

அவள் அவனுக்குமேலாய் விளையாடிவிட்டாளா?

அந்த ஆலமரம் எத்தனை பெருமூச்சுக்களைத்தான் சுமந்ததோ!

நிழல் குளுமையாகத்தான் இருந்தது. காற்றும் ஜில் என்றுதான் வீசியது. ஆனுல் உடலும் உள்ளமும் ஒன்முய்க் கொதித்தது முருகேசனுக்கு. தீக்குளித்ததுபோல அனலாய் வழிந்தது பெருமூச்சு.

''கீக்... கீக்...'' சிறகடித்துக்கொண்டு ஒன்றையொன்று வம்புக்கிழுத்தன இரண்டு கிளிகள்.

அவள் பக்குவமடைந்த முப்பதாம் நாள்; அன்றைய நினைவைப் பச்சைப்பசேலென்று அவன் இதயவானிலே கவிழ்த்துவிட்டுக் கிளிகள் பறந்துவிட்டன.

அவள் கொய்யா மரத்திலே சார்ந்து நின்றிருந்தாள். பாவாடையும் சட்டையும்போய், அவள் மார்புக்குமேல் மெல்லிய தாவணிகூட ஏறியிருந்தது.

''வள்ளி!''... என்முன் மெதுவாக அவன். அவள் விரலைக் கடித்தபடியே குனிந்துகொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அடேயப்பா, இத்தனை வெட்கமா?''... என்றான் அவள் தோற்றத்தை அளந்தபடி. அவள் பேசவில்லை. அவனை நிமிர்ந்து பார்க்கக்கூட அவளுக்கு வெட்கம். ஆனால் அவன் முன் நிற்கும்போது ஏற்படும் அந்தக் கிளுகிளுப்பு! அது புரியாத புதுமை. என்றுமில்லாத அந்தப்புதுமை இப்போது ஏன் முளைத்தது? எப்படி முளைத்தது?

'அம்மாடி! இத்தனை புதுமைகளும், இந்த முப்பது நாளுக்குள்ளே, இவளிடம் எப்படித்தான் முளைத்தன?' முருகேசன் தனக்குள்ளே வியந்தான். நாளை விரியப்போகும் முல்லைமொக்கு அன்று மாலையிலே பனிவிழுந்ததும் எப்படியிருக்குமோ அப்படியிருந்தாள் வள்ளி.

அதிலே ஒரு இனிமை;

ஒரு புனிதம்;

ஒரு தெய்வத்தன்மை!... இன்னும் சொல்ல வார்த்தையே கிடையாத ஏதோ; ஏதோ... ஒன்று. அதை உணர முடியவில்லை. அது பெண்மை?... இல்லை... தாய்மை!

அவள் முகத்திலே செந்தாளம் பூப்போன்ற ஒரு செழுமை! கண்ணிலே காந்தத்தின் கொடுமை! அங்கங்களிலே...?...ஆ... இயற்கை பொல்லாததுதான்.

அவன் தனக்குள்ளே சிரித்துக்கொண்டான்.

''வள்ளி, நான் போறேன்...''

''ஏன்?...'' குனிந்ததலை நிமிராமலே மெல்லக் கேட்டாள்.

''நீதான் பேசமாட்டேன் என்கிறுயே!''...

''என்ன பேசவேணுமாம்?''

ஆமாம்; என்ன பேச இருக்கிறது?... அவன்கூடத் தனக்குள்ளே கேட்டான். விடைதான் கிடைக்கவில்லை. ஆனால், எல்லாமே நிறைய நிறையப் பேசஇருப்பது போன்ற ஒரு பிரமை.

'...காட்டுக் கிளிகள் எல்லாம்
காட்டிலேயோ தங்கிறது
கூடு கலைந்த கிளி
கொப்பிலேயோ தங்கிறது...?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பாடவில்லை. இதழ்கள் இலேசாக அசைந்தன.

அந்தக் கொய்யாமரம் சலசலத்தது.

இரு பழங்கள் நிலத்தில் புரண்டன.

'க்ளுக்'என்ற சிரிப்போடு அவள் பாய்ந்தோடி விட்டாள்.

இத்தனை ஆயிரம் கவிகளுக்குள்ளே இதை மாத்திரம் தேர்ந்து சொன்னாளே! எத்தனை அறிவு வேண்டும் இதற்கு? கூடுகலைந்த கிளி — கூட்டிலிருந்து பறக்கும் பக்குவத்தையடைந்த கிளி — வள்ளி!......

நினைவுக் குமிழ்கள் அறுந்தன.

அந்தக் கிளிகள் கண்ணுக்கெட்டாத தொலைவில் சென்று மறைந்துவிட்டன.

அந்த நிழலில் இனியும் அவனால் நிற்கமுடியாது. எழுந்தான். பொட்டென்று தலையிலே ஏதோ விழுந்தது.

''யாரது?...''

நிமிர்ந்தான்.

அணிலொன்று ஆலம்பழங்களைச் சுவைத்துக்கொண்டிருந்தது.

'ஆலம் பழமுமொரு
அணிலுமென்று நானிருந்தேன்
காஞ்சுரங் காயுமொரு
காகமுமாய்ப் போனதென்ன?'...... உள்ளம் வெதும்பி வடிந்த சொற்கள் இவை.

அந்த வேகாவெயிலில் நடைப்பிணமாக அவன் நடந்துகொண்டிருந்தான். எருதுகள் தம்பாட்டுக்கு நடைபோட்டன. தோளிலே கலப்பை இருப்பதன் நினைவே தெரியாது அவனுக்கு. படலை தடக்கியது. மாமரத்திலே கலப்பையை சார்த்தினான். மாட்டுக்கு வைக்கோல்கூடப் போடவில்லை. திண்ணையில் துண்டை விரித்துச் சரிந்துகொண்டான்.

குளித்துவிட்டுவந்து குடத்தையிறக்கினாள் பொன்னி. எருதுகள் அவளை அண்ணாந்து நோக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனின் கோலத்தைக் கண்டதும் அவள் உருகி விட்டாள். இப்படி அவன் படுத்ததை அவள் கண்டதே யில்லையே.

வட்டியைக் கழுவிச் சோற்றையும் போட்டு வைத்து விட்டு எழுப்பினுள்

''ஏனண்ணு சாப்பிடமாலே படுத்துட்டாயே?''...

''பசிக்கல்ல புள்ள...''

''பசிக்காட்டிக் காரியமில்ல, கொஞ்சமாத்தின்னு'' தங்கச்சி கட்டளை போட்டு விட்டாள். அவன் உண்டு தான் ஆகவேண்டும்.

''அண்ணு!''

நிமிர்ந்து பார்த்தான் முருகேசன்.

''வள்ளிக்குக் கலியாணமாம்''

''ஆ...?...''

''நேத்து தான் புளியங்கா ஆயப்போனுப்ப, வேலி யருகில வந்து அழுதழுது சொன்னுள். நீயென்ன அவ ளோட கோவமா அண்ணு? கொஞ்சக் காலமாக எட்டிக் கூடப் பாக்கிறதில்லையாமே!...

''அவளுக்கென்ன பணக்காறி...

எல்லா வேதனையையும் நெஞ்சிலே புதைத்துக் கொண்டு ஏதோ சொல்லிவைத்தான்.

''இந்த ஆண்களுக்கு நெஞ்சிலே ஈரமேயில்ல''

''புள்ள: நீ பேசாத. இத்தனை காலத்துக்கும் குளத் துக்கு வந்தவளுக்கு இப்பதான் வரமுடியாமப் போச்சாம். என்ட நாய்கூடப் போகாது அந்தப் பக்கம்'' முருகேசனின் வைராக்கிய வார்த்தைகள் பொன்னியை ஊமையாக்கின.

வள்ளி தன்பாட்டிலே கண்ணீர் வடித்தாள்.

'சுற்றி வரவேலி
சுழல வர முள்வேலி
எங்கு மொரேவேலி
எங்கால நான் வரட்டும்?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மதியநேரத்திலே முருகேசன் நடைப்பிணமாக நடந்து சென்றதை வள்ளி கண்டிருக்க வேண்டும். அதை நினைக்க நெஞ்சு கொதித்தது.

வேம்பு கரும்பானேன்
வெத்திலைப்பூ நஞ்சானேன்
நானும் பகையானேன் உன்ட
நல்லுறவும் பொய்யானேன்'

முருகேசனை நினைக்க உருகினாள். அவன் போக்கைப் புரியாது தவித்தாள் இதற்கிடையில் அப்பாவின் செய்கையை நினைத்தாலோ... உயிர் போய்ப்போய்த் திரும்பியது.

காலம் கவலையில்லாமல்தான் நடந்தது. இரண்டு உள்ளத்தோடு மூன்றாவது உள்ளமும் நலிந்தது. அது பொன்னியின் உள்ளம்.

''பொன்னி! ஏன் ஒருமாதிரியாய் நிற்கிறாய்?'' என்றான் முத்துவேல்.

''உங்க அப்பா என்ன மனிசனா? இல்லாட்டி...'' அவள் வார்த்தையை முடிக்கவில்லை.

''அப்பா மனிசனாயில்லாட்டி, நீயேன் கவலைப்படணும்?''

''நீயும் அப்பாட மகன்தானே!'' என்றாள் வெடுக்கென்று. அவள் கோபித்துக்கொள்வதும் அழகாய்த்தான் இருக்கிறது. தனக்குள்ளே சிரித்துக்கொண்டான் முத்துவேல். அவளைக் கோபம்காட்டிப் பார்த்து ரசிப்பதிலே ஒரு தனி விருப்பம் அவனுக்கு.

''ஓம் அப்பாட மகன்தான்; நீ சொன்னாலும் சொல்லாட்டியும் அப்பாட மகன்தான்'' அவன் குறும்பு பேசினான். அவளுக்கு உதடு துடித்தது. முகம் சிவந்தது. கண்ணீர் குபுக்கென்று பொங்கியது. பேச்சில்லாமல் திரும்பிப் போய் விட்டாள்.

ஊரார் குசுகுசுத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாப்பிள்ளை உத்தியோகக்காரனுமே, இருநூறு ரூபாய் சம்பளமாம்.''

முகூர்த்த நாளும் வைத்தாயிற்று. ஈரும்பேரும் அறியாமலே கலத்திலே போடவேண்டும் என்பது திட்டம்.

''விஷயம் விளங்காதா? மாப்பிள்ளையிட தாய் தகப்பனுக்குத் தெரியாமச் செய்யப்போருங்களாம். மாப்பிள்ளை ஒட்டலில இருக்கிருனும்...''

முகூர்த்தவேளை நெருங்கிக் கொண்டு வந்தது. மாப்பிள்ளையை ஏற்றிவர முத்துவேல் போய்விட்டதை அறிந்த பொன்னி அந்த வேலியோரமாக வந்து நின்றிருந்தாள்.

முத்துவேல் வெறுங்கையோடு திரும்பினுன்.

''என்ன முத்து?''... பதட்டத்துடன் கேட்டார் அப்பா.

''அங்க ஆளே இல்ல. இரவே விஷயம் தெரிஞ்சு போச்சு. தகப்பன் வந்து காருல கொண்டு போயிட்டானும் ஆளை.''

''அடபாவி, இப்ப என்ன செய்யிற?''

''அதுதானே...'' என்று கையைப் பிசைந்தான் முத்துவேல்.

வேலியோரத்திலே நின்று விம்மிக் கொண்டிருந்த பொன்னியின் உள்மனம் ''அதுதான் சரி'' என்றது.

''நாளைத் தள்ளி வைப்போம். வேறென்ன செய்ய? என்ருர் அப்பா.

''அதெப்படி?'' என்ருன் முத்துவேல் கோபமாக.

''நான் சொன்னேனே கேட்டீங்களா? நம்மட ஊர்ப் புறத்தவனுயிருந்தா இப்படிச் செய்திருப்பாரு?''...

அப்பாவுக்குத் தலைகவிழ்ந்தது.

''முகுத்தத்துல கலியாணம் முடிஞ்சுதாணுகணும் நான் மாப்புள கொண்டாறன்''

''ஆரு மாப்புள?''

''வேறயார், முருகேசன்தான்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவுக்கு மறுவார்த்தையே வரவில்லை. மௌனி யானார்.

வேலியோரத்தைப் பார்த்தான் முத்துவேல்.

'பொன்னி எங்க? இங்கதானே நின்றாள்?'

அங்கே பொன்னியில்லை. எங்குமே பொன்னியில்லை. நாலைந்து பெரியவர்களையும் அழைத்துக் கொண்டு பொன்னி யின் வீட்டைநோக்கி ஓடினான் முத்துவேல்.

## 2. ஒல்லிக்குளத்தை நோக்கி

வங்காளம் போறேனெண்டு
மனக்கவலை கொள்ளாதே
சிங்காரக் கொண்டைக்கொரு
சிப்புவாங்கி நான் வருவேன்.

துண்டை விரித்துப் படுத்த முருகேசனுக்கு மூச்சு முட்டியது. நெஞ்சு விம்மியது. இதயம் துடியாய்த்துடித் தது. ஆறுகால்களையும் கிள்ளி நெருப்பிலே போட்ட எறும்பு போல அவன் உடல் தீய்ந்தது. உள்ளம் கருகியது உயிர் பதைத்தது.

வள்ளி அவனை இதற்குமுதல் இப்படித் தவிக்கவிட்ட வளா? அதை அவள்தான் சகிக்கக் கூடியவளா? ஆனால் இன்று கல்நெஞ்சுக்காரியாகிவிட்டாளே! யாரோ ஒருவனுக் குக் கழுத்து நீட்டத்தானே போகிறாள்.

''பாதகத்தி படுமோசக்காரி!''...

பல்லை நறநறவென்று அவன் கடித்தான். 'அவளை உதறித்தள்ளி, - அவள் நினைவை வெட்டியெறிந்து அவள் முன்னே குடியும் குடித்தனமுமாக வாழத்தான் வேண்டும் என்றது ஒரு மனம்.

'அவளை மறப்பதா?'... உள்ளம் அழுதது. ஏழு ஜன் மத்திலும் அது நடக்கக்கூடியதா? அவனுக்கு உயிருக்கு உயிராக இருந்தாளே அவள். ஒரு பகல் குளக்கரையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கத் தவறினுல் ஒரு கோடி பகல் எண்ணியெண்ணிப் பெருமுவாளே!- துடிதுடித்துப் போவாளே! என்றது அடி மனம்.

அன்ருெருநாள் அவன் கொழும்புக்குப் போகவேண்டி யிருந்தது. மட்டக்களப்பிலே சிறந்த விவசாயி என அவனைத் தெரிவுசெய்திருந்தார்கள்... இலங்கை வாஞெலியார், கிராம சஞ்சிகையில் முருகேசனின் பேட்டியொன்றினை ஒலிபரப்ப விருந்தார்கள் அதை அவன் சொன்னதும் பொங்கிப் பூரித் தாள். உவகையில் உள்ளம் கரைந்தான்.

''நாளைநான் போகவேண்டுமே'' என்ருன்; துடித்துப் போனுள். முகம் சுருண்டது. விம்மிவிம்மியழுதாள்.

''கட்டாயம் போகத்தான் வேண்டுமா?'' என்ருள். அவன் இரக்கத்தோடு சிரித்தான். பகிடியாகச் சொன்ஞன்.

வங்காளம் போறேனென்று
மனக்கவலை கொள்ளாதே
சிங்காரக் கொண்டைக்கொரு
சீப்புவாங்கி நான்வருவேன்

அவள் அப்போதும் சிரிக்கவில்லை. பெருமூச்சோடு தான் விடைதந்தாள்.

அந்த வள்ளி இன்னும் ஒருசில நிமிடங்களில் மாற்ரு னுக்கு உரிமையாகப் போகிருள்!

உள்ளம் கொதித்தது. எரிமலைப் பிழம்பாகக் கொதித் தது. எழுந்தான். திக்குத் தெரியாது நடந்தான்.

'மாப்பிள்ளையாக வருகிறவனைப் பார்த்துவிடுகிறேன்' என்று கரங்கள் புடைத்தன.

சுபமுகூர்த்தம் நெருங்கிக்கொண்டிருந்த வேளையிலே அந்த மாப்பிள்ளை போன போக்கை அண்ணுவுக்குச் சொல லத் துடித்த பொன்னி வீட்டைநோக்கி நடந்தாள். எங்கோ தொலைதூரத்திலிருந்து ஆட்காட்டிக் குருவிகளின் குரல் துல் லியமாகக் காற்றில் மிதந்து வந்துகொண்டிருந்தது. அந்தக் குரல் அவளை ஆறுமாதம் பின்னுேக்கி இழுத்துச்சென்றது. ஆனல் கால்களோ முன்னுேக்கி நடந்துகொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு பாயைவிரித்துப் படுக்கையில் விழுந்த போதும் அவளுக்கு இருப்புக்கொள்ளவில்லை. அம்மா துயி லும்வரை நித்திரையாகப் பாசாங்கு செய்தாள்.

ஆட்காட்டிக்குரல் கதவிடுக்கால் நுழைந்து அவள் காதுகளுக்கு எட்டியதுதான் தாமதம் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தமர்ந்தாள். அம்மா நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அடிமேல் அடிவைத்துக் கதவோரத்துக் கும் வந்துவிட்டாள்.

இனிக் கதவத்திறந்துவிட்டால்...! இளமனது எங்கோ சிறகடித்துப் பறந்தது.

''பொன்னி''... படுக்கையைத் தடவிப் பார்த்ததும் குரல் கொடுத்தாள் அம்மா.

அம்மா எழும்பிவிட்டாள் எரிச்சலாகவந்தது அவளுக்கு

''அடா, அடா; பக்குவப்பட்டிட்டா இந்தக் கட்டுங் காவலும் எங்கிருந்துதான் குதிக்குதோ! வீட்டுக்க பூட்டி வைக்கத்தான் எத்தனை ஆசை இதுகளுக்கு?'' பற்களை நெறு நெறுத்து ஆத்திரத்தை அடக்கிக்கொண்டாள்.

''ஏண்டி, வெட்டைக்குப் போகயா? நானும் வாறன்; ...ம்'' அம்மா எழுந்திருக்கக் கையையும் ஊன்றிவிட்டாள். இனியும் பேசாமலிருந்தால்?...

ஏதோ வாய்க்கு வந்ததைச் சொல்லி மழுப்பினாள்.

''இல்லகா, ஆக்காண்டி கத்துது''

அம்மாவுக்கு ஏதோ நினைவு வந்திருக்கவேண்டும். தனக் குள்ளே மெல்ல முணுமுணுத்தாள்

ஆக்காண்டி கத்துதம்மா
ஆள்மதிப்பம் கொள்ளுதம்மா
வாய்க்கால் முளைகுடித்து
மணித்தாராப் பாடுதம்மா.

''கத்தட்டும். நீ சும்மா படு'' கண்டிப்பான உத்தரவு. நல்லவேளை வெளியே போகாமல் விட்டது. போயிருந்தால் எல்லாம் வெளிச்சிருக்கும்! மனதுக்குள்ளே சமாதானம் சொல்லிக்கொண்டு படுப்பதைத்தவிர வேறு வழி?

'முத்து...'- அவள் இதயம் துடித்தது. 'வந்திருப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டார்' காத்திருந்து ஏமாந்து அவன் போகப்போவதை நினைத்தால் இந்த அம்மாவைப் பச்சையாகத் தின்று தொலைக்கத்தான் ஆத்திரம் எழுந்தது. நடுச்சாமம் ஆகும் வரை அவள் துடியாய்த் துடித்தாள். அந்த ஆட்காட்டி வீட்டைச் சுற்றிச்சுற்றிக் கத்தியது. அம்மாவும் எத்தனை நேரம் காப்பது? பாவம் தூங்கிவிட்டாள்.

முத்துவேலுவுக்கு அழுகைதான் வந்தது. இத்தனை நேரத்துக்கு கதவு திறக்கும் ஓசையையே காணேமே. ஆற்றையும் பெரும் காற்றையும் நம்பலாம்... சேலைகட்டிய மாதரை நம்பினால்...! சேலை கட்டத்தொடங்கி ஒரு வருஷமே ஆகவில்லை. இதற்கிடையிலே இப்படி இவள் ஏமாற்றுகிறளே! ஒருவேளை அம்மா விழித்துக்கொண்டிருந்தால்? சரி, இன்னும் ஒரு பதினைந்து நிமிஷம் பார்ப்போம்!

கையைக்கட்டி, பலாமரத்தோடு முதுகை அணைய வைத்து நின்றிருந்தான். நிலவும் சரியத் தொடங்கிவிட்டது. 'ம்கூம்' சந்தடியேயில்லை. இன்னும் ஒரு ஐந்து நிமிஷம்.

வாசலை நோக்கி மெல்ல அடிபெயர்ந்தான். வாசற் பூமரத்திலிருந்து படபடத்துப் பறந்தன இரண்டு கொண்டைக்கழுத்தான் குருவிகள். பனைமரத்துக் காகம் அரைத் தூக்கத்தில் விழித்துக்கொண்டு 'கா கா' என்று இரண்டு குரல் கொடுத்தது. வாசலிலே படுத்த நாயொன்று மெல்ல உறுமத் தொடங்கியது. முத்துவேலுவுக்கு உடல் உதறலெடுத்தது. நாயின்குரல் சற்றுப் பருத்து குரைக்கும் நிலைக்கும் வந்துவிட்டது. முத்துவேலுவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. 'யாராவது எழுந்து தொலைந்துவிட்டால்' என்ன முட்டாள்தனம்?

நாய் குரைக்கத் தொடங்குமுன் ஒரு சின்ன - மெல்லிய குரல்!

''உஸ்;... மாலையா... ஆளைத்தெரியாது? நான்தான்; பேசாமப்படு...''

முத்துவேலுவுக்கு உயிர்வந்தது. நாய் தன்னைப்பார்த்துக் குரைக்கவில்லை என்பதும் தெரிந்தது.

இரண்டு உருவங்கள் வாய்க்கால் மணலை நோக்கி நடந்தன. பக்கம் பக்கமாக அமர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கோபமா?''... என்ருள் அவள்.

என்னைச் சோதனை செய்கிருயா கள்ளி!'' செல்லமாகக் கடிந்து கொண்டான் அவன்.

''நாளைக்கே போகணுமா?''

''ஆறுமணி ரெயிலுக்கே போகணும். அதுக்குத்தானே இத்தனைநேரம் கண்விழிக்க வைத்திருக்கிருய்!''

''நான் என்ன செய்யிறது?... அம்மா...

''தெரியும், தெரியும்''

''சாயங்காலந்தானே அம்மாவோட வந்து கதச்சிட்டுப் போனுய், இப்ப என்னத்துக்கு வந்து...''

''உன்னேட தனிச்சிக் கதைக்கிற மாதிரி அம்மாவோட இருக்கக்க பேசலாமா?''

''இன்னும் எத்தனை வருசம் படிக்கணும்?''

அவன் சிரித்தான்.

''வருஷக் கணக்கில இல்ல. மாசக் கணக்கில தான். ஆறுமாசம்...''

''அதுக்குப்பிறகு முத்துவேல் பி. எஸ். ஸி''

பொன்னி இப்போதுதான் தன்னையும் எடை போட்டாள். அந்த மதிப்பையும், மரியாதையையும் வார்த்தையிலும் தெரிவிக்க ஆசைப்பட்டாள். 'சின்னஞ் சிறிசி'லிருந்து 'நீ நீ' என்று பேசிவந்த வாய்க்கு சட்டென்று கட்டுப்போடுவதுசாத்தியமா?

''மச்... அத்தான்! நீ... நீங்க...''

''பொன்னி! பொன்னி! பொன்னி!'' முத்துவேல் சின்னப்பிள்ளைபோலச் சிரித்தான்.

''பொன்னி; அத்தான் வேணும். எப்போதும்போல மச்சான் எண்டு சொல்லு. நீங்க வேணும் நீ... என்று சொல்லு! என்ன தெரிஞ்சுதா?''

சின்னவர்களாக இருந்தபோது செய்வது போல அவள் கன்னத்திலே தட்டக் கை நீண்டது. அதைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அவள் அதைக் கண்டு முறுவலித்தாள். அந்தச்சிரிப்பு அவனை என்னவோ செய்தது.

அவனது பிடியிலே இரண்டு கண்ணுடி வளைகள் நொருநொருத்தன. அவள் சட்டென்று ஒதுங்கிக் கொண்டாள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன இது? இப்பிடியெண்டா நான் இனிமே...''

''வரவேமாட்டாய்?... ம். சரி பொன்னி.''

''ஆக்கப்பொறுத்தவங்க ஆறவைக்கப்பொறுக்காம...''

''உம், நீ கெட்டிக்காரி... வா...''

அவளை அழைத்து வந்து, அவர்கள் முற்றத்தில் விட்டு விட்டு விடைபெற்றான்.

''நில்... நில்லுங்க...'' இடுப்பிலிருந்து எதையோ எடுத்தாள்.

''தொட்டு நெத்தியில வச்சிட்டுப் போங்க. கதிராமத்துத் தின்னூறு. முருகனை நினைச்சிட்டு சோதினை யெழுதுங்க. நீங்க பாஸ்...''

''சரி பொன்னி...'' அவன் சிரித்துக் கொண்டே நகர்ந்தான்.

விட்டுப் படலையிலே மோதிக்கொள்ள இருந்தபோது தான் அவள் நினைவு மீண்டாள். 'அதை அண்ணுவிடம் சொல்ல வேண்டுமே...' வேகமாகப் படலையைத் திறந்து கொண்டு உள்ளே ஓடினாள்.

அங்கே கதவு திறந்து கிடந்தது.

படுத்திருந்த துண்டு அப்படியே விரிந்து கிடந்தது.

இருந்திருந்து பறந்திடட்டோ
இனிச்சிறகு தட்டிடட்டோ
பறந்துகொண்டு விழுந்திடட்டோ - அந்தப்
பாதகத்தி வாசலிலே?

அந்தச் சால்வைத்துண்டு பொன்னியைப் பார்த்துப் பாடுவது போல காற்றிலே தொங்கலைப் படபடத்தது.

'பாவம், வள்ளி பாதகத்தியா?'

வள்ளிக்காகத் தனக்குள்ளேயே இரங்கினாள்.

''எங்கே போயிருப்பான் அண்ணு?

நடுக்குளத்திலே ஆட்காட்டிகள் கத்தின. ஒல்லிமடுவின் நினைவு வந்ததும் துணுக்குற்றாள்.

''அண்ணு! அண்ணு!'' என்று சுற்றிச் சுற்றிக் கூவினாள். ஆளேயில்லை. உள்ளம் பதறியது. ஓட்டமாக ஓடினாள். ஒல்லிமடுவை நோக்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. பொன்னியின் அலறல்

பொன்னியின் வீட்டை நோக்கியோடிய முத்துவேல் துணுக்குற்று நின்றான்.

விளக்குக்குப்பி எரிந்துகொண்டிருந்தது.

வீடு வெறிச்சோடிக் கிடந்தது.

''பொன்னி! பொன்னி!!

முருகேசு! முருகேசு!! ...ம் கூ ம்; யாரையும் காணேமே. என்ன இது?''

முத்துவேல் செய்வதறியாது நின்றிருந்தபோதுதான் அந்தக் குரல் தூரத்தே கேட்டது.

''அண்ணை! அண்ணை!...'' அது பொன்னியின் குரல் தான். அந்தக்குரல் தேய்ந்துகொண்டு போனது. ஒல்லிமடுப் பக்கம்தான்.

''அண்ணை நில்லண்ணை!...'' அது நிச்சயமாகப் பொன்னியின் குரல்தான்.

'ஒல்லிமடு! அது ஆழமான மடுவாயிற்றே. விழுந்தவர்கள் தப்பியது கிடையாதே... அங்கு முதலைகள்கூட....' முத்துவேலால் அதற்குமேல் நினைத்துப்பார்க்கவே முடியவில்லை. தலைதெறிக்க ஓடினன். ஒல்லிமடுவுக்குப் போவதாயிருந்தால் அவன் வீட்டை நோக்கியோடி ஒழுங்கையால் திரும்பவேண்டும்.

ஏதோ ஒரு உருவத்தில் மூட்டிமோதிக்கொண்டு நிமிர்ந்தான்.

''அப்பா!''...

''முத்து! முத்து! வள்ளியக் காணல்லடா!...''

முத்துவுக்கு ஒருகணம் இரத்தம் உறைந்தது.

''ஆ? வள்ளியக் காணலையா?''

முத்துவேலுவின் பின்னல் ஓடிவந்த கும்பல் வாயைப் பிளந்தது.

மாப்பிள்ளையாக வருகிறவனைப் பார்த்துவிடுகிறேன் என்ற ஆவேசத்தோடு பாய்ந்துசென்ற முருகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து சென்றிருந்தால் சற்று நேரத்தில் உண்மை நிலையறிந்து தலைகுனிந்திருப்பான் அதற்கிடையில் அவனது கண்கள் அந்த நிழலைக் கண்டுவிட்டன.

'யாரது? எங்கே ஓடுகிறாள் இப்படி?' நிதானமாகக் கவனித்தான். வெறும் பிரமையில்லை. அவள் - அவள்தான் - வள்ளிதான். அந்த ஓல்லிமடுவை நோக்கித்தான் ஓடுகிறாளா?

''வள்ளீ!...''

அவனால் இனி நிற்கமுடியாது. ஓல்லிமடு! எத்தனை உயிர்களைப் பலிகொண்ட மடு அது. நிறைமாதக் கர்ப்பிணி ஒருத்தியை முந்தாநாள் தானே அது விழுங்கி ஏப்பமிட்டது. கடவுளே! வள்ளி கன்னிகை. அவளைக் காப்பாற்று. அவள் யாரையாவது மணந்து சுகமாக வாழட்டும். அவள் சாகக் கூடாது. சாகவிடமாட்டேன்.

''வள்ளீ!''

கண்கடையற்றுத்தான் அவனும் ஓடினான். அந்த வேகத்தில் முருகேசனுக்குப் பொன்னியின் குரல் கேட்டிருக்க நியாயமில்லை. சாவின் வெறியிலே விழுந்து உணர்விழந்த கடைசிப்படியிலே முருகேசனின் குரலும் வள்ளிக்குத் துச்சம் தான்

ஒரு மயிர் இழையிலே அவள் தவறிவிட்டாள்.

''சலார்!''......

அந்த வேகம் முருகேசனையும் சும்மா விடவில்லை.

''சலார்!''......

''அண்ணா! அண்ணா!...'' இது பொன்னியின் அலறல்.

''பொன்னி! பொன்னி!'' இது முத்துவேலுவின் அவலம். ஐயோ, முத்துவேலுவினால் பொன்னியை மாத்திரம் தான் பிடித்து நிறுத்தமுடிந்தது.

மூளை வெடித்து நாலாபக்கமும் சிதறுண்டதுபோல ஒளிச்சிதறல்! மின் அதிர்ச்சிபோல உடலம் உறைந்து காற்றுவதை உணர்ந்தாள் வள்ளி. மங்கலான பச்சைநிற வெளியிலே நீண்ட பிரயாணம்! ...வெள்ளிக் குண்டுகள் அங்கு மிங்கும் புரண்டன. மூச்சுக் குழாயெல்லாம் ஏதோ வேகமாக முட்டிக்கொண்டு புகுந்துவிட்ட ஒரு திணறல்! பயங்கரத் திணறல்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்...ஆ..." அந்த ஏதோ ஒரு பொருள் வாயைக் கூடப் புடைத்துக்கொண்டு புகுந்து ஆ...ஆ... அவ்வளவு தான். அதன் பிறகு?... அதன் பிறகுதான்.

முருகேசனின் தலை விழுந்த வீச்சிலே சேற்றில் புதைந்து கீழேகீழே போய்க்கொண்டிருந்தது. ஒரு கிண்ணங் கட்டை அவன் பிடியிலே சிக்கியது. மூச்சு முட்டியது; அதேமூச்சில் ஒரு உந்துதலோடு வெளியே தலையை நீட்டினான்.

அங்கே; வள்ளியின் சேலைத்தொங்கல் மிதந்துகொண் டிருந்தது. இருள் கவிந்த ஒரு குடைவில் 'தடால்' என்ற பலமான ஒரு அடி!

முதலை!

அது மோப்பம் பிடித்துக்கொண்டு வந்துகொண்டி ருக்கவேண்டும். போகட்டும் அந்த முயற்சியிலே அவன் உயிர் போனால்தான் என்ன! மின் வேகத்திலே தாவி அவளை அணைத் துக் கொண்டு நீந்தினான். இரண்டு உந்துதல்தான். அவ னுக்கு மூச்சு முட்டியது. காலும் கையும் சோர்ந்து வீழ்ந்தன. இரண்டு உடல்களும் ஒரே வேகத்தில் கீழே கீழே போய்க் கொண்டிருந்தன. மீண்டும் ஒரு மின் அதிச் சியிலே அவன் உயிர் பெற்றதாக உணர்ந்தான். வள்ளி அவன் பிடியிலிருந்து நழுவிக் கொண்டிருந்தாள். பாதகம் இல்லை அவன் இறக்கட்டும். அவளாவது காப்பாற்றுப் படட்டும்.

கால்களை ஏதோ சுற்றிக்கொண்டு விட்டது. கை களைக்கூட அசைக்க முடியவில்லை. எல்லாம் நழுவிவிட்ட அவளின் தாவணி முருகேசனின் காலையும் கையையும் கட்டிப்போட்டு வேடிக்கை பார்த்தது.

கடைசிநேர ஆசையும் மண்ணுவதா?

கடவுளே இதுதான் நாங்கள் பெற்ற வரமா?

'நாளை ஒருவேளை மரண விசாரணை நடக்கலாம்; 'காதலர் இருவர் தற்கொலை' என்று தலைப்புக் கிடைத்து விடும். அதற்கிடையிலே இந்த முதலை விழுங்கிவிட்டால். அதற்குக் கோடிபுண்ணியமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பயந்து நடுங்கிய அதேமுதலைக்கு இப்போது வரவேற்பு கூறினன்.

ஆம் அதோ குமிழி!

அது நெருங்கிக் கொண்டிருக்கிறது!

அவர்கள் இருவரையும் ஏதோ ஒன்று இறுக்கிப் பிணைத்தது. அடுத்த இமைப்பில் அனைத்துமே மறைந்தன.

எல்லாம் சூன்யம்.

முத்துவேலுவின் கண்கள் பொல பொல வென்று உதிர்த்தின. அத்தனை நெருக்கமான உறவு முத்துவேலுவுக்கும் முருகேசனுக்குமிருந்தது.

'தோழே தோழே' என்று முருகேசன் அழைப்பதிலே தான் எத்தனை பவிசு! அந்தத் 'தோழே' என்ற வார்த்தை முத்துவேல் பல்கலைக்கழகத்துக்குப் போன பின்புதான் ஓறுத்துவிட்டது.

'வாசலிலே வந்து நின்று
வாதோழே என்ற சத்தம்
பூ மரத்தைச் சுற்றியொரு
பூச்சமுத தென்றிருந்தேன்'

வாசலிலே பூமரம். அதைச் சுற்றித்தான் வண்டு வந்து போனது. அதற்குச் சாக்கொன்று அங்கே ஒரு தோழன் இருப்பதாக. உண்மையாக அந்தத் தோழமை கூடப் போலியானதல்ல. அப்படிப் போலியானதாகவிருந்தால் தன்தங்கையிலும் பார்க்க முத்துவேலுவில் அத்தனை பற்றும் பாசமும் முளைத்திருக்க நியாயமில்லையே.

பொன்னிக்குத் தொண்டையே வரண்டு விட்டது. அவள் அண்ணனை விட வள்ளிக்காக அதிகம் அழுதாள். அந்த அழுகையும் எத்தனை நேரத்துக்கு?

"இங்கே யாரும் அழக்கூடாது. உது உங்கள் வீடல்ல" டாக்டர் வந்து கொண்டிருப்பதை ஊகித்த நர்ஸ் இப்படிக் கடிந்து கொண்டாள். முத்துவேலுவைக் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டதும் 'மிஸ்டர், இந்தப் பெண்ணை தயவு செய்து அழைத்துப் போங்கள்' என்று சிறிது தணிந்துதான் பேசினுள். என்ன இருந்தாலும் அவன் பல்கலைக்கழக மாணவன் சற்று அறிமுகமிருந்தது.

டாக்டர் படியேறிவந்து கொண்டிருந்தார். முத்துவேலுவின் தீனமான பார்வை அவருக்கு அவனது துடிப்பை உணர்த்தியிருக்க வேண்டும். பொன்னியின் வரண்டுபோயிருந்த கண்களிலிருந்து ஒரு கொத்து நீர் எங்கிருந்தோ வந்து பொல பொலவென்று கொட்டியது.

''தைரியமாயிருங்கள். முடிந்தவரை பார்க்கிறேன்'' டாக்டர் வழமைபோல ஆறுதல் வார்த்தைகளை அவர்களிடமும் உதிர்த்திஞர்.

உணர்ச்சியற்றுக் கிடந்த அந்த இரு உடல்களிலும் இலேசான சூடுமாத்திரம் இருந்தது. முத்துவேலுவின் முதலுதவிச் சிகிச்சைகள் பலன் தராதுபோகவே தாமதமின்றி ஆஸ்பத்திரிக்குக் கொணர்ந்திருந்தான் முத்துவேல். ஒல்லிக்குளத்திலிருந்து தன் உயிரையும் பொருட்படுத்தாது மீட்ட நேரத்திலிருந்து இதுவரை முருகேசனே வள்ளியோ கண் திறக்கவேயில்லை.

அந்த உடல்களை எப்படியெல்லாமோ ஏதேதோ செய்தார்கள். உள்ளே நிரம்பியிருந்த நீர் வெளிவருவதற்கான சிகிச்சைகள் துரிதகதியில் நிகழ்ந்தன.

நர்ஸ் அறையை விட்டு அவசரமாக எதையோ எடுக்க ஓடிஞள். அவளின் பார்வை முத்துவேலுவுக்கு சிறிது நம்பிக்கையைக் கொடுத்திருக்க வேண்டும். அவன் சற்று நிம்மதியாக மூச்சு விட்டான்.

''முருகையா, முருகையா; மண்டூர்க்கந்தா!'' என்று ஓயாது செபித்தபடி கண்மூடி நின்றிருந்தாள் பொன்னி. அவளைப்பிடித்து உலுப்பிஞன் முத்துவேல். ஒருவேளை அவளுக்குச் சித்தப்பிரமையேற்பட்டு விட்டதோ என்ற பயம் அவனுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தைரியமாயிரு பொன்னி. உன் கதிரமலேவேலன் ஒருதீங்கும் வரவிடான்'' என்ருன். அவளுக்கும் சற்றுத் தெம்பு பிறந்தது.

'தேன்கதலித் தோப்பிலொரு
சிறுதுரும்பும் வாடாமல்
பால் அறுகாய் ஆல் தழைக்க - ஒரு
பாக்கியம்தா வேல்முருகா!'

வேலும் மயிலுமாக அந்தப் பாலமுருகனின் தோற்றம் அவள் கண்முன் இப்போது நின்றது.

'ஒரு முள்ளுக் கொப்பும் முறியாமல் காப்பாற்றித் தா கந்தா!' என்று நெஞ்சக் கனக்ல்லு நெகிழ்ந்துருக அவள் நின்றிருந்தாள்.

கையைத்துடைத்த துண்டை நர்ஸிடம் கொடுத்து விட்டு வெளிவந்த டாக்டரைக் கண்டு அவர் முகம் பார்த்து, அதன் குணம் பார்த்து அவர் வாய் பார்த்து முகம் காட்டித் துடிப்போடு நின்றிருந்தான் முத்துவேல்.

''பயமில்லை ஆனுல் உங்கள் நண்பரின் நிலைமைதான்...'' டாக்டர் வார்த்தைகளை முடிக்கவில்லை.

''ஆ...? ஆபரேசன் முடிந்து வெளியேறிய டாக் டரைப் பார்த்து தவியாய்த்தவிக்கும் காதலனைப் போல முத்துவேலுவின் அந்தர நிலையும் இருந்தது.

''ஐயோ அண்ணு!''... பொன்னியின் அலறல் அந்த ஆஸ்பத்திரியையே ஒரு கலக்குக்கலக்கியது. எங்கேரோபோகக் கால் தூக்கிய நர்ஸ் பரப்பரப்போடு அந்த இடத்தை நோக்கி ஓடிவந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 4. அவலக்குரல்

'மருக்காலங் காட்டுக்குள்ளே
மான்வந் தெதிர்த்ததுபோல்
ஏன்வந்தாய் பெண்ணே - உன்ட
இருதனமும் பால் சொரிய?

எப்போதோ எதற்கோ அவன் ஓடிக்கொண்டிருந்த போது மரக்கிளையோ ஏதோ தலையிலே படீரென்று மோதியது போன்ற ஒரு ஞாபகம்; படிப்படியாக ஒரு 'ரோச்' வெளிச்ச வட்டத்துக்குள்ளே ஒரு வித தெளிவு பிறக்கிறது. யாரோ அல்லது ஏதோ அவனைத் துரத்துகிறார்கள் அல்லது துரத்துகிறது அல்லது எதையோ, எவரையோ அவன் துரத்தி ஓடுகிறான். காடு மண்டிக் கிடந்த ஒற்றையடிப் பாதையால் அவன் தலைதெறிக்க ஓடிக்கொண்டு நிமிர்கிறான். நிமிர்ந்தவனை வழிமறிக்கிறது மருக்காலங்காடு அதோ எங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருந்தோ ஓடி வருகிறது ஒரு மான் சடுதியாக அவன் எதிர்ப்பட்டது கண்டு திகைத்து மருண்டு நிற்கிறது. அது அகன்ற விழிகளை விரித்து மருட்சியோடு பார்க்கிறது. ஒரு நீர்த்திவலையின் மெல்லிய அசைவிலே இத்தனையும் தெரிகின்றன. அது - அந்தமான்;... அவளாக மாறுகிறது! ஒரு பெண்; யாருமில்லை, அவள் வள்ளிதான். வள்ளிதானா?... ஏதோ மயங்கிய நிலை அவள்?... அவள் பேசவில்லை. அவனுக்குப் பேசாமலிருக்க முடியவில்லை. பேசுகிறான் அல்லது பாடுகிறான்?...

"மருக்காலங் காட்டுக்குள்ளே
மான்வந் ததிர்த்தது போல்
ஏன் வந்தாய் பெண்ணே யுன்ட
இருதனமும் பால் சொரிய."

பலமாகக் கட்டுப்போட்ட முருகேசனின் தலையைத் தொட்டு மருந்து கொடுக்கப்போன நர்ஸைப் பார்த்து இப்படி ஏதேதோ பிதற்றினான். இல்லை கவி பாடினான் முருகேசன். அவள் கையைக் கூட மெதுவாகத் தொட்டுப் பார்த்துவிட்டுச் சிரித்தான் - அழுதான்.

மேலே கண்ட மங்கலான காட்சி அவ்வளவும் அவனுக்குத் தோன்றிய உருவெளித் தோற்றம்.

முத்துவேல் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டு டாக்டரை அணிலேறவிட்ட நாய்போல அண்ணாந்து பார்த்தான். பொன்னியின் விம்மல் இன்னும் ஓயவில்லை.

"பார்த்தீர்களா; இதைத்தான் அப்போது சொல்ல வாயெடுத்தேன். அதற்குள்ளே நீங்கள் ஓலமிட்டு - ஒப்பாரி வைத்து எல்லோரையுமே பயம் காட்டி விட்டீர்கள். இவர்கள் பிழைத்துக் கொண்டது ஏதோ தெய்வத்தின் செயல் தான். உங்கள் நண்பரின் மூளை எதிலோ பலமாக மோதிப் பிசகியிருக்கிறது. விழுந்த அந்த மடுவிலே பாறை இருந்திருக்கும் என நினைக்கிறேன். இவருக்கு நினைவுவந்த அரை மணியின் பிறகுதான் உங்கள் தங்கை சுயநினைவு பெற்றார். நிலைமையை உத்தேசித்து உங்கள் தங்கையை வேறிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு மாற்றியிருக்கிறோம். இனி உயிரைப் பற்றிய பய மில்லை. ஆனால் இவரின் நினைவுப் பிசகைப்பற்றித்தான்..." டாக்டர் இழுத்தார்.

"என்னடொக்டர்?" முத்து பதைப்போடு கேட்டான்.

"ஒன்றுமில்லை பிறகு வாருங்கள் சொல்கிறேன். நேர்ஸ்! இவர்களை அழைத்துப்போய் தங்கையைக் காட்டும் அதிகமாகப் பேசிக்கொண்டிராதீர்கள்" டாக்டர் சொல்லிக் கொண்டே தனது அறையை நோக்கி நடைகட்டினார்.

"எப்படியெண்டாலும் நாளைக்கு நான் போய்த் தான் ஆகவேணும் பொன்னி!" என்றான் முத்துவேல், சிலைபோல் நின்றிருந்த அவளை நோக்கி.

"போகத்தானே வேணும்"என்றாள் அவள். "ஆனா அண்ணனப் பாத்துக் கொள்ளுறது தான் எப்படியெண்டு தெரியல்ல. வீட்டுக்குக் கொண்டு வந்துத்தாக் கவலையில்ல ஆசுபத்திரியில வச்சிட்டு ஆர்போய்ப் பாக்கிறது; நீங்களும் இல்லாட்டி...? வார்த்தையை முடிக்கத் தெரியாது அரை குறையாக நிறுத்தினாள்.

"எல்லாம் அப்பாட்டச் சொல்லிட்டுப் போறன். அடிக்கடி பார்த்துக்குவார்."

"உம்; அண்ணனோட கொண்ட கோவம் உங்கப்பாவுக்கு இன்னம் ஆறல்ல. உமியோட்டு நெருப்புப் போலத்தான் இருக்கிறார். அவருட்டப் போய்ச் சொல்லிப் பேச்சுவாங் காதீங்க"

"மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாம். அண்டையோட அவர் எப்படி அடங்கிப் போனார் பாத்தாயா? இல்லாட்டி உன்ன இந்த வீட்டுப்படி மிதிக்க விடுவாரா?..."

உண்மைதான். அவளால் மறுத்துப்பேச முடியவில்லை. பல்கலைக்கழகத்துப் பட்டதாரி மாணவனுக்கு இந்தப் பட்டிக்காட்டாளைக் கட்டிப்போட எந்த அப்பாதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புவான்? படிப்புத்தானில்லை. ஆயிரம் சீர்வரிசையுள்ள வளா? அதுதானில்லை. அப்பா அம்மாவாவது உண்டா? எஞ்சியிருந்த அம்மாவைக்கூட ஆறுமாதத்துக்கு முதல் விழுங்கிவிட்டாளே.

ஒரே பற்றுக்கோடாகவிருந்த அண்ணனும் பைத்திய மாக ஆஸ்பத்திரியிலே...

இதையெல்லாம் எண்ணிப்பார்த்த போதுதான் மாமாவின் தணிந்தபோக்கையும் நல்ல உள்ளத்தையும் அவளால் உணரமுடிந்தது. எதை நினைத்து தனது வீட்டிலே அவர் அவளையும் வாழவிட்டிருக்கிறார்? தன் மகனோடு அவள் நெருங்கிப் பழகுவதைக் கூட அவர் தடுக்க நினைக்க வில்லையே. அவரைபற்றி தான் அப்படிப் பேசியதே தப்பென்று தன்னையே நொந்துகொண்டாள்.

''என்ன பொன்னி, நான்போன பிறகு இந்த வீட்டிலே எப்படி வாழ்வதென்று யோசிக்கிறாயா?''

இல்லையென்று அவள் தலையசைத்தாள்.

''பின்னே?'' என்றான் அவன்.

''ஒன்றுமில்லை'' என்றாள் அவள்.

''பொன்னி; நீ என்னுடையவள் தானே?''

''ஆர் இல்லையென்டது?''

''நான் சொல்லுறதைக் கேப்பாயா?''

''எப்பவெண்டாலும் மறுத்தநானு?''

''பொன்னி, நான் போனபிறகு என்ன காரணத்தக் கொண்டும் இந்த வீட்ட விட்டு நீ நகரக்கூடாது. உன்னை யாராவது துண்டுதுண்டாக வெட்டினாலும் நான் வருங்காட்டியும் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்துவிடு. தெரியுமா?''

''சரி''யென்று அவள் தலையசைத்தாள்.

''மறந்தும் நீ உன்ட அண்ணனப்பற்றி தங்கச்சிட்டச் சொல்லக் கூடாது''

''அவளுக்கு எல்லாம் தெரிஞ்சி போச்சு.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆ... எப்படி?''

''ஊர் வாயமூட உலைமூடியிருக்கா? போய்ப் பாக்க வேணுமெண்டு துடியாத் துடிக்கிருள்.''

முத்துவேல் மௌனியானுன். சிறிதுநேரச் சிந்தனையின் பின் மீண்டும் பேசினுன்.

''டொக்டரிட்டயும் நேஸிட்டயும் எல்லாம் சொல்லி யிருக்கிறன். நல்லாகப் பாத்துக் கொள்வாங்க. கெதியாச் சுகமாப் போகும். நீங்க அடிக்கடி போய் அங்க தொல்லை குடுக்கக் கூடாது. தெரிந்ததா?''

''உம்...''

''பொன்னி! சத்தியமாச் சொல்லு, அப்பா ஒருவேளை குணம் மாறி உன்னை விரட்டியடிச்சால்?...''

''என்னில நம்பிக்கையில்லையா உங்களுக்கு? என்ட உடலழிஞ்சாலும் உயிர், உங்களுக்காக இந்த வீட்டைச் சுற்றிக் கொண்டுதானிருக்கும்...''

''பொன்னி! நீ என்னுடையவள்தான்.''
உற்சாகத்தில் அவள் கைகளைப் பற்றினுன்.

''சும்மா கையவிடுங்க. உங்க தங்கச்சி...'' முத்து பதறிக்கொண்டு கையை விலக்கினுன். சுற்றுமுற்றும் பார்த்தான். யாரையும் காணேம்.

''பயந்திட்டீங்களா?'' என்ருள் அவள்.
அவன் பொய்யாக அவளைக் கோபித்தான். முகத்தால் கண்களால் அவளைக் கடிந்து கொண்டான்.

பொன்னி சும்மாதான் சொன்னுள். அவளோ அவனே வள்ளியை அங்குவரக் காணவேயில்லை. அவளை அவனும்சரி அவளும்சரி எதிர்பார்க்கவுமில்லை. ஆனுல் வள்ளி இத்தனையையும் கண்ணுரப்பார்த்து, காதாரக்கேட்டுக் கொண்டு தான் நின்றிருந்தாள். இந்த இருவரின் உள்ளம் ஒட்டிய காதலை இன்று நேற்று அறிந்தவளா வியக்க? அண்ணனுக்கு உகந்தவள். பொன்னிதான் என்பது அவள் பத்து வருஷத்துக்கு முதலே தீர்த்துவிட்ட முடிபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல இந்த வள்ளிக்குகந்தவன் முருகு, முருகு முருகு......

அவளை - அவனின் நிலையை நினைக்க நினைக்க இதயம் உருகிக் கண்ணை நிறைத்தது. நிறைத்துத் தளம்பி வழிந்து மார்பை நனைத்தது. இந்தப் பதினெட்டு நாட்களும் அவள் உடலும் உயிரும் உருகி உருகிக் கரைந்து......

அவளையறியாமலே அந்த விசும்பல் வெளியே கேட்டு விட்டது, பொன்னி பதறிப்போனாள். முத்துவேல் சுற்றிவரப் பார்த்துவிட்டுப் பரக்கப் பரக்க விழித்தான்.

'யாரது? வள்ளியாகத்தானிருக்கும்...'

"வள்ளீ! வள்ளீ!..."

அவள் கண்ணைத் துடைத்துக்கொண்டு, "என்னண்ணு!..." என்று வெளியே வந்தாள்.

பொன்னி முந்திக்கொண்டாள்.

"வள்ளி! என்ன கிளி உனக்கு விசரா? உனக்குள்ளே இப்படி உருகியுருகி......"

"எனக்கும் வந்துவிட்டால் நல்லதுதான். அண்ணு; நீ இண்டைக்கே போகணுமா? இன்னம் நாலுநாள் நிண்டு..."

"யூனிவசிற்றி தொடங்கியே பதினெட்டு நாள் ஓடிட்டுது புள்ள. இதுக்குள்ள என்னென்ன நடந்துட்டுதோ? எக்ஸாமில நான் குண்டடிக்கிற உனக்கு விருப்பமா புள்ள?" அன்போடு தங்கையைக் கேட்டான் முத்துவேல்.

அவள் கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

"போயிட்டு வாங்கண்ணு..." உண்மையான புன்னகையோடும் உறுதியோடும் அவனுக்கு விடை தந்தாள் தங்கை.

"வெற்றியோட திரும்பிவாங்க......" என்று வாய் நிறைய வாழ்த்தி திருநீறு கொடுத்தனுப்பினுள் பொன்னி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலிருந்து மாலை 8.40 க்குப் புறப்பட்டது புகைவண்டி. பேராதனைப் பல் கலைக்கழகத்தை ஒருதடவை மனத்திரையிலே நிறுத்தி ஒதுக்கிவிட்டு நிமிர்ந்தமர்ந்தான் முத்துவேல்.

8.45 க்கு. ''கூ......கூ......'' என்று ஒரே அவல ஓலம் எழுப்பியது புகைவண்டி. ஒன்றல்ல இரண்டல்ல, நிலையத்தில் நின்றிருந்த அத்தனை எஞ்ஜினும் பயங்கரமாக அலறித் துடித்தன. நீண்ட—நீண்ட அவலக்குரல்......

வைகறை புலரவில்லை.

இரண்டாம் காட்சிக்குப் போய்விட்டு, இரவு முழுக்கத் தூக்கமில்லாது 'மிரண்டா' வராந்தாவிலே நுளம்பு அடித்துவிட்டு ஊரை நோக்கிக் கிளம்பிய ஒரு ரசிகப் பெருமகன் போகடி போக்காக உளறிவைத்தான்.

''ராத்திரி கொழும்புக்கோச்சி குடையடிச்சிட்டுதாம். ஸ்ரேசனுலிருந்து அரைக்கட்டையிலயாம். அஞ்சு பெட்டி தூளோடு தூளாம் ஆக்களெல்லாம் ஓடிப்போறுங்க பாக்கிறத்துக்கு......''

முத்துவேலின் அப்பா தலையிலடித்தார்! வள்ளியின் இரத்தவோட்டமே உறைந்துவிட்டது! பொன்னியின் உயிர் மூச்சே நின்று விட்டது!

## 5. நர்ஸ் மஞ்சுளா

''இஞ்சி கல்லப் போன என்ட
இளமையிலே! தாராவே!
கண்கள் சிவந்து இப்போ
கடுங்கோப மானதென்ன?''

நர்ஸ் மஞ்சுளாவின் உதடுகள் துடித்தன கண்கள் கொவ்வைப் பழமாகச் சிவந்தன. முருகேசனை அவள் எரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதுபோலப் பார்த்தாள். அந்த வீரத்திருவிழிப் பார்வை முருகேசனுக்கு நகைப்பையூட்டியது. அவன் சிரித்தான். வாய்விட்டுச் சிரித்தான்.

''இஞ்சிகல்லப் போன என்ட
இளமையிலே தாராவே
கண்கள் சிவந்து இப்போ
கடுங்கோப மான தென்ன?''

மீண்டும் பாடினான், மீண்டும் சிரித்தான் சிரித்தபடியே அவன் பின்புறமாகச் சரிந்தபோது கட்டில் விளிம்பிலே தலை விழுந்துவிட்டது. கட்டியிருந்த துணியையும் தாண்டி இரத்தம் கசியத் தொடங்கிவிட்டது. மீண்டும் எழுந்தான்; அதேபோல விழுந்தான். அப்படி விழுவதில்; தலைக்காயம் தாக்கப்படுவதில் ஏதோ ஒரு சுகம் அவனுக்கேற்பட்டிருக்க வேண்டும். பத்திரகாளியாக ஆகிவிட்டிருந்த நர்ஸின் உள்ளம் கணநேரத்திலே பதைபதைக்கத் தொடங்கியது. முடியாது; அவளால் இன்னும் அதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நினைக்கு முதலே அவளின் கரங்கள் முருகேசுவின் தலையைத்தாங்கிப் பிடித்தன. கட்டியிருந்த 'பண்டேஜ்' அனைத்தையும் செந்நிறமாக்கிவிட்டு அவள் கையைக்கூட ஈரலிக்கச் செய்தது செங்குருதி. விழிக்கோணங்களிலே துளிகள் பனித்த . அவன் முகத்தை நோக்கினாள். அவன் சோர்ந்து அவள் மார்பிலே சரிந்தான்.

விருப்பு வெறுப்பின்றிச் சேவையொன்றையே கடமையாகக் கொண்ட ஒரு நர்ஸ், ஏன் இப்படிக் கலங்க வேண்டும்? அதுவும் எவனோ ஒருத்தனுக்காக அவள் ஏன் இப்படிக் கண்ணீர் சிந்த வேண்டும்? அவள் தன்னையே கேட்டுக்கொண்டாள். புரியமுடியாத இதயத்தின் விந்தையை அவளால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இதயம் அவன்பால் விழுந்துவிட்டதை அவள் உணர்ந்தாள். அதேநேரம் அதைத்தன்பால் கெட்டியாக இழுத்துப்பிடிக்கவும் முயற்சி செய்தாள். அவளுக்கு அந்த முயற்சி தோல்வி தருவதாகவே பட்டது.

நிலைமையை உணர்ந்தவள் திடுக்கிட்டாள். அவனது தலை அவள் மார்போடேயே கிடந்தது. எத்தனை நேரம் இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி நின்றுவிட்டோமோ என்று துணுக்குற்றாள். அவன் குழந்தைபோல இன்னும் கண்மூடிக் கிடந்தான். நல்லவேளை யாரும் அதைக் கவனிக்கவில்லை. மெதுவாக அவனைப்பிடித்துக் கட்டிலிலே கிடத்தினாள். அவன் மயங்கிக் கிடந்தான்.

ஐயையோ; அவள் மார்புச்சட்டையிலே இரத்தக் கறை! அந்த நர்ஸின் துல்லிய, வெண்மையான, மாசற்ற புனித ஆடையிலே இரத்தக் கறை!

அந்தக் கறை அவள் மாசற்ற இதயத்தைக் கூட களங்கப்படுத்தி விடுமா? இல்லையானால் அவள் நெஞ்சம் ஏனிப்படித் துணுக்குற வேண்டும்?

நர்ஸ் மஞ்சுளா எத்தனை நோயாளிகளைச் சந்தித்திருக்கிறாள்!... எத்தனை பெரிய இடத்து வாலிபர்கள் அவள் சேவையால் குணமாகியிருக்கிறார்கள்! அப்போதெல்லாம் இந்தப் பலவீனம் அவள் உள்ளத்தை உறுத்தியதில்லையே! இந்தப் பைத்தியத்திடம் அனுதாபம் என்ற பாசாங்கில் அவள் உள்ளம் நுழைய முனைவது ஏன்?

கட்டையவிழ்த்துக் காயத்துக்கு மருந்து போட்டுக் கட்டினாள். முருகேசன் இன்னும் கண் திறக்கவில்லை. அந்தக் கட்டிலைவிட்டு அப்பால் நகர மனம் இடம்தரவில்லை. அப்படியே நின்றிருக்க முடியுமா? இன்னும் எத்தனை நோயாளிகளை அவள் பார்த்தாக வேண்டும்!

'அற்றண்டன்' செல்லத்தை அழைத்து அவன் கண் திறக்கும்போது வந்து அறிவிக்கும்படி கூறிவிட்டு அப்பால் நகர்ந்தாள். தன் அறைக்குச் சென்று உடைமாற்றிக்கொண்டு நோயாளிகளைப் பார்த்துவிட்டு அந்த 'வார்ட்டு'க்கு மீண்டும் திரும்பியபோது

''வணக்கம் சிஸ்டர்'' என்றது ஒரு ஆண்குரல்.

''வணக்கம்'' என்றாள் அவள் அமைதியாக. நோயாளிகளைப் பார்க்க வரும் உறவினர்களுக்காகச் சிந்தும் புன்முறுவலோ, அன்றி அவர்களின் தொந்தரவினால் ஏற்படும் சுடுகடுப்போ அவள் முகத்தில் இல்லை. அமைதிக்கும் அமைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின்மைக்கும் இடைப்பட்ட ஒருநிலை. நின்மதிக்கும் நிம்மதி யின்மைக்கும் இடைப்பட்ட ஒருதன்மை. இன்பத்துக்கும் துன்பத்திற்கும் நடுவில் முளைத்த ஓருவித புதுமை அவள் முகத்தில் நிழல் காட்டியிருந்தது.

யாரோடு பேசுவதும் அவளுக்கு விருப்பமில்லாமல் தானிருந்தது. பேசாமலிருப்பதும் அழகாயில்லை.

''மிஸ்டர் முத்து நண்பரைப் பார்த்தீர்களா? என்றுள் பேச்சுக்காக.

''சிஸ்டர்!...'' என்ற முத்துவேலுவின் குரல் கரகரத்தது. கட்டிலோரமாக நின்றிருந்த வள்ளியின் விசும்பல் இதயத்தை உலுப்பியது அண்ணனையும் தங்கையையும் மாறி மாறிப் பார்த்தாள் அவள். இதயம் 'திக்திக்'' என்று அடித்துக் கொண்டது. கட்டிலிலே கிடந்த முருகனின் முகத்தை உற்றுக் கவனித்தாள்.

'யார் இந்தச் சிவத்தத் துணியை அந்தத் தலையின் கீழே விரித்தது?'' கையை வைத்துப் பார்த்தாள்; 'ஆ! சிவப்புத் துணியா அது? இரத்தம்! இரத்தம்!!...' அவள் போய்த் திரும்பிய இத்தனை நேரத்துக்கும் இப்படி வெள்ளமாக ஓடிக் கொண்டிருந்ததா? மருந்து கட்டிய பின்புகூட மறிபடாமல் ஓடியிருக்கிறதா? கடவுளே!

''செல்லம்! என்னத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாய்?'' 'அற்றன்டண்'டைக் கடித்து உதறினுள் மஞ்சுளா. செல்லம் பரக்கப் பரக்க விழித்தாள். கையைக் கையைப் பிசைந்தாள்.

''கண் முளிச்சாத்தானே வந்து சொல்லச் சொன்னீங்க 'மிஸ்' '' என்று ஏதோ உளறினுள்.

''முட்டாள், மூளைகிடையாதா உனக்கு? இவ்வளவு ரத்தம் ஓடும்வரைக்கும் பார்த்துக் கொண்டுதானே இருந்திருக்கிருய்?'' தனக்கு வந்துவிட்டதாகவே பதறினுள் நர்ஸ்.

''நான் போனபிறகு நீ இந்தக் கட்டில் பக்கமே வரல்ல, இல்லியா?'' பல்லை நெறுநெறுவென்று கடித்தாள். செல்லம் எதுவும் பேசாது கூனிக்குறுகினுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்களெல்லாம் சம்பளத்திலேதான் கண். எதுக்குத் தான் வாறீங்களோ? உணர்ச்சியில்லாத பிண்டங்கள்......''

''அடுத்தவினுடி நர்ஸ் மஞ்சுளா அந்த வாட்டை விட்டே அவசரத்தோடு குதித்தோடினுள். இரண்டு நிமிடங் களில் டாக்டர் இராமநாதன் உள்ளே நுழைந்தான். நர்ஸ் மஞ்சுளா பின்னுக வந்தாள்.

முருகேசுவைப் பரிசோதித்துவிட்டு நிமிர்ந்த டாக்ட ரின் முகத்திலே நெருப்புப் பறந்தது. நர்ஸின் பட்டு வத னத்தை அது பொசுக்கியது. தாங்கலாற்ருது அவள் முகம் கவிழ்ந்தது. இரு விழிக்கோணங்களிலிருந்தும் உருண்டதுளி கள் அவள் மார்பிலே சூட்டோடு விழுந்து சிதறின. சட் டையை ஊடுருவி, உள்ளணியை ஊடுருவி, இதயத்தை ஊடுருவி அவை அவளைக் கொன்றன. உயிரோடு கொன்றன.

''இந்த வார்ட்டுக்குப் பொறுப்பாளி யார்? எந்த நேர்ஸ்?''...

'தெரியாமலா கேட்கிருர் அவர்?' அவள் குனிந்ததலை நிமிரவில்லை.

''இத்தனை பொறுப்பற்று ஒரு நேர்ஸ் நடந்து கொள் வதைவிட வேறுதொழிலைத் தேடிக்கொள்வது நல்லது.''

உண்மைதானு? அவள் பொறுப்பற்றுத்தான் நடந்து கொண்டாளா?

காயத்தை அவிழ்த்துக் கட்டுப் போட்டு விட்டு இன் னும் இரத்தப் பெருக்கிருக்கிறதா என்பதைக் கவனியாது போனது பொறுப்பற்ற தனமில்லையா?

அந்த இரத்தக்கறை அவள் சட்டையிலே படிந்திரா விட்டால் அத்தனை அவசரமாக அவள் போயிருக்க மாட் டாளே!

அளவுக்குமீறிய இரத்தம் வெளியேறிவிட்டது. வேறு இரத்தம் பாய்ச்சாவிட்டால் பிரக்ஞை திரும்புவது சாத்திய மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்த பாங்கிலே முருகேசனுக்குப் பொருத்தமான 'குறூப்' இரத்தம் துளிகூட இல்லை.

டாக்டர் பெருமூச்சு விட்டார். நர்ஸ் துடிதுடித்தாள். முத்துவினதும் வள்ளியினதும் இரத்தத்தையெடுத்துப் பரிசோதித்துவிட்டு, 'பிரயோசனமில்லை' என்று கையை விரித்தார் டாக்டர்.

''டொக்டர் முருகேசனின் தங்கையை அழைத்து வரட்டுமா?'' என்றான் முத்து உயிர்த்துடிப்போடு.

''அவகாசமில்லை'' என்ற டொக்டர் இராமநாதன், கணநேரம் சிந்தித்தார்.

''பார்ப்போம், தாமதிக்காது உடனே கொண்டு வாருங்கள்'' என்றார். தங்கையை இருக்கச் சொல்லிவிட்டு காற்றாய்ப் பறந்தான் முத்துவேல்.

''டொக்டர்!'' என்றாள் மஞ்சுளா. டாக்டர் நிமிர்ந்து பார்த்தார்.

''என் ரத்தம்?...'' என்று தொடராது தயங்கினாள் அவள். டாக்டர் அவள் முகத்தை ஏறிட்டுப்பார்த்துத் தனக்குள்ளே சிரித்தார்.

''என் பொறுப்பற்ற தன்மையாலதானே அவர்...'' வார்த்தைகளை அவள் முடிக்கவில்லை.

''அதற்காக?...''

''என் ரத்தம் பொருந்துமென்றால் நான் மனப்பூர்வமாக...''

'ஓகோ, தவறுக்குப் பிராயச்சித்தமோ?' ''சரி''... என்றார் அவர்.

அடுத்த பதினைந்து நிமிடங்களிலே...... மஞ்சுளா என்ற பூங்கொடியின் உதிரம் முருகேசனின் நரம்புகளிலே ஓடத் தொடங்கியது. நிமிடங்கள் ஒன்று இரண்டு என்று ஒவ்வொன்றாக நகர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிறீச்ஸ்"...... என்ற அழுத்தத்தோடு வெளியே காரொன்று வந்து நின்றது. வராந்தாவிலே தவிப்போடு நின்றிருந்தாள் வள்ளி. அவளிடம் 'ஏன் வெளியே நிற்கிறுய்?' என்று கூடக் கேட்க அவகாசமின்றி வார்ட்டினுள் அவசரமாக நுழைந்த முத்துவேலுவைத் தடுத்து நிறுத்தினுள் 'அற்றன்ட்டன்' செல்லம்.

"ரத்தம் பாச்சிருங்க நீங்க வெளியில நில்லுங்க..."

"ரத்தம் பாச்சிருங்களா? ஆருட ரத்தம்?" அவன் அவளைப் பார்த்த பார்வை இப்படிக் கேட்டது.

"நேஸ் அம்மா மஞ்சுளாட ரத்தம்..." கணநேரம் அப்படியே நின்றிருந்த முத்துவேல் மெல்லத்திரும்பி வராந்தாவுக்கு வந்தான். ஏமாற்றத்தால் குமைந்து விக்கவும் முடியாது விசும்பவும் முடியாது தலைகுனிந்து நின்ற பொன்னி ஏறிட்டு நோக்கினுள். கண்ணீர் பெருக்கெடுத்தது.

"பொன்னி! வள்ளியத் தேற்றவேண்டிய நீயே இப்படி..." அவன் முடிக்கவில்லை

தூணோடு தூணாக எதுவுமே பேசத் திராணியற்று நின்றிருந்த வள்ளியின் கைகளைப் பிடித்து அணைத்துக் கொண்டாள் பொன்னி.

"கஸ்டத்துக்குமேலே கஸ்டம் நம்மட குடும்பம் ஒண்டைத்தாஞ கண்டது?" வாழ்வையே வெறுத்து விட்ட மாதிரி தொண்டை கரகரக்க முணுமுணுத்தாள் வள்ளி.

"அப்பிடி நமக்கென்ன வந்திட்டுது? மலபோல் வாறதும் தெய்வத்துட அருளால பனிபோல போகுது. இல்லாட்டி உங்கண்ணு அந்த ரயில் புரண்டதிலிருந்து தப்பமுடியுமா? அந்த முருகையன் தான் அவர வெளியில இழுத்து வீசியிருக்கிறுன். கால் கைக்கு ஒரு பொல்லாங்குமில்லாம அவர் திரும்பி வருவாரெண்டு ஆர் நம்பிஞ? அது போல எங்க அண்ணுவுக்கும் ஒண்டுமே ஆகாது. அந்த அப்பன்ட காலப் பிடிச்சிக்குவம், அதுதான் பெரியமருந்து"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய வேதாந்திபோல மொழிந்தாள் பொன்னி. வ்ள்ளியை இழுத்துச் சென்று பக்கத்திலே கிடந்த 'பெஞ்சிலே' இருத்தி அமர்ந்து கொண்டாள்.

உண்மைதான், மட்டக்களப்பென்ன, இந்த ஈழ மண்டலமே கண்டறியாத அந்த ரயில் விபத்திலிருந்து - துகழ் துகழாக நொருங்கிய இரண்டாவது பெட்டியிலிருந்து முத்து வேலு தப்பியதே அபூர்வம் தான்! யாராலும் நம்பமுடியாத விந்தைதான்.

அந்த ரயில் விபத்து நடந்த இரவு புலரு முன்பே முத்துவேலுவின் வீடு சாக்கோலம் பூண்டு அவனது சடலத்துக்காகக் காத்துக் கிடந்தது. ஆனல் அவன் அப்பழுக்கில்லாமலே வந்திறங்கியபோது அந்த வீட்டுத் துரும்புகள்கூட வியப்பால் பொங்கிப் பூரித்தன. எமனிடமிருந்தல்லவா மீண்டு வந்திருக்கிறுன் அவன்!

தண்டவாளத்தையிழந்து சில்லுகள் மணலில் குதித்த போது கதவைப் பெயர்த்து விட்டுத் தன்னை யாரோ தூக்கி வெளியே வீசிய உணர்ச்சி இருந்ததாகக் கூறினுன் முத்துவேல். கடைசி மூச்சிலே தன்னைத்தான் தற்காத்துக் கொண்ட விதத்தை விபரிக்க இயலாதுதான். ஏதோ ஒரு சக்தியால் அது நடந்துவிட்டது. அந்தச் சக்திதான் இறைவன் - முருகன் என்கிறுள் பொன்னி.

"மனிதன் தனக்கு அசாத்தியமான சிலவற்றைத் தனக்கு அப்பாற்பட்டதென நினைக்கிறுன். எதிர்பாராத விதத்தில் அது நிகழ்ந்து முடிந்த பிறகுங்கூட அது தன்ஞல் ஆனது என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டாவதில்லை. அது நிகழ்ந்து விட்டதற்கு வேருெரு காரணத்தைக் கற்பித்து அதற்குத் தலை வணங்குகிறுன்." இப்படிப் பகுத்தறிவு வாதிக்ள் கூறும் அந்தச் சக்தியைத்தான் பொன்னி தெய்வம் என்கிறுள். அந்த நம்பிக்கைக்கும் பலம் உண்டுதான்.

முத்துவேலுவினுல் இன்னும் வெளியே நின்று கொண்டிருக்க முடியவில்லை. முருகேசனின் ஆபத்தான நிலையைக் கூட ஒதுக்கித் தள்ளிவிட்டு இன்னெரு புதிர் உள்ளத்தே முளைத்து விடைகாணத் துடித்தது. அதுதான் அந்த நர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நர்ஸ் நோயாளிக்காகத் தன் இரத்தத்தையே அளித்ததை அவன் இப்போதுதான் முதல் தடவையாகக் கேள்விப்படுகிறான். அந்த நர்ஸுக்கென்ன அவ்வளவு அக்கறை? இத்தகைய தியாக சிந்தையுள்ள நர்ஸ் கூட இந்த நாட்டிலே, அதுவும் இந்த மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலே இருக்கிறாளா? அவளை மீண்டும் பார்க்கவேண்டும். அதுதான் அவனுக்கிருந்த துடிப்பு.

பொன்னிக்கோ, வள்ளிக்கோ இந்தக் கவலை பிறக்கவில்லை. யார் புண்ணியத்திலாவது முருகேசன் பிழைத்துக்கொண்டால் போதும் அவ்வளவுதான்.

'அற்றண்டன்' செல்லம் அப்போது வாசலில் இல்லை உள்ளே எதற்கோ ஓடிவிட்டாள். முத்துவேல் உள்ளே நுழைந்து அந்தக் கட்டிலை நெருங்கியபோது......

டாக்டர் இராமநாதன் மஞ்சுளாவின் கையிலிருந்து ரப்பர்க்குழாயைப் பிரித்துக்கொண்டிருந்தார் அதே கணத்திலே அவள் கீரைத்தண்டு போல வதங்கிச் சோர்ந்து கிடந்தாள். முத்துவேலு அப்படியே சிலைபோல சமைந்து நின்றான்.

# 6. இரத்தவெள்ளத்திலே

'திடுதிடென்று மழைபேயத்
திட்டியெல்லாம் தண்ணிநிற்க
மதுரையடி நாய்குலைக்க
வந்தகள்ளன் ஆர்தோழி?'

எழுந்திருந்த மஞ்சுளாவுக்கு உலகமே இருண்டது. ஆச்சிப்பூச்சி ஆடி கிறுகிறுத்து விழுந்ததுபோல் ஒருவித இன்ப மயக்கமாகப் பட்டது அது அவளுக்கு. அவள் பாவாடை கட்டித் தெரு மணலில் ஆடிய காட்சிகள் நினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்கு வந்தன. அந்த அறிந்தும் அறியாத பருவத்திலே அந்த மட்டங்களாகக் கூடிக் கவிபாடுவதும் ஒரு விளையாட்டு. அந்த மயக்கமான — மங்கலான நினைவிலே குறும்புக்காரி பூங்கோதை. பாடிய அந்த ஒரேயொரு கவிமாத்திரம் எங்கோ தொலைதூரத்திலிருந்து ஒலிப்பதுபோல உணர்வேற்பட்டது அவளுக்கு. உண்மையாக இப்போது மழைதான் பெய்கிறதா? தலையை தன்வயமாக்கி வெளியே விழிகளைத் திருப்பினாள். ஒரே மங்கலாக - புகையாகப்பட்டது அவளுக்கு. ஒருவித சோர்வு அவளைக் குப்புறப்பிடித்துத் தள்ளியது. யாரோ தாங்கிப்பிடிப்பதையுணர்ந்தாள் அவள். சற்றுநேரத்தின்பின் தெளிவு பிறந்தது.

''மிஸ் மஞ்சுளா; ஓய்வெடுத்துக்கொள்ளுங்க. ஒரு வாரத்துக்கு டியூட்டிக்கு வரத் தேவையில்ல'' டாக்டர் கூறிவிட்டு அவசரமாக வெளியேறிவிட்டார். அவரிடம் ஏதோ பேச வாயெடுத்த மஞ்சுளா நிறுத்திக்கொண்டாள்.

மீண்டும் அவள் சர்வசாதாரணமாக நடமாடத் தொடங்கிவிட்டாள். முருகேசன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான். பார்த்துவிட்டுத் தன் அறைக்குப்போகத் திரும்பினாள் அவள்.

''சிஸ்டர்;'' என்றது ஒரு குரல். முத்துவேல் தான். தயக்கத்தோடு காலெடுத்துவைத்து அவளை நோக்கி வந்தான். அவள்செய்த எதிர்பாராத அந்த உதவிக்கு - ஒரு உயிரையே காப்பாற்றித்தந்த அந்தப் பெரும்பணிக்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்றே தெரியவில்லை. பொங்கிப் பூரிக்கும் இதய நிறைவோடு அவன் தடுமாறினான்.

''சிஸ்டர்; நீங்க உண்மையாகவே தெய்வந்தான்'' அதற்கும்மேலால் அவனால் பேசமுடியவில்லை. அவளுக்கு நன்றி சொல்ல வார்த்தைகளே பிடிபடவில்லை. உள்ளம் நன்றியுணர்ச்சியிலே பொங்கிவழிந்தது அதை அவள் பார்க்க - அந்த இதயத்தை அவளுக்குக் காட்ட முடியவில்லையே என்ற அளவுக்கு அவன் வேதனையடைந்தான்.

''அது என் கடமை மிஸ்டர் முத்துவேல்...'' அதற்கு மேல் அவளாலும் பேச முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியும் பொன்னியும் உள்ளேவரத் தயக்கத்தோடு வெளியே நின்றிருந்தார்கள். கவனித்துவிட்ட மஞ்சுளா,

"தாராளமாக உள்ளேவந்து பாருங்க. அவர் நிம்மதியாகத் தூங்கிறார். இனிப் பயமில்ல" என்ருள். அந்தப் பேச்சிலும் சோர்புதான் இழையோடியது. பொன்னியைக் குறிப்பாகப் பார்த்துவிட்ட மஞ்சுளாவின் கண்கள் முத்துவேல் மீது பதிந்தன.

"இது அவரின் தங்கை. பேர் பொன்னி" என முத்து முடிக்குமுதலே நர்ஸ் குறுக்கிட்டாள்.

"ஓ, அன்றும் பாத்த ஞாபகம்..." என்று ஞாபகப் படுத்திக்கொண்டாள். மஞ்சுளாவின் நிலைமையை - அவள் உற்றிருக்கும் பலவீனத்தை நினைத்துக்கொண்ட முத்து,

"சிஸ்டர்; நீங்கபோய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்க. பிறகு பேசுவோம்" என்று விடைதந்தான். அவள் புன்னகையை வரவழைத்துக்கொண்டே படியிறங்கிப் போனுள்.

இரவே பேராதனைக்கு முத்துவேல் புறப்படவேண்டியிருந்தது. தங்கையையும் பொன்னியையும் வீட்டிலே விட்டுவிட்டு மீண்டும் ஆஸ்பத்திரிக்குத் திரும்பி வந்தபோது மஞ்சுளா என்றுமேயில்லாத பூரிப்போடு வரவேற்ருள். அதைவிட நிம்மதியைத்தந்தது அவள் சொன்ன செய்தி.

"நண்பரைப் பாக்கப்போறீங்களா?" என்ருள் வாசலில் நின்றுகொண்டே.

"உங்க முகத்தைக் கண்டபோதே எனக்கு நிம்மதி பிறந்துட்டுது பாக்கவேண்டியதேயில்ல" என்ருன் முத்துவேல்

"நடந்ததெல்லாம் நன்மைக்குத்தான். எனக்கும் இப்போதான் மன உறுத்தல் நின்றது. உங்க பழய நண்பரையே நீங்க இப்போ பாக்கலாம்."

"ஆ?... அப்படியாஞல்......

"அவருக்கிருந்த அந்த மாருட்டக்குணம் இப்போ சரியாய் விட்டது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எப்போது''

''ஓ உங்களுக்கு விஷயம் தெரியாது வாருங்க சொல்லுறன்.'' நடந்துகொண்டே நடந்தவற்றைச் சொன்னாள் மஞ்சுளா.

''வெறிபிடித்ததுபோல அவர் கட்டிலில் மோதிக் கொண்டதே அந்த வியாதிக்கு மருந்தாய் விட்டது. இனிக் காயம் ஆறினுச் சரி. கவலேயேயில்ல.'' என்றவள் எதையோ நினைத்துக் கொண்டவளாக.

''அ, உங்க நண்பர் சரியான வெக்கம் பிடித்தவர் போலிருக்கே...?'' என்று சிரித்தாள்.

''அவன் அப்பிடித்தான். புதுப்பெண்களென்டா தலையைக் கவிழ்ந்து கொள்வான்'' என்று ஆமோதித்தான் முத்துவேல்.

''மிஸ்டர் முத்துவேல், அவருக்குத்தான் நடந்து கொண்டது அத்தனேயுமே இப்ப ஞாபகமில்ல. பூரண குணமாகும் வரையாவது அந்தப் புத்தி மாருட்டத்தப்பற்றி அவரோட பேசாமலிருப்பது நல்லது...''

இதற்கிடையிலே முருகேசனின் கட்டிலே அவர்கள் அடைந்துவிட்டார்கள். முத்துவைக் கண்டதும் தன்னே மறந்தே எழுந்திருக்க முனேந்த முருகேசனே மஞ்சுளா அமைதியாகப் பிடித்துப் படுக்கவைத்தாள் அவன் குழந்தைபோல அடங்கினுன்.

இத்தனே நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் முருகேசனின் வதனத்திலே சுய ஒளி படர்வதைக் காணமுடிந்தது முத்துவேலுவுக்கு.

''தோழே, தங்கச்சி எங்க?'' முருகேசன் கேட்ட முதல் கேள்வி இது.

''ஆருட தங்கச்சி? என்ட தங்கச்சியா, உன்ட தங்கச்சியா? அவளப்பற்றியெல்லாம் நீ கவலேப்படாத சும்மா காயமாறுமட்டும் நிம்மதியாயிரு...'' என்று மடக்கினுன் முத்துவேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்;" என்று புன்னகைத்தான் முருகேசன் அவனுக்கு அதிகமாகப்பேச ஒருவித கூச்சமாகவிருந்தது. இந்த நர்ஸ் பக்கத்திலே நிற்கிருளே!

"மச்சாளும் மச்சாளும் சாயந்தாரம்வருவாங்க" என்று முருகேசனிடம் கூறிய முத்துவேல், மஞ்சுளாவைப் பார்த்தான்.

"இரண்டொரு நாளைக்கு, நான் வரங்காட்டிலும், சிஸ்டர் நீங்கதான் கொஞ்சம் நல்லாக... என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினன்.

"எங்க போகப்போறீங்க?... கழுத்தை வளைத்துக் கேட்டாள் அவள். அன்றைப் பொழுதுக்குள் பேராதனைக்கு எப்படியும் தான் போகவேண்டியிருப்பதாக முத்துவேல் கூறக்கேட்ட மஞ்சுளா மாத்திரம் துணுக்குறவில்லை; முருகேசனும்கூட எழுந்தமர்ந்தான்.

"என்ன இந்த நேரத்திலா? நாடிருக்கும் இன்றைய நிலையென்ன? சித்த சுயாதீனத்தோட தான் சொல்லுறீங்களா? அல்லது......?

"என்ட தவிப்பு உங்களுக்குப் புரியாது சிஸ்டர். அங்க என்ட உயிர் நண்பன் ஒருத்தன் கள்ளத்தோணியெண்டு கைது செய்யப்பட்டிருக்கிறன். கோட்டு விசாரணை நாளைக்கு அட்வக்கேட்டிடம் குடுக்கவேண்டிய பத்திரங்கள் செர்ட்டிபிக்கற் எல்லாம் என் பெட்டியில..."

"கூ" இதுதானு? வேருெரு கவலையெடுக்க அட்வக்கேற்றுக்குத் தந்தி கொடுத்தாப் போச்சு.

"அது இப்ப சாத்தியமில்ல சிஸ்டர். நாடிருக்கும் இன்றைய நிலையில அந்த அட்வக்கேற்றையே......"

"ஆள் சிறைப்புள்ளியோ?... சரிதான் இப்போ என்ன செய்யப்போறீங்க?... றெயின் தடைப்பட்டு நாலுநாளாகுது. இடையில இந்த ஊரடக்குச் சட்டம். நாடெல்லாம் சிங்கள வெறியரின் கொலைவெறித் தாண்டவம். இந்த நிலையில?..."

"காரொண்டைப் பிடித்துக்கொண்டாவது..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாசக் கயிற்றுக்குக் கழுத்துக் கொடுத்தவங்க கூட இப்ப வரமாட்டாங்க...''

இத்தனையையும் கேட்டுக்கொண்டிருந்த முருகேசன்,

''தோழே, நீ வீட்டுக்குப்போ - நானும் வாறன்'' என்று எழுந்தான்.

நர்ஸ் மஞ்சுளா, அவனிரு தோள்களையும் பிடித்து இருக்கச் செய்து, மெதுவாகப் படுக்கவும் வைத்தாள்.

''இந்தக்காயம் ஆறும்வரை இப்படி எழுந்திராதீங்க.'' என்று கட்டளையுமிட்டாள். முருகேசன் பேசாமல் கண்களை மூடிக்கொண்டான். முத்துவின் பக்கம் திரும்பினாள் மஞ்சுளா.

''முத்துவேல், நீங்க இப்படிப் பிடிவாதமாயிருப்பது என்னவோ எனக்கே பயமாயிருக்கு. கட்டாயம் போய்த் தானாக வேண்டுமெண்டா, என்னால முடிந்ததைச் செய்கிறேன்.......'' என்று அவனை வெளியே அழைத்துச் சென்றாள்.

''இன்ஸ்பெக்டர் நடேசனைத் தெரியுந்தானே? அவர் என் அத்தான்தான். ஒன்றுவிட்ட அக்காவின் புருஷன். அவரை அவசரமாகக் கண்டிக்கு அழைத்திருக்கிறார்கள். நாலுமணிக்கே ஜீப்பில் புறப்படுகிறார். அவர் சம்மதித்தால் உங்கள் அதிஸ்டம்தான்.'' இவ்வளவையும் கூறியதோடு நில்லாமல் அவனை அவர் வீட்டுக்கும் அழைத்துச் சென்று அறிமுகமும் செய்துவைத்தாள் அவள்.

பிற்பகல் நான்கு மணிக்கு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட அந்த ஜீப் முத்துவேலுவை யும் கூடச் சுமந்துகொண்டு கண்டியைக் குறிவைத்துக் காற்றாய்ப் பறந்து கொண்டிருந்தது.

காலையில் வீட்டிலிருந்து புறப்படும்போது தன் பிர யாணத்தை யாரிடமும் சொல்லிக்கொள்ளவில்லை முத்து வேல் சொல்லியிருந்தால் அவனை ஆஸ்பத்திரிக்குக் கூடப் போகவிட்டிருக்கமாட்டார்கள் பொன்னியும் வள்ளியும் அவ னின் அப்பா வேறு கண்டிப்பாகக் கட்டளை போட்டிருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி நாலரைக்கு மேலாகியும் முத்துவேல் சாப்பாட்டுக்கு வராததால் அந்த வீட்டின் துரும்புகூட அங்கலாய்த்துக் கிடந்தது. மணி நாலேமுக்காலிருக்கும். ஒரு பையன் சைக்கிளில் வந்து, மஞ்சுளா அக்கா கொடுக்கச் சொன்ஞைமென்று ஒரு கடிதத்தைப் பொன்னியிடம் கொடுத்துவிட்டுச் சென்ருன். அதை முத்து எழுதியிருந்தான். தாண்கண்டிக்குப் போவதாகவும் விரைவில் திரும்புவதாகவும், முருகேசனை அடிக்கடி போய்ப் பார்க்கும்படியும் எழுதியிருந்தான்.

இதென்ன விபரீதம்? என்று அப்பா சத்தமிட்டார். வள்ளி ஒதுங்கிப்போய் உட்கார்ந்து விட்டாள். "இந்த வேளையிலா புறப்படுவது? இவருக்கென்ன பைத்தியம் தாஞ? என்று தனக்குள்ளே புழுங்கிஞள் பொன்னி.

அந்தக் காலமா இது? எந்தக் கிராமத்திலும் அரசியல் பேச்சு! கலவரமும் குழப்பமும் பற்றிய செய்திகளைத் தெரியாதவளா பொன்னி?

"பண்டாட ஆட்சியில நாடு என்னத்தக் கண்டது? கொலையையும் கொள்ளையையும்தான் கண்டது. அவசர காலமாம், ஊரடக்குச் சட்டமாம் ஆறுமணிக்குப் புறகு ரேட்டுல வெளிக்கிடப்படாதாம். இங்கிலிசுக் காறனுமிருந்தான் எப்பவாவது நடந்துதா இந்த அக்கிரமம்?" என்று பாட்டிகள் வெற்றிலை போடுவதற்குப் பதிலாகக் கலவரக் கதைகளைத்தான் நடுக்கத்தோடு போட்டுக் குதப்பிஞர்கள்.

உண்மைதான், தமிழினம் அடைந்த சித்திரவதை ஒன்ரு இரண்டா? சிங்கள வெறியர்கள் விதைத்த விஷவித்துக்கள் ஒரு பாபவுமறியாத குழந்தை குஞ்சுகள் எத்தனையை ஆயிரம் ஆயிரமாகக் கொன்று குவித்தன? அப்பப்பா அதை நினைக்கவே நடுங்குகிறதே! இத்தனைக்கும் தமிழினம் செய்த குற்றம் என்ன? ஒன்றேயொன்றுதான். ஈழத்திலே தமிழஞகப் பிறந்தது!

மட்டக்களப்புத் தபால் நிலையத்தில் வேலை பார்த்த ஒரு சிங்களப்பெண்ணைத் தமிழர்கள் வீதியிலே இழுத்து ஏதேதோ செய்கிருர்களாம் என்று சிங்கள பஸ் சாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தன் விதைத்த விஷவித்து அம்பாறையிலே கோர தாண்டவத்தையுண்டாக்கி ஆயிரமாயிரம் தமிழ்ப்பெண் களை - பிள்ளைகளை அவர்தம் உடைமைகளை அழித்தது - கொள்ளையடித்தது - கொன்று குவித்தது! மனித மனமே நினைக்கமுடியாத சித்திரவதை - ஆ! நினைக்க முடிகிறதா? மிருகத்தனமான வெறிச் செயல்கள் நினைத்துப்பார்க்கக் கூடியவையா?

மானத்தைக் காக்க கிணற்றில் குதித்து உயிரைப் போக்கிய தமிழ்க் கன்னியர்கள் எத்தனை! இனவெறியர்களின் கைகளிலே சிக்கி, கற்பையும் உயிரையும் நடுவீதியிலே பலியிட்ட மங்கையர்கள் எத்தனை? கணக்கா வழக்கா? ஒருதமிழ்த் தாயை சிங்கள இனவெறியர்கள் பிறந்தமேனி யாக்கி மிருகத்தனமாக எதையெதையோ செய்து மரத்திலே கட்டி பெற்ரோல் ஊற்றி நெருப்புமிட்டார்களே! இப்படி ஒன்று இரண்டா? இரத்தவெள்ளம் தமிழ் இனவெள்ளம் ஆறுகப் பெருகிய இந்த நேரத்திலே தான் முத்துவேல் கண்டிக்குப் பிரயாணமாவதா?

''ஐயோ! அத்தான்!'' என்று ஒப்பாரி வைக்கவில்லை உள்ளத்துக்குள்ளே ஓலமிட்டாள் பொன்னி.

மணி ஐந்தாகப் போவதை அவசரமாக ஞாபகமூட்டி ஞள் வள்ளி. ''நேரமில்லை. ஆறுமணிச்சங்கு ஊதிவிடும். அரைமணிநேரத்தில் திரும்பிவிட வேண்டும்.'' இது அப்பா வின் கட்டளை.

புதூர்ச் சந்தியிலே பஸ் தயாராய் நின்றிருந்தது. மச்சாளும் மச்சாளும் ஏறிக்கொண்டார்கள்.

அந்த வார்ட்டுக்கு அந்தக்கிழமை முழுக்க மஞ்சுளா தான் பொறுப்பு. டாக்டர் இராமநாதன் அவனைப் பரி சோதித்து விட்டுச் சென்று விட்டார். மற்ற நோயாளி களையெல்லாம் பார்த்துவிட்டு வெளியேற முயன்ற மஞ் சுளா வெளியேற மனமில்லாமல் மீண்டும் திரும்பி நின்ருள். முருகேசன் படுத்திருந்த கட்டிலை நோக்கி நடந்து வந்தாள். பரிசுத்தமான அந்த உடையோடு தெய்வகன்னிகை போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மிதந்து வந்தாள். கண்களைச் சட்டென்று மூடிக் கொண்டு பேசாமல் அவன் படுத்திருந்தான். அவள் அருகே வந்துவிட்டதென்றல் அசைவு அவனைத் தொட்டது. தெரிந்து கொண்டான். இன்னும் அருகிலே வந்து விட்டாள். சலனமற்று இருந்து விடத்தான் அவன் முயன்றான். ஆனல் அந்த மனம் குழந்தைபோல எக்களித்தது. அதனல் அவனின் சோர்ந்த முகத்திலே மலர்ச்சி பெருகிட்டது.

அவள் அந்த முகத்தின் வசீகர நெளிவு சுழிவுகளை இமைகொட்டாது பார்த்து நின்றிருந்தாள். இன்னும் நின்றிருந்தாள். அமைதியாக நின்றிருந்தாள். போலியாக அவன்கண்களை மூடியிருப்பதைப் புரிந்து கொண்டு புன்னகைத்தாள்.

ஒரு தோடம்பழத்தை எடுத்து உரிக்க முயன்றாள். அது வெறும் நகங்களுக்குக் கட்டுபடவில்லை. மனத்தைப் போல நகங்களைத்தான் பதம்பார்த்து விடும்போலவிருந்தது

'யாரோ, எவரோ மருத்துவத்துக்கு வருகிறார்கள். அவர்களிடமெல்லாம் ஒட்டிக் கொண்டு உள்ளத்தில் ரணத்தை ஏற்படுத்திவிடப் பார்க்கிறது இந்த ஆசை' என்று மீண்டும் சிரித்தாள். 'ஆனல் இந்த மனிதரை யாரோ, எவரோ என்று நினைத்துவிடுவதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

அற்றன்டண்டை அழைத்து ஒருசிறுகத்தி கொணரச் சொல்லிப் பழத்தை அறுக்கத் தொடங்கினள், அந்த நர்ஸ்.

''ஆ...'' அந்த வேதனைக்குரல் அவனை அதிரவைத்தது. சட்டென்று விழித்தான். அவள் கட்டை விரலிருந்து இரத்தம்! அவள் அற்றன்டண்டை உதவிக்கு அழைத்திருக்கலாம். ஆனல் அழைக்கவில்லை. இரத்தம் கொட்டக் கொட்டப் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றிருந்தாள். அவள் அமுக்கிப் பிடித்திருந்த மறுகையையும் பீறிக்கொண்டு இரத்தம் கொப்பளித்து. மறுகணம்......

தலைவேதனை கூட அவனுக்குத் தெரியவில்லை. சுற்று முற்றும் பார்த்தான். பஞ்சோ, பண்டேஜ்ஜோ அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்படவில்லை. அந்தக் கணத்திலிருந்தே தமிழ்ச்சினிமாப் படக் காட்சிபோல ஒரு நிகழ்ச்சிதாஞக அங்கே உருவானது.

அவன் உடுத்திருந்த வேட்டி கிழிக்கப்பட்டது. அங்கிருந்த தண்ணீர்க் கிளாசில் நனைக்கப்பட்டது. அவள் விரலைச் சுற்றிக் கட்டுப்போட்டது. அதெப்படித் தாஞகச் சுற்றிக் கட்டுப் போடமுடியும்?

முருகேசன் மஞ்சுளாவின் மென்மையான அழகிய கையைப்பற்றி ஒல்லியான சிவந்த விரலுக்குக் கட்டுப் போட்டான். அவள் தலைகுனிந்து ஒருவித இதமான புல்லரிப்போடு நின்றிருந்தாள்.

'யாரது?' நிழலொன்று அசைந்தது. துணுக்குற்ருள். குனிந்தாள்; குறுகிஞள்; திரும்பிஞள்.

தென்றல் புயலாக உருவெடுத்தது. உள்ளத்தை வைக்கோலாக்கிப் பிய்த்துக் கிளறியது. எங்கிருந்தோ நெருப்பையள்ளிக் கொட்டிக் குமுறிப் புகைந்து தீப்பற்றிக் கொண்டது. தீ! ஆலகாலத்தீ! அவள் உள்ளமெல்லாம் வடவாமுகாக்கினி!

வள்ளியின் மெல்லிய பாதங்கள் படபடத்தாலும் தாமாகச் செயலற்று அசைந்தன. அடுத்தகணம் வலுக் கொண்டு நடந்தன. ஆஸ்பத்திரிக் கேற்றைத் தாண்டி மேற் குப்பக்கமாக அவை திரும்பின கிழக்கு நோக்கி முன்னேறின. போனபோக்கிலே வெறிகொண்ட மாதிரி, ஆவேசம்பிடித்த மாதிரி படுவேகமாக நடந்தன. இன்னும் வேகமாக அவை ஓட ஆரம்பித்தன.

"வள்ளி! வள்ளி!......" பொன்னியின் குரல் வள்ளிக் குக் கேட்கவில்லை. கோட்டைமுனைப் பாலத்தை அவள் தாண்டிவிட்டாள். பொன்னி பயந்ததுபோல் எதுவும் நடக்க வில்லை. பொலிஸ் நிலையத்தின் முன்பாக இறங்கி கிழக்கு நோக்கி அவள் ஓடத்தொடங்கிஞள்.

பொன்னியின் குரல்கேட்டுப் பக்கத்தில் நின்றவர்கள் சிரித்தார்கள். வள்ளியைச் சுட்டிக்காட்டிப் பைத்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நகைத்தார்கள். ஆனல் எவராலும் அவளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தடுத்து நிறுத்த யாரும் நினைக்கவுமில்லை.

வீதிகளிலே நடமாட்டம் படிப்படியாக ஒடுங்கியது. நாய்கள் கூட வீதிகளை விட்டு ஒடிவிட்டன. இரண்டேயிரண்டு உருவங்கள் ஒன்றன்பின் ஒன்று கல்லடிப்பாலத்தை நோக்கி, - அந்தச் சொர்க்கத்தின் வாசலை நோக்கி......

"ஐயோ வள்ளீ!...."

பொன்னியின் தொண்டை வெடித்துக் குரல் தெறித்தது பாலத்தின் கம்பியிற் கைகளை ஊன்றி உன்னிய வள்ளி துணுக்குற்று நின்றுள்.

ஆறுமணிச் சங்கு கரையாதெருவிலிருந்து "ஊம்" என்ற ஆரம்பத்தோடு அலறியது. அடுத்தகணம் பொன்னியின் கைகளிலிருந்து விடுபடமுடியாது வள்ளி திமிறினுள்.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையிலிருந்து புறப்பட்ட அந்த இராணுவ 'ஜீப்' வண்டி, போர்வை விரிக்கத் தொடங்கிய மெல்லிய இருளைக் கிழித்துக்கொண்டு, அரிசி ஆலையைக் கடந்து கல்லடிப்பாலத்தை நோக்கிப்பாய்ந்தது.

அதோ நடுவீதியிலே இரு உருவங்கள்! துப்பாக்கி முனைகள் இரண்டு ஒரே நேரத்திலே நீண்டன.

"மளீர்!..." "மளீர்!!..."

அந்த உருவம் சுருண்டு வீழ்ந்தது. மற்றதும் இரத்த வெள்ளத்திலே விழுந்து புரண்டது.

## 7. இருதுளிகள்

"ஆறுமணிச் சட்டத்திலே
ஆலையடிச் சோலைக்குள்ளே
பட்டாளக் காரனுக்குன்
பால்முலையும் ஏன்குடுத்தாய்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச விருட்சத்தின் பொலிவோடு கூடிய அந்த விஷ்ணு கோயிலின் முன்பாகத் தரித்து நின்றது அந்த இராணுவ 'ஜீப்' வண்டி.

''உம், எறங்கிப் போங்கோ... இப்ப கேவியூ காலம் தெரியாது? ரோட்டுக்கு எறங்கிஞச் சூடுவிழும். நாங் கண்டது நல்லாப் போச்சி போங்கோ...'' சிங்களத் தமிழில் பேசினன் அந்த இராணுவ வீரன்.

பொன்னி இறங்கினள். வள்ளியையும் இழுத்துக் கொண்டு நடந்தாள். அந்த இராணுவ வீரனுக்கு நன்றி சொல்லக்கூட அவளுக்கு உணர்ச்சியில்லை.

ஜீப்பைக் கோயில் வீதியில் ஒட்டித் திருப்பியெடுத்தான் றைவர், கண்ணைவிட்டு மறையும் வரையும் அந்த இருபெண்களையும் பார்த்துக்கொண்டேயிருந்தான் அந்த வீரன். ஜீப் உறுமிக்கொண்டு அவர்களைவிட்டே மறைந்தது.

அந்த வீரனுக்குமாத்திரம் சிந்தனையைவிட்டு அது மறையவில்லை. முன்னுக்கு இறங்கினளே அவள் - பொன்னி - அவளைப் போலத்தான் அவனைக் கொள்ளைகொண்ட அவளும் இருப்பாள். அதே தோற்றம்; அதே பருமன்; அதே அழகு.

ஆலையடிச்சோலையிலே இராணுவம் முகாமிட்டிருந்தது மட்டக்களப்பு விமானத்தள வேலை இராணுவ வீரரின் தலையிலே சுமத்தப்பட்ட முதல் கட்டம் அது.

அந்தக் காட்டைவெட்டி முகாமிடும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள் வீரர்கள். பக்கத்திலேயிருந்த அந்தச் சிறிய ஓலைக்குடிசை தேனீர்கடையாக மாறிய கன்னிப் பருவம். அந்தக் கடைக்கு எதுவோ வாங்கவந்த போதுதான் அவளைக் கண்டான் சுகததாஸ. ஆமாம் அந்த இராணுவ வீரனின் பெயர் சுகததாஸ.

தேனீர்க் கடைக்காரியின் மகள் அவள். பெயர்! திரேசா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கண்களால் பேசினார்கள். கருத்துக்கள் பேசின. கடைசியில் இதழ்களும் பேசின. அவனுக்கு 'டிக்கக் டிக்கக்' 'தெமழ்' தெரிந்தது. பேசினான்; பேசினாள்; பேசினார்கள்.

அன்று தாயில்லாதபோது அவன் கடைக்கு வந்தான். வாங்கிலேயே அமர்ந்தான்.

"என்ன வேணும்?" என்றாள் அவள். அவன் பேசவில்லை. அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அந்தப் பார்வை 'நீதான் வேண்டும்' என்பதுபோல இருந்தது.

"உங்களால் எனக்குத் தலையே கிளப்பமுடியல்ல" என்றாள் அவள்.

"ஏன்?" என்று அவன் கண்ணால் கேட்டான்.

"எல்லாரும் என்னைக் கேலிசெய்யுறாங்க..." என்று சிணுங்கினாள் அவள்.

"எப்படி?" என்றான் அவன்.

'ஆறுமணிச் சட்டத்திலே
ஆலையடிச் சோலைக்குள்ளே
பட்டாளக் காறனுக்குன்
பால்முலையும் ஏன் குடுத்தாய்?'

அவள் பாடவில்லை. இதழ்கள் அசைத்து கிசுகிசுத்தாள். இப்படி அண்டை அயல் பெண்கள் அவளைக் கேட்கிறார்களாம்.

"உம்? நீ குடுக்கல்லையே. பொய்; பொய்" என்றான் அவன். இளமை வெறி இருவரையும்தான் கொன்றது. அவள் தலைகுனிந்தாள். ஒரு தடவை நிமிர்ந்தாள்.

"நான் கொடுத்தால்?"... என்று அந்த கண்கள் கேட்டன. ஆவலோடு கேட்டன.

அவன் எழுந்தான். அடுத்த சில நொடிகளில் அவன் கரங்களுக்கிடையே அவள் கசங்கினாள். பூவாகக் கசங்கினாள். மெல்லப்படிந்த மாலைவேளை வெட்கத்தோடு இருட் போர்வையை இறுக்கிப் போர்த்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த. வேளையிலே - பின்னிப்பிணைந்து இன்பவெறி படைத்த அந்த வேளையிலே அவன் தந்த வாக்குறுதி...

"திரேசா, உன்னைத்தான் நான் மணந்துகொண்டு வீட்டுக்கும் அழைத்துப்போவேன். பயப்படாதே" என்ற கருத்தோடு இனித்தது.

ஒருசில நிமிடங்கள் இனித்த ஏதோ ஒன்று, அது நிகழ்ந்து முடிந்ததும் திகிலைப் பரப்பியது. அவள் பேய் அறைந்ததுபோலானாள். அவள் கன்னங்களை வருடி கேசத்தை ஒதுக்கி இன்னுமொரு முத்தம் கொடுத்துவிட்டு அவன் போய்விட்டான். அதன் பிறகுதான் திரேசாவின் தாய் அங்குவந்தாள், அது நடந்து சரியாக ஒரு முழுவாரம் இன்னும் கழியவில்லை.

'ஜீப்' புதூர்ச் சந்தியில் திரும்பியபோது, ஆலயடிச் சோலை ஏற்றத்தை மறையுமட்டும் ஊடுருவிப்பார்த்தான் அந்த இராணுவ வீரன். கனங்கரேலென்ற இருள்தான் தெரிந்தது.

'இன்று இந்த 'டியூட்டி'யில்லாவிட்டால் திரேசாவைச் சந்தித்திருக்கலாம். சே, என்ன கடமை' என்று அலுத்தான். ஆனால் அந்தத் திரேசாவை இந்தப்பெண் ஞாபகமூட்டிவிட்டுச் செல்கிறாள். திரேசாவை மறக்கமுடியாது. அந்த இன்பத்தைச் சாவிலும் மறக்கமுடியாது. அவள் இல்லாமல் வாழவும் முடியாது. அது அவனுக்குத் தெரிந்தது. அவளைக் கைவிடக்கூடாதென்ற திட்டமான அறிவுகூட உள்ளத்தில் ஒட்டிக்கொண்டது.

துப்பாக்கிக்குப் பலியாகியிருக்கவேண்டிய இந்த இரு பெண்களும் அந்தத் திரேசாவினால் - அவள் நினைவினால்தான் உயிரோடு செல்கிறார்கள். அவ்வளவு உயர்ந்தவள் திரேசா.

இதே நேரத்திலே இரத்தக்கறையால் மூடுண்டு குற்றுயிராய் ஜீப்பினுள் கிடக்கும் இரண்டு ஜீவன்கள். ...ஆமாம் அவற்றை ஆஸ்பத்திரியிலல்லவா சேர்க்கவேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக ஆறேகாலுக்கு கல்லடிப்பாலத்திலே 'மளீர் மளீர்' என்று திகில் எழுப்பிய துப்பாக்கிக் குண்டுகளால் சுருண்டு விழ்ந்த இரு உடல்களேயும் தூக்கிப் போட்டுக் கொண்டு அந்த ஜீப் ஆஸ்பத்திரியை நோக்கிவரும் வழியில் தான் இன்னும் இரண்டு உருவங்கள் நடுவீதியை மறைத்துக் கொண்டு நடந்தன. துப்பாக்கியை உயர்த்திய அடுத்த வீரனைத் தடுத்தான் சுகததாஸ.

காரணம்?

திரேசாவின் சாயல் ஒருத்தியிலே இருந்தது. அருகிலே ஜீப்பை நிறுத்தியபின்தான் அவள் திரேசாவில்லே என்பது தெரிந்தது.

முந்தாநாள் குளிக்கப் போனபோது அவளே எங்கோ பார்த்த ஞாபகமும் வந்தது. ஆமாம், அந்த விஷ்ணுகோயிலுக்குப் பக்கத்திலேதான்.

இந்தக் காரணங்களால், அந்த ஜீப் விஷ்ணு ஆலயம் வரை வந்துவிட்டுப் போகிறது.

ஆஸ்பத்திரியினுள்ளே நுழைந்தது ஜீப். இரண்டு உடல்களேயும் தூக்கி வராந்தாவிலே வெளிச்சத்திலே அந்த இராணுவ வீரர்கள் கிடத்தினர்கள். ஒருவன் டாக்டரிடம் அறிவிக்க உள்ளே நுழைந்தான். மற்றவன் அப்போதுதான் அந்த இரத்தவெள்ளத்திலே தோய்ந்த அந்த உடல்களேக் கவனித்தான். அவன் தூக்கிப்போட்ட அந்த உருவம் பெண்ணுருவம்?

என்ன!

சரிந்துகிடந்த தலையை நிமிர்த்திக் கேசத்தை விலக்கினன்.

ஆ? திரேசா!......

இராணுவ வீரன் - ஆனல் மனிதன்தான். நேற்றே இன்பவெள்ளத்திலே அவனேக் குளிப்பாட்டிய அதே திரேசா இன்று இரத்தவெள்ளத்திலே...! பற்களால் தன் கைகளேயே கடித்துக்கொண்டு தனக்குள்ளே எல்லாவற்றையும் அடக்கித் தலேகுனிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த உடல் மெல்ல அசைவது தெரிந்தது. குனிந்தான்.

திரேசாவின் கண்கள் மெல்லத் திறந்தன. மண்டியிட்டுத் தன் அருகே குந்தியிருப்பவன்... யாருமில்லை அதே சுகததாஸ.

அவன் கைகளைப்பற்றி குண்டுபாய்ந்த தன் மார்போடு இறுகச் சேர்த்துக் கண்களை மூடினாள். இதழ்கள் மெல்ல அசைவதாக அவன் உணர்ந்தான்.

''என்னையே சந்தர்ப்பத்தால் உங்களுக்குத் தந்தேன்... என்னோடேயே இந்தக் களங்கம் மறையட்டும்... தமிழ்த் தாய்க்குலம் கறைபடியாமலே மலரட்டும்''

கண்களைத் திறந்து மீண்டும் அவன் முகத்தை நோக்கினாள்.

''உங்களால்... இனி... எப்போதுமே... நான்... நான்...'' அவள் சொல்லவந்ததைச் சொல்லமுடியாமலே தலை சரிந்தது. - ஒரேயடியாகச் சரிந்தது.

அவன் கண்களிலிருந்து பெருக்கெடுத்த துளிகள் அவள் நெற்றியிலே திலகமிட்டுச் சிதறின.

சுவடு தெரியாமலே சுகததாஸ ஜீப்பினில் ஏறினான். அது அசுரத்தனமாக உறுமிக்கொண்டே புறப்பட்டது.

ஆலையடிச்சோலையிலே இன்னுமொரு தேனீர்க்கடை புதிதாக முளைத்தது.

நெருப்பிலே புழுப்போல துடித்துப்போயிருந்த வள்ளியின் அப்பாவுக்கு இப்போதுதான் உயிர் மீண்டது.

''இவளவு நேரமும் என்ன செய்தயள்? ஆறுமணிச் சட்டமெண்டு தெரியாதா வள்ளி?'' அதட்டினார் அவர்.

அந்த இரவு இருவருக்குமே நித்திரை வரவில்லை. நடந்துமுடிந்த பயங்கரத்தை மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டாள் பொன்னி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி அதை - அந்த நர்ஸையும் அவள் கண்ட காட்சியையும் பசுவைப்போல மீட்டுமீட்டுத் துடித்தாள். பெருமூச்சு விட்டாள் 'ஆண்' என்ற சொல்லுக்கே பித்தலாட்டம் என்ற அர்த்தமா? நிமிடத்துக்கொரு நிறம்மாறும் பச்சோந்தி - அழிந்தழிந்து புதிதுபுதிதாக உருமாறும் வானவில். மலருக்கு மலர்தாவும் வண்ணத்தி. இவையெல்லாம் கண்ணுக்கு அழகாய்த்தான் தோன்றுகின்றன. இவற்றையெல்லாம்விட விசித்திரமானதா ஆண் உள்ளம்?

பெருமூச்சு ஒன்றைவிட வேறொன்றும் முடியவில்லை. சாவு என்ற வழி ஒன்றைத்தவிர வேறு திருப்பம் அவளுக்குப் புரியவில்லை.

அந்தச் சாவும் மனிதரின் பிடிக்குக் கட்டுப்பட்டிருக்கவில்லை என்பது சிறுகச்சிறுக அவளுக்குப் புலனானது. இல்லையானால் அன்று அந்த ஒல்லிமடு அவளை விழுங்க மறுத்ததேன்? கல்லடிப் பாலத்துக் கம்பியிலே கையை ஊன்றி உன்னியவள் ஏன் குதித்துவிடமுடியவில்லை? அவ்வளவு விரைவில் அவளைப்பிடித்து நிறுத்திவிடும் வேகத்தைப் பொன்னிக்குக்கொடுத்தது யார்? அதுதான் போகட்டும் வீதியிலே காண்பவர்களையெல்லாம் சுட்டுத்தள்ளும் அந்த இராணுவத்தினர், பவுத்திரமாக வீடுவரை ஏற்றிக்கொண்டு வந்துவிட்டதேன்! அவர்களின் கைகளைக் கட்டிப்போட்டது யார்? அல்லயலிலெல்லாம் வீடுகளில் புகுந்து பலாத்காரம் செய்யும் அந்த வெறியர்கள் கன்னிப் பெண்கள் இருவரை - அந்த இருட்டிலே கடத்திச் சென்றிருக்கக் கூடாதா? அப்படி என்ன கண்ணகியா அவர்கள்? என்ன சக்தி அவர்களுக்கு இருந்தது? இதையெல்லாம் எண்ணியெண்ணிக் குழம்பிய அவளுக்கு ஒரு சிறு தெளிவும் பிறந்தது. அதுதான் யாரும் நினைப்பதெல்லாம் நடந்துவிடமாட்டாதென்பது. சாவென்பது மாந்தரின் கைச்சொத்தில்லை. அது மனிதருக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் வலி - அது விதியின் வழி.

வேதாந்திபோல இத்தனையும் அவளுக்குத் தட்டுப்பட்டாலும் முருகேசனை நினைக்க இவளுக்கு அழுகையும் ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தன. அந்த ஆத்திரம் சாவொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைத்தான் சாந்திக்குத் துணைதேடியது. உறக்கத்துக்குப் பதிலாக கண்ணீரைத்தான் அவள் கண்கள் கண்டன.

அலுத்துப்போன பொன்னி கண்ணயர்ந்திருக்க வேண்டும் வள்ளிக்கும் தலையைச் சுற்றுவதுபோலிருந்தது. கண்களை மூடினாள். நினைவுக்கும் நினைவு மயக்கத்துக்குமிடைப் பட்ட நிலை.

இலேசான ஒரு நலிந்த சத்தம். வரவர அது தெளிவாக வீட்டின் மேலேதான் கேட்டது.

''உம்... உம்... ஊம்......''
''உம்... உம்... ஊம்......''

மூடிய இமைகளைத் திறக்கவே அவளுக்குப் பயமாகவிருந்தது. நெஞ்சுக் குழியும் அடிவயிறும் பட்டென்று குளிர்ந்தது போன்ற ஒரு பீதி. - ஒரு திகில்! அவள் நடுங்கினாள்... பயத்தால் நடுங்கினாள்.

''மளீர்?...'' அது துப்பாக்கிச் சத்தம்தான். அவள் தன்னையறியாமலே 'வீல்' என்று அலறியவாறு எழுந்தாள். அதேமாதிரிப் பொன்னியும் விழுந்தடித்துக்கொண்டு எழுந்தாள் இருவரும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டு தவித்தனர். நடுக்கம் ஆறவில்லை. ''அப்பா வெளியில் தானே படுத்திருந்தார்! நாயும் குலைக்குதே!'' வள்ளியின் குரல் தொண்டைக்குள்ளே அழுத்தியது. கதவைத் திறக்க தாட்பாளிற் கூடக்கை பிடிபடவில்லை. கைகள் வெடவெடத்தன பொன்னி கதவைத் திறந்தாள். ஆனால் வெளியே தலையைநீட்டப் பயமாயிருந்தது,

திண்ணையிற் கிடந்த கட்டில் வெறுமையாய்க் கிடந்தது. அப்பாவைக் காணோம்.

''அப்பா! அப்பா!...'' கத்தினாள் வள்ளி.

நாய்கள் பலமாகக் குரைத்தன. பயங்கரமாக விழுந்து விழுந்து குரைத்தன. அவள் குரல் யாருக்கும் கேட்டிருக்கவே முடியாது. அந்த நாய்களின் குரல்களோடு தென்னோலைகளை உலுப்பிய காற்றும் சோவென்று இரைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்துகிடந்த ஜன்னல்கள் படீர் படீரென்று அடித்துக் கொண்டன. மண்டபத்துக் கதவு திறந்துகிடந்தது. அந்த விரிசலில் தெரிந்த கடும் இருட்டு திகிலே விதைத்தது.

''அப்பா! அப்பா!'' வள்ளி கத்தினுள். தொண்டை கிழியக் கத்தினுள். பட்டென்று விளக்கு அணைந்தது. 'காற்றுக்கும் அணையாத சிமிலி விளக்காச்சே!'... பொன்னி தீப் பெட்டியைத் தேடினுள். கதவுநிலேயைத் தடவித் தேடியெடுத்தாள். மேசையின் கீழிருந்த விளக்கையும் தடவித் தேடியெடுத்து அருகே வைத்துக்கொண்டு குச்சியை எடுத்தாள்.

''புள்ள! எங்க விளக்கு?

அப்பாவின் குரலா அது?

''அப்பா!'' மீண்டும் வெடித்தது வள்ளியின் குரல்.

பொன்னி தீக்குச்சியைக் கிழித்தாள். அந்த ஒளியிலே இரு இரத்தத்துளிகள் விளக்குச் சிமிலியிலே விழுந்து சிதறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 8. டாக்டரின் புதிர்

''உம்மத்தம் மூகுதுகா
ஊளைநரி கூவுதுகா!
அக்கரைக்குப் போனவண்டார்
அச்சம் எனைச் சூழுதுகா!''

இரத்தத் துளிகள் சிந்திய அடுத்த கணம் அவள் நிமிர்ந்து பார்த்திருக்கவில்லையானல் அவளின் இதயதுடிப்பு நின்றே விட்டிருக்கும். அவள் நிதானமாக விளக்கைக் கொழுத்திவிட்டு ஒதுங்கி நின்றிருந்தாள்.

''எனக்கு நெஞ்சடிக்கிற அடியப்பார். எங்க போனீங்க அப்பா! என்ன இதெல்லாம்?'' என்று பதட்டம் தணிந்து வினவிய வள்ளி, விளக்கைத் தூக்கி நிலத்திலே அவர்போட்ட அந்த உருப்படியைப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பப்பா, அதற்கு எத்தனை பெரிய கண்கள்! பார்க்கப் பயங்கரமான பரந்த முகம். ஒரு சாதாரணமான 'ஆலா'வின் பருமன் இருந்தது. அந்தப்பறவை.

''என்ன இழவு; ராமுழுக்கத் தலைக்குமேல வந்திருந்து மூகினு எப்பிடிப் படுக்கிற? எழுத்து முடிஞ்சிதான் இண்டைக்கு வந்திரிக்கி...''

''மண்டகமெல்லாம் ரெத்தக்காடு; தூக்குங்க, வெளிய கொண்டு போங்க...'' என்றுள் வள்ளி. அவர் கையிலிருந்த தூப்பாக்கியை மூலையிலே சார்த்திவிட்டுத் துண்டை உதறிக்கொண்டு வெளியே போனுர்.

மூலையில் ஒதுங்கி நின்றிருந்த பொன்னி முன்னுக்கு வந்து அதைப் புரட்டிப் பார்த்தாள். பெருமூச்சு விட்டாள்.

அந்த உம்மத்தங்கோழி யாருக்கு என்ன கெடுதி செய்தது? மரத்தின் மேலிருந்து கூவியது தான் அது செய்த குற்றம்? கூவுவது அதன் பிறப்புரிமை.

தமிழ்பேசும் ஒரேயொரு குற்றத்துக்காக நாதியற்றுத் தெருவிலே சுட்டுவீழ்த்தப்படும் ஈழத்து மனிதத் தமிழ் உயிர்கள் அவள் நெஞ்சத்திலே ஒரு விம்மலையேற்படுத்தி மெழுகாக உருக்கின. மூச்சுமுட்ட ஒருகணம் நின்றுள். இந்த மனிதப் புழுக்களிடையே ஒரு தூசாக அவளை அவள் உணர்ந்து குறுகினுள், ஒரு புராதனச் சமுதாயத்தின் ஜீவ மரணப் பிரச்சினை மலையாக நிற்கும் போது, ஒருதூசு தன் சுயநலத்துக்காக - கேவலம் இந்த வாழ்க்கையொன்றுக்காகத் துடிப்பதை உணரத் தலைப்பட்டபோது வெட்கத்தினுல் - அவமானத்தால் கூனிக் குறுகினுள். கூனிக்குறுகி அணுவிலும் அற்பமாவதாகக் காணப்பட்டாள்.

கூவுவது அந்தப் பறவையின் பிறப்புரிமை அது கூவியதற்காகச் சுட்டுவீழ்த்தப்படுகிறது!

தமிழ் - அதைப்பேசுவது தமிழனின் பிறப்புரிமை அதைப் பேசியதற்காக அவன் விலங்கிலும் கேவலமாகச் சுட்டுவீழ்த்தப்படுகிறுன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றைக்கு முன்னே அந்த ஜீப்பிலே பிணமாகக் கிடந்த இரண்டு உயிர்கள்! - இப்போது பிணமாகி இந்த மண்டபத்துள் கிடக்கும் ஒரு உயிர்!

அந்தப் பறவையை மீண்டும் நோக்கினுள். அது பறவையல்ல. மனிதச் சடலமாகவே இதயத்துக்குப் பட்டது சட்டென்று விலகினுள். அடுத்த தடவை பார்க்கவே அச்சமாயிருந்தது.

வெளியே நின்று திரும்பிவந்த பொன்னியின் அப்பா அதைத்தூக்கி வெளியே வீசினுர். இரத்தம் சிந்திக்கிடந்த இடத்திலே ஒருபிடி மணலை அள்ளிக் கொட்டினுள் வள்ளி.

மீண்டும் படுக்கையிலே புரண்டவள்ளி அலுத்துப் போய்த் தூங்கிவிட்டாள்.

பொன்னி புரண்டு படுத்தாள். தலையணையை மார் போடு அணைத்துக்கொண்டு குப்புறப்படுத்தாள்.

அத்தானின் நினைப்பு அவளை இப்படியெல்லாம் படுத்தியது. கண்டிக்குப்போன முத்துவேலுவை அந்த நடுநிசியிலே அவள் நினைத்துக் கொண்டது விந்தையல்ல. ஒரு முள்ளுக்கொப்பும் முறியாமல் அத்தான் திரும்பிவர வேண்டுமென்ற பிரார்த்தனைக்கு முதல், எல்லோருக்கும் எழும் இன்னுமொரு வேட்கையும்தான் அவளை அப்படி யெல்லாம் புரட்டின.

காய்ச்சலோடு நடுங்கும் ஒரு வாலிபன் கைகளைத் தொடை இடுக்குக்குள் புதைத்துக் கொண்டு சுருண்டு படுக்கும்போது எந்தவேட்கை எழும்புகிறதோ அதுபோன்ற ஒரு வேட்கைதான் அவளுக்கு அத்தானை நினைத்து உருக்கும் காரணத்துக்கும் வித்தாயிருந்தது. அவள் கற்பனையாகக் கண்டு கற்பனையாக அனுபவிக்கும் அந்தக் கற்பனை அனு பவத்திற்கு அவள் புதியவளல்லள். எத்தனை கற்பனைகளில் அவள் ஈடுபட்டு இதற்குமுதல் லயித்திருக்கிறுள்! ஆனுல், உண்மை அனுபவத்திற்கு அவள் புதியவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையணையை இறுக அணைக்கும் போது, அதனால் மார்பில் ஏற்படும் அழுத்தம், அவளுக்கு வேதனையைத் தான் தந்தது. அவளைத் துடிக்கத்தான் செய்தது. ஒரு புனிதமான பிரார்த்தனைக்கு அது குருத்தாகவும் தான் இருந்தது.

'என்றுமில்லாதபடி இந்த உம்மத்தன் இன்றைக்கு ஏன் கூவியது? உம்மத்தன் கூவினால் ஏதேதோ சொல்வார்களே! அத்தான் இல்லாத நேரத்திலே இது இப்படி மூகியதை நினைக்கப் பயமாகவிருந்தது அவளுக்கு எவளோ ஒருத்தி எப்போதோ பாடிய அந்தக் கவியை உருப்போட்டுப் பார்த்தாள்.

"உம்மத்தம் மூகுதுகா
ஊளை நரி கூவுதுகா
அக்கரைக்குப் போனவண்டார்
அச்சம் எனைச் சூழுதுகா!"

"முருகா அவர் உயிருக்கு ஒரு பொல்லாங்குமில்லாமல் என்னிட்டச் சேர்த்துவிடு. இந்த அபலையின் ஆசையைப் பொடியாக்கி விடாதே..." அவள் உருகினாள் உள்ளம் நெகிழ்ந்து. உடல் சிலிர்த்தது மனத்தகத்து மாசிலாத அந்த அமரத்துவ நிலையை அவள் ஆத்மா தொட்டுவிடப் போனபோது விழிநீர் சுரந்தது. கண்குழிகளை அது நிறைத்துக் கன்னங்களை நனைத்தது. அந்த நிலையிலே பொன்னி உறங்கிப் போனாள்.

அடுத்தநாள் வள்ளியின் தந்தைக்குச் சொந்தமான அந்த 'லைசன்' துப்பாக்கி இராணுவத்தினரால் பறிமுதலாக்கப்பட்டது.

'வாட்ரௌண்டை' முடித்துக் கொண்டு வராந்தா வழியாகத் தனது 'ஆபீஸ்' அறைக்குத் திரும்பிக்கொண்டிருந்த டாக்டர் இராமநாதன், முருகேசனின் கட்டிலோரமாக நின்று அவனையே கவனித்துக்கொண்டிருந்த நர்ஸ் மஞ்சுளாவைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார். அன்று அவள் அவனுக்காகத் தன் இரத்தத்தையே தர முன்வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தனக்குள்ளே சிரித்துக்கொண்ட அவர் இன்றும் அப்படிச் சிரித்துக்கொள்ள முயலாதது விந்தையாகத்தானிருந்தது.

அவளை அழைத்து டியூட்டி முடிந்ததும் தன்னைச் சந்திக்கும்படி மிகத் தாழ்மையாகத்தான் கூறிவிட்டுச் சென்றார். ஆனாலும் மஞ்சுளாவுக்கு இதயத்தில் இனம்புரியாத ஒருவித பதட்டத்தை அது விதைத்தது. இதயத்தை ஒரு எறும்பு கடித்துக் கொண்டிருப்பது போல விறுவிறுத்தது.

''என்றுமில்லாதவாறு இன்று அவர் சந்திக்கக் கூறியதென்ன? அதுவும் டியூட்டி முடிந்த பிறகு! - ஒருவேளை என் நடத்தைபற்றி - இந்த ஒரேயொரு நோயாளியோடு நான் நெருங்கிப் பழகுவதுபற்றி ஏதாவது நினைத்துக் கொண்டாரோ? எப்படியிருந்தாலும் இவருக்கென்ன? என் டியூட்டியிலே தவறு நிகழ்ந்தால் மாத்திரம் நான் குற்றவாளி அப்படி என்ன தவறுதலாக நான் நடந்து விட்டேன்? 'ஆபீஸ்' நேரத்திலே அதைக்கேட்கலாமே! எதற்காகத் தன்னைச் சந்திக்கச் சொல்லவேண்டும்?'' பலகோணங்களிலே இப்படி மஞ்சுளாவின் சிந்தனை ஓடியது.

இந்த இரண்டொரு நாட்களிலேயே முருகேசனிலும் படிப்படியான மாறுதலை உணரத் தலைப்பட்டாள் அவனின் உடல்நிலைமையிலே முன்னேற்றம் காணப்பட்டது. போதியதென்போடு அவன் காணப்பட்டான். ஆரம்பத்திலே அவனுக்கிருந்த சாங்கோஜத்தனம் படிப்படியாக மறைந்தது அவன் அவளோடு பேசவும் தலைப்பட்டான்.

இவற்றையெல்லாம் எண்ணஎண்ண ஒரு புல்லரிப்பு ஏற்பட்டது அவளுக்கு. அந்த நளினமான உணர்வைக் கலக்கியடித்தது டாக்டர் இராமநாதனின் கட்டளை.

அவள் மருந்தை ஊற்றியெடுத்ததும் கையை நீட்டினான் முருகேசன்.

''ம்கூம், வாயைத்திறவுங்கள்'' என்றாள் அவள். அவன் பேசாமல் அதற்குப் பணிந்தான். அதை அவன் விழுங்கும் போது முகம் ஆயிரம் கோணமாக மாறியதைக் கண்ணுற்ற அவள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் இப்படி அருவருக்கிறீங்க?..." என்ருள்

"காச்சல் மருந்துகூட இப்படியிராதே..." என்ருன் அவன் கசப்பாக.

"இதைடொக்டருட்டக் கேட்கவேணும்..." என்றவளை நோக்கி,

"இப்படி எப்போதுமே குடிக்கணுமா?" என்று முணுமுணுத்தான். அந்த மருந்திலே வெறுப்பைக் காட்டியபடியே அவன் படுத்துக்கொண்டான். கண்களைக்கூட மெதுவாக மூடிக்கொண்டான். அவளும் நகர்ந்து விட்டாள்

மற்ற நோயாளிகளைக் கவனித்துவிட்டு மீண்டும் அந்தக் கட்டிலோரமாகப் போன மஞ்சுளா அவன் அப்படியே படுத்திருப்பதையறிந்து நெருங்கிஞள், அவன் வெறுமனே கண்ணை மூடியிருக்கிருன் என்பது புரிந்தது. அவன் கண் கோளைகளிலே இருதுளிகள் தேங்கி நின்றன.

"மிஸ்டர் முருகு!..." "அவள் அழைத்தாள் அவன் அசையவில்லை. இன்னும் ஒருதடவை அழைத்தாள். அந்த 'முருகு' என்ற பதத்தை அவள் உச்சரிக்கும் போது தேன் இழைந்த நளினம் தொனித்தது தொண்டையிலிருந்து அது பிறக்கும் போது வரை கடந்த மிருதுவும் குளுமையின் மழலையும் குழைந்தது. அப்போதும் அவன் கண்திறக்கவில்லை.

நெற்றியை மாந்தளிர் வருடுவதுபோன்ற நிலைமையை அவன் உணர்ந்த போதுதான் விழிகளைத் திறந்தான்.

"காயம் வலிக்கிறதா?" என்று கலவரத்தோடு அவள் கேட்டாள் பதிலில்லை.

"தலைக்காயத்திலே வலியிருக்கிறதா?" மீண்டும் கேட்டாள்.

"இல்லை" என்று தலையசைத்தான் முருகேசன்

"பிறகு ஏன் அழுதிருக்கிறீங்க?"

"இல்லையே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாய் இல்லையென்கிறது. கண் அதைச் சொல்கிறது.'' சற்றுக் கனிவோடு சொன்னாள் அதற்காக அவள் வருந்துவதையும் அந்தக்குரல் காட்டியது. கண்களை அவன் துடைத்துக் கொண்டு மெல்ல முறுவலித்தான்.

''ஏதாவது தூசு விழுந்திருக்கும்.''

''எதற்கு மறைக்கிறீங்க?...'' வலி ஏதாவதிருந்தா அதனால அழுதிருந்தா, அதுதான் கேட்டேன்'' அவள் அதற்குமேல் பேசவில்லை. அவனும் பேசவில்லை.

மணி நாலரையிருக்கும். அவள் 'ஹார்லிக்ஸ்' கரைத்து எடுத்து வந்தாள். அவளுக்குச் சிரமம் தராமலே அவன் வாங்கிக் குடித்தான்.

'அற்றண்டண்டிடம் இரவில் கவனித்துக் கொள்ளும்படி கூறிவிட்டு, வழக்கம் போல ''நான் வாறேன் மிஸ்டர் முருகு'' என்றாள். ''ஏதாவது தேவையென்றாள் 'அற்றண்டன்' இருக்கிறாள்'' இந்த வார்த்தைகளில் வழக்கத்துக்கு மாறான துரும்பளவு மாற்றத்தை - பதட்டத்தை அவன் உணர்ந்து கொண்டதும் அவன் முகத்தைக் கவனித்தான். அதைக் கேட்க அவனுக்குத் துணிவு பிறக்கவில்லை.

'சரி'யென்று தலையசைத்தான்.

அவள் போய் விட்டாள்

டாக்டரின் அறைக்கதவு தொட்டதும் திறந்து கொண்டது எதிரே கிடந்த கதிரையைச் சுட்டிக்காட்டி அமருமாறு சாடை காட்டினார் டாக்டர். அவள் அமரவில்லை. நின்றுகொண்டிருந்தாள். மௌனம் நிலவியது. முப்பது வினாடிகள் அடித்துப் போட்டமாதிரிச் செத்துப் புதைந்தன. சுவர்க்கடிகாரம் அமைதியைக் குலைத்த விறு விறுப்போடு ஐந்து 'டாண்'களை உதிர்த்தியது.

இன்னும் அமைதியாய் நின்றிருப்பது அவளுக்குச் சங்கடமாயிருந்தது.

''மணி ஐந்தடித்துவிட்டது.'' என்றார் டாக்டர்.

''அழைத்தீர்களே...'' என்றாள் நர்ஸ் ஞாபகம் மூட்டுவதைப்போல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மிஸ் மஞ்சுளா, என்னைப்பற்றி உங்களுக்கு நிறையத் தெரியும்..."

"தெரியும்..."

"நான் ஏதாவதுகேட்டு, அது உங்கள் மனத்துக்குப் பிடியாததாயிருந்தால் கோபிப்பீங்க...?"

"இல்லை. என்ன கேட்க?..." பதட்டமாயிருந்தது அவளுக்கு.

"நீங்க ஒரு நேர்ஸ். உங்க நடத்தையிலிருந்து...,, டாக்டரின் வார்த்தைகளை முற்றுப்பெறவிடவில்லை அவள்.

"ஆ? நான் அப்படி என்ன தவறு...?"

"ஆத்திரப் படக்கூடாது மிஸ் மஞ்சுளா. ஆறுதலாகப் பேசுவோம். அது தானே டியூட்டி முடிந்ததும் சந்திக்கச் சொன்னேன்... டாக்டர் சிரித்துக்கொண்டுதான் கூறினரா யினும் அவரும் ஒருவித தயக்கத்தோடுதான் காணப்பட்டார்

நர்ஸின் இதயம் சம்மட்டிபோல 'திக்... திக்' போட்டது.

"ஒருவரின் நடத்தைதான் அவரின் குணநலத்தைப் புலப்படுத்துகிறது. மிஸ் மஞ்சுளா! நான் கேட்கப் போவது உங்கள் மனதுக்கு முரண்பட்டதாயிருந்தாலும் வருத்தப் படக்கூடாது. கபடமில்லாத துல்லிய உள்ளத்தோடு பேசுகிறேன். உங்களுக்குமேல் வேலைவாங்கும் டாக்டர் என்று என்னை இந்தச்சந்திப்பு முடியும் வரை நினைத்து அடங்கி ஒடுங்கிப் போகாதிர்கள். சாதாரண — பரந்த உள்ளம் படைத்த மனிதனைப் பாவித்து நிதானமாக, தயக்கமில்லாமல் யோசித்துப் பதில் சொன்னல் போதும்.

"என்ன மிஸ் மஞ்சுளா?...,,

டாக்டரின் பீடிகை மேலும் பதட்டத்தையளித்தது மஞ்சுளாவுக்கு.

,சரி,யென்று தலையசைத்தாள் அமைதியாக.

டாக்டரின் குரல். புதுமையாக மலர்ந்தது. அடுத்து அவர் சொன்ன வார்த்தை மஞ்சுளாவின் மனத்திலே திகிலையும் வேதனையையும் நிறைத்துக் கறுக்கவைத்தது.

டாக்டரின் புதிருக்கு—

வாய்திறவாமலே அவள் தவித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. ஒருபிடி அவல்!

'கட்டிக் கறந்த நாகு
கனுவடிக்கு வந்த நாகு
தட்டிச் சொறிஞ்ச நாகு — இப்ப
தலைகிழப்பிப் பாக்குதில்லே!'

நிதானமாக யோசித்தபோதுதான் டாக்டர் இராமநாதனின் வார்த்தைகளில் வலோற்காரமோ, கண்டிப்போ, பயமுறுத்தலோ தினையளவுகூட இல்லையென்பதை உணர்ந்து கொண்டாள் மஞ்சுளா. அப்படித் தகாததனமாக அவர் என்னதான் கேட்டுவிட்டார்? அபிப்பிராயம்தான் கேட்டார். வற்புறுத்தவில்லை. தீர ஆலோசிக்கவேண்டியதில்லை.

''என்னை மன்னியுங்கள். என்றால் இதைப்பற்றி இப்போது...'' என்று நடுங்கும் குரலில் அவள் தொடரும் போதே டாக்டர் குறுக்கிட்டார்.

''அவசரம் ஒன்றுமில்லை மிஸ் மஞ்சுளா. ஒரு நாளல்ல, ஒருமாதம் சென்றுகூடத் தீர ஆலோசித்துச் சொல்லலாம்''. அதற்குமேல் அவள் அங்கு நிற்கவில்லை.

இந்தச் சிந்தனையோடேயே படுக்கையிற் புரண்டாள் மஞ்சுளா.

கடந்த இரண்டுவருடமாக இராமநாதனுக்குக் கீழே பணியாற்றி வருகிறாள் அவள். இத்தனை காலத்துக்கு இல்லாத இந்த எண்ணம் அவருக்கு ஏற்பட்டதற்குக் காரணம் விநோதமாகவிருந்தது.

யாரோ நோயாளிக்கு தன் இரத்தத்தை வலிந்து முன்வந்து தானம் செய்தாளாம். இதுதான் காரணமாம். அப்படியான இரக்கசிந்தையும் தியாக குணமும் படைத்த ஒரு பெண்தான் அவருக்குக் காதலியாக — துணைவியாக வர முடியுமாம். அந்தத் தகுதி அத்தனையும் மஞ்சுளாவுக்கு இருக்கிறதாம். அவள் நடத்தையும் அழகும் இளமையும் அவரைக் கவர்கிறதாம். தப்பர்த்தம் செய்துகொள்ளக் கூடாதாம் மனதுக்குப் பிடித்தால் மாத்திரம் பதில் சொல்லட்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ன விந்தை இது? எவனே ஒருத்தனுக்கு தன் இரத்தத்தை ஏன் கொடுத்தாளாம்? இதைப் புரிந்துகொள்ள முடியாத அந்த டாக்டர் விந்தை மனிதர்தான்' — தனக்குள்ளே சிரிப்பு வருவது போலிருந்தது. ஆனல் சிரிக்கவில்லை. சிரிக்க முடியவில்லை அவளால்

இனித் திருப்பித்திருப்பி ஏன் இதை நினைக்கவேண்டும்? எம். ஓ. மூலமாக அவள் மாறுதல்கேட்டு விண்ணப்பமும் அனுப்பியாயிற்று. மாறுதல் உத்தரவு வரும்வரைக்கும் லீவை எல்லாம் எடுப்பது என்ற திட்டத்தோடுதான் ஏழுமணியாகியும் அவள் படுக்கையிலே புரண்டுகொண்டிருந்தாள்.

''மஞ்சுளா ஆசுபத்திரிக்குப்போக நேரமாகல்லையா?'' மாப்பிசைந்தகையோடேயே எழுந்துவந்துவிட்டாள் அம்மா.

''இல்லம்மா; நெடுகத்தானே, வேலைவேலையெண்டு ஓடுறன்;... லீவு போட்டிருக்கிறன்''. அம்மா மறுபேச்சுப் பேசவில்லை. அடுக்களையுட் போய்விட்டாள்.

ஏழரைக்கு அவள் எழுந்து எதையெதையோ புரட்டிக்கொண்டிருந்தாள். அன்றையப் பத்திரிகை வாசிக்கக்கூட அலுப்பாயிருந்தது. பத்து மணிக்குக் குளித்துவிட்டு அவள் சாப்பிடுகிறேன் என்று சாட்டுக் கழித்தாள்.

சும்மா படுத்திருக்க அவளால் முடியவில்லை, 'முசுகத் துப்பிடித்தமாதிரி' என்று கிராமியத் தமிழில் பேசுவார்களே, அப்படியிருந்தது அவளுக்கு. அம்மாவுக்கு ஏதாவது ஒத்தாசை செய்யலாமென்று அடுக்களைப்பக்கம்போனுள். அம்மா வெட்டிய காய்கறிகளை வாங்கி அரியத் தொடங்கினுள்.

அன்று காயம்பட்ட அதே விரலிலே கத்திபட்டு மீண்டும் இரத்தம் கசிந்தது. விட்டெறிந்துவிட்டு மீண்டும் படுக்கையில் வந்து வீழ்ந்தாள். எப்படியோ போகாப்பொழுதாக ஐந்து மணியும் அடித்தது. ஐந்து மணியென்றதும் அவளுக்கு நிலைகொள்ளவில்லை. இன்னும் ஒரே மணிநேரம். அதன்பின் வீதியில் யாரும் நடமாடமுடியாது. நர்ஸ், டாக்டர் முதலியோருக்கு விசேட பஸ் இருப்பதுகூட அவளுக்கு நினைவு வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று மருந்துகொடுத்துவிட்டு வந்தவள்தான் இன்று எப்படியோ? முருகேசனைப் பார்த்துவிட்டு வரத்தான் அவள் அத்தனைஅவசரமாக 'ட்றெஸ்' பண்ணிக்கொண்டு புறப்பட்டாள்.

எந்த நாளையும் போலன்று 'நர்ஸ்' உடையில் இப்போது அவள் இல்லை. அழகான 'சாரி'யும் அதற்கேற்ற 'சோளி'யும் அவள் நளினத்தை ஒருபடி உயர்த்தியது. வசந்தத்துப் பசுந்தளிர்போல அவள் நடந்துவந்தாள்.

முருகேசனின் இதயத்திலே, அவளை அந்தத் தோற்றத்தின்போது காணும் ஒரு கிளுகிளுப்பை அதன் பூரிப்பை, அவள் தனது போக்கிலேயே கற்பனையில் கண்டாள். இதயத்தின் மலர்ச்சியை அவன் முகத்திலே காண அவள் ஆசையோடு நடந்தாள்.

அவளுக்கு அங்கே ஏமாற்றம் காத்திருந்தது. அந்தப் படுக்கை வெறிச்சோடிக் கிடந்தது.

டாக்டர் இராமநாதன் எவ்வளவோ சொல்லியும் கேட்காத முருகேசன் ஊருக்கு வந்ததும் வராததுமாக, பொன்னி மீது சீறிவிழுந்தான். அவன் செத்திருந்தாலும் மாமன் வீட்டுக்குப் போயிருக்கப்படாதென்பது அவனது பிடிவாதம்.

---

குப்பையும் சகதியுமாகக் கிடந்த தனது குடிசையைக் கூட்டிப்பெருக்கச் சொல்லி அவளையும் தன் குடிசைக்கே அழைத்துச் சென்றுவிட்டான் அவன். நாம் செத்துக்கெட்டாலும் பிறரின் தயவை நாடக்கூடாதென்பது அவனது சித்தாந்தம். பொன்னியோ அண்ணனுக்குக் கட்டுப்பட்டவள். அவனின் சொல்லுக்கு அவள் எதிர்வார்த்தை பேச முடியாது. ஆனால் முத்துவேலுவுக்கு அவன் போகும்போது கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றமுடியாது இருதலைக் கொள்ளியெறும்பாகத் துடித்தாள் பொன்னி. அண்ணன் ஆஸ்பத்திரியிலிருந்து இந்த நாட்களிலே திரும்பமுடியாதென்பதை நினைத்தே முத்துவேல் அப்படிக் கண்டிப்பான உத்தரவு போட்டான். அண்ணன் வந்துவிட்டபிறகு அவனோடு போய் வாழ்வது அவளுக்கு வாக்கை மீறுவதாகப் படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளிக்கு அன்று திருமண ஏற்பாடு ஆகிய போதே அவனோடு கொண்டிருந்த போலிக் கோபம் இப்போதும் அவனைப் பற்றிக்கொண்டது. மாமனில் ஏற்பட்டிருந்த அந்த வெறுப்பு வள்ளியைக்கூடத் தலையெடுத்துப் பார்ப்பதைத் தடுத்தது. வைராக்கியம் பிடித்தமாதிரி அவன் நடந்து கொண்டான்.

பொன்னியை அவன் சினந்துகொண்டபோது தலையிலேயேற்பட்ட வலியினால் அவன் தலையைப் பிடித்துக் கொண்டே திண்ணையிலே சாய்ந்துகொண்டான். கட்டுப் போட்டிருந்த பண்டேஜ்ஜையும் மீறி அந்தக் காயத்திலிருந்து இரத்தம் கசிந்தது.

கைகாலெல்லாம் சோர்ந்து அவன் திண்ணையிலே சரிந்ததைக் கண்டதும் பொன்னி பதைத்துப்போனாள். அவளின் பதைப்பைக்கண்ட கண்ணிப் பெத்தா, "என்ன பொடிச்சி தம்பிக்கு?" என்று கேட்டுக்கொண்டே வந்து சேர்ந்தாள். அவனைத் துணைக்கு வைத்துவிட்டு ஓட்டமும் நடையுமாக ஆஸ்பத்திரிப் படியை அவள் மிதிக்கும்போது மணி ஐந்தரை!

டாக்டர் வீட்டுக்குப் போய்விட்டதாக யாரோ சொன்னார்கள். கையைப் பிசைந்துகொண்டே நின்றிருந்தாள் பொன்னி.

பெருமூச்சோடு வீடுபோகத் திரும்பிய மஞ்சுளா பொன்னியைக்கண்டு ஓடோடி வந்தாள். பொன்னி சொன்னதைக்கேட்க, என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'டாக்டர் வீட்டுக்கு அவனை அழைத்துச்செல்வதா?...சே..." ஏதோ முடிவுக்கு வந்தவள்போல, ஒரு அற்றண்டண்டை அழைத்து ஏதோ சொல்லிவிட்டு உள்ளே ஓடினாள்.

அடுத்த ஐந்துநிமிடங்களிலே மஞ்சுளாவையும் பொன்னியையும் சுமந்துகொண்டு ஒரு கார் வாயுவேகத்தில் அந்தக் கிராமத்தை நோக்கிப் பறந்தது.

முருகேசனின் காயத்துக்குப் புதிய மருந்துபோட்டுக் கட்டிவிட்டு, கோபமூட்டாது பார்த்துக்கொள்ளுமாறு பொன்னிக்குப் புத்தியும் சொல்லிவிட்டு அவள் திரும்பிக் காரில் ஏறும்போது மணி ஆறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசன் ஆயாசத்தோடு சுவரிலே சார்ந்திருந்தான். ஏறியவள் திரும்பி அவனைநோக்கி வந்தாள்.

"இவ்வளவு அவசரப்பட்டு ஏன் வந்தீங்க? காயம் ஆறும் வரைக்கும் இருந்திருக்கலாமே. ஆஸ்பத்திரி பிடிக் காட்டி எங்க வீட்டிலே சுகமாகும்வரை இருக்கலாம். படுக்கக்கூட இங்க வசதியில்லயே; காருலேயே வாறீங்களா?"

அவளின் பேச்சைக்கேட்டு அவன் மெல்லத் தனக் குள்ளே சிரித்தான். பேசாமல் இருந்தான்.

"அண்ணுவுக்கு நீங்களாவது சொல்லுங்களன்..." பொன்னியைப் பார்த்து மஞ்சுளா கெஞ்சினுள். பொன்னிக் கும் அது நல்லதாகவே பட்டது. அதைச் சொன்னுல் அவன் கோபித்துக்கொள்வானே எனப் பயந்து பொன்னி பேசா மல் நின்றிருந்தாள். மஞ்சுளா மீண்டும் முருகேசனைப் பார்த்தாள்.

"நேரம் போகுது நாளைக்குப் பாப்பம். நீங்க போங்க..". என்று மெதுவாகச் சொன்னுன் அவன்.

அவள் பேசவில்லை. பெருமூச்சோடு திரும்பிக் காரில் ஏறினுள்.

றைவர் மொறுமொறுத்தான். "என்ன நீங்க? இப் பிடி நேரம் போகுமெண்டு தெரிஞ்சா, நான் வந்திருக்கவே மாட்டன். இப்ப பொலிஸ் குஞ்சப்பா புடிச்சானென்டா என்ன சொல்லுற? சே, சே, என்ன இழவடிப்பாப் போச்சி..."

அவசரத்திலே அவனது 'ஸ்விச்சி' துவாரத்திலேகூட நுழைய மறுத்தது. அவன் நடுக்கத்தோடு தான் காரைக் கிளப்பினுன். ஒரு ஏழு நிமிடங்களிலே அந்தக் கார் ஆயுதம் தாங்கிய பொலிஸ் ஜீப் பின்தொடர மட்டக்களப்புப் பொலிஸ் ஸ்ரேசனை நோக்கி அழைத்துச்செல்லப்பட்டது.

பொலிஸின் கண்ணிலே பட்டது நல்லதாட்போயிற்று அவர் அத்தானுக்கு அறிமுகமானவர், கடமையிலிருந்ததால் எதுவும் நடக்கவில்லை. அந்த ஜீப்பிலேயே அவர்களை வீடு களில் கொண்டுபோய் விட்டார்கள். அடுத்தநாள் காலை றைவர் காரை எடுத்துச்சென்றுன்.

இராணுவ ஜீப்பாயிருந்திருந்தால், றைவரை அடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொருக்கியிருப்பார்கள் மஞ்சுளாவின் கதி என்னவாயிருக்குமோ?

நாட்கள் முருகேசனுக்கு நத்தை வேகத்தில் நகர்வதாகவே பட்டது. அவன் ஊருக்கு வந்து ஒருவாரம் ஊர்ந்துவிட்டது. இந்த ஒரு வாரத்திலும் மஞ்சுளா மூன்று தடவைகள் வந்துவிட்டுப் போனுள் ஒவ்வொரு தடவையும் அவனை வீட்டில்வந்து இருக்கும்படி வேண்டவே செய்தாள். முருகேசனின் உள்ளம்தான் மசியவில்லை.

கண்ணாலே பார்த்து, காதாலே கேட்டு சிந்தையாலே இதையெல்லாம் உணர்ந்து தனக்குள்ளே குமைந்தாள் வள்ளி. அதைத்தவிர அவளுக்கு வேறெதுவுமே தோன்றவில்லை அடிக்கடி அவள் வேதாந்திபோல சலனமற்று இருக்கவும் முற்பட்டாள். ஆனல் அந்த நிலையாவது நிலைக்க வேண்டுமே! அவள் தத்தளித்தாள் — தவித்தாள்.

முருகேசனின்மேல் நிறைந்திருந்த அன்பைக் கரைத்து ஆத்திரமும் எழுந்தது அந்த ஆத்திரத்தை மூடி அன்பும் பொங்கியது. அவன் அலட்சியம் செய்யலாம். அப்படி அவள் உணர்ந்தாலும் அவளால் அவனை அலட்சியம் செய்துவிட முடியுமா? அவள் தவித்தாள்.

மாலைவேளை அன்றுதான் அவன் மெல்ல எழுந்து குளத்தங்கரைப் பக்கமாக நடந்தான். ஆலமர நிழலுக்குப் போக வள்ளியின் வீட்டைக் கடந்துதான் போகவேண்டும்.

வள்ளி வீட்டின் பின்புற மாவின் கீழ் நின்றிருந்தாள். தூரத்திலே அவனைத் துருவித்துருவிப் பார்த்தவள் அவன் நெருங்கிவந்ததும் திரும்பி நடந்தாள். முகம் கொடுத்து அவனை அவள் நிமிர்ந்து பார்க்கவேயில்லை.

முருகேசனின் இதயத்திலே 'சுருக்' என்றது. அந்த இடத்திலே விழுந்துவிடப் போவது போன்ற ஒரு பத படபடப்பும் எழுந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு நடந்தான்.

அந்த ஆலின் காற்று குளிர்ச்சியாக வீசியது. மெதுவாக அமர்ந்தான். தோன்றி மறைந்துவிட்டன போன்ற நிகழ்ச்சிகள் அவன் சிந்தையைக் கலக்கின, பெருமூச்சு விட்டான் எவனே, எப்போதோ பாடிய அந்தப் பாடல் அவனுக்கும் பொருத்தமாகவேயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கட்டிக் கறந்த நாகு
கணுவடிக்கு வந்தநாகு
தட்டிச் சொறிஞ்ச நாகு — இப்ப
தலைகிழப்பிப் பாக்குதில்லே!'

'ஊடுதல் காமத்துக்கின்பம்' என்பது அவர்கள் மீண்டும் கூடும்போது உணரப்படலாம். ஆனல் இந்த ஊடல் நெருப்பைவிடக் கொடியதாக முருகேசன் உணர்ந்தான். அவன்தான் பொய்யாகக் கோபித்தால், அவளும் அவனை அப்படி அலட்சியம் செய்யவேண்டுமா?

அந்த நேரத்தில் குளத்தங்கரை ஆலமாத்துக்குப் போக வேண்டும் என்று அவன் நினைத்ததும் போனதும் ஏன்? அவள் அவனைக்காண ஏங்கிக் கிடப்பாள் என்பதற்காகவல்லவா? அவனோடு பேசவேண்டாம்; அந்த வேலியோரமாக நின்று அவனை வெறுப்பில்லாமல் பார்க்கத்தான் கூடாதா? 'இத்தனை மூர்க்கத்தனம் பிடித்த இவள் வள்ளிதானா?'

ஆலமரக் காற்று இன்னும் இதமாக வீசினாலும் அங்கு இருப்பது அவனுக்கு நெருப்பாகத்தானிருந்தது. பெருமூச்சோடு எழுந்து நடந்தான்.

அந்தக் கார் வந்து நின்றது. மஞ்சுளா இறங்கினாள். இளங்குருத்துநிறச் 'சாரி'யுடுத்தித் தேவ கன்னிகை போல அவள் யவ்வனத்தோடு காணப்பட்டாள். முளங்கால்வரை நீண்ட பின்னலிலே மல்லிகை இரண்டொன்று சிரித்தது.

''எங்கபோய் வாறீங்க?...'' அவள் அவனோடே நடந்துகொண்டு கேட்டாள்.

''அலுப்பாயிருந்திச்சு; குளத்துப்பக்கம் கொஞ்சம்..''

''காயத்தில வலிகிலியிருக்குதா?''

''...ம்கூம்...''

வழக்கம்போல அவள் புதிய மருந்து போட்டுக் கட்டினாள். இத்தனை நாட்களையும்போல் அவள் பறக்கவில்லை. சற்றுநேரம் பொன்னியோடு இருந்து பேசிவிட்டுப் போனாள்.

அவள் படலையைத் தாண்டியதும், கண்ணிப் பெத்தா வேலியால் கழுத்தை நீட்டிப் பொன்னியை அழைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரு பொடிச்சி இந்தப் பொட்ட? காறுல காறுல வந்து போகுது?" கிழவியின் ஆவல் இது.

"அது ஆசுபத்திரி நேசுப் பொம்புளகா. அவரு — வள்ளிட அண்ணன்..."

"மச்சானெண்டு சொல்லன்..."

"அவருக்குப் பழக்கமான நேசு. அண்ணனுக்குக் காயம் ஆறுங்காட்டியும் கவனிச்சுக் கொள்ளச் சொன்ன தாம். மருந்து கட்டித்துப் போகுது".

பொன்னி ஆளுக்குத் தகுந்த மாதிரிப் பேசக் கற்றிருந்தாள். அந்த 'நேசுப் பொம்புளை'யோடு இப்படிப் பட்டிக்காட்டுத் தமிழிலா பேசுவாள்?

கிழவிக்கு அவளின் பதில் வித்தியாசமாகப் படவில்லை. சரியென்றே பட்டது. ஆனால் ஊரின் குசுகுசுப்புக்கு முன் இந்தப் பேச்சுக்குச் சவக்குழி கிடைத்தது. ஒன்று ஒன்பதாகி உடனே 'டொம்' என்று போயிற்று.

"அடியே அவள் காறுல வந்திறங்கிற சோக்கு"...

"படத்துல வாற கூத்துக்காறி போலகா... ஆசுபத்திரி நேசியாம்..."

"உம்ம முண்டிபோல இருந்த இந்தப் பொடியன்... முருகேசன்...ம்..."

"இந்தப் பொட்ட பொன்னிக்கு இப்ப இரிக்கிற பவறு?..."

"எனுகோ; புளியந்தீவுக்காரி மச்சாளா வந்தா இரிக்காதா புன்ன?..."

இப்படி எத்தனை உதடுகள் வசைபாடி மகிழ்ந்தன! அப்பப்பா...! ஊர்வாய்க்கு ஒரு பிடி அவல் கிடைத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. கதவு திறந்தது

"நில்லெண்டா நிட்டூரம்
போவெண்டால் பொல்லாங்கு
பாவி மகளே யிப்ப
பழிகள்வரப் போகுதுகா?"

தன்னைப்பற்றி என்ன கதைத்தாலும் தாங்கிக் கொள்ள முடியும் அவனால். ஒரு பாவமுமறியாத நர்ஸ் மஞ்சுளாவை வைத்து அபவாதம் எழுப்பப்படுவதைத் தாங்கமுடியவில்லை.

பாவத்துக்கு இரங்கி தனக்கு நேர்ந்த கஸ்டங்களை யெல்லாம் சகித்து அவள் செய்ய முன்வந்த அளப்பரிய தொண்டுக்கு கிடைக்கவேண்டிய கைம்மாறு இதுதானோ? இவையனைத்தும் யாரால்? அவனால்தானே! இதை நினைக்கும் போதுதான் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது.

கிராமத்திலே முளைத்த குசுகுசுப்பு காது, கண், மூக்கு எல்லாம் வைக்கப்பட்டு ஆஸ்பத்திரி நர்ஸ்கள் வரை தலை விரித்தாடியது. மஞ்சுளாவைக் காணும் கண்கள் விஷமத் தனத்தோடு வட்டமிட்டு நையாண்டி செய்தன. வாய்கள் காதைக் காதைக் கடித்தன. நாடிகள் தோள்பட்டைகளை இடித்துக்கொண்டன.

இவற்றையெல்லாம் கண்டும் காணமலும் அவள் தன் கடமையைச் செய்தாள். மூன்று நாளுக்கொருதரம் அவனுக்கு மருந்துகட்ட அவள் வந்தாள். ஆனல் அவளுக்கும் இதயம் இல்லையா? தன்மான உணர்ச்சி இல்லையா?

சமூகத்தின் கீழ்த்தரமான இழிந்த செயல்களைக் காண வேதனையடைந்தாள். அதன் கண்களுக்குத் தூய்மை தென்படவில்லை. அழுக்கையே கண்டது. நன்மைகள் புரியவில்லை. தீமைகள்தான் தெரிந்தன. நல்ல சொற்கள் கிடைக்கவில்லை. நச்சுவார்த்தைகள் கிடைத்தன.

தீமையிலே ஊறிக்கிடந்த சமூகம் திருந்த நூறு ஆண்டுகள் போதாது என்று அவளுக்குப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் கிடைக்கும்போது அந்தப்பொழுதை வம்பு பேசித்தீர்ப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறதா இந்தச் சமூகம்? நல்ல மனங்கள் பெரும்பான்மையாகும் வரை — தயாளசிந்தையுள்ளவர்கள் — மனிதமனம் படைத்தவர்கள் எதையும் தாங்க உறுதி பூணவேண்டும் என்பதொன்றுதான் இவற்றிற்கெல்லாம் பரிகாரம் என அவளுக்குப்பட்டது அதனாலேதான் இத்தனை அபவாதத்துக்கிடையிலும் அவள் வந்து கொண்டிருந்தாள்.

அன்றும் அவள் வந்தபோது பொன்னி பாயை எடுத்துத் திண்ணையிலே போட்டு இருக்கச் சொன்னாள்.

''எங்க ஆளைக்காணல்ல?'' மஞ்சுளா கேட்டாள்.

''அண்ணன் இவ்வளவு நேரமும் இருந்தவர் இப்போதான் எழும்பிக் குளத்துப்பக்கம் போனார். நிற்கிறீங்களே!'' மஞ்சுளா நிற்பது தனக்குக் கால்கடுப்பதுபோல பொன்னி இடத்தைக் காட்டினாள்.

மஞ்சுளா கால்களை மடித்துப்போட்டு, அசல் பட்டிக்காட்டுப் பெண்கள் அமர்வதுபோல அமர்ந்துகொண்டாள். கதவுநிலையோரமாக இருந்த வெற்றிலைத் தட்டை அவள் கண்கள் வருடின.

''வெத்திலை போடுவீங்களா?''... தனது வினாவுக்கு பதிலை எதிர்பாராமலே தட்டைத்தூக்கி அவள் முன்பு வைத்துக்கொண்டே தானும் அமர்ந்தாள் பொன்னி.

''எனக்குப் பழக்கமில்ல. இன்டைக்கு நீங்க பழக்கினாத்தான்...'' ஒரு வெற்றிலையை அதன் காம்பிலே, கட்டைவிரலையும் சுட்டுவிரலையும் சேர்த்துக் கிள்ளித் தூக்கினாள் மஞ்சுளா.

''நானும் பழகப்படாதென்டுதான்;... வாற போறாக்களுக்காகத்தான் இது...''

''அப்ப நான் கட்டாயம் சப்பத்தான்வேணும்...'' ...மஞ்சுளாவைப்போலவே பொன்னியும் வெற்றிலை போடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினுள். இயற்கையாகவே வெங்காயச் சிவப்பேறி யிருந்த இதழ்கள் இருவருக்குமே இரத்தச் சிவப்பாயின.

''உங்கட பேர் பொன்னிதானே?''

''தெரியாத மாதிரிக் கேக்கிறீங்களே...!''

''இல்ல, இப்படி ஒருபேர் என்ட அம்மா அப்பாவுக் குக் கிடைக்கல்லயெண்டுதான் வருத்தமாயிருக்கு.. 'பொன்னி' மூண்டு எழுத்தில் உச்சரிக்கும்போது நெஞ்சே இனிக்குது ...''

''அதுக்கென்னெய்யிற; நாட்டுப் பக்கத்தில பொன்னி, வள்ளி, நாகி, கந்தியெண்டுதான் வைப்பாங்க. இப்பதான் நினைச்சமாதிரிப் பேர் மாததிக்கொள்ளலாமே!''...

''நீங்க நான் சொன்னத எதிர்மறையா விளங்கிட் டீங்க. நான் உண்மையாகச் சொல்லுறன், உங்கட பேருல எனக்கு அளவில்லாத ஆசை. நாங்க பண்டமாற்றுச் செய்ய முடியுமெண்டா, நான் பொன்னியாகத்தான் ஆசைப்படு வேன்...''

''அப்போ, நான் மஞ்சுளா!''... சிரிப்போடு கூறிய பொன்னி எதையோ நினைத்துக்கொண்டவளாக, ''அதெப் படி ஆகுமடியும்?'' என்று கேட்டாள். இருவருமே சிரித் தார்கள். பழக்கமில்லாத மஞ்சுளாவுக்கு வெற்றிலை புரைக் கடித்துவிட்டது. கண்கள் பிதுங்கிச் சிவந்து கண்ணீர்கூட வந்துவிட்டது. பொன்னி சட்டென்று அவள் தலையைத் தட்டிவிட்டு ''சரியாக உச்சில அடிச்சிற்று...'' என்று வருத் தப்பட்டாள்.

''போதுமம்மா நான் வெற்றிலைபோட்டது...'' என்ற மஞ்சுளா, எழுந்து வெளியே போய்த் துப்பிவிட்டு, வாயை யும் கொப்பளித்துவிட்டு வந்தாள்.

''பொன்னி! நீ எவ்வளவுவரை படித்திருக்கிருய்?'' மஞ்சுளாவின் பேச்சிலே சட்டென்று ஏற்பட்ட திருப்பத்தைக் கண்ட பொன்னி வியப்புற்ருள் அதைக் காட்டிக்கொள்ளா மலே பேசினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானென்ன ஏழாம்வகுப்பு வரைக்கும்தான்"... என்று இறக்கமாகத்தான் கூறினுள்.

"அடடே!" அத்தனை தூரம் மஞ்சுளா எதிர்பார்க்க வில்லை என்பதை அந்த வார்த்தை காட்டியது.

"நீங்க நேர்ஸ் வேலைக்குப்போய் எத்தனை வருஷமிருக் கும்?"... பொன்னி கேட்டாள்.

"'நீங்க, நாங்க',- பட்டணத்திலேயும் ஒப்பீசிலயும் தான். இது கிராமம். ஒரு உயிரி தன்னை சூழலுக்கேற்ப மாற்றிக் கொள்கிறதாம். நமக்குள்ள எதுக்கு மரியாதை யெல்லாம்? அம்மா நீ நீ யென்றுதான் அழைப்பா. அது இனிமையாகத்தானிருக்கு... தயக்கமில்லாம நீ என்னை அடியே மஞ்சுளா என்றுகூட அழைக்கலாம் சரியா?" உள நூல் வார்த்தை ஒன்றிரண்டைக் கலந்து ஒரு குட்டி 'லெக் சர்' அடித்து நிறுத்தினுள் அவள். தொடர்ந்து "ஓ, நீ என்ன கேட்டாய்?..." என்று பொன்னியின் கேள்வியை ஞாபகம் செய்துகொண்டு, "ஆக ரெண்டு வருஷந்தான்" என்ருள் சிரிப்போடு.

"என்ன ரெண்டு வருஷம்?"... என்ற வார்த்தை வந்த திக்கை நோக்கி, இருவருமே திரும்பினர். முருகேசன் வந்துகொண்டிருந்தான்.

"இல்ல உங்க தங்கயை நீங்க ஒரு நேஸாக்கியிருக்க லாம்" மஞ்சுளாவின் கண்கள் பொன்னியைக் குறும்பாகப் பார்த்தன.

"ஓ, அதொண்டுதான் குறைச்சல்"... என்ருள் பொன்னி.

"அதுக்குத்தான் நீங்க இருக்கீங்களே" என்ருன் முரு கேசன்.

மருந்து கட்டுவதற்குவேண்டிய சாதனங்களையெல்லாம் எடுத்துவைத்துவிட்டு கதவு நிலையோடு சார்ந்து நின்றிருந் தாள் பொன்னி.

தலையில் போட்டிருந்த கட்டையவிழ்த்துப் பண் டேஜை அகற்றிவிட்டு, பஞ்சை மெதுவாக இரு விரல்களா லும் கிள்ளி எடுக்கப் போனவள், சற்றுத் தயங்கிவிட்டு மெதுவாக மீண்டும் பஞ்சை விரலால் தட்டினுள். ஒரு ஓர மாகக் கிள்ளி அசைத்தபோது "ஊ..." என்று வேதனையை வெளியிட்டான் முருகேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரியாக ஒட்டிக்கொண்டிருக்கிறதே'' என்றவள், புத்தியாகப் பஞ்சையும் அகற்றிவிட்டாள். ஆனாலும் இரத்தம் கசியத்தான் செய்தது. முருகேசன் பல்லைக்கடித்துக் கொண்டு பொறுத்திருந்தான். போடவேண்டிய மருந்துகளைப் போட்டு துணியால் சுற்றிக் கட்டும்போது அந்தப் பஞ்சு விரல்கள் தளிர்போன்ற கைகள் தென்னம்பூ நிற முன்கைகள் எல்லாம் அவனின் கழுத்தை, கன்னத்தை, நெற்றியையெல்லாம் தொடத்தான் செய்தன. அவை தொட்டு அகலாதிருக்கும்போது வேதனை குறைந்த ஏதோ ஒரு சுகம்! - அவனுக்கு ஏற்படத்தான் செய்தது. தாதித் தொழிலுக்குப் பெண்மைதான் உகந்தது என்ற உண்மையை அப்போது உணர்ந்தான் முருகேசன்.

காயம் பின்புறமாகவிருந்ததால் துணியை அவள் இடப்புறக் கன்னமாகவே முடியவேண்டியிருந்தது. முடியும் போது அவள் மேலாடை நழுவி அவன் தோளிலே விழுந்தது. அதை வலக்கையால் ஒதுக்கிவிட்டவாறே அவள் சொன்னாள்,

''காயம் காய்ந்துகொண்டு வருது. இன்னும் ஒரு ரெண்டு கிழமை கனக்க...''

''இவ்வளவு சிரமத்துக்குள்ளேயும் வேண்டாத வினையை விலைக்கு வாங்குறீங்க...'' முருகேசனின் இந்தக் குரலோடு ஒத்தூதியது பொன்னியின் பணிவான குரல்.

''இந்தக் கடனை எப்படியண்ணை தீர்ப்பது?'' மஞ்சுளா இரண்டு முகங்களையும் மாறிமாறிப் பார்த்தாள்.

''நீங்க என்ன சொல்லுறீங்க? யாருக்கு யார் கடன்?''

''கடனில்லாட்டி முன்பின் அறியாத எவனோ ஒரு பட்டிக்காட்டானுக்கு,தெய்வம்கூட இப்படி இரங்காதே!...''

''என்னைத் தெய்வமாக்காதீங்க, சும்மா சாதாரண நேஸாயிருந்தாப் போதும்...'' அவள் கிண்டலாகச் சிரித்தாள்.

''வேறென்னபின்ன, ஆசுபத்திரில செய்ததுதான் போதாதெண்டு, நாளுக்கு நாள் காரும் புடிச்சி வாறதெண்டா'' பொன்னி வார்த்தைகளைத் தொடுத்து நன்றி தெரிவிக்கத் தெரியாது திக்குமுக்காடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்ப, என்ன நடந்துவரச் சொல்லுறீங்களா?''

''அதுக்கில்ல, இனி நானே இடைக்கிடை வந்து மருந்து கட்டிக்கிறன்... நான் சொல்லுறதைப்பற்றி...'' முருகேசன் தயங்கினுன்.

''எனக்கு விளங்குது...'' வலிய முறுவலை வரவழைத்துக்கொண்டாள் மஞ்சுளா.

''என்னைப்பற்றி எனக்கே கவலையில்ல; கள்ளங்கபடமறியாத உங்களையும் சேர்த்து... இந்த ஊர் பொல்லாதது...'' சொல்லமுடியாது சொன்னுன் முருகேசன்.

''இதுக்குத்தான் கவலைப்படுறீங்க? இதுக்கெல்லாம் நான் காது குடுப்பதேயில்ல. களங்கமில்லாத நல்லமனது எனக்கிருக்கு. கடமைபுரியப் பரந்த சிந்தையுமிருக்கு மனச்சாட்சியின்படி நடந்துகொள்ள வேண்டியதுதான். மானத்துக்குப் பயப்படத்தான் வேணும். கண்மூடித்தனமாக எல்லாத்துக்கும் பயப்படக்கூடாது... எனக்காகக் கவலைப்பட்டு மனத்தை அலட்டிக்கொள்ளாதீங்க. உங்களுக்குப் பூரண குணம் கிடைக்கும்வரை நான் வரத்தான் செய்வேன்...''

''இங்க பாருங்க...'' நிலையோடு சார்ந்துநின்றிருந்த பொன்னி தொடங்கினுள்.

''அண்ணன் சொல்றதும் சரிதானே. இவ்வளவும் செய்ததுமில்லாம, வீண்பழியும் உங்களுக்கு வந்தா அந்தப் பாவமெல்லாம் எங்களுக்கில்லையா?...''

மஞ்சுளா சிரித்தாள்.

''அபவாதத்துக்குப் பயப்படுபவள் ஒரு நேஸாக முடியாது, பொன்னி. தன்சேவைக் காலத்திலே ஆயிரம் இளைஞர்களுக்கு நெருங்கி - தொட்டுகூடச் சேவை செய்யவேண்டியிருக்கும். இதைப்பார்த்து ஆயிரம் நாக்குகளும் புரளத்தான் செய்யும்...''

மஞ்சுளாவோடு வாக்குவாதம் செய்வது சாதாரணமல்ல என்பதை முருகேசன் புரிந்துகொண்டான்.

''மஞ்சுளா!...'' முதற் தடவையாக முருகேசன் அவளைப் பெயர்சொல்லி அழைத்தான். அந்த அழைப்பு கருணையை எதிர்நோக்கி அன்பில் வளைந்து புறப்பட்டதாகத் தொனித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தயவுசெய்து இதைக் கொஞ்சங்கேளுங்க. இந்த எலும்பில்லாத விஷநாக்குகள் என்னைத் திட்டட்டும். ஆனு உங்களை இழுக்கும்போது என்னால தாங்கமுடியுதில்ல. நான் மிருகமாகக்கூட மாறிவிடுவேனே என்று பயப்படுறன். அதனால...'' அவனது கண்கள் அலை மண்டியிடுமளவுக்கு வந்தபோது, இன்னும் பிடிவாதமாக மஞ்சுளாவால் பேச முடியவில்லை. வெறுமனே பெருமூச்சு விட்டாள்

''சரி, நீங்க விரும்பாட்டி நான் வரத்தெண்டிப்பது தவறுதான்...'' ஏமாற்றமும் விரக்தியும் அவள் குரலிலே எதிரொலித்தன. தலையைத் தாழ்த்திக்கொண்டாள்.

அவளை வேதனைப்படுத்திவிட்டோமோ என முருகேசனின் உள்ளம் தவித்தது.

''நான் போயிற்று வாறன்'' என்ருள் அவனைப் பார்த்து.

''வாறேன் பொன்னி. நீ ஆசுபத்திரிக்கு வந்தா எங்க வீட்டுக்காவது ஒரு தடவை வா..''

பொன்னி தலையை அசைத்தாள். மஞ்சுளா வந்த போதிருந்த உற்சாகம் மறைந்தவளாக நடந்துபோய்க் காரில் ஏறினுள். அவள் உள்ளத்திலே வேண்டுமென்று விஷமத்துக்கு அவன் ஏற்றிவிட்ட பாரம் தாங்காமல் அவள் தளர்ந்து ஒடுங்கி நடப்பதாகப்பட்டது அவனுக்கு. காற்றுப்போல கனமில்லாமல் வந்த அவள் இதயத்திலே கல்லை ஏற்றிவிட்டதாக — அவளோடு சேர்த்து அதையும் சுமந்து அந்தக்கார் வலுவிழந்து செல்வதையே பார்த்துப் பெருமூச்சு விட்டான் முருகேசன்.

''நில்லெண்டா நிட்டூரம்
போவெண்டாப் பொல்லாங்கு
பாவி மகனேயிப்ப
பழிகள் வரப் போகுதுகா'' தனக்குள்ளேயே முணுமுணுத்தபடி சுவரோடு சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான். எவளோ - எவனோ, எப்போதோ - எதற்கோ பாடிவிட்ட கவி எத்தனை பொருத்தமாகிவிட்டது!

கார் புழுதியை வாரியிறைத்துக்கொண்டே அவன் கண்களைவிட்டு மறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சுளாவின் மனோவேகமும் சும்மா இருக்கவில்லை. காரின் வேகத்தை மிஞ்சி அது சிந்தனைச் சிறகடித்தது. சுற்றிச்சுற்றி அது டாக்டர் இராமநாதனிடம் வந்து நின்றது. அதைத்தொடர்ந்து, தான் மாறுதலுக்கு விண்ணப்பமனுப் பியது, அதற்கு இன்னும் ஒரு முடிவுமில்லாமலிருப்பது, அன்றுதான் லீவு போட்டுவிட்டுப் படுத்திருந்தது, 'ட்றெஸ்' பண்ணிக்கொண்டு முருகேசனைப் பார்க்கச்சென்று ஏமாந் தது, இப்படிச் சங்கிலித் தொடராக எண்ணக் குவியல்கள் மோதிமோதிச் சிதைந்தன.

பின்சீட்டிலே கைகளைக் கட்டிக்கொண்டு சிந்தனையில் மூழ்கிக் கிடந்தவள் காரின் உலுப்பலிலே அதிர்ந்துபோய்த் தலைநிமிர்ந்தாள். வீதியிலே இரண்டு பாகங்களைத் தேய்த்துக் கொண்டு கார் உலுப்பி நின்றது.

காருக்கு முன்பாக ஒரு கும்பல் நின்றிருந்தது. யார் மேலாவது கார் மோதிவிட்டதோவென்று அவள் முதலில் துணுக்குற்றாள். அதற்கான அறிகுறி அந்த முகங்களில் இல்லை. விஷமத்தனமும் வேடிக்கையும், குரோதமும், கோப மும், அகம்பாவமும், காலித்தனமும் அந்த முகங்களிலே நிழலிட்டன.

மஞ்சுளாவின் நெஞ்சம் பலமாக அடித்துக்கொண் டது. அருகிலேயிருந்த நெசவு நிலையத்தின் சன்னல்களை நீக் கிக்கொண்டும், வேலி இடவல்களில் கழுத்தை நுழைத்துக் கொண்டும். பார்க்கும் திசையெல்லாம் பெண்களின் முகங் கள் அந்தக் காரையே வேடிக்கை பார்த்தன.

றைவர் ஒன்றுமே புரியாமல் திருதிருவென்று விழித் தான், ''இவளை ஏத்திவரப்போய், என்ன தொல்லைக்குள் ளடா மாட்டிக்கொண்டோம்'' என்று அவனின் நெஞ்சமும் பதைத்துக்கொண்டது.

'நாஷனல்' உடையில், ஆனால் வேட்டியை மடித்துக் கட்டியிருந்த ஒரு வாலிபன் அந்தக் கும்பலிலிருந்து நெருப் புத் தெறிக்கும் சொற்களோடே 'நாஷன'லின் கைகளை முளங்கைக்குமேலே ஒதுக்கிவிட்டபடியே பாய்ந்துவந்தான்.

''நீதானேடி அந்த நேர்ஸ் மஞ்சுளா?'' அவனது முரட்டுக்கரம் பற்றிய வேகத்தைத் தாங்காது பின்கதவு பீதியோடு தன் வாயை அகல விரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. பேதை மனம்

பாவப் பழமே என்ட
பகலெறிக்கும் சண்பகமே
நீலக் குயிலேயிப்ப
நிக்கட்டோ போய்வரட்டோ?

''போடியார்! போடியார்!......'' யாரோ அழைத்தார்கள். விளக்கேற்றிவிட்டு நிமிர்ந்த வள்ளி எட்டிப் பார்த்தாள். வீமண்ணனும் இன்னுமொரு முதியவரும் வந்துகொண்டிருந்தார்கள். படலைக்கு அப்பாலும் குரல் கேட்டது.

''வீமண்ண! நாங்க சங்கக் குடிலுல நிக்கிறம்''......

யாரின் குரல் அது? சந்தேகமென்ன? வடிவேலுவின் குரல்தான். எந்தவடிவேல்?' மாஸ்டர்ப் பொடியன் வடிவேல்? இதுதான் அவனுக்கு அந்தக்கிராமம் வைத்திருந்த பட்டம். இப்படிச் சொன்னால் அவனைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது.

''சரிதம்பி, நாங்க இந்தா வந்திடுறம்'' பதில் கொடுத்துக்கொண்டே வந்துகொண்டிருந்தார் வீமண்ணன்.

பட்டணத்தைப்போல மண்டபத்துக் கதவுகளை அடைத்துவைக்கும் வழக்கம் அந்தக்கிராமத்துக்கும் தொற்றி இருந்தது. ஆனால் வள்ளியின் வீடு என்னவோ, பழைய பாணியிலேயே இப்போதும் மண்டபத்துக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தது. மண்டபப் படியில் ஏறும்போதே குரல்கொடுத்தார் வீமண்ணன்.

''புள்ள!......''

அவர்களை எட்டிப் பார்த்தபோது வள்ளியின் தலையைக் கண்டுவிட்டதால் மீண்டும் அழைக்கவில்லை அவர்.

''எங்க புள்ள அப்பா?......''

''அப்பா வயலுக்க போனவர். வாறநேரந்தான். ஏன்?......''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சும்மா கண்டுத்துப் போகவந்தம்"

வள்ளி அடுக்களைப்பக்கம் போகத் திரும்பிக்கொண்டே "வந்திடுவார் இரியுங்க" என்றவாறே ஒரு கால்தூக்கி வைத்தாள். வீமண்ணரின் குரல் தடுத்தது.

"கோப்பி கீப்பியொண்டும் வேணும்புள்ள வர குள்ள மாஸ்டர்ப் பொடியன் சோடா வாங்கித் தந்தான். வெத்திலத் தட்டத்தக் கொண்டா"

பழகிப்போன உரிமையோடு அவர் கதைத்தார். மற்றஇருவரும் இடைக்கிடை அவரின் பேச்சுக்குத் தாளம் போட்டார்கள்.

"அண்ணன் வரலையா புள்ள"

"அண்ணன் எங்கே இப்ப வாற, இனிச் சோதினை எல்லாம் முடிஞ்சுதான்"

"இந்தக் குழப்பத்துக்குள்ள, இந்தப் பொடியன்..."

"இப்ப அங்க ஒண்டுமில்லையாம்.

"எல்லாம் ஒருமாதிரியா அடங்கிப் போச்சி. இல்லாட்டி, ஆறுமணிச் சட்டமெண்டா நாங்க இப்படிக் கதைச்சிரிக்கவா? சிங்களவண்ட அட்டுளியம் காணுதெண்டு ஆமிப்பட்டாளத்தையும் அனுப்பி, என்னபாடு படுத்திப் போட்டான்! இதையெல்லாம் மேலிருந்து ஒருத்தன் பாத்துதுத்தானே இரிக்கான்......உம்...இந்த வரிசத்தோட, தம்பிக்குப் படிப்பு முடியுது என்ன புள்ள?...

"ஓ. இன்னம் நாலுமாதத்துல எல்லாம் முடிஞ்சிடும்......"

"புள்ள!..."

"உம்? ..."

"இந்த ஊரெல்லாம் டொம்மெண்டு போச்சி......" வீமண்ணனின் பீடிகை பலமாக விழுவதுகண்டு வள்ளி உள்ளே போக முயன்றாள்.

"புள்ள!......" என்றார் அவர் மீண்டும்

"அடுப்பில உலை பொங்கிடும். இரியுங்க அப்பா வந்திடுவார்......" அவள் பேசிக்கொண்டே போய் விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாள். அவள் அலட்சியமாகப் போய் விட்டது வீமண்ண னுக்கு முகத்திலடித்தது போலிருந்தது.

"இவள் நேத்தையப் பொட்ட, எண்டபேச்சிக்கு ஒரு மதிப்புக் காட்டினளா?" என்ற ஒரு எரிப்பும் கூட எழுந்தது. எழுந்து போய்விடலாம் என்று கூட எண்ணி ஞர். ஆனல் வந்த விஷயத்தை நடுவிலே விட்டுப்போனல், நாளைக்கு மாஸ்டர்ப் பொடியன் வடிவேலுவின் கண்ணிலே விழிக்க முடியுமா?

"ஆரு வீமண்ணனே?......" நெருங்கி வந்த குரல் வள்ளியின் தந்தை —போடியார் பொன்னுத்துரையுடையது தான்.

"அத்திபூத்தாப்புல இரிக்கே......"

"எங்க்வாற, நேரமா கிடைக்குது? " வீமண்ணருக்கு இப்படிச் சொல்வதிலே ஒரு தனிப் பெருமை தலைபுழுத்த வேலை அவருக்கிருப்பதாக மற்றவர்களை நம்பவைப்பதும் ஒரு புகழ்ச்சி இல்லையா?

"என்ன புதினம்? நீ சும்மாவர மாட்டியே......!" துண்டினல் முகத்தைத் துடைத்துக் கொண்டு, கனக்கே யுரித்தான சாய்வு நாற்காலியிலே அமர்ந்து கொண்டார் போடியார். வரும்போதே கிணற்றடிக்குப் போய், முகம் கழுவிவிட்டுத்தான் வந்திருந்தார் அவர்.

"புதினமொண்டுமில்ல சும்மாதான் வந்தம்......"

"அப்ப நீ தனியவரல்ல காரியம் பெரிசி போல ரிக்கே......"

"ஊருல இப்ப அடிபடுகிறதெல்லாம் ......" வீமண்ணனின் ஆரம்பத்தைத் தொடர்ந்து மற்ற இருவரின் வாய்களும் மாலை தொடுத்தன.

"மானம் போகுது; ஊருல உள்ள நல்லவன் பெரிய வண்ட மானமெல்லாம் போகுது......" ஒருவர்.

"இத்தனை காலத்துக்கு இருந்து பொன்புரசெல்லாம் இப்படியா நடந்துதுகள்?......"— மற்றவர்.

"ஆம்புளைக்கென்ன, சேற்றைக் கண்ட இடத்த மிரிப்பான். தண்ணியக் கண்டடத்த கழுவுவான் அந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுவாணி புளியந்தீவு ராச்சியத்திலிருந்து காறுல வாருளாம். இதெல்லாம் என்னத்தால நாம வழிவச்சதால தானே!''— வீமண்ணன் மானத்தையே படைத்துவைத்த பிரம்மாபோல புழுங்கிறார்.

ஒரு சிறுகாற்றை எதிர்நோக்கிப் புகைந்துகிடந்த போடியாரின் நெஞ்சிலே நெருப்பு மூண்டு பற்றத் தொடங்கியது

''ஆம்புளேகளேக் கொண்டாப்ப, மானம் ரோசம், மட்டு மரியாதை கிடையாதா? தான் நாசமத்துப் போறதுமில்லாம, மனிசன்ட மானத்த, — ஊருட மானத்தையும் கெடுக்க வேணுமா? அட நீ தொலேஞ்சா; ஒரேயடியாகத் தொலேஞ்சு போவன். அவளுட ஊட்டுல போய்ப்படன் ஆருக்கென்ன?''— கதிரையிலே சார்ந்து கிடக்கவிடவில்லே ஆவேசம். எழுந்திருந்தே படபடத்தார் போடியார்

''ஓம் போடியார். நீங்க கதைக்கிற முழுதும் சரி. எத்திளே நாளேக்குப் பாக்கிற? வீமண்ணனில்லாட்டி அண்டைக்கு அவளுக்கு நடக்கிறது வேற. நேசெண்டா அது ஆசுபத்திரில; மருந்துகட்ட வாருளாமே மருந்து கட்ட......! ,,... தாங்கள் எதையோ சாதித்து, அதனுல் உலகமே பிழைத்துப் போனது போன்ற பெருமையிலே துள்ளினுர் ஒருவர்.

''மாஸ்டர்ப் பொடியன் சரியான கேள்விதான் கேட்டான். கைநீட்டி அடிக்காத குறை... ரோசமுள்ளவளெண்டா, அவடத்தையே சாகணும்.''மாஸ்டர்ப் பொடியனின் வீரப்பிரதாபத்நுக்கு! சர்டிபிக்கட் வழங்கினுர் வீமண்ணன்.

''எலுமிச்சங்காயிலே -புளியேறியது போடியாருக்கு.

''என்னெண்டாலும் மாஸ்டர் பொடியன் நாலு எழுத்துப் படிச்சவன் பாரு''— மற்றவர் சூடேற்றினுர். போடியாருக்குப் பொங்கியது

''அதுக்கு இஞ்ச இரிக்குதுகள் ரெண்டுகுரங்கு. இருந்தா மானத்தோட வாழனும். இல்லாட்டிச் செத்துப் போகணும். பாத்துப்பாத்து வாறன்...''போடியாரிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூண்டுவிட்ட நெருப்பு வள்ளி, முத்து இருவரின் பக்கத்திலும் தாவியது.

"இப்படிப்பட்ட நட்டாமுட்டி, நல்லவன் பெரியவன்ட குடும்பத்துல பூந்தா பாத்துத்திரிக்கலாமா? உறவாக முறையாக இருந்தாப்ப; பழுதான பால் பழுதானது தானே!...

"போடியார், உங்கட புள்ளையிட விஷயத்துல நீங்க கொஞ்சம் கவனமாயிரியுங்கோ. அதுதான் சொல்லித்துப் போவமெண்டு வந்தம்; அப்ப நாங்க போறம்" மும்மூர்த்திகளும் எழுந்தார்கள். வீமண்ணன் மற்ற இருவரையும் அனுப்பிவிட்டு, போடியாரின் காதைக் குனிந்து கடித்தார்.

"நம்மட புள்ள, எஸ். எஸ். ஸி. சோதினே எடுத்ததல்லவா?..."

"ஓம்..."

"பாசிபண்ணல்லேயா?..."

"அதென்னவோ, 'றிபட்டோ' என்னவோவாம். மறுதரம் எடுக்காம, பேசாம விட்டுப்போட்டிரிக்காள்."

"மாஸ்டர்ப்பொடியன் வடிவேலுக்கு, புள்ளேயில விருப்பம் போலரிக்கி. நம்மட ஊர்ப் புறந்தவன் நாலெழுத்துப் படிச்சவன்..."

"அவனைப்பத்தி...?..."

"பேரும் புகழுமா, நாலுகாசி கையில வச்சிருந்தா, சனத்துக்குப் பொறுமைதானே, அதெல்லாம் கட்டுக் கதை..."

"இந்தப்பொட்டதான்..." போடியார் வார்த்தையை முடிக்காமல் இழுத்தார்.

"அதுக்காக, இந்தக் கடப்பளிக்குக் கட்டிக்குடுத்துப் போட்டு கண்ணெழிவு காட்டப் போறியளா போடியார்? நீங்கபெத்தபுள்ள, ஒங்கட சொல்லுக் கேக்காட்டிப் புறகென்ன?... நானெண்டா, என்டபுள்ளேயெண்டா, கல்லக் கட்டிப் புளியமுனைப்பணிவில தள்ளிப்போடுவன்.

"அடிக்குமேல அடியடிச்சா, அம்மியும் நகருமாம்... காரியத்தக் கெதியா முடிக்கப்பாருங்க போடியார், அப்ப நான் வாறன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீமண்ணன் போய்விட்டார்.

வேல்புகுந்த புண்ணிலே, நெருப்புக் கொட்டியது போலிருந்தது வள்ளிக்கு.

ஆஸ்பத்திரியிலே அவள் அன்று கண்ட காட்சி திரும்பத் திரும்ப இதயத் திரையிலே நிழலிட்டது.

அப்பிடியில்லாட்டி, அவள் கையை அவர் ஏன் பற்றிப் பிடிக்கவேணும்?" - தன்னிடமே கேட்டாள். பதில்தான் கிடைக்கவில்லை. 'அதுவும் சித்த சுவாதீன மற்ற நிலையா?' 'இல்ல, அது உண்மைதான் - என் கண்ணுல் கண்டது உண்மைதான்? 'கண்ணுல் காண்பதுவும் பொய் என்பார்களே... அப்படியாளுல் உண்மைதான் என்ன? ஆஸ்பத்திரியிலிருந்து வந்தபிறகாவது, நல்ல மனமுடையவரெண்டா பொன்னியிட்டச்சொல்லிக் கூப்பிட்டிருக்கலாமே,... நான்தான் அவர் அன்று வந்தபோது கோபித்துக் கொண்டேனென்ருல் ஒரு வார்த்தை கூப்பிட்டிருக்கப்படாதா?'... என்னைப்போல, அவரும் கோபித்துக் கொண்டு போனுர்; சரி. அப்பிடிக் கோபிக்க நானென்ன குற்றம் செய்தன்?... அவர் செய்த குற்றம்தான் அவரை உறுத்தியது. அதுதான் அவர் அப்படிப்போனுர்; போகட்டும்.

'அந்த நேர்ஸை நல்லவளென்டுதான் நினைச்சேன், அவள் தளுக்கும் மினுக்கும் அவரை மயக்கிப்போட்டுது. இல்லையெண்டா, அவளுக்கென்ன அக்கறை இவருல?

'ஆஸ்பத்திரியில வலிய வந்து ரத்தம் குடுக்கிருள். நாளுக்குநாள், அதுவும் வாடகைக் காருலவந்து மருந்து கட்டுருள். முன்பின் அறியாத அவளுக்கும் இவருக்கும் அப்படிப் புதிதாக என்னதான் உறவு முளைத்தது?

'இருக்கலாம், இந்த ஆண்களுட உள்ளமே ஒரு ரகசியச் சுரங்கம். முந்திய உறவு ஏதோ இருக்கவேணும். இல்லாட்டி இவரில அவளுக்கு ஏன் இத்தனை தனி அக்கறை?'

இப்படிச் சிந்தனை அலைகள் வள்ளியைக் குழப்பியடித்தன. இத்தனை வாதப்பிரதிவாதங்களைத் தனக்குள்ளே நிகழ்த்தியும் கூட அவனைப்பற்றித் தவருக நினைக்க அவள் இதயம் மறுத்தது. அவன் தவறிழைப்பவன் என்று நினைப்பது கூடச் சங்கடமாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையிலிருந்தே அவனோடு கூடி விளையாடியவள் அவள். பிள்ளைப் பருவத்திலே ஒன்றாகப் பள்ளிக்குச் சென்றவள் அவள். அவள் பெரியவளாக மலர்ந்துவிட்ட பிறகும் கூட, அவர்கள் சந்தித்தார்கள். கதைத்தார்கள்; சிரித்தார்கள். இப்படி ஒன்றாக ஒட்டியுறவாடிய உள்ளங்கள் ஒன்றையொன்று உணராமலிருக்குமா? அவனின் உள்ளத்தை நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பவள் இந்த உலகத்தில் அவளைத்தவிர வேறு யார்? ஆனால் அவனை அவளைச் சந்தேகப்படுமளவு சந்தர்ப்பங்கள் சதிசெய்கின்றனவே!

இத்தனை நிகழ்ந்துவிட்ட பிறகும் அவளால் அதை நம்பாமலிருக்க முடியவில்லை நம்பும் அதே நேரத்தில் இதயம் அதை நம்பவும் மறுத்தது.

அவனைப்பற்றிய சிந்தனையை ஒதுக்கிவிட நினைப்பாள். அவனது முகம் கண்களை மறைத்து இதயத்தை முழுதும் அடைத்துக் கொண்டுவிடும்.

கள்ளமில்லாத அந்த முகத்தின் கவர்ச்சியான விழிகளை அவளால் மறக்கமுடியாது அழகாகக் கத்தரித்து விட்டிருக்கும் அரும்பு மீசையை மறக்க முடியாது. சிரிக்கும் போது மோகனக் கவர்ச்சி ததும்பும் அழகிய வாயை - வெள்ளைவெளேரென்ற கமுகம்பாளைப் பற்களை அவளால் மறக்க முடியாது.

தோளிலே கலப்பையும் தலையிலே தலைப்பாகையும் கையிலே துவரங்கேட்டியுமாக எருதுப் பிணைகளை முன்விட்டுப் பின்னாக நடக்கும் அந்தத் தெய்வீகக் காட்சியை அவள் மறக்க முடியாது.

தன்னைப் பட்டிக்காட்டான் என்று தாழ்த்திச் சொல்லிக் கொள்வதிலே அவனுக்கு ஒரு ஆசை. உழவன் என்று மார்தட்டிக் கொள்வதிலே ஒரு பூரிப்பு.

இத்தனைக்கும் அவன் என்ன படிப்புவாசனை அறியாத காட்டுப் பூச்சியா?

அவள் ஏழாம் வகுப்புப் படிக்கும்போதே அவன் எஸ். எஸ். ஸி பாசாகிவிட்டான். அவள் எஸ். எஸ். ஸியிலே 'றிபட்' வாங்கிய அதே ஆண்டுதான் அவன் ஆசிரியர் கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையிலிருந்து வெளியேறினன்; பயிற்சிபெற்ற இரண்டாம் வகுப்பு ஆசிரியன் என்ற சான்றிதழோடு. அந்த வருடந் தான் அவனின் படிப்புக்காகவே தன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த அன்னைத் தெய்வம் அவனையும் பொன்னியையும் தவிக்கவிட்டு மறைந்தது அன் றிலிருந்து அவன் தொழிலாளி - ஏழை உழைப்பாளி - உழ வன்.

ஒரு 'வாத்தித் தொழி'லுக்காக பாடசாலை மிசனரி மனேஜர்மார்களிடம் கையேந்தத் தெரியவில்லையா அவனுக்கு?

கைலஞ்சம் தர அவன் தயாராகவுமில்லை. அதை அவன் விரும்பவுமில்லை வேலை தருகிறோம் என்ற நிபந்தனை யோடு பிணைப்பத்திரம் வாங்கிக்கொண்டு பயிற்சியளித்த அரசாங்கம், கண்ணை மூடிக்கொண்டு கையை விரித்துவிட்ட போதுதான் அவன் மனிதனுக மாறினன். தனிமனிதனில்லை. தங்கையுமொருத்தி இருப்பதாக உணர்ந்துகொண்டு உழைத் தான். ஓடாக உழைத்தான். ஆனல் அதிஸ்ட தேவதை அவனை எட்டிஎட்டிப் போனுள். உள்ளபோது இல்லை எனத் தெரியாது. கிடைத்ததையும் கொடுத்துவிட்டுத் திண்டாடி னன்.

இன்றுபோல் தானிருக்கிறது. ஒன்றிரண்டல்ல; ஐந்து வருடங்கள் உருண்டுவிட்டன.

இப்போது இந்தச் சமூகம் அவனையொரு பட்டிக் காட்டானுகக் காண்கிறது. படித்தவன் என்பதையே மறந்துவிட்டது. ஏன் அவன்கூடத் தன் அந்தஸ்தையே மறந்துதான் கிடக்கிறுன்.

மண்ணிலே புதைந்து கிடக்கும் வைரம்போல முரு கேசன் வாழ்கிறுன். அதோடு இன்னும் ஒரு அபவாதம். இது போதாதா?

முருகேசனின் இன்றைய நிலையை இப்படியெல்லாம் கண்முன்னே கொண்டு நிறுத்திப் பார்த்தபோது, அவளுக்கு விம்மிவிம்மி அழவேண்டும் போலிருந்தது,

பள்ளிக்குச் செல்லும்போது கால்சட்டையும் சேட்டு மாக அவன் நடக்கும் தோற்றம்! ஆசிரிய மாணவனுகி விட்டபோது வேட்டியும் நேஷனலுமாக அவன் பஸ் ஏறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன காட்சி! இவையொவ்வொன்றும் நினைவுத்திரையிலே மின்னி மறைந்தன.

சித்தசுவாதீனமற்று அவன் கட்டிலிலே தலையை மோதிக்கொண்டபின், அறிவற்றுக் கட்டிலிலே கிடந்த கோலம்! இன்று தலையிலே கட்டும் முகத்திலே நெடுநாட்களாக வழிக்காத தாடியுமாக, நெஞ்சத்திலே படிந்த வேதனைச் சுமை நலிவுதர அபவாதச் சுமையோடு தவிக்கும் நிலை! - இவை வள்ளியின் உள்ளத்தைக் குத்திக்குடைந்தன.

இந்த நிலைக்குக் காரணம் யார்? யார்?

'வள்ளி; நீதான்'

'ஆ, நானா?...'

'நீயேதான். முருகேசன் யாருக்காக ஒல்லிமடுவிலே விழுந்து தலையை உடைத்துக்கொண்டான்? உன்னைக் காப்பாற்றத்தானே! உன்னைக் காப்பாற்றக் குதித்துத்தானே அவன் சித்தசுவாதீனமற்றான்? இல்லையென்கிறாயா?...'

'உயிருக்கு மன்றாடி, அவன் மரணப்படுக்கையில கிடக்க; இரத்தம் கொடுத்து அவனைக் காப்பாற்றிய குற்றத்துக்காக அந்த நர்ஸை இகழ்கிறாயா? அவள் மீட்டெடுத்த உயிர் அவளுக்கு உரிமை. அவள் அவனைக் காதலித்தால்தான் அதைக் கேட்க உனக்கென்ன உரிமை? உன் நெஞ்சைத் தொட்டுச் சொல். உன் அத்தான் முருகேசனுக்காக எவளோ ஒருத்தி — அந்த நர்ஸ் செய்த சேவையில் நூற்றில் ஒரு பங்குதானும் உன்னால் செய்யமுடிந்ததா? சொல். செய்தாயா?''

''இல்லை; நான் செய்யவில்லை...''

''அப்படியானால், காதலிக்க மாத்திரம் உனக்கென்ன உரிமை அவனுக்காக ஒன்றும் செய்யாத நீயே காதலிக்க உரிமை கொண்டாடும்போது, அத்தனை தியாகமும் செய்து அவனின் பூரண சுகத்துக்காக தன் இன்னல்களையும் பொருட்படுத்தாது சேவை செய்கிறாளே; அவளுக்கு அந்த உரிமை இல்லையா? சொல்'.

''ஏன் இல்லை?...''

'இருக்கிறதா? இப்போது சொல்; கைம்மாறாக உன் அத்தான் அவளை ஏன் காதலிக்கக் கூடாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னைத் தவிக்கவிட்டார்?''

'நன்றி கெட்டவளே, உன் சுயநலம்தானே உனக்குப் பெரிதாய்விட்டது! உன் அத்தான் அன்று செத்திருந்தால்? நீயும் செத்திருப்பாயா?'

"ஆம், செத்தேயிருப்பேன் அவரில்லாதபோது எனக் கேது வாழ்வு?''

'யாருக்காகச் சாவாய்? அத்தானுக்காகவா? அத்தா னில்லாததால் உனக்கு இன்பம் கிடைக்காதே என்ற சுய நலத்துக்காகவா? உண்மையாகவே உன் அத்தானில் உனக்கு அன்பிருந்தால், அவன் நலனில் உனக்கு அக்கறையிருந்தால், அவன் அடையப்போகும் இன்பவாழ்வை நீ குலைக்கலாமா? அவன் நலன் ஒன்றையேகருதி நீ விட்டுக்கொடுக்கக்கூடாதா?'

'சரிதான்; அவர் வாழட்டும். விட்டுக்கொடுக்கிறேன். என் சாவின்பின் அது நடக்கட்டும்.

'பைத்தியக்காரி, அவன் இறந்துவிட்டால் நீயும் இறப்பாய் என்றுயே; அவன் வாழும்போது, நீயும் வாழத் தானே வேண்டும்.?'

'ஐயோ; என்ன குழப்பமிது. என் மூளையே கலங்கி விட்டதே?'

'நீ தவிக்கிறுய் உன் கண்ணெதிரே நீ அடையவேண் டிய இன்பவாழ்வை இன்னொருத்தியடைந்து சுகிக்க ஆற்ற மாட்டாய். எந்தப் பெண்ணும் பொறுக்கத்தான்மாட்டாள். ஆனால் எவளோ பரத்தை அந்தச் சுகத்தை அடையப்போவ தில்லை. உன்னைவிட உயர்ந்தவள்; நீ ஒரு துளியும் செய்யாத தியாகங்களை, உன் அத்தானுக்காக அவள் செய்தவள் - உன் தங்கை. அவள் இன்பவாழ்வைக்கண்டு பூரிக்கவேண்டியவள் புழுங்கப் போகிறுயா? வேண்டாம். நீ விட்டுக்கொடுக்க வேண்டாம். உன் தியாகம் அற்பமானது.'

''இல்லை அவர் இன்பமாக வாழட்டும். அதுவே என் இன்பம் அவர் உயிரைக்காப்பாற்றிய அவளுக்குத்தான் அவர் சொந்தம். நான் தட்டிப்பறிக்க மாட்டேன்... ஆனால் நான் உயிரோடிருக்கும்வரை அவர் அவளை மணந்துகொள்ள மாட்டார். அது எனக்குத் தெரியும்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சி இறந்துவிட்ட மனக்கதவு விரிசலாகி, வார்த்தையே வெடித்துவிடும் போலிருந்தது. தன்னிலே பெற்றதும் தான் கதவோரமாக அகப்பையும் கையுமாக நின்றிருப்பதையுணர்ந்தாள்.

அப்பாவுக்கு உணவு பரிமாறிவிட்டுப் படுக்கைக்குப் போனாள், கோழி கூவும்வரை புரண்டு புரண்டு படுத்தாள். என்னதான் துணிந்துவிட்டாலும், பெண் மனம் பேதலிக்கத்தான் செய்தது.

'பாவப் பழமே என்ட
பகலெறிக்கும் சண்பகமே
நீலக் குயிலேயிப்ப
நிக்கட்டோ போய்வரட்டோ?'

என்றோ ஒரு கருக்கற் பொழுதில் அந்தக் குளத்தங்கரை ஆலின்கீழ் மிதந்த அந்தக் குரல் — முருகேசனின் குரல். அவள் கேள்வி நரம்புகளை வருடி வருடி எதிரொலித்தது.

'நிக்கட்டோ போய்வரட்டோ?...' இப்போது இதற்குப் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. எண்ண எண்ணத் தத்தளித்தது இதயம். அவளும் பெண்தானே! பாவம்; பேதைமனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 12. உயிர் கொடுத்தவன்

'கருக்கிருட்டு வேளையிலே
கள்ளனென்டு நாய்குலைக்கும்
மாலை நிலவெறிக்கும்
வந்துகரை சேருமச்சான்'

நர்ஸ் மஞ்சுளாவின் காரை நிறுத்திச் சந்தி சிரிக்க வைத்த 'மாஸ்டர்ப் பொடியன்' வடிவேலுவின் அசகாய சூரத்தனத்தை ஆகாயத்துக்கு உயர்த்தி அக்கம் பக்கத்தார் கூத்தாடினர் - கும்மாளமடித்தனர். 'அவளுக்கு வேணும்டி அது' என்று கைகொட்டிச் சிரித்தனர். ஒரு பெண்பேதைக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானத்துக்காக மகிழ்ச்சிக் கூத்தாடினர். நையாண்டியும் நெட்டைப் பேச்சும் முருகேசனைத் துளைக்காமல் துளைத்தன.

''அடியே, மாஸ்டர் பொடியன் கேட்டகேள்விக்கு மானமுள்ளவளாயிருந்தா, அவடத்தையே சாகணும் பெண்மைதான் பெண்மையைப் பரிகசித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்காக இத்தனையையும் செய்து இந்த அவப் பெயருமா அவள் கேட்க வேண்டும்? முருகேசன் தனக்குள்ளே புழுங்கிறன்.

"சாத்விகம், அதனை உணரக் கூடிய இடத்திலே தான் செல்லும். சண்டித்தனத்துக்குச் சண்டித்தனந்தான் சரி. எல்லாருக்கும் நல்லவனாக, எதையும் சகித்துக் கொள்ளக் கூடிய மனம் படைத்தவன் கோழையாகத்தான் மதிக்கப்படுகிறான். செத்தாரைப்போல இருக்க நினைப்பவன் சமூகத்திலே வாழத் தகுதியற்றவன்'

"அந்தச் சண்டித்தனத்தை நானுந்தான் பார்க்கப் போகிறேன்" - திண்ணையை விட்டெழுந்தான் முருகேசன். அவன் அந்த வேகத்திலே போயிருந்தால், இரண்டில் ஒன்று நடந்துதான் இருக்கும். பொன்னி ஓடிவந்து கையைப் பிடித்துக் கொண்டாள். அவன் அத்தனை கோபப் பட்டதைப் பொன்னி இன்றுதான் கண்டாள். பக்கவீட்டுப் பெண்களின் வாய்கள் 'டப்' என்று அடைத்தன

"அண்ணை, என்னது" நீ இண்டைக்குச் சண்டைக் குப்போறு, ஊர், உண்மையெண்டுதானே எண்ணப் போகுது..." நடுங்கினள்.

"இந்த ஊருக்கு அவள் ஆருக்காக வந்தாள்? நம்ம வீட்டுக்கு வந்துபோனவளுக்குச் செய்ததென்ன நமக்குச் செய்தென்ன?" முருகேசன் நெருப்பாக நின்றான்.

"அண்ணை!..." என்று கண்ணீர் சொரிந்தாள் பொன்னி

"உண்மையாம் எந்த உண்மையக் கண்டானும் அந்தப் போக்கிலி?... அவன் எண்ணிட்டான் தன்னைப் போல காவாலியெண்டு ரௌடித்தனம்! ரௌடிக்கு ரௌடி தான் நானும்..."

"அண்ணை! நீ கோவத்துல ஏதாச்சும் செய்திட்டா என்ட கதி என்னண்ணை?..." விசும்பினள் பொன்னி.

முருகேசன் தலையைப் பிடித்துக் கொண்டு திண்ணை ஓட்டிலே உட்கார்ந்து விட்டான்.

பகலும் இரவுமாய் இரண்டு நாட்களைக் கடித்து விழுங்கியது காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்ருவது நாள், மருந்துகட்டப் போகவேண்டி யதை ஞாபகப் படுத்திஞள் பொன்னி. காலை முழுக்க அவனுக்கு அது காதிலே ஏறவில்லை. பொன்னியின் நச் சரிப்புத் தாங்காமல், பின்னேரம் மூன்று மணியளவிலே ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தான்.

"காயம் நன்ருகக் காய்ந்துட்டுது இன்னும் ஒரு ரெண்டுதடவை மருந்து கட்டிஞப் போதும்" - என்ருள் மஞ்சுளா மருந்து கட்டும் போது. 'வெயிற்றிங்' றூமிலே அவனை இருக்கச் சொன்னவள் 'ஆபீஸ்' றூமுக்குப்போருள் அங்கே டாக்டர் இராமநாதன் நிற்பதைக்கண்டு பின் வாங்கிஞள்.

டாக்டர் இராமநாதனேடு அன்று பேசியதிலிருந்து இதுவரை அவரின் முகத்திலே பட விரும்பாமலே நடந்து வந்தாள். டாக்டர் கூட அவளை ஏறெடுத்துப் பார்ப்பதை நிறுத்திக் கொண்டிருந்தார்.

'சோட்லீவ்' போட்டு விட்டு அவள் முருகேசனையும் அழைத்துக் கொண்டு நடந்தாள் ஆஸ்பத்திரிக் கேற்றைத் தாண்டியதும், முருகேசன் தயங்கி நின்ருன்.

"அப்ப நீங்க போங்க, நான் இங்க நிண்டே வஸ்ஸால போயிடுவன்." முருகேசனின் குரலைக்கேட்டு அவள் 'டக்'கென்று நின்ருள்.

"பிளீஸ், வீட்டுக்குக் கொஞ்சம் வந்திட்டுப் போங்க. உங்களோட கொஞ்சம் பேசவேணும்" அவளின் பணிவான அன்பு மிளிரும் வேண்டுகோளை அலட்சியம் செய்ய முடி யாது, அவள் பின்னே நடந்தான் முருகேசன்.

அவர்களுக்காகக் காத்துநிற்பது போல மஞ்சுளாவின் தாய் அவனை வரவேற்று உள்ளே அழைத்தாள்.

"நான் அன்றைக்குச் சொன்னேனே, அவர் இவர் தானம்மா. நல்லவேளை எல்லாம் குணமாயிற்று. அத்தா னேடு கண்டிக்குப் போக வந்தாரே முத்துவேல் அவருட நண்பர் - மச்சான் முறையானவர் அம்மாவுக்கு அறிமுகம் செய்து வைத்தாள் மஞ்சுளா.

"இருதம்பி..." கூறிவிட்டு அடுக்களைப்பக்கம் போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள் அம்மா நாகரீக யுகநங்கையர், கூச்சமில்லாமல் சரிசமனாக அமர்ந்து உரையாடுவர். அதைத்தான் முருகேசனும் அங்கு எதிர்பார்த்தான். இன்னும் ஆறு நாற்கலிகள் காலியாகத்தான் கிடந்தன ஆனால் மஞ்சுளா தூணின் ஓரமாக நின்றிருந்தாள்.

"இருந்து பேசலாமே," நெடுநேரம் மௌனமாக விருப்பது பண்பாகாதென்ற நிலையில் பேசவேண்டுமென்று பேசினான் அவன். அவள் அவனைத் தாழ்வாக நினைத்துக் கொள்ளக் கூடாதே.

அவள் பேசவில்லை இலேசாக முறுவலித்து விட்டு, அடுக்களைப்பக்கம் போனாள்.

அடுத்த சில நிமிடங்களில் கலகலக்கும் கண்ணாடி வளைகளும் லேடி றிஸ்ட் வாச்சுமாக பசுமைபடிந்த செந்தாளம் பூக்கரங்களிரண்டு அவன் முன்புநீண்டன. அவைகள் வெள்ளித் தட்டொன்றைக் குளுகுளுப்போடு ஏந்தியிருந்தன. அதிலே ஆவிகமகமக்கும் ஒருகப் கோப்பி இருந்தது.

அவன் அந்தக் கரங்களுக்குரிய முகத்தின்குங்குமத் திலகத்தை நோக்கிவிட்டுக் குனிந்து கோப்பியைப் பார்த்தான். சற்றுநேரத்துக்கு முன்னே அவள் அந்தக் கோலத்தில் இருக்கவில்லை. நர்ஸ் உடையிலே அவன் வெள்ளைக் காரி போல விருந்தாள். இப்போது தமிழ் என்ற பெண்மைக்கு இலக்கியமாக நிற்கிறாள். சற்றுநேரம் அப்படியேயிருந்தால், அந்தக் கரங்களுக்கு வலிக்குமோ என்ற அனுதாபத்தோடு கோப்பிக்கோப்பையை அவன் கரம் தானாகச் சென்று தூக்கியது.

''குடியுங்க'' என்றது இனிப்பான குரல். அவன் 'தங்ஸ்ஸோ'-நன்றியோ சொல்லவில்லை. அவளைப்போல முறுவலித்தான்.

அவன் பருகுவதை வெகு நுணுக்கமாக அவள் அவதானித்தாள் தூணில் சார்ந்தபடி-அவன் காணாதபடி கள்ளத்தனமாகப் பார்த்தாள். ஒரு நவீன அந்தஸ்திலிருக்கும் ஆபீஸர் கூட அத்தனை பவிசாகப் பருகியிருக்க முடியாது. அவன் கோப்பையைத் தூக்கிய முறையிலே-ஒருநளினம். இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகே அதனைக் கொண்டு சென்று உறிஞ்சிய முதலாவது 'சிப்'பிலே ஒருசெழுமை.

காத்து நின்றவள் போல வெள்ளித்தட்டை நீட்டினுள். கோப்பையை ஓசைப்படாமல் அவன் வைத்தான்.

அவள் தட்டைக்கொண்டு வைத்துவிட்டுக்கூடவர வில்லை. கையில் ஏந்தியபடியே, அப்படியே ஓவியமாக நின்றிருந்தாள் இரண்டு நிமிடங்கள் அப்படியே நகர்ந்தன.

''தட்டை அப்படியே வச்சிக்கொண்டு நிற்கிறீங்களே...'' அந்த மௌனம் கலைந்தது.

''ஓ...''—அவள் அதை உணர்ந்து கொண்டாள். உள்ளே ஓடினுள். அவன் எதிர்பார்த்தபடி அவள் மீண்டும் வரவில்லை. அம்மா வந்தாள். ஓரத்தில் கிடந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

முருகேசனுக்கு அந்த அம்மாவோடு மனம்விட்டே பேசலாம் போன்றிருந்தது.

''அம்மா; உங்கள் மகள் செய்த உதவிகளுக்கு நான் எப்படித்தான் கடன் தீர்ப்பதோ தெரியல்ல. நான் எவனெ பட்டிக்காட்டான்.

சக்திகளெல்லாம் பெண்வடிவமென்பாங்க. அப்படியொரு தெய்வம்போல உங்க மகள் உதவாட்டி, நான் செத்த இடத்த புல்லு முளைச்சிருக்கும்''

மஞ்சுளா அங்கே வருவதைக் கண்டவனுக்கு மேலும் பேச முடியவில்லை. அப்படியே நிறுத்திக் கொண்டான். மஞ்சுளா தாயின் பின்னுல் நின்றுகொண்டாள்.

''என்னதம்பி நீங்க சொல்லுற? இவளா உதவினுள்? நீங்க இல்லாட்டி இவள நான் எப்பவோ பறிகொடுத்திருப்பன் தம்பி......''

என்ன இது? இந்த அம்மா பேசுவதென்ன?' முருகேசனுக்கு ஒரே குழப்பம். ஒரேவியப்பு! பொருள் பொதிந்த பார்வையை அவள் மீது வீசினுன்.

அவள் தலைகுனிந்தாள். மேற்பற்களால் கீழ் இதழை கடித்தபடி, வலதுகாற் பெருவிரலால் சித்திரம் தீட்டினுள். மீண்டும் தலைநிமிர்ந்து அவனை நேராகப் பார்த்தாள். அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வைக்குத் தன்னை இலக்காக்கிக்கொள்ளப் பயந்தோ என்னவோ, அவன் கண்களைத்தாழ்த்தி வேறெங்கோ பார்த்தான்.

''அந்த உதவிக்கு நன்றி செய்யத் தெரியாமத்தான் நான் சிரமப்பட்டன். அதனால்தான்-ஏதோ எல்லாம் எனக்குப் புரியாததெல்லாம் கேட்கவும் வேண்டியிருந்தது'' — இப்போது அவள் தொண்டை கரகரத்தது. கண் ஓரங்களிலே பனித்துளிகள் பூத்தன

அவள் பேசுவது புரியாவிட்டாலும் அவள் வேதனைப் படுவது அவனுக்குப் புரிந்தது. அதனால் அவன் இதயமும் அழுதது, அவளுக்குச் சமாதானம் சொல்லத் தெரியாது தவித்தான்

'அந்த 'ருஸ்கல்' வடிவேலை நான் சும்மா விடப்போறதில்லை. இவள் அழுத அழுகைக்குத் தகுந்த பூசை குடுக்காட்டி நான் முருகேசனில்ல'' தனக்குள்ளே கறுவிக்கொண்டான். 'நல்ல மனங்களைப் புண்படுத்துவதிலே ஏன் இந்தச் சமூகத்துக்கு இத்தனை ஆசை'' பெருமூச்சு விட்டான்.

மஞ்சுளா அழவில்லை. சாதாரண நிலைக்கே மீண்டாள்.

''உங்களுக்குத் தெரியாது. நீங்க செய்யாமற்செய்த உதவி அது. 'செய்யாமற்செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது...''

அவள் பேச்சைக்கேட்க அவனுக்கு மூளை பலமாக வேலை செய்தது.

'செய்யவேண்டியதெல்லாம் எனக்கு இவள் செய்துவிட்டு, நான் செய்தேனும் என்கிறாளே! நான் என்ன செய்தேன்? சே... தாய்க்கு இதையெல்லாம் மறைக்கவா இந்தக் கறடி......?

''மூளையை வீணாகக் கலக்கிக் கொள்ளாதீங்க'' அவள் சொன்னாள். சந்தர்ப்பம் வரும்போது, அந்த உதவியை நானே சொல்கிறேன்... அண்டைக்குச் சந்தியிலே ஒரு கும்பல் காரை மறித்து வசை பாடியது. ஒரு வாலிபன் முன்னுக்கே வந்துட்டான். அந்தச் சனக்கும்பல் இல்லாதிருந்தா எதுக்கும் துணிஞ்சிருப்பான் போலிருக்கு.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த அயோக்கியனை அண்டைக்கே ரெண்டிலொன்டு கண்டிருப்பன், பொன்னி விடமாட்டன் என்டுட்டாள். என்ட கண்ணுல படாமலா இருக்கப் போறுன் ...?

"சே, சே உங்க சுபாவத்துக்கு மாருக நீங்க நடந்துக்கப்படாது..."

இந்த நேரத்திலே, அடுக்களைப்பக்கம் ஏதோ சத்தம் கேட்டது.

"வாறன் தம்பி......" சொல்லிக்கொண்டே எழுந்து போய்விட்டாள் அம்மா.

மீண்டும் இரண்டுள்ளங்கள் தனித்தன.

"இவ்வளவுக்குத்தானு வீட்டுக்குக் கூட்டிவந்தீங்க? ......சந்தர்ப்ப மெதுக்கு? உண்மையச் சொல்லுங்க நான் உதவிசெய்ததாக உங்கம்மாவுக்குப் பொய் சொல்லலாமா? செய்யக்கூடாத உதவியெல்லாம் நீங்க செய்திட்டு,இப்படித் திருப்பிவிடுறீங்களே!... .."

"இல்ல நான் பொய் சொல்லல்ல; நம்பமாட்டீங்களா? உங்களுக்குத் தெரியாமலே என் உயிரைக் காப்பாற்றினீங்க."

"இதெப்படி?......"

"நீங்க சுயநினைவில்லாது, சித்தசுவாதீனமில்லாமலிருந்தீங்களே; தெரியுமா?..."

"என்ன?......"

' இதைச் சொல்லக் கூடாதென்டுதானிருந்தேன். இது உங்களுக்குத் தெரியாதது போலத்தான். நீங்க எனக்குப் புத்துயிரளித்ததும், உங்களால் உணரப் படாதது. இப்ப நம்புறீங்களா?......"

முருகேசன் மௌனமாயிருந்தான். மஞ்சுளாவின் புதிர்கள், வியப்பாயிருந்தன. அந்தமோனநிலையை அவள் கலைத்தாள்.

"உங்களை, நீங்களாகவே ஏன் தாழ்வுபடுத்திக் கொளுறீங்க?......"

இந்தப் புதிரையும் அவனுல் புரியமுடியவில்லை. அவன் அப்படித் தாழ்வுபடுத்துவது அவளுக்கு எப்படித்தெரியும்? ஒருவேளை பொன்னி சொல்லியிருப்பாளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குத் தெரியும்; குப்பையில மறைந்தாலும் குண்டுமணி குண்டுமணிதானே". அவன் தனக்குள்ளே சிரித்தான். அவளுக்கு அவனின் அந்தரங்கம் அத்தனையும் தெரியுமென்று கும்மாளமிட்டது அந்தச் சிரிப்பு அவள் குழந்தைக் குரலோடு கூறினாள்.

"நான் சொல்லட்டா?- நீங்க ஒரு பயிற்சிபெற்ற ஆசிரியர்".

"ஆ!..." 'ஒருவேளை முத்துவேல் சொல்லியிருப்பானோ?' தன்னிடமே கேட்டான்.

"யாருமே சொல்லல்ல; இப்பஒரு ஆறு வருஷத்துக்கு முதல்;அரசடிப்பள்ளியில, எஸ்.எஸ்.ஸி பிறப்பில: நீங்க படிப்பித்தற் பயிற்சிக்கு வந்தபோது.- ஞாபக மிருக்குதா?...... எட்டுக் கணக்குக்கும் புள்ளடிபோட்டு, நூற்றுக்குமேல ஒரு முட்டையும் தீட்டிப்போட்டு, எள்ளும் கொள்ளும் வெடிக்க அந்த மாணவியை நிமிந்து பாத்தீங்களே,...... ஒரு மஞ்சுளா!......"

"அடடே; அது நீங்களா?..."

"அந்த முகம் உங்களுக்கு மறைஞ்சு போச்சு. ஆனா எனக்கு? - அந்த எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகம், உள்ளத்தில் பச்சையாகவேயிருக்கு..."

"நீங்க என் மாணவி?" காற்றை உள்ளே இழுத்து, அவன் கண்களை மூடினான். அவள் பேசினாள்.

"அந்த முகம்தான் என்னை ஒரு நேர்ஸ் ஆக்கியது. அந்த முகம்தான் என் உயிரையும் மீட்டுத் தந்தது."

"புரிய முடியாததெல்லாம் பேசுறீங்களே! ஆவலைத் தூண்டித்தூண்டி, வேடிக்கை பாக்கிறீங்க..."

"உங்களால நம்ப முடியாது. சொல்லாமல் நீங்க திருப்திப் படவும் மாட்டீங்க..."

"நேர்ஸ் றெயினிங் முடிஞ்சு நான் வெளிவந்ததிலிருந்தே, எனக்கு ஒருவித விறைப்பு வந்தது. அது அடிக்கடி வந்தது. டொக்டர்களெல்லாம் பரிசோதித்துப் பாத்திட்டு உடம்பில நோயேயில்லையெண்டார்கள்."

"புதுவியாதி?...ம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடைசியாக டொக்டர் டானியேல் தான் பரிசோதித்துப் போட்டுச் சொன்னு், ஏதோ ஒரு சுரப்பி ஏதோ ஒன்டை அளவுக்கு மீறிச் சுரக்கிறதாம் அது தொடர்ந்தே அளவு மீறிப்போனு, ரெண்டு வருசத்துக்குமேல வாழுறதே அருமையாம்."

"அதோடதானு வேலையும் பாத்தீங்க?..."

"அது அனேகமாக படுக்கை நேரத்திலதான் வந்தது. அதற்குச் சரியான மருந்துதான் தெரியல்ல. மருந்து செய்தே நான் அலுத்துப்போனேன். டொக்டர் ஆராச்சிதான் செய்தார் தொடர்ந்து..."

"மருந்து கண்டு பிடிக்கவா?"

"என்னவோ, அப்போதான் நீங்க கொண்டரப்பட்டீங்க. இப்போ உங்க உடலிலே என்ட ரத்தம் ஓடுது. தெரியும்தானே?"

"தெரியும்..."

"சடுதியாக எனக்குத் தோன்றிய தியாக சிந்தை உங்களுக்கு ரத்தம் தரத்தூண்டியது. அந்தக் கணத்திலிருந்து நான் புதியவளானேன். புத்துயிர் பெற்றவள். பிறகு பரிசோதித்த டொக்டரே வியந்தார். டொக்டர் ராமநாதனும் நான் ரெண்டு வருஷத்துக்கு மேலும் வாழ்வேனெண்டு தெரிந்து கொண்டார் போலிருக்கு. அவரிலேயும் ஒரு மாறுதல்..." மஞ்சுளா சிரித்தாள்.

"அதுக்குப்பிறகு அந்தவிறைப்பு வாறதேயில்லையா?..." முருகேசனும் வியப்போடு கேட்டான்.

"ம்கூம்... வாறதேயில்ல..." சொன்னவள் கழுத்தை அழகாக வளைத்துக்கொண்டே கேட்டாள்.

"இப்போது சொல்லுங்க, நீங்க உயிர்கொடுத்தவளில்லையா?..."

"உங்க பேச்சே புதுமைதான்"... என்றுன் முருகேசன்.

முருகேசன் வீட்டுக்குத் திரும்பும்போது கருக்கலாய் விட்டது. அவனேடு படலைவரை வந்தவள், அடுத்ததடவை வீட்டுக்கே வந்து மருந்து போடலாம் என்று கூறிவிட்டுத் திரும்பினுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரையிலமர்ந்தவாறே எதையெதையோ இரைமீட்டுக் கொண்டு தனக்குள்ளே சிரித்துக்கொண்டாள். கருக்கிருட்டு இன்னும் கனதியாகிக் கொண்டிருந்தது. சடுதியாகப் படலைப்பக்கமாக நாய் பாய்ந்து பாய்ந்து குரைக்கத் தொடங்கியது.

'ஒருவேளை முருகேசன்தானே' என்று ஐயுற்றவள் வெளியே வந்து நோக்கினாள். யாருமேயில்லை. பக்கத்து மதிலில் ஒட்டியிருந்த சினிமா விளம்பரத்தைப் பசு மாடொன்று கிழித்துத்தின்று கொண்டிருந்தது. மீண்டும் வந்து கதிரையில் அமர்ந்தாள். அவள் விருப்பத்தையும் மீறி ஏதோ ஒரு கிளுகிளுப்புக்குரல் நெஞ்சுக்குள்ளே இசையமைத்தது.

'கருக்கிருட்டு வேளையிலே
கள்ளனென்டு நாய்குலைக்கும்
மாலை நிலவெறிக்கும்
வந்துகரை சேருமச்சான்'... புரிந்தும் புரியாத ஒரு லயிப்புநிலையிலே அவள் மூழ்கிக்கிடந்தாள்.

மஞ்சுளாவின் வீட்டிலிருந்து புறப்பட்ட முருகேசன் சவரிதுறை வளைவிலே திரும்பி நடந்து கொண்டிருந்தான். பின்னாலிருந்துவந்து ஒரு சைக்கிள் மின்னல் வேகத்தில் அவனைத் தாண்டிப் பறந்தது. கண்மூடிக் கண்திறக்கு முதல் 'தடால்' என்ற சத்தத்தோடு கடகடத்து உருண்டது. அதிலிருந்து மனித உடலொன்று பக்கத்து ஆற்றிலே தூக்கியெறியப்பட்டது.

முருகேசன் பாய்ந்துசென்று, அந்த உடலைத் தூக்கி முகத்தைத் திருப்பினான். சாராய வாடை 'கமீர்' என்று மூக்கிலே அடித்தது.

யாரது?... மாஸ்டர்ப்பொடியன் வடிவேல்! ஒரு கணத்துக்கு முதல் தலைநீட்டியிருந்த பழிதீர்க்கும் வஞ்சகத்தனத்தை மீறித் துடிதுடித்த மனிதத் தன்மையோடு அந்த உடலைச் சுமந்துகொண்டே நடந்தான் முருகேசன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. அதே விஷம்

'பாம்புக்குப் பல்லில் விஷம்
பாதகர்க்கு நெஞ்சில் விஷம்
தேளுக்கு வாலில் விஷம்-உன்னைத்
தேடியெங்கே நான்வரட்டும்?'

"அக்கா! அக்கா!" ஒரு சிறுமி அழைத்தபடியே ஓடிவந்து அடுக்களையுட் புகுந்தாள். கோப்பிப்பானையை இறக்கிவைத்துவிட்டுத் தலைநிமிர்ந்தாள் பொன்னி. இந்தாக்கா கடிதம். வள்ளியக்கா உன்னிட்ட குடுக்கச் சொன்னு அந்தச் சிறுமி கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டாள்.

கடிதத்தைக் கவனித்தாள். அதிலே முத்திரை ஒட்டப்படவில்லை. சீல்குத்தப்படவில்லை. எழுத்துக்கள் முத்துவைக் காண்பதுபோல பிரமையை விளைவித்தன.

''அத்தான் தான் எழுதியிருக்கார்'' நெஞ்சு ஆவலோடு 'திக்திக்' போட்டது. ஆமாம் அத்தான் எழுதியது தான் வள்ளிக்கு எழுதிய கடிதத்துள்ளே பொன்னிக்கென்று பிரத்தியேகமாக ஒன்றும் வைத்து அனுப்பியிருந்தான் அவன். அதைத்தான் அந்தச் சிறுமி மூலமாகப் பொன்னிச்கு அனுப்பியிருந்தாள் வள்ளி. உவகையுந்த அதனைப்பிரித்து வாசித்தாள் பொன்னி.

தான் சுகமாக கண்டிவந்து சேர்ந்ததாகவும், வழியில் எந்தவித இடையூறும் நேரவில்லையெனவும், எழுதி மட்டக்களப்பின் நிலைமை என்ன? எனவும் கேட்டிருந்தான். அத்தான் விரைவில் திரும்புவான் என எதிர்பார்த்துக் கிடந்த பொன்னிக்கு அடுத்த வரிகள் பெரும் ஏமாற்றத்தையளித்தன.

இடையிலே வந்து மீண்டும் திரும்புவது வீண் சிரமம் என்றும், அதனுல் தான் வராமல் பல்கலைக்கழகம் போய் விட்டதாகவும், முருகேசனின் உடல் நிலைபற்றி மஞ்சுளா எழுதியிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே பாடாக இறுதிப் பரீட்சையையும் எழுதி விட்டுப் புறப்பட்டால், எல்லாம் சரி என்றும், அதுவரை பொறுமையோடு காத்திருக்கும் படியும் பொன்னிக்கு அன்பு வேண்டுகோள் விடுத்திருந்தான் முத்துவேல்.

தனது வீட்டில் வள்ளியோடிருப்பது சௌகரியப்பட வில்லையானால், முருகேசனின் இஸ்டத்தை மறுக்காது, சொந்த வீட்டிலேயே போய் இருக்கும் படியும் அவன் குறிப்பிட்டிருந்தான்.

ஆகவே பொன்னி, அண்ணுவோடு தான் வந்தது அத்தானின் கருத்துக்கு மாறுபடாததை அறிந்து வியந்தாள். கடிதத்திலே முத்துவேல் எழுதியிருந்த இரண்டொரு வரிகளை, அவள் திரும்பத் திரும்ப வாசித்து சந்தோஷப் பட்டாள்.

"இன்னும் நான்கே மாதங்கள் நான் வந்த கையோ டேயே உன்னை அழைத்துக் கொண்டு நுவரெலியாவுக்கு வந்துவிடப்போகிறேன். கோடை நாட்களில் ஒருவாரமா வது நாம் அங்கு தங்குவோம். நாட்களை எண்ணிக்கொண் டேயிரு பொன்னி... இங்கு நீ வந்து இந்தப் பேராதனைப் பூங்காவை பார்க்க வேண்டுமென்று ஆசையாக விருக்கிறது"

பொன்னி திருப்பித் திருப்பி வாசித்துக் கொண்டிரு தவாறே நித்திரையாகிப் போனாள். முருகேசனும் வீட்டி லில்லாததால் மாலை ஒருமணிவரை யாருமே அவளை எழுப்பி விடவுமில்லை. அவள் மார்பிலே அந்தக் கடிதம் பட படத்துக் கிடந்தது.

படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்த முரு கேசன், வீடு இருள் சூழ்ந்து கிடப்பதைக்கண்டு திடுக்கிட் டுப் போனான். 'பொன்னி எங்கே? இருந்தால் இத்தனை நேரம் விளக்கேற்றியிருப்பாளே...'

''பொன்னி!''... மூன்று நான்கு தடவைகள் குரல் கொடுத்த பிறகுதான் பொன்னி திடுக்கிட்டு விழித்தாள். அவள் கண்டு கொண்டிருந்த எந்த இன்பக்கனவு கலைந்ததோ? நுவரெலியாச் சுவாத்தியத்தின் குளுகுளுப்பிலே, அல்லது பேராதனைப் பூங்காவின் ஜிலுஜிலுப்பிலே அவள் மிதந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்திருப்பாள். பாவம்; அண்ணு சமய சந்தர்ப்பம் தெரியாது கலைத்துவிட்டான்.

''என்னண்ணு இருட்டாப்போச்சா? சும்மா படுத்தாப் பக் கண்ணை மூடிட்டன்''

'நல்ல புள்ளைதான் நீ; வீடே இருள் மண்டிக்கிடக்கு; ...ம், விளக்கக் கொளுத்து...''

அவள் விளக்கைக் கொளுத்தினுள். அந்த விளக்கு வெளிச்சத்திலே முருகேசனின் கோலத்தைக் கண்டு அவள் திகைத்துப்போனுள். சேட் நனைந்து, தலை குழம்பி, எங்கும் சேறும் சுரியுமாகப் பரிதாபமாயிருந்தது அவன் நின்றநிலை.

''என்னண்ணு இது? மழை பெய்ததா?... இதெல் லாம் என்ன?...''

'நல்லவேளை; அந்த நர்ஸ் வீட்டிலே தங்கியது நல் லதாய்ப் போயிற்று' தனக்குள்ளே பேசியபடி சட்டையைக் கழற்றத் தொடங்கி விட்டான் முருகேசன். பொன்னி பேந்தப் பேந்த விழித்தாள். ஒன்றுமே புரியவில்லை.

சட்டை வேட்டியெல்லாம் சேறும் சுரியும் புரண்டி ருப்பது நல்ல வேளையா? நர்ஸ் வீட்டில் தங்கியது இதற் குத்தான் நல்லதாய்ப் போயிற்று? என்ன புதினம் இது? நல்ல கூத்து. — இப்படி ஏதேதோ சிந்தனைகள் ஓடின பொன்னிக்கு. அவள் அவனையே பார்த்துக்கொண்டு நின் றிருந்தாள்.

''அந்த வேட்டிய எடு புள்ள''

அவள் எடுத்துக்கொடுத்தாள்.

'நல்ல காலம், காயத்தில தண்ணி படல்ல'... முரு கேசன் முகத்தைத் துடைத்துக்கொண்டு நடந்ததைச் சொன் ஞன்.

பொன்னிக்கு நம்பவே முடியவில்லை. அந்த வடிவே லுக்கா அண்ணு உதவி செய்தான்?'...

''இப்ப எங்கண்ணு அவன்?''

''சுமைதாங்கில இருக்கே கந்தையாண்ணன்ட வீடு; அங்கதான் கொண்டு போட்டுத்துப் பாத்துக்கொள்ளச் சொல்லித்து வந்தன். தலைகால் தெரியாத வெறி. உயிர் உணத்தியில்ல. இன்னம் கொஞ்சநேரம் தண்ணிக்க கிடந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தா ஆள் குளோஸ்தான். என்ன செய்ய; பாத்த பிற கும் விட்டுற்றுவர மனச்சாட்சி விடல்ல. ம்; அவனவன் செய்தது அவனவனோட..."

"வேறொருவனாயிருந்திருந்தா, பாத்துத்துப்போயிருப் பான். குடியும் வெறியும் கும்மாளமும் ரொடித்தனமும் இவன்களுக்கெல்லாம் போன இடத்தில இப்படித்தான் ஒரு நாளைக்கு... இவன்களுக்கு நன்மை செய்தா நமக்குத்தான் பாவமண்ணை!...

"என்ன செய்யிற, பாத்திட்டுவர மனம் கேக்கல்ல. ஆயிரத்தச் செய்தாலும் நம்மட ஊர்ப் பிறந்தவன்"

"இதெல்லாம் அவனுக்கு நன்றியிருக்கப் போகுதா? நாளைக்கு ரேட்டுல குடிச்சிப்போட்டுக் கொம்புவான்"

"இன்னா செய்தாரை ஒறுத்தல்..." முருகேசன் ஆரம் பித்ததை தங்கை தொடர்ந்தாள்.

"அவர்நாண நன்னயம் செய்துவிடல்..." வள்ளுவர் காலத்துக்குத்தான் இது. இப்ப கலிகாலமண்ணை என்னவோ நீங்க பாம்பத்தூக்கிக் கரையில போட்டிருக்கிறீங்க. செய்த நன்மைக்கு நாளைக்கு விஷந்தக் கக்கப்போகுதோ என்னவோ. நீங்க நேரத்தோட வந்திருந்தா எந்த இழவும் வந்திராதே; நன்மையும் தீமையும்; மஞ்சுளாவை நான் காணட்டும்...

"அவளுல ஏன் பாயிறுய் நீ?..."

"அவளாலதானே நேரஞ்செண்டு வந்தீங்க?..."

"போதும் பொன்னி, போதும். நன்மைக்கு ஒருக் காலும் தீமை வராது. அப்படி வந்தாத்தானென்ன? அனு பவிக்கிறவன் நான்தான். நீ போ ஆடுப்பில என்னத்தையும் வை."

அதற்குமேல் பேசவில்லை அவள். அந்த வடிவேலு வைக் காப்பாற்றியது தருமமில்லை என்றுதான் அவளுக்குப் பட்டது. ஆனாலும் அண்ணனின் தாராள சிந்தை — மனித மனப்பான்மை ஒரு புறத்தில் பெருமையையும் கிள்ளி விட்டது.

வள்ளிக்கு இராமுழுக்க நித்திரையில்லை. கோழி கூவுமுதலே எழுந்துவிட்டிருந்தாள். மஞ்சுளாவுக்காக அத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே விட்டுக்கொடுக்க மனப்பூர்வமாகத் தனக்குள்ளே அவள் தீர்மானித்து உறுதிசெய்திருந்தாலும், முத்து பேராதனையிலிருந்து எழுதிய கடிதத்தைப் பார்த்தபின், அந்த உறுதியிலும் ஒரு தளர்வு காணப்பட்டது. - சிந்தையிலே ஒரு சலனம் தட்டியது.

அந்தக் கடிதத்திலே, அவள் அண்ணு எத்தனை திட்டவட்டமாக எழுதியிருந்தான். சோதனை எழுதிவிட்டு வந்த கையோடே, முருகு - வள்ளி இருவரையும் ஒன்ருக்குவது தான் முதல் வேலையாம். அப்பா குறுக்கே வரமாட்டார் என்பதுதான் அவன் நம்பிக்கை. அப்படி என்னதான் மலை போல நின்ருலும் அவர்கள் திருமணத்தை கொட்டு மேளத்தோடு தடல்புடலாக நடத்தித்தான் முடிப்பானும். எத்தனை துணிபு?

இதை எண்ண எண்ணத் தன்னிலேயே அவளுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. தன் உறுதி குலைவதை அவளே உணர்ந்தாள்.

அண்ணு நினைத்தாஞல் செய்து தீர்த்தே விடுவான். எதற்கும் துணிந்தவன். அப்படியாஞல் அந்தப்பெண் மஞ்சுளா? அவள் செய்த சேவையும் தியாகமும் வெறும் மணல் மேட்டில் கொட்டிய பால்தாஞ? வடிவேல், அத்தானையும் மஞ்சுளாவையும் சேர்த்துக் கட்டிய கதைகளுக்கு அந்த மஞ்சுளா தவம் செய்தாலும் வேருெரு மணுளனை அடைய முடியுமா? எவஞவது வரப்போகிருஞ? அப்படியாஞல் அந்தப் பெண்ணின் இளமைக் கனவுகள்? எதிர்கால வாழ்க்கை? - எல்லாம் கருகிச் சருகாக வேண்டியவைதாஞ?

இதையெல்லாம் நினைக்க மூளையே சுழன்று பறப்பது போலிருந்தது வள்ளிக்கு.

ஏன் இப்படியெல்லாம் அங்கலாய்க்க வேண்டும்? சுயநலம் தன்னைச் சரியாகக் கௌவிக் கொண்டதென்று தன்னையே அவள் கடிந்து கொண்டாள்.

பொழுது நன்ருக மேலெழுந்து விட்டது தூரத்தே இரவெல்லாம் ஒலித்த பொலிப்பாடல்களும் ஓய்ந்து விட்டன.

இரவு படுக்கைக்குப் போகும்போது தாளிட்ட கதவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் இன்னும் திறக்கவில்லை எப்போதோ விழித்து விட்டாளாயினும், அவள் இன்னும் படுக்கையை விட்டு நகரவில்லை

விழித்த நேரத்திலிருந்து மேலோங்கி உள்ளத்தைக் கலக்கும் அந்தப் பிரச்சினைக்கு ஒரு இறுதி முடிவைக் காண முடியவில்லை. தீர்மானித்துவிட்ட விஷயந்தானாயினும், அது திரும்பத்திரும்பச் சலனமெழுப்பியது.

எத்தனை காலத்து உறவு! இப்போது முறித்து விடுவதென்றால் சாதாரணமா? வேதனையாயிருந்தது. அத்தனையையும் நினைத்து ஒரு பாட்டமாவது அழுது தீர்க்க வேண்டும் போலிருந்தது, அவளுக்கு. அதன் பின்புதான் ஒரு தெளிவு பிறக்கும்.

இன்னும் கதவு திறக்கவில்லை காலைச் சூரியனின் செந்நிற ஒளி கதவிடுக்கிலே புகுந்து ஒரு கோடாக வீட்டினுள்ளும் புகுந்து, அந்தப்பேதை விம்மிவிம்மி அழுவதைப் பார்த்துப் பரிதவித்தது. அவள் அழுதாள விழி ஓரங்கள் நனைய - மார்புத்துகில் நனைய - தலையணையோடு சேர்ந்து படுக்கை விரிப்பும் நனைந்து கிசுகிசுக்க அழுதாள் விழிகள் குங்குமமாயின. முகம் வீங்கியது. மார்பகங்கள் மூச்சுக்கு மூச்சு விம்மிவிம்மித் தணிந்தன.

கண்ணீர்க் கோளங்கள் வற்றி வரண்டுவிட்டன. விழி நீர்க்கோடுகள் சுண்டிக் காய்ந்து விட்டன.

ஏதோ கனம் குறைந்து இறங்கி விட்டது போல மனம் இலேசுப்பட்டது ஒரு தெளிவு பிறந்தது. பாரம் விலகியது போல உணர்ச்சி தட்டியது. நித்தியமான மாற்றமுடியாத ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டவளாக, அவள் எழுந்தாள். நெகிழ்ந்து கிடந்த தாவணியைச் சரி செய்து கொண்டு கதவைத் திறந்தாள்.

வாசலிலே பூத்துக்கிடந்த அந்த மரமுந்திரியின் ஓரமாக அப்பாவோடு யாரோ பேசிக் கொண்டு நிற்பது தெரிந்தது. யாரது? அன்றொருநாள் வந்துவிட்டுப் போன ஆள்தான் - வீமண்ணன்.

வள்ளியைக் கவனித்துவிட்ட வீமண்ணன் எதையோ அவசரமாகக் குசுகுசுத்துவிட்டு மெல்ல நழுவிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிந்தும் விடியாததுமாக அப்படியென்ன அவசரம் அவருக்கு?

பின்கோடிக்குத் திரும்பப் போன அவள், அப்பா தன்னைநோக்கி வருவது கண்டு தயங்கி நின்ருள்.

''ஆரது? வீமண்ணனு? என்னவாம்?'' அவள் கேட்டாள்.

''ஓம்புள்ள, விஷயம் தெரியுமா?''

''என்னப்பா?...''

''சீ, சீ; என்ன சின்னத்தனமிது' மனிசனு இவனெல்லாம்?'' - அருவருப்போடு, முகத்தை நாலுகோணமாக்கி கூறுகிஞர். வள்ளி புரியாமல் விழித்தாள்.

''என்னப்பா அது?...''

''முருகேசன் - உன்ட மச்சான், ராவு என்ன செய்திரிக்கான் தெரியுமா?''

''என்னவாம்?...''

மஞ்சுளாவோடு சேர்த்து, ஏதோ வரப்போகிறதென்றுதான் வள்ளி எதிர்பார்த்தாள். ஆனுல் அப்பாவின் வாயிலிருந்து பிறந்ததோ?!

''அந்தப் பொடியன் வடிவேல் சங்கத்துல நெல் குடுத்துப்போட்டு, ரெண்டாயிரம் ரூபா கொண்டந்தானும். ராவு சவுரிதுறையில் மறிச்சி பறிச்சிப்போட்டு, ஆத்திலயும் தள்ளிப் போட்டானும் உன்ட மச்சான், ஆரோ கண்டு கந்தையாட வீட்டுல தூக்கிக்கொண்டு போட்டு, விடியந்தான் பொலிசுக்குப் போனதாம். வீமண்ணன் சொல்லித்துப் போருன். வழிமறிச்சி - அடிச்சிக் கொள்ளையடிக்கிறதெண்டா சும்மா அலுவலா?''

''அப்பா!...'' தன்னையறியாமலே கத்திவிட்டாள் பொன்னி. ''இதுபொய், சுத்தப் பொய் – பச்சப்பொய். செத்தாலும் கூட அவர் இப்படிச் செய்திருக்கமாட்டார். ஏதோ சூழ்ச்சி இது!'' அவளை மீறியே இந்த வார்த்தைகளும் பிறந்து விட்டன. சட்டென்று அவள் கட்டுப்படுத்திக் கொண்டு மேற்பற்களால் கீழுதட்டைக் கடித்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வள்ளி, நீ நினைக்கிற முருகேசனில்லைப்புள்ள இப்ப அவன். கேடுவந்தா மதிகெட்டுத்தான் வருமாம். இப்பிடி இவன் மாறுவானென்டு நானுந்தான் நினைக்கல்ல குடி - கூத்தி - கொள்ளை!...''

அப்பாவின் பேச்சை ஆமோதிப்பவள்போல அவள் அடங்கிப் போனாள்.

ஒருசில நிமிடங்களுக்கு முன்னே, அவள் செய்து கொண்ட முடிவுக்கு முரண்பாடாக, உணர்ச்சி வசப்பட்டு விட்டதை எண்ணி அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள். அப்படி இனியும் நடந்து கொள்ளக் கூடாதென்று தனக்குத்தானே உத்தரவு போட்டும் கொண்டாள்.

''மகள்!...'' என்று அப்பா இறங்கிக் கனிவாக அழைத்தார். இனி வெளிவரப்போகும் பனையளவு விஷயத்துக்குப் பீடிகை பலமாக விழுவது வள்ளிக்குத் தெரியும்.

''நான் வெட்டைக்குப் போயிற்று...''

''போயித்துவா, சொல்லுறன்''

அவள் போய் விட்டாள்.

அவர் திரும்பி விட்டார்.

பொன்னியின் குடிசைத் திண்ணையிலே கிடந்த அந்தப் பக்கீஸ் மேசையில் இருந்த அந்தப் பழைய ஜேர்மன் மணிக்கூடு தன்சிறிய முள்ளை ஒன்பதிலும் பெரிய முள்ளை இரண்டிலும் பதியவைத்தது.

கிறவல் வீதிப் புழுதியை அள்ளியிறைத்துக்கொண்டு ஒரு 'ஜீப்' பறந்து வந்தது. முருகேசனின் வீட்டு வேலியோரமாக நின்றது.

திமுதிமுவென்று நான்கு காக்கிச் சட்டைகள் குதித்தன. ஆமாம் பொலிஸ்காரர்கள்!

பொன்னி உடம்பெல்லாம் படபடக்க எட்டிப் பார்த்தாள்.

''இது முருகேசன் வீடு...? அந்த உயர்ந்த உருவம் காணகடூரமாக ஒலித்தது. அந்த உருவம்தான் ஏ. எஸ். பி. யாம் பொன்னிக்குப் பதில்சொல்ல வாய்வரவில்லை. நடு நடுக்கத்தோடு தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏய் பொம்புள, எங்க முருகேசன்...? அதட்டினன் அந்த ஏ. எஸ். பி. பொன்னி தலையை டக்கென்று உள்ளே இழுத்துக்கொண்டு, கதவைப் படாரென்று இழுத்து மூடினுள்.

பொலிஸ் புலிகளுக்கு முகத்திலே அறைந்தது போலிருந்தது பொன்னியின் செய்கை. அந்தத் தடித்த மனிதரின் மீசை துடித்தது. கண்கள் சிவந்தன.

இதற்கிடையில் பொன்னி பின்னே ஓடி முருகேசனிடம் தெரிவித்திருக்கவேண்டும். பீதி படிந்த தோற்றத்தோடு அவன் ஓடிவந்து கதவைத் திறந்தான். ஆத்திரத்தோடு நின்றிருந்த தடித்த மனிதர், எரித்து விடுவதுபோல பார்த்தார். இரண்டுபேர் அவனைத்தள்ளி ஜீப்பிலே ஏற்றினர். இதற்கிடையிலே வெளியே வந்துவிட்ட பொன்னி தன்னையறியாமலே ''அண்ணு!'' என்று கத்திவிட்டாள். வலிந்து மீண்டும் அந்தக்குரல் எழாமல் அடக்கிக்கொண்டு தவித்தாள். அவளால் அழவும் முடியவில்லை. அழாமலிருக்கவும் முடியவில்லை. அந்தக் காக்கிச்சட்டை மனிதருக்கு முன்னே அழுவதா? ஆனுல் சினிமாவில்போல அந்தப் பொலிஸ்காரனின் கால்களைப்பிடித்து, ''அண்ணுவை விட்டுவிடுங்கள்'' என்று அவள் கத்தவில்லை. அவளுக்குத் தெரியும் அது நிச வாழ்க்கை சினிமாவல்ல.

''ம்...வாருங்க...'' இரு கான்ஸ்டபிள்களையும் அழைத்துக்கொண்டு அந்தத் தடித்த உருவம் வீட்டினுள் புகுந்தது. நல்லவேளை பொன்னி வெளியே வந்திருந்தாள் சோதனை நடத்திஞர்களாம். ஒரு கான்ஸ்டபிள் வெளியே வந்தான்.

''ஏய், மனிசி!'' பொன்னியைப் பார்த்து அவன் அழைத்தான். ''ஐயா கூப்பிடுருர். உள்ளே வந்து பெட்டியெல்லாம் திறந்து காட்டு...''

யாருக்குப் பைத்தியப்? பொன்னி போவாளா? அக்கம் பக்கத்தவர்கள் அவளைச் சரேலெனப் பிடித்திழுத்து தங்கள் வளவுக்குள் எடுத்துக் கொண்டார்கள். கும்பல் கூடிக் குசுகுசுத்துக்கொண்டது.

கான்ஸ்டபிள் ஏமாந்துபோய் மீண்டும் உள்ளே போனுன். ஏதோ தடால் புடால் உள்ளே கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரத்தில் பொலிஸ் துரைகள் களைந்துப்போய் வந்து ஜீப்பில் ஏறிக்கொண்டனர்.

என்ன?

வீட்டைச் சோதனைபோட்டு முடிந்ததாம். அந்த ஜீப் ஒரு பயங்கர உறுமலோடு புழுதியை வாரி இறைத்தபடி, ஓடி மறைந்தது.

குமுறிக்குமுறி அழுத பொன்னி செயலற்று விட்டாள். உணர்ச்சி நரம்புகள் அத்தனையும் செத்து அவள் கல்லாச் சமைந்து நின்றுவிட்டாள்.

இரவு பொன்னி இனம்புரியாத ஏதோ ஒரு விஷத்துக்கு, காரணம் இல்லாமல் ஏன் பயந்து அண்ணுவைக்கடிந்து சொண்டாளோ, அதே விஷம் அண்ணுவைச் சூழ்ந்து இழுத்துப் போவதைக்காண அவள் புழுவாத் துடித்த துடிப்பு அத்தனையும் அடங்கிப்போய்ச் சிலையாகிவிட்டாள்.

புழுதிப் படலத்தை முந்திக்கொண்டு, கண்களைத் திரையிட்டு மறைத்த நீர்ப்படலம். விலகியதோ என்னவோ அவள் மரத்துப்போய் நின்றிருந்தாள்.

"பாம்புக்குப் பல்லில் விஷம்
பாதகர்க்கு நெஞ்சில் விஷம்
தேளுக்கு வாலில் விஷம் — உனைத்
தேடியெங்கே நான்வரட்டும்?''

## 14. சம்மதமா?

'தாலிக் கொடியே என்ட
தாய்மாமன் ஈண்ட கண்டே
மாமிக் கொருமகளே - உன்ட
வாழ்வுகலி யாணமெப்ப?'

என்னதான் தீங்கிழைத்தாலும் தன்வீட்டுப் பூனை செத்துவிட்டதானல், அந்தவீட்டின் பெண்மனங்கள் நைந்து நைந்து உருகும். நினைந்து நினைந்து பச்சாத்தாபப்படும். கண்கள் கூடக் கலங்கியழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானல் பிஞ்சிலிருந்தே நெஞ்சறிய நேசித்த ஒரு உயிருக்கு இன்னல் என்றபோது அந்தப் பெண்மனம் சும்மா கிடக்குமா?

வள்ளிபட்ட வேதனையை யாருக்குத் தெரியும்? உகுத்திய கண்ணீரை உறிஞ்சிக்கொண்ட தாவணி மாத்திரம்தான் அவள் நிலையுணர்ந்து ஈரலித்தது. காலையிலிருந்து ஒரு அன்னம் அவள் தொண்டையில் இறங்கவில்லை.

முருகேசனைப் பொலிஸ் ஜீப் ஏற்றிப்போனதிலிருந்து மகளின் முகத்திலே ஏற்பட்டிருந்த வேதனைப்படிவு அவளின் அப்பாவுக்குத் தெளிவாய்விட்டது. காலையில் அவர் அவளிடம் எதைச்சொல்ல வாயெடுத்தாரோ, அதை இப்போது சொல்வது புத்தியல்ல என்பதை உணர்ந்துகொண்டு பேசாதிருந்துவிட்டார். அவர்தான் சூடுகண்ட பூனையாயிற்றே!

அடித்துப் போட்டமாதிரி யாகிருந்த உறுப்புக்கள் மாலையாகி 'முருகேசன் வீட்டுக்குத் திரும்பிவிட்டான்' என்ற நம்பகரமான செய்தி கிடைத்தபின்தான், உயிர்பெற்றன. அவள் உள்ளமும் நிறைவு பெற்றது அன்று இரவுதான் அவளுக்கு ஒருபிடி உணவு இறங்கியது.

இப்போது அக்கம் பக்கத்திலே காற்றுவாக்கில் மோதிய குரல்கள் ஆத்திரத்தை ஊட்டுவதற்குப் பதிலாக ஆனந்தத்தையூட்டின. நெருப்பைக் கொட்டி அவள் உள்ளத்தைப் பொசுக்குவதற்குப் பதிலாக சந்தனத்தைத் தடவின.

'இத்தனை நல்லவளா அந்த நர்ஸ்! அவளைப்பற்றி கற்பனை செய்துகொண்ட அத்தனையும் பொய்தானு...? எவ்வளவு கீழ்த்தரமாக எண்ணி - பச்சையாகத் தின்னத்திரிந்தேனே. பாவம்; அவளும் பெண்தான். என்னைப்போல கண்மூடித்தனமாகக் காதலிக்க மாத்திரம் தெரிந்தவளல்ல. கடமையையும் உணர்ந்தவள். காருண்யமும் இரக்கசிந்தையும் பரந்த மனமும் உள்ளவள். சுயநலம் இல்லாதவள். அவள் நல்லவள். நர்ஸ் தொழிலுக்கே எடுத்துக்காட்டானவள். அவரை ஆளக்கூடியவள் அவள்தான். அவருக்கு உகந்தவள் அவள்தான். இனியும் நான் இந்த மனத்தை அலட்டிக் கொள்ளக்கூடாது. அவர் அனுபவிக்கவேண்டிய இன்ப வாழ்வை நான் இன்னும் தாமதிக்க வைக்கலாகாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித் தனக்குள்ளே உறுதியும் அமைதியும் செய்து கொண்ட வள்ளி, நாளைக்கே அந்த நர்ஸைக் காணவேண்டு மென்று தீர்மானித்தாள்.

அடுத்தநாள், பல்வலிக்கு மருந்துபோட, ஆஸ்பத்திரிக் குப் போவதாக அப்பாவிடம் கூறிவிட்டு, பக்கத்து வீட்டுச் சிறுமியையும் அழைத்துக்கொண்டு, படலையைத் தாண்டிய சமயம், அந்த ஆலடியில் வடிவேலுவும் வீமண்ணனும் ஏதோ பேசிக்கொண்டிருப்பதை வள்ளி கவனித்தாள். அவள் வீதியி லேறி நடக்கத் தொடங்கியதும், வீமண்ணர் மாத்திரம் படலையைத் திறந்துகொண்டு உள்ளே புகுவதையும், வடிவேல் தன்னை வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டு நிற்பதையும் அவளால் எப்படியோ உணர முடிந்தது. உண்மையிலே அவன்பார்த்தானோ இல்லையோ, அவள் அவன் தன்னை - தான்வைக்கும் ஒவ்வொரு காற்சுவட்டை - தன் தாவணி லலிதமாகக் காற்றில் பறப்பதை - தன் பின்னல் முதுகிலே புரண்டு துடிக்கும் துடிப்பை, எல்லாமே துருவித் துருவிப் பார்த்தவாறு பின்னால் வருவதையே கற்பனை செய்துகொண்டு பயந்தாள்.

அருகிலே துள்ளுநடை போட்டுவந்த, அந்தச் சிறு மியைக் கிள்ளிக் கேட்டாள்.

''ஆராவது பின்னுக்கு வாருங்களா?''

''ஒருத்தரு மில்லையே'' - அந்தச் சிறுமி சொன்ன பிறகுதான், வள்ளிக்குத் திரும்பிப் பார்க்கும் துணிவு பிறந்தது. வெகுதூரத்திலே ஆலின் கீழ் வடிவேல் இன்னும் நின்றிருந்தான். கண்ணைவிட்டு அந்த உருவம மறையும் வரை அவள் அடிககடி, திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள்.

சந்தியிலே ஆஸ்பத்திரிக்குப் போகும் பஸ் நின் றிருந்தது. வள்ளியைக் கண்டதோ என்னவோ, சர்...சர்ர்... என்று புகைகக்கியபடியே புறப்பட்டுவிட்டது. வள்ளியின் கையசைப்போ, அல்லது அந்தச் சிறுமியின் கூச்சலோ அதன் காதுக்கு எட்டவேயில்லை.

'சே என்ன இழவு; மற்ற பஸ்வர இரண்டு மணியோ நாலுமணியோ...' சலிப்போடு அந்தப் பூவரச நிழலிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையைத் தளர்த்தினான் அவள். என்ன செய்வது? புளியந் தீவு வரை நடந்து போக முடியுமா? - நினைத்தால் அது பிரமாதமில்லை நடந்தே விடலாம். ஆனால் அப்போதைக்கு அது சாத்தியமாகப் படவில்லை அவளுக்கு 'என்ன ஒரு அயறிங்காராவது வராதா?... கொஞ்ச நேரம் நின்று பார்ப்போம். என நினைத்தவள், குடையையும் மடக்கிக் கொண்டாள். அந்தச் சிறுமி ஏதேதோ பேசினாள் தையலுக்கு ஊசிகொணரவில்லையென்று ரீச்சர் அடித்தாளம். அதைப் போய் அவள் அம்மாவிடம் சொல்லி அழுதாளம். அம்மா வந்து ரீச்சருக்குக் கொடுத்தாவாம் கொடை - இப்படி எதையோவெல்லாம் அளந்தாள் அவள். 'உம்' போட்டுக் கொண்டு நின்றதிலேயே ஒரு பத்து நிமிடம் பஞ்சாய்ப் பறந்து விட்டது.

வள்ளியின் கண்கள் ஆலயடிச்சோலை ஏற்றத்திலே தெரிந்த ஒரு கரும்புள்ளியில் பதிந்தன. ஒரு கார் வந்து கொண்டிருந்தது. அயறிங் காராய்த்தானிருக்க வேண்டும். அதை நிறுத்தத் தன்னை ஆயத்தமாக்கிக் கொண்டு நின்றிருந்தாள். இதற்கிடையிலே, திடுமென்று சைக்கிளில் வந்திறங்கினான் வடிவேல்.

''புளியந்தீவுக்குப் போகத்தானே?'' அவன் அந்தச் சிறுமியிடம் கேட்டான்.

''இல்ல ஆசுபத்திரிக்கு'' என்றாள் சிறுமி. இதற்கிடையிலே கார்நெருங்கி விட்டது. வடிவேல் கையைக் காட்டி நிறுத்தினான்.

''எங்க ரவுணுக்கா? ஏறிக்கொள்ளுங்க'' என்றான் 'றைவர்'

வடிவேலின் கண்கள் வள்ளியை நோக்கின. வள்ளியின் கண்களிலே கடுகடுப்புத் தெறித்தது. ஒரு வெறுப்பான பார்வையை அவன் மீது பட்டும் படாமலும் வீசிவிட்டு அவள் மறுபக்கம் தலையைத் திருப்பித் தயங்கி நின்றாள். பின்னும் ஏதோ நினைத்தவளாக, பின்கதவைத்திறந்து ஏறிக்கொண்டு சிறுமியையும் ஏறச் சொன்னாள். கார் காற்றாய்ப் பறந்தது.

வடிவேல், சைக்கிளில் மீண்டும் திரும்பி ஏறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒரு உற்சாகத்தோடு கால்கள் சுழன்றன. வான வெளியை வெற்றிகண்ட ரஸ்யவீரன் 'ஜூரி காகரின்' என்ற நினைப்போ, அல்லது அமெரிக்க வீரன் 'அலன் செப்பாட்' என்ற எண்ணமோ; இந்த வடிவேலுவும் சைக்கிளை 'ஜெட்' கட்டாகத் தான் பறக்க விட்டான். ஆலடியில் பிரேக்கை யழுத்தி தாரோடு டயரின் பாதியைத் தேய்த்துக்கொண்டு காலைக்குத்திய சமயம், அதற்கென்று காத்திருந்த மாதிரி, படலையைத் திறந்து கொண்டு வீமண்ணன் வீதிக்கு வந்தார்.

வடிவேல் எதிர்பார்த்த அளவு வீமண்ணனின் முகம் திருப்தி தரும்படியாய்க் காணப்படவில்லை ஆனாலும் வீமண்ணன் வலிந்து வரவழைத்த சிரிப்போடுதான் வடி வேலுவை நெருங்கினுர்.

அவரிடம் எதையோ அறியும் ஆவலோடு வடிவேல் துருவித் துருவிப் பார்த்தான். கடைசியில் பொறுக்க மாட்டாதவனுக, வாய்விட்டே கேட்டுவிட்டான்.

''என்னவாமண்ணை?

''அந்த மனிசன் ஒண்டும் சொல்லுதில்லதம்பி பொட்டைக்குச் சம்மதமெண்டா, தனக்கும் சரிதானும் அவளுட்ட விஷயத்தச் சொல்ல மனிசன் தயங்கிருன் போலகிக்கி...ம்''

''அப்ப?...'' ஆற்றுமையோடு வடிவேலுவின் குரல் வெளிவந்தது.

''பொட்டையிட்ட மனிசன் சொல்லக் கூட இல்லை யாம். நானெண்டா நம்பல்ல அவள் மசிவாளெண்டு...''

''அதில்ல வீமண்ண; அந்த ஆள் நம்மட பக்கமோ இல்லையோ?...

''அந்தக் கடப்பளி முருகேசனைக் கட்டக் கூடா தெண்டுதான் சொல்லுருன் மனிசன். இக்கணம் அவள் குளறிக் கூத்தாடினுளெண்டா இந்த மனிசனும் தலையாட்டு வான் போலகிக்கே! மகளுட்ட விஷயத்தச் சொல்லு றத்துக்கே மசிந்துருன்.''

''அந்த மனிசனும் நம்மட கையிலயில்லாட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தக் கிருந்தையெண்டாலும் எப்பிடியண்ண குடுக்கிற?...''

''அதுதான் தம்பி அதநான் லேசாகத் தொடங்க முதல்தானே என்னைத் தின்னப் பாக்கிறுன் மனிசன்; அந்தவழி வாய்க்காதுதம்பி. இதுக்குவேற வழிதான் பாக்கோணும். கையோட பூசாரி சண்முகத்திட்டப் போவம் வா, காசப் பாத்தா நடக்காது. சூட்டுக்கு மிஞ்சின பரிசாரம் என்ன? அழைப்புச் செய்கைதான் இதுக்குச் சரியான வார்த்தை. நான் முடிச்சித்தாறன் இன்னம் நாலு நாளையில பாரன் ''

சால்வையை உதறித் தோளிலே போட்டுக் கொண்டு வீமண்ணன் நிமிர்ந்து நடக்க, சைக்கிளைத் தள்ளிக்கொண்டு 'மாஸ்டர் பொடியன்' வடிவேல் பின் தொடர்ந்தான்.

ஆஸ்பத்திரி நெருங்கி வருவதையுணர்ந்த 'றைவ'ரின் கால்கள் 'அக்ஸிலேட்டரைத்' தளர்த்தி 'பிறேக்'கை மிதித்தன.

''உஸ், றைவர்; இந்தத் திருப்பத்தால விடுங்க'' - வள்ளி இடப்பக்கமிருந்த வீதியைக் காண்பித்தாள். 'றைவர்' அந்தப்பக்கம் திருப்பிச் செலுத்திஞன். ஒரு வீட்டுக்கு முன்பாக நிறுத்தச் சொல்லி, கொடுக்கவேண்டிய கூலியைக் கொடுத்துவிட்டு இறங்கிக் கொண்டாள் வள்ளி. அந்தச் சிறுமியையும் அழைத்துக் கொண்டு அந்த வீட்டின் 'கேற்'றைத் திறந்து கொண்டு உள்ளேயும் போனுள். கதவு சாத்திக் கிடந்தது. அந்தச் சிறுமியிடம் கதவைத் தட்டச் சொல்லி ''அக்கா; அக்கா''வென்று கூப்பிடவும் சொன்னுள். சிறுமி அப்படியே செய்தாள். ஆனுல் ஒரு சிறு குருவிகூட எட்டிப் பார்க்கவில்லை. வள்ளிக்கு இப்போது சந்தேகமாயிருந்தது. 'ஒருவேளை வீடு இது இல்லையோ?' தனக்குள்ளே சிந்தனை விரிந்தது. 'ம், இதுபோல்தானேயிருக்கிறது' - தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

முருகேசனைப் பார்க்க முத்துவோடு ஒருநாள் அந்த வழியாக வந்தபோது, அவன் சுட்டிக்காட்டி இதுதான் நர்ஸ் மஞ்சுளாவின் வீடு என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. வாயில் விரலை வைத்துக்கொண்டே வீட்டுப்படியில் நின்றிருந்தாள் வள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னக்கா ஒருத்தரையும் காணல்லேயே; என்றாள் சிறுமி

"அதுதானே; வா ஆசுப்பத்திரியில போய்ப் பாப்பம்" எனக்கூறிக் கொண்டே, படியிறங்கினாள் அவள். அப்போது தான் பின்புறத்திலிருந்து எட்டிப் பார்த்தாள் மஞ்சுளாவின் தாய்.

"ஆரது? ஆரத்தேடுறயள்?"

"மிஸ் மஞ்சுளா.." வள்ளி சொன்னாள். அம்மா கதவைத் திறந்துவிட்டு. 'உள்ளுக்கு வாங்க புள்ள. வந்து இருங்க. அவள் இண்டைக்கு ஆஸ்பத்திரிக்குப் போகல்ல. ஆரையோ பாக்கவேணுமெண்டு போனாள். பொலிஸ்ரேசனுக்கோ எங்கயோவாம். வந்திடுவாள். இருங்க. என்று உபசரித்தாள்.

ஒன்பதரையிலிருந்து பத்தரை மணிவரை அந்த அம்மாவோடு பேசும் வாய்ப்புக் கிடைத்தது வள்ளிக்கு.

மஞ்சுளாவின் தந்தை ஒரு 'ஓவசியர்' என்றும் அவளின் மூன்றாம் வயதிலேயே இறந்துவிட்டதாகவும் அன்றிலிருந்து குடும்பபாரம் தன் தலையிலே விழுந்ததென்றும் கூறினாள் அந்த அம்மா. கைம்பெண்ணாகவிருந்தும் மகளை ஒரு நர்ஸ்சாக்கி விட்ட பெருமையை வள்ளியும் பாராட்டினாள். மஞ்சுளாவின் பெரியம்மா பெரியப்பா எல்லாரும் உயர்ந்த அந்தஸ்திலிருப்பதாகவும், ஆனால் தான் அவர்களிடம் ஒரு சல்லிக்காவது கையேந்தாது வாழ்ந்துவருவதாகவும் கூறினாள். அதுவே ஒரு தனிப்பெருமையாக இருந்தது அந்த அம்மாவுக்கு.

எல்லாவற்றையும் அளவிட்ட வள்ளி, அந்தக் குடும்பம் ஒரு கண்ணியமான, கௌரவமான வரலாற்றையுடையதென்பதையும் கணித்துக் கொண்டாள் நல்லாக பேரோடும் புகழோடும் வாழ்ந்த குடும்பந்தான் தலைவனில்லாமையால் இடையிலே நலிவுற்றாலும், தலையெடுத்துவிட்ட மகளால் இப்போது மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கிறது தளப்பமில்லாமல் குடும்பம் ஓடுகிறது. கடவுள் கண்பார்த்தது போல மகளின் எதிர்கால வாழ்வும் மலரவேணடும். ஒரு நல்ல மருமகனும் கிடைத்து ஆண் இல்லாத குறையை அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் நிறைக்கவேண்டும். இவையெல்லாம் அந்தப் பெற்ற மனத்தின் அபிலாசைகள். பெண்ணைப் பெற்றுவிட்ட எந்த அம்மைக்கும் இருக்கவேண்டிய அத்தனை அங்கலாய்ப்பும் அந்தத் தாயிடமும் இருக்கத்தான் செய்தன. மகளைக் கட்டிக் கொடுத்துக் கண்குளிரப் பார்க்க, அந்தத் தாயுள்ளம் கொள்ளை ஆசையை வைத்துக்கொண்டு தவித்தது.

சுமார் பத்தரை மணியளவில் காரொன்று வந்து நின்றது. 'இன்ஸ்பெக்டர்' நடேசன் அதிலே இருந்தார். மஞ்சுளா இறங்கியதும் கார் பறந்தது.

வரும்போதே கவனித்துவிட்ட மஞ்சுளா, ''நீங்கள் வந்து கனநேரமா?'' என்று ஆர்வத்தோடு வினவினாள். வள்ளி பதிலளிக்கு முதலே அம்மா முந்திக்கொண்டாள்.

''வந்து ஒரு மணிநேரத்துக்கு மேலாகுது. நீ என்ன புள்ள ஆஸ்பத்திரிக்கும் போகாம எங்க சுத்திப்போட்டு வாறாய்?''

''என்னம்மா இது; நானெங்க சுத்தப்போனனும்?'' சிணுங்கினாள் அவள் செல்லமாக.

''அப்ப எங்கதான் இந்த வெயில்வளிய?''

''சும்மா போம்மா; உனக்கென்ன தெரியும்!'' பொய்யாகத் தாயைக் கடிந்துகொண்டாள்.

''அம்மா; இவங்களுக்கு?...'' அவள் கண்கள் பேசின. அம்மா வள்ளியையும் மகளையும் பார்த்துச் சிரித்தாள்.

''என்னம்மா சிரிப்பு?''

''கோப்பி, விஸ்கட், பழம் எல்லாத்தையும் முடிச்சிப் போட்டுத்தான்...'' வள்ளியும் சிரிப்போடு குறுக்கிட்டாள்.

''அதுதான் கேட்டன். அப்போ சரி...''

எல்லோரும், அந்தச் சிறுமியுட்பட, கலகப்போடு பேசினார்கள். பலநாள் பழகியவர்கள் போலப் பேசிச் சிரித்தார்கள்.

மஞ்சுளா உடைமாற்ற உள்ளே போனபோது, சிறுமியை அப்படியே இருக்கச்சொல்லிவிட்டு, வள்ளியும் பின் தொடர்ந்தாள்.

''சே, என்ன புழுக்கம்; இப்படியே எல்லாத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழட்டிப் போட்டாத்தான் நிம்மதியாயிருக்கும்.'' வள்ளியும் தன்னோடு வருவதையுணர்ந்த மஞ்சுளா, இப்படித் தனக்குள்ளே பேசிக்கொண்டாள். மேலாடையைக் குலைத்துக் கட்டிலிலே போட்டாள். இறுக்கமாக அப்படியே ஒட்டிக் கொண்டிருந்த'ஜாக்கட்'வியர்வைக் கசிகசிப்போடு நரகவேதனையையளித்திருக்கவேண்டும். அதையும் கழட்டிவிடத்தான் துடிதுடித்தாள் மஞ்சுளா. ஆனால் அந்நியப் பெண்ணொருத்தி நின்றிருக்கும்போது?... அவளுக்குத் தயக்கமாயிருந்தது.

'அதையும் கழட்டிப்போட்டு, வேறு எதையாவது கட்டிக்கொள்ளுங்க...'' வள்ளியின் குரல் அவள் தயக்கத்தைப் போக்கியது.

வேறொரு மெல்லிய சேலையை எடுத்துக்கட்டிக் கொண்டு, வள்ளியையும் இருக்கச்சொல்லித் தானும் கட்டிலில் அமர்ந்தாள்.

''மிஸ் மஞ்சுளா...'' வள்ளியின் குரலுக்கு நிமிர்ந்தது அவளின் முகம்.

''சும்மா, மிஸ் சிஸ் எல்லாம் விட்டுட்டு, மஞ்சுளா வெண்டு பேசுங்க'' அவள் வேண்டிக்கொண்டாள்.

''எனக்கு மூண்டுநாலு வயதுக்காவது நீங்க இளமையாகத்தானிருப்பீங்க... வள்ளியை மேலும் தொடரவிடவில்லை மஞ்சுளா.

''அப்போ, நான் அக்காவெண்டு அழைக்கலாம். 'அடியே மஞ்சுளா' வெண்டு நீங்களும் அழைக்கலாம். சரிதானே?'' என்று விழிகளை ஒருகோணத்துக்கு ஓட்டி முறுவலித்தாள்.

''அது சரி, என்றுமில்லாத புதினமாய், என் வீடு தேடி இன்டைக்கு வந்ததில ஏதோ விஷயமிருக்கு. சொல்லுங்க; என்ன விஷேசம்?''

''ஒண்டுமில்ல; சும்மாதான் வந்தநான்''

''உம்...கூம்; இருக்காது. இது பொய்...''

''பெரிசாக ஒன்றுமில்ல, மஞ்சுளா. நீங்க எனக்குத் தங்கச்சி மாதிரி. உங்களோட தனியாகப்பேச ஆசைபோல இருந்துது. அதுதான் வந்தேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம தனியாக்த்தானே இருக்கிறம்; சொல்லுங்க, சொல்லுங்கக்கா."

"மஞ்சுளா, உங்களப்போல ஒரு பெண் பிறக்கவே முடியாது."

"ஏன், அப்படிச் சொல்லுறீங்க; நீங்க பிறக்கல்லையா? இப்படி மஞ்சுளா கேட்டபோது ஒரு பெருமூச்சு வள்ளியிடமிருந்து பிறந்தது.

"உம்; நானு?" வள்ளியின் கண்களும் கலங்குவது போலவிருந்தது. அவள் ஒரு சலனமானதொனியிலே,

"நான் சுயநலத்துக்காகப் பிறந்தவள். என்னுல் மற்றவர்களின் நலனைப்பற்றி நினைக்கவே முடியாது. அது என் கருவின் அமைப்பு. அதை இனி மாற்றவும் முடியாது" வள்ளி நினைக்காமலே, அவளுக்குத் தெரியாமலே தொண்டை கரகரத்தது, கண்களை நீர் திரையிட்டது. மஞ்சுளா பதைத்துப் போனுள்.

"அக்கா, என்ன இது? என்னைக்கூட அழவைத்து விடுவீங்க போலிருக்கு..."

"மஞ்சுளா, நீங்க அழவே கூடாது தங்கச்சி. நீங்க அழவே கூடாது. நீங்க அழப் பிறந்தவளில்ல, அழுகை வரவே கூடாது."

இதைக்கேட்டு வேண்டுமென்று ஒரு புன்னகையைப் பூக்கவிட்டாள் மஞ்சுளா.

"அக்கா, இதென்னக்கா, சினிமாவில வாற 'டயலக்' மாதிரி ஏதேதோ பேசுறீங்க?"

"வாழ்க்கையே ஒரு சினிமாதானே மஞ்சுளா!"

"போங்கக்கா, சொல்லவந்ததச் சொல்லாம, ஏதேதோ என்னிட்ட மறைக்கிறீங்க...ம்; உங்க ஊருல, மிஸ்டர் முருகு, அதுதான் உங்க அத்தான் அவரைப்பற்றி ஏதேதோ வாய்புழுக்கப் பேசிறுங்க. அதுதான் நீங்க..."

"இல்ல..."

'அப்ப, நான் பச்சையாகச் சொல்லுறன். அவரையும் என்னையும் வச்சி, வம்பு தும்பெல்லாம் பேசிறுங்க. அதக் கேக்கக் கூடாமத்தான் நீங்க..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லை' - வள்ளி தலையாட்டினாள்.

''அதுவுமில்லாட்டி, உங்க அத்தானுக்கு நான் அதாவது நேர்ஸ் மஞ்சுளா தலையணைமந்திரம் போட்டுட்டாள். அவரை விட்டுடச் சொல்லி என்ட காலுல விழுந்து கெஞ்சப் போறீங்க... அதுக்குத்தான் நீங்க...''

இதற்கும் வள்ளி, 'இல்லை'யென்று தலையசைத்தாள்.

''அப்ப வேறென்ன? அக்கா! நீங்க உண்மையச் சொல்லுங்க எனக்குப் பயமாயிருக்கு அங்க என்னவோ விபரீதம் நடந்திருக்கு. அவருக்கு என்ன அக்கா?...''

மஞ்சுளாவின் பதட்டத்தைக் கண்டு வள்ளி உருகிவிட்டாள். மஞ்சுளாவின் கண்கள் பனிப்பதைக்கண்டு அவள் உள்ளம் கனிந்து நெகிழ்ந்தது.

''மஞ்சுளா! அங்க அவருக்கு ஒன்டுமேயில்ல தங்கச்சி. அவரை நேற்று பொலிஸ் பிடிச்சிட்டு வந்துட்டாங்க. மாலையில அவர் திரும்பிவந்த பிறகுதான் எனக்குப் பதட்டம் நிண்டுது. அதைப்பற்றிக் கேட்கத்தான் வந்தேன். வேறொண்டுமல்ல மஞ்சுளா, நீங்க பயப்படாதீங்க.''

மஞ்சுளா, முந்தியநாள் முருகேசனைப் பொலிஸ் 'அரஸ்ட்' செய்ததைக் கேள்விப்பட்டதிலிருந்து, பிணையில் எடுத்ததுவரை விபரமாகச் சொன்னாள். நேரிலே கண்ட காட்சி எதுவுமே கிடையாததால் பொலிஸ் வழக்குத்தொடர முடியாமல் தயங்குவதையும் குறிப்பிட்டுப் பேசினாள். அதை யிட்டு வழக்குக்கூடத் தொடரும் நிலையில் பொலிஸ் இல்லையென்பதையும், அதைப்பார்க்கத் தான் சற்றுமுன் தான் போய்வந்ததையும் தெரிவித்தாள். இதையெல்லாம் கேட்கக் கேட்க, வள்ளியின் உள்ளம் ஒருபுறம் கனிந்தது. ஒருபுறம் வியந்தது; ஒருபுறம் நலிந்தது; ஒருபுறம் மகிழ்ந்தது. மஞ்சுளா முருகேசனுக்கென்றுதான் பிறந்தவள் என்பதுபோன்ற ஒரு இனம்புரியாத நம்பிக்கை பிறந்தது. அவள் அவருக்குத் தான் உகந்தவள் என்ற ஒரு மனப்பக்குவம் ஏற்பட்டது.

இனம் புரியாமல் எதற்காகவோ அந்த இரண்டு சோடிக் கண்களிலும் பனித்திருந்த துளிநீரை அந்தப் பட்டுக் கரங்கள் மாறிமாறித் துடைத்துக் கொண்டன ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு அவர்கள் மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு ஏதேதோ பேசினார்கள். வள்ளி விடைபெற்று எழுந்த போது மஞ்சுளா அவளை ஆரத்தழுவி முத்தம் சொரிந்து விடைதந்தாள். அது வள்ளிக்கு இதமாய் இனிமையாய் ஒரு கிளுகிளுப்பையூட்டியது.

வள்ளி அன்று ஒன்றரை மணி பஸ்ஸுக்கு வீடு திரும்ப முடிந்தது.

இதேபோன்று பலதடவைகள் மஞ்சுளா வீட்டுக்கு வள்ளி போய் வந்தாள். அப்படிப் போய்வருவது சர்வ சாதரணமாய் விட்டது.

இதென்ன புதுமை இது! வேறுபட்டு ஒருக்காலும் சாதிக்க முடியாத இரு துருவங்கள் ஒன்றுபடுகின்றன.

ஒருத்தனையே விரும்பும் இருபெண்ணுள்ளங்கள் ஒன்றாய் இணைந்து குதுகலிக்கின்றன! விந்தை. இந்த விந்தையை அந்த இரு பெண்களுமே தங்களுக்குள் எண்ணி யெண்ணி வியந்தார்கள்.

நாட்களும் சிறகடித்துத்தான் பறந்தன. வள்ளி எதை மஞ்சுளாவிடம் சொல்லவேண்டுமென்று திடம் செய்து கொண்டு போனாளோ, அந்த ஒவ்வொரு தடவையும் அதைச் சொல்லாமலே திரும்பினாள். அது தன்னால் சொல்ல முடியாததென்பதையும் உணர்ந்தாள். வெறுமனே சொல் லாமல் அதைச் செய்கையிலே காட்டுவதென்ற முடிவுக்கும் வந்தாள்.

இதற்கிடையிலே வள்ளியின் அப்பா தனது விருப் பத்தை நாளுக்கு நாள் தெரிவிக்காமல் தெரிவித்தார். சொல்லாமற் சொன்னார். முருகேசனையும் வடிவேலுவையும் எடைபோட்டார்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை இரவு. போட்ட சோற்று இலையிலே அப்பா கைவைக்கவில்லை.

"என்ன இது? சோத்தைக் காக்க வச்சிக்கொண்டு; தின்னுங்கப்பா" என்றாள் அவள்.

"இண்டைக்கு ஏதாச்சும் ஒண்டு நான் தெரியனும்" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னத்துக்கு? கலியாணத்துக்குத்தானே!" கேட்டாள் வள்ளி தான் தயார் செய்து கொண்டு நேரத்தை எதிர்பார்த்திருந்த தருணம் வந்து விட்டது. அதைச் சொல்ல வேண்டியது தான். அதைச் சொல்லாமல, அதனால் வரும் விளைவை அவள் அனுபவிக்காமல், அவள் இருக்கும் வரை மஞ்சுளா - முருகேசன் ஒன்றுபடப் போவதில்லை. அதனால் அவள் அதைச் சொன்னாள் தவிர்க்க முடியாமல் சொன்னாள்.

"அப்பா; எனக்குச் சம்மதம்"

அப்பாவின் கண்கள் அகல விரிந்தன கண்களோடு வாயும் வியப்பால் மலர்ந்தது.

"ஆ. வள்ளி; வடிவேலக் கட்டிக்க நீ சம்மதந் தானா?"...

"ஓம் சம்மதந்தான்..." கண்கள் குளமானதை அப்பா காணவில்லை. அவள் எதிரில் அவள் முகமில்லை. அந்த வதனம் அவள் கைகளிலேயே புதைந்தது.

மூடிய இமைகளுக்குள்ளே, முகம் புதைத்த கரங்களுக்கிடையே பரந்து, வியாபித்து, நிறைந்து தோன்றியது முருகேசனின் முகம்! ஏமாற்றத்தால் உடைந்து, நலிந்து, வதங்கி, கசங்கி ஏங்கிவடிந்த அந்த முகம், எங்கெங்குமே நெருங்கி அவளைச்சுட்டது. கிர் கிர் என்று சுழன்ற அவள் மூளைவட்டத்திலே மின்னி மின்னி ஒலி அலைகள் வெடிப்பெடுத்தன. அந்த வெடிப்புக்களில் முருகேசனின் சோகக் குரல் - கண்ணீர்க் கலவையில் ததும்பிய நலிவுக்குரல், அவள் இதயத்தைக் குத்திக்குத்திப் பிடுங்கியது.

உன்னுசை கெண்டுமச்சி
உலகமெலாம் தூராளேன்
என்னுசை உன்மனதில்
எள்ளளவும் இல்லையேகா!
தாலிக் கொடிக்கும்
சரடு விளையலுக்கும்
பொன்னுல தாலிக்கும்
போகமனம் கொண்டயேகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவரிகள் முருகேசனின் வேதனைக் குரலாக, அதலபாதாளத்தின் விளிம்பிலே ஒலிப்பது போல அவளை நடுநடுங்க வைத்தன. திரும்பும் திசையெல்லாம் இதே குரல் - முருகேசனின் குரல். அவள் காதுகளை மூடினாள். கண்களின் விழிச்சவ்வுகள் கிழிந்துவிடுமளவுக்கு அகல அகல விரித்தாள். ஆனால் ஒலி இன்னும் இன்னும் உள்ளே இதயத்தில் எழும்பி மூளையின் நரம்பு இழைகள் ஒவ்வொன்றிலும் முட்டிமோதி விண் விண் என்று அதிர்ந்தது.

'தாலிக் கொடியே என்ட
        தாய்மாமன் ஈண்ட கண்டே
மாமிக் கொருமகளே - உன்ட,
        வாழ்வுகலி யாணமெப்ப?

இந்த ஏழனக் குரல், வள்ளியை நையாண்டி செய்தது. அவளால் தாங்க முடியவில்லை. தவித்தாள், நெஞ்சம் பதறத் தவித்தாள்.

எத்தனையோ நாளாக, எண்ணி எண்ணிக் கண்ட ஒரேவழி; திட்டவட்டமாக, மனப்பூர்வமாக, உறுதி பூண்ட முடிவு, அதை இன்று துணிந்து, வெளியிட்ட பிறகு ஏன் இந்தத் தவிப்பு? வேண்டியதில்லைதான். ஆனால் மனச்சாட்சி, முருகேசனை - அவள் ஆசை அத்தானை ஏமாற்றி, வஞ்சித்து விட்டதாகவே, குத்திக் குத்திக் காட்டியது. அந்த மனச்சாட்சியின் பரிதவிப்போடு, உள்ளே ஓட்டமாக ஓடி, படுக்கையிலே விழுந்து குமுறிக் குமறி அழுதாள் வள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 15. காக்கிச் சட்டைகள்

'வேப்பையடி வீட்டாளே
வெள்ளை கொக்கு நிறத்தாளே
தங்கு பொழுதாளே! - இப்ப,
சங்கடமாம் மெய்தானே?'

அந்தத் திருமண அழைப்பையும், அதனோடு இணைக் கப்பட்டிருந்த கடிதத்தையும் வாசித்து நிமிர்ந்த மஞ்சுளா, ஒரு வேதனை கலந்த சிரிப்பை உதிர்த்தினாள். அந்தப் பேதை வள்ளியை நினைத்து, அவள் மீண்டும் தனக்குள்ளே சிரித் தாள்.

'என்ன பைத்தியக்காரி இவள்?' இப்படி வள்ளியைப் பற்றிப் பரிதாபப் பட்டுக் கொண்ட போது தான் அவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யறியாமலே அந்தக் கவியொன்றை அவள் மனம் முணு முணுத்துக் கொண்டது.

'ஓம் சங்கடம்தான். யாருக்கு? வள்ளிக்கா? - இல்லை எனக்கா?' அவள் தன்னிடமே கேட்டுக் கொண்டாள். வள்ளியைவிட இப்போது தன் நிலைமைதான் சங்கடமாயிருப் பதை மஞ்சுளா உணர்ந்தாள். அப்படி அவளைக் கட்டாயப் படுத்தி உணரவைத்த அந்தக் கடிதத்தை மீண்டும் விரித்து வாசித்தாள்.

...'அன்புத் தங்கை மஞ்சுளாவுக்கு,

இந்தத் திருமண அழைப்போ, எனது கடிதமோ உங் களை அதிர்ச்சிக்குள்ளாக்கக் கூடாதென்பது எனது பணி வான பிரார்த்தனை.

தங்கையே;

நான் மனப்பூர்வமாக இந்தத் திருமணத்துக்குச் சம் மதம் தெரிவித்தேன். அதன் பின்தான் அப்பா திருமண ஏற்பாட்டை மேற்கொண்டார். அத்தான் முருகுவுக்கு நேர் எதிரான ஒருவரையே நான் மணக்கச் சம்மதமளித்ததை யிட்டு நீங்கள் வியக்கக் கூடும்.

நல்லவர்கள் நல்லபடியாய் வாழத்தெரிந்தவர்கள் அவர்களுக்கு வழிகாட்ட யாரும் வேண்டியதில்லை. ஆனால் கெட்டவர்களை நல்லவர்களாக வாழவைப்பதிலேதான் கட மையும் அவசியமும் வேண்டியிருக்கிறது. அதனால் வரும் பெறுபேறுதான் மேலானது. பொறுப்பு வாய்ந்த அந்த நல்ல பணியிலே, இன்னலையும் எதிர்நோக்கித்தான் நான் இறங் கப் போகிறேன்.

மஞ்சுளா; நான் கன்னியாக இருக்கும்வரை முருகு அத்தானும் அப்படியே அசையாது இருந்துவிடுவார். அது எனக்குத் திட்டமாகத் தெரிந்தது. பிஞ்சிலே என்மேல் அவ ருக்கு ஏற்பட்ட அன்பு, சற்றுப் பிடிப்பு விட்டிருக்கும் இந்த வேளையிலேதான், தருணம் பார்த்து அவர் உள்ளத்தை விட்டு நழுவிவிட நான் மேற்கொண்ட முயற்சி இது. அதற்கு இந்த வழியைவிட வேறு மார்க்கமே கிடையாது. அதனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேதான் இதற்கு நான் துணிந்தேன். இப்போது அவருக்கு எதிரியான ஒருவரை நான் மணந்து கொள்வதால், என் மேல் அத்தானுக்கு திண்ணமாக ஒரு வெறுப்பு ஏற்பட்டே தீரும். இந்த வஞ்சகிக்கு எதிராகத் தானும் வாழ்ந்து காட்டத்தான் வேண்டுமென்ற வைராக்கியம் அவருக்கு ஏற்பட்டுவிட்டால், - அதனுல் ஏற்படும் மங்கள நிகழ்ச்சி என்னைக் குளிர்விக்கும். அதுதான் நான் எதிர்பார்ப்பது. என்மேல் ஏற்பட்ட வெறுப்பினுல், ஏற்படும் அந்த உணர்ச்சி செயல் பட்டால் அதுவே போதும் எனது, அந்த அபிலாசை நிறைவேறத்தான் நான் மணஞ்செய்யப் போகிறேன்.

மஞ்சுளா, நான் சுயநலக்காரி, அந்தச்சுயநலத்துக்கு இப்படி ஒரு மறைப்பு விரித்துத் தூபம் போடுகிறேன் என்று எண்ணுகிறீர்களா? அதுவும் நல்லதே.

உண்மையிலே நான் சுயநலக்காரிதான் என்னை உயிர்க்குயிராக நினைப்பவருக்கு – நான் உயிரினும் மேலாய் நேசித்தவருக்கு ஒரு தூளியும் என்னைத் தியாகம் செய்ய முடியவில்லை. எவளோ ஒருத்தி அதைச் செய்தாள். எமன் வாய்ப்பட்ட அவர் உயிரையே மீட்டாள். மீட்ட அவளுக்கு அவர் உரியவரன்றி, என் உடமையாக்கிக்கொள்ள நான் கனவிலும் நினைக்கலாமா? நினைக்கமுயல்வதே மாபாதகமல்லவா?

மஞ்சுளா, உங்கள் நெஞ்சம் எனக்குத் தெரியும். நானும் பெண்தானே, என்போன்ற உணர்ச்சியும் ஆசையும் துடிப்பும் உடையவள்தானே நீங்களும் அது என் உள்ளத்தால் உணரப்படாமல் இருக்கமுடியுமா? ஆரப்பத்திலேயே - அவர் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்திருந்த அன்றே, அதை நான் அறிந்தேன். ஆனுலும் ஐயத்துக்கு இடமேற்படாமலிருக்க, திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள, உங்களை நெருங்கி நெருங்கிப் பழகினேன். நீங்கள் உங்கள் உயிரையே அவருக்குத் தரவும் துணிந்தர்கள். அத்தனை திண்மையும் ஆழமும், புனிதமும் வாய்ந்தது உங்கள் அன்பு உங்கள் தெய்வத்தன்மையான, இந்த அன்புக்கு எனது நேசம் வெறும் துரும்பே ஆகவே அவருக்கு உகந்தவள் - பொருத்தமானவள் நீங்கள். உள்ளத்தால் - உடலால் - தகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையால் - உரிமையால் - தியாகத்தால், ஏன் இதயத்தால் அவருக்கு உகந்தவள், உரியவள் நீங்கள். நீங்கள் ஒன்று படும் புனித நாளுக்கு, எனது திருமணம் அடி எடுத்து வைக்கும் ஒரு நல்ல சகுனம். ஆகவே, எனது அன்புக்குரிய தங்கையே; என் உயிரிலும் மேலான அத்தான், உங்கள் உயிரிலும் மேலான அத்தான். இனி எப்போதும் உங்கள் உடமை. எங்காவது அவர் இன்பமாக வாழ்வதே எனது பாக்கியம். எப்படியாவது அவர் நலமாக, - நிறைவாக, மகிழ்வாக வாழவேண்டும். என் தங்கையின் வாழ்வும் மலர வேண்டும். அந்த மங்கள நாளும் புலரவேண்டும். அன்று தான் என் உள்ளமும் நிறைவுகொள்ளும்.

உங்கள் அன்பு அக்கா,
வள்ளி

குறிப்பு:

அண்ணு முத்துவுக்கு இந்த விஷயம் தெரிய வேண்டாம். தெரிந்தால் இது நடக்கவிடவே மாட்டார். பல்கலைக் கழகத்தையும் உதறிவிட்டு வந்தேவிடுவார். பொன்னியை நான் கெஞ்சிக் கேட்டிருக்கிறேன். அவளும் எழுத மாட்டாள். அதனுல்தான் திருமணமுகூர்த்த நாளும் அவரின் பரீட்சை நாளில் வைக்கப்பட்டது. நீங்களும் தெரிவிக்க வேண்டாம்.

— வள்ளி.

இந்தத் தடவை வாசித்தபின்தான் மஞ்சுளாவுக்கு நெஞ்சத்தில் திகீரென்றது. அவள் ஏற்கனவே வெகு சுலபமாக நினைத்துவிட்டதுபோல சாதாரணமாகத் தடுக்கப் படக்கூடியதல்ல விஷயம். இதைத் தடுப்பதானுல் முத்து ஒருத்தனுலேதான் முடியும். அவரின் பரீட்சை நாளில் முகூர்த்தமா? திடுக்கிட்டாள் அவள். என்ன செய்வது? ஏற்கனவே ஏற்பட்ட ஏழனமும், சிரிப்பும் எங்கோ பறந்தன. எளிதாக அவள் நினைத்துவிட்டது எத்தனை கடினமானதாக, இப்போது தோன்றுகிறது. இமயமலை போன்றல்லவா எதிரிலே வானம் தட்ட நிமிர்ந்து நிற்கிறது.

நாட்களை எண்ணினுள். இன்னும் ஆறுநாட்களே முகூர்த்தத்துக்கு இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. வள்ளிவேறு முத்துவுக்கு அறிவிக்கவேண்டாமென்று கேட்டிருக்கிறாள். நல்லாயிருக்கிறது கேள்வி வள்ளியிடத்தில் ஏன் இந்தமாற்றம் ஏற்பட்டது? ஒரு சின்ன விஷயமாக எண்ணிச் சிரித்த விடயம் எண்ண எண்ண விசுபரூபமெடுப்பதாக மஞ்சுளாவுக்குப்பட்டது.

வள்ளியின் மாற்றத்துக்குக் காரணத்தை மஞ்சுளா ஆராய்ந்தபோது, அந்தக் காரணம் அவளேதான் என்பது தெள்ளத் தெளிவாகப் புலனாகியது. எவளோ ஒருத்தி தியாகம் செய்தாளாம். அந்த எவளோ ஒருத்திக்காக அறியாப் பருவத்திலிருந்தே அரும்பி வளர்ந்து கிளைகளும் இலைகளுமாகி கன்னி கட்டி நாளை இதழ்பரப்பி மலரக்கிடக்கும் காதல் கற்பகதருவை, ஒரே கணத்தில் வெட்டிச் சாய்ப்பதானால் எத்தனை கல்நெஞ்சம் வேண்டும்! எத்தனை வைராக்கியமும் திண்மையும் வேண்டும். இது எல்லாராலும் செய்யக்கூடியதா? எல்லாராலும் செய்ய முடியாதது யாரோ ஒருவரால் செய்யப்படும்போது அதுதானே அற்புதம் என்று பெயர் பெறுகிறது. அந்த அற்புதம் வள்ளி செய்யத்துணிந்தது. அப்போது அவளை விந்தைப் பிறவி என்பதா? அபூர்வப் பிறவி என்பதா?

'ஆனாலும் இந்தத் தியாகம் என்றால் ஆகாததுதான். எத்தனை பெரிய - பரந்த, உணர்ச்சி நிறைந்த, கருணை வழிந்த நல்ல இதயம் இதற்கு வேண்டும்? அதனை அவள் பெற்றிருந்தபடியால் தானே இப்படிச் செய்யத் துணிவு பிறந்தது.

'அவள் கன்னியாயிருக்கும் வரை முருகேசன் யாரையும் ஏறெடுத்துப் பார்க்கப் போவதில்லை. அதுமாத்திரம் எவ்வளவு தூரம் உண்மையாகும். அவள் கல்யாணம் செய்து கொண்ட பிறகும் அவர் யாரையும் ஏறெடுத்துப் பாராமல் இருந்து விட்டால்? இந்தப் பேதை அந்தக் கோணத்தில் மூளையைச் செலுத்தவில்லை. பாவம் - இல்லை அதற்காக அவள் என்னை நம்பியிருக்கிறாள். எல்லாப் பொறுப்பும் என்னுடையதுதானும். அவர் என் உடைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாம். அப்படியானல் அவரை வளைத்து என்னை மணக்க வைப்பது என்பொறுப்பு? இப்படித்தான் வள்ளி எண்ணிக் கொண்டிருக்கிறாள்.

உண்மைதான், ஏன் என் உள்ளத்தை மறைத்து வைக்க வேண்டும்? வேண்டாம் வேண்டாம் என்று அந்த எண்ணத்தை ஒதுக்க முயன்றாலும் ஏதோ ஒரு மூலையில் ஒளித்துக்கிடந்த அந்த எண்ணத்தைத் துடைக்க முடிய வேயில்லை. நான் அவருக்குச் செய்த அத்தனை உதவிகளும் எந்த நோக்கத்தோடு செய்யப்பட்டன? காரணமில்லாமல் யாரோ ஒருத்தருக்கு நான் உதவி செய்தது ஏன்? அது நர்ஸ் என்ற எனது கடமையா? எந்த நோயாளிக்கும் செய்ய முன்வாரத - இரத்ததானம் அவருக்கும் மாத்திரம் செய்யமுடிந்தது எதனல்? இப்போது மறைக்க முடியவில்லை அவர் அறிவற்றுக் கட்டிலில் கிடத்தப்பட்ட போதே, ஏதோ ஒரு ஆகர்ஸண சக்தியோடு அந்தமுகத்தை என் கண்கள் அண்மின. அந்தக் களைததும்பிய முகத்தின் கவர்ச்சிச்சக்தி அவர்பால் என்னை ஈர்த்தது.

'அன்றே வள்ளியையும் அறிந்தவள் நான். அவர் வள்ளிக்காகவே அந்த விபத்தில் அகப்பட்டவர் என்பதுவும்; அவரும் அவளும் காதலர்கள் என்பதுவும் நான் மனமாரத் தெரிந்து கொண்டவை. அப்படியிருந்தும், அவரை நான் நெருங்கி நெருங்கி அக்கறை காட்டியது எதற்காக?

'ஏதோ இப்போது திடுதிப்பென எழுந்துவிட்ட உணர்ச்சியால், - பரிவால், - இரக்கத்தால் இரத்தம்தான் கொடுக்க முன்வந்தேனே அத்தோடு நின்றிருக்கக் கூடாதா? அவர் ஊருக்குக்கூட ஏன்போய் உதவி செய்தேன்? அதனல் தானே ஊராரின் அபவாதத்துக்கு நானும் ஆளாகி அவரையும் இலக்காக்க நேர்ந்தது.

'எதற்காகவோ அவருக்கு நான் உதவி செய்தது உண்மை. ஆனல் அதற்காக எந்தக் கைமாறும் வேண்டிய தில்லை என்பதையும் வரித்துக் கொண்டவள். ஆரம் பத்திலே ஒருத்தர் இன்னொருத்தியை நேசிக்கிறார் என்ற உண்மை தெரிந்திருந்தும் அவரை நேசிக்க வேறொருத்தி முயல முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆனால் படிப்படியாக என் சிந்தையைச் சுயநலம் சுரண்டத் தொடங்கியதை இப்போது உணர முடிகிறது. அவரை எனக்கு முழுமையும் உரியவராக்கிக் கொள்ள, படிப் படியாக என் உள்ளம் பக்குவம் பெற்று வந்தது. அதை நான் மறுக்கமுடியாது. வள்ளிக்கு மாத்திரமா? - அவளைவிட அவரில் உரிமை கொண்டாட பாத்தியதையுடையவள் நான் என்ற எண்ணமும், திண்ணமும் என்னுள்ளே தலை யெடுத்தன. நான் மாணவியாக இருந்த போதே வரித்துக் கொண்ட உரிமையுணர்வு அதை நிலைநாட்டவும் அவா வியது. எனக்குத் தெரியாமல் என்னையாட்கொண்டுவிட்ட இந்த உணர்ச்சிகளை, என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவருக்குக் காதலியொருத்தி இருக்கிறாள் என்பதையும் அசட்டை செய்யும் அசம்பாவிதத் துணிபு எங்கிருந்து பிறந்தது?

'இத்தனையையும் அவதானித்து வந்திருக்கிறாள்வள்ளி. நான் அவருக்காகச் செய்த தியாகங்களுக்காக, தன் காதலையே தியாகம் செய்ய முன்வந்து விட்டாள்! தன் காதலரையே எனக்குத்தரத் துணிந்து விட்டாள்!! இந்த இடத்தில் வள்ளி எல்லோரையும் மிஞ்சி உயர்ந்து விட் டாள். தெய்வத்தைவிட உயர்ந்து விட்டாள். இதை நான் உணர்ந்து விட்டபோது என் சுயநலத்துக்கு இடமுண்டா?... இல்லை, இல்லை'

அன்று ஏதோ ஒரு படம் பார்த்தபோது 'இப்படி யும் நடக்குமா? சுத்த முரண்பாடு. வாழ்க்கையில் சாத்திய மாகாத கற்பனைகளை ஏன்தான் படமாக்குகிறார்களோ?' என்று அலுத்துக்கொண்ட மஞ்சுளா, இன்று அதே போன்ற ஒரு சூழ் நிலையில், அதே போன்ற ஒரு அனுபவம் ஏற்பட விருப்பதை நினைத்து, இதுவும் வாழ்க்கைதான் என்று உணரத் தலைப்பட்டாள்.

சுமதி என்ற அந்தக் கதாநாயகி, தன் காதலை தனது அக்காவுக்காகத் தியாகம் செய்தாள். தன் கண்ணுள் மணி யாக, இதயத்தின் தெய்வமாகப் பூசித்த அத்தானை அக்கா வுக்காக - வெறும் சாதாரண அக்காவுக்காக விட்டுக் கொடுத் தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் படக்கதைபோல, தன் வாழ்விலும் ஒரு நிகழ்ச்சி ஏற்படப்போவது வியப்புத்தான்! சர்வ சாதாரண மாக மனித மனங்களில் நிகழமுடியாதது இது. ஆனால் நிக ழத்தான் போகிறது.

இத்தனை துல்லியமான - பால்போன்ற மனம்படைத்த வள்ளியின் வாழ்வைத் தன் உயிரைக் கொடுத்தாயினும், செழிப்படையச் செய்வதே தன் வாழ்வின் இலட்சியமாகப் பட்டது மஞ்சுளாவுக்கு. 'வரப்போகும் மனோரம்மியமான வாழ்வை உதறித்தள்ளப் போகிறாயே பைத்தியக்காரி' என்று ஏதோ ஒரு சலனம் அவள் மனத்தின் ஒரு கோடியிலே தலை நீட்டியது. மனச்சாட்சியின் பலத்த சாட்டையால் ஓங்கிய டித்து அதை மழுங்கவைத்த அதே நேரத்திலே, அவள் எழுந்தாள்; நடந்தாள். தபால் நிலையத்துக்கு நேரே சென்று முத்துவுக்கு ஒரு தந்தி கொடுத்தாள்.

''பரீட்சை எப்போது முடிவடைகிறது?'' என்ற வார்த்தைகள் மாத்திரம், தந்தியின் வாக்கியமாயிருந்தன. 'றிப்பிளை சார்ச்' கட்டி அடித்த அந்தத் தந்திக்கு மாலை 5.30க்குத்தான் பதில் கிடைத்தது.

முத்துவின் பரீட்சை முடிவுறும் அதே தினத்திலே தான், வள்ளியின் திருமணமும் நிகழவிருப்பதைத் தெரிந்து கொண்டாள் மஞ்சுளா.

இரண்டு நாட்களின்பின் முத்துவுக்கு மஞ்சுளாவிட மிருந்து, இன்னுமொரு தந்தி பறந்தது.

''மாலை ரெயிலில் புறப்படுகிறேன்'' என்ற வாக்கியம் மாத்திரம் அதிலேயிருந்தது.

அன்று மாலை, 8.40க்கு மட்டக்களப்பிலிருந்து புறப் பட்ட ரெயில் வண்டியின் இரண்டாம் வகுப்புப் பெட்டி யில் மஞ்சுளா சிந்தனைச் சிலையாக அமர்ந்திருந்தாள். 'ஊ ...' என்ற குரலோடு இருளைக் கிழித்து மின்வேகத்தில் பறந் தது அந்த வண்டி.

இதே நேரத்திலே 'மாஸ்ட்டர்ப் பொடியன் வடி வேலுவின் வீடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. நான்கு நாட்களுக்கு முன்னரேயே வாசலில் பந்தல் உரு வாகிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணத்துக்குப் பந்தல் போடுவதென்றால் சாதாரண விஷயமா? வீமண்ணனின் சித்தாந்தப்படி 'குடியாதவீடு விடியாதே' வீடு விடியா விட்டால் கல்யாணப் பந்தல் விடியுமா? அதற்காகத்தான் வெள்ளைப் போத்தல்கள் ஒவ்வொன்றாகக் காலியாகி எத்தனையோ கிளாஸ்களில் நுரையெழுப்பி வயிறுகளை நிரப்பித் துள்ளிக் குதித்தன.

''தம்பி வடிவேல்!'' வீமண்ணனின் போதைக்குரல் மயக்கத்தில் நலிந்தது.

''தம்பி வடிவேல்'' முறிவு பருவமாப் போச்சித் தம்பி. இன்னம் ஒரு அடி அடிச்சாத்தான் பந்தல்காலக் கல்லிப் போடுலாம். உம், தம்பி.''

''வீமண்ண; போதுமண்ண. குடிச்சிப்போட்டுப் பாடுகிடையில கிடந்தா, இந்த வேலையெல்லாம் ஆரண்ண செய்யிற? வேலையை முடிச்சிப் போட்டுக் குடிக்கிலாமே.''

''தம்பி, இந்த வீமன், சாராயங்குடிச்சி விழுந்து கிடந்தது, எந்த நட்டாமுட்டி கண்டாளும்? ஒரு காலா காலத்தில, ஆராவது வாய் திறந்து சொல்லட்டும். வீமன் துணிஞ்சாத் துணிஞ்சதுதான். வீமன் கால் வச்ச எந்தக் காரியம் தம்பி எடையில - பாதியில நிண்டது? தம்பி, பூசாரி சண்முகத்த ஒரு மாதிரி நினைச்சயே; இப்பசொல்லு எப்பிடிவேல? அந்த வேல செய்யாட்டி பொடிச்சி வள்ளி சம்மதிக்கிறதா? எந்த உலகத்தில நடக்கிற காரியம் இது?''

''அண்ண, அதெல்லாம் சரிதானண்ண, பந்தல் வேலைய முடிச்சுப்போட்டு...''

''இல்லைத்தம்பி அதுதான் நடவாது. நீயிப்ப தரப் போறயா இல்லையா? தரப் போக்கில்லண்டு சொல்லு. இந்தா நானே இப்பபோய் நாலு வெள்ளை கொண்டாறன்...''

''இதென்ன தொல்லடாப்பா இது; சீ...''

''இல்லத்தம்பி; ஒரு அடி அடிச்சாத்தான். நிண்டு பேசும், இந்தப் பந்தல் ஒரு நிமிஷத்துல சரி...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு வழியில்லாமல், வெள்ளைப் போத்தலையும் கிளாசையும் வேண்டாவெறுப்போடு தூக்கி நீட்டினான் வடிவேல். வீமண்ணனும் பார்ட்டியும் சாராயத்தில் மூழ்கித் திளைத்தது. மணப் பந்தலும் அந்தப் போதையிலே பாதிக்குப்பாதி இடைக்கிடை வாந்தியெடுத்துக் கொண்டே உருப்பெற்றுக் கொண்டிருந்தது. கூத்தும்பாட்டும் அந்தக் கிராமத்தையே அதிரவைத்துக் கொண்டிருந்தன. அந்தக் கும்மாளக் குரல்கள் முருகேசனின் வீடுவரை எட்டத்தான் செய்தன. அந்தக் கருக்கிருட்டு வேளையிலே, வாசலிலே, சரிந்து நின்றிருந்த முருங்கையில் இடது காலைத் தூக்கி வைத்து, முளங்காலிலே இடது முளங்கையை ஊன்றி குனிந்து நின்றிருந்தான் முருகேசன். அப்படியும் அவனால் நெடுநேரம் நின்றிருக்க முடியவில்லை. பெருமூச்சோடு நிமிர்ந்தான். கைகளை முதுகுப்புறமாகக் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

சோற்றை ஆறவைத்துக் கொண்டு, அரைமணி நேரமாகப் பொன்னி காத்திருந்ததோ - அழைத்ததோ அவனுக்குத் - தெரியவில்லை - கேட்கவில்லை.

''நடுச்சாமமாச்சி எப்பசோறு தின்னுற?'' என்று அவள் அலுப்போடு - கடுமையாக எதிரிலே வந்து கேட்ட போதுதான் சுயநினைவுக்கு வந்தான் முருகேசன்.

''நீ திண்டுத்துப் படுபுள்ள, எனக்குப் பசிக்கல்ல'' என்றான் வேண்டா வெறுப்பாக.

பொன்னியா விடுகிறவள்?

'சாப்பிடுகிறேன்' என்ற சாட்டுக்கு சோற்றுக் கோப்பையின் முன்னே அமர்ந்து எழும்பினான் முருகேசன். கையைக் கழுவிக்கொண்டு திண்ணையிலே வந்தமர்ந்தான்.

'என்ன உலகமிது? பெண்மையென்பதே பொய்மை தானா?' வள்ளி இந்த நிலையிலுள்ளவள் என்பதை எந்தக் காலத்திலுமே அவன் நினைத்துப் பார்த்தது கிடையாது. 'வஞ்சகத்துக்கு ஒரு எல்லையுண்டானால், அது வள்ளியின் உள்ளம்தான். நன்றி கெட்டவள்; நயவஞ்சகி.' ஆத்திரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றமும், எந்தெந்தக் கீழ்த்தரமான வார்த்தைகளைத் தேடிக் காணமுடியுமோ, அத்தனை வார்த்தைகளையும் அவன் இதயம் பொரிந்து தள்ளியது.

'அத்தனையும் நடிப்பு; நாடகக்காரி, எப்படியெல்லாம் என்னை மயக்கினாள். இவளைப் பெற்றுவிட்டதால் இந்தப் பெண்ணுலகமே பூண்டோடு அழிந்து போகட்டும்' சாபம் கூடப் போட்டான். அப்போது அதன் எதிரொலிப்பும் இதயத்தின் எங்கோ ஒரு மூலையிலே தலைகாட்டியது.

'அத்தனைக்கும் காரணம் நீதானடா முருகேசா!... ஆஸ்பத்திரியிலிருந்து வந்தபின் ஒரு நாளாவது அவளைத் தேடிப்போனாயா? அந்த நர்ஸ் மஞ்சுளாவின் வீடுதேடி அடிக்கடி போனாயே. காலடியிலிருக்கும் வள்ளியின் வீடு கண்ணுக்குத் தெரியவில்லை?'

'மருந்துகட்டப் போனேன்...'

'தலைக்காயத்துக்குத் தானே? உன் இதயத்தில் ஏற்பட்ட ரணத்துக்கு மருந்து வள்ளிதான் எனத் தெரிந்திருந்தும் அவளிடம் ஏன் நீ போகவில்லை? என்ன விழிக்கிறாய்? மஞ்சுளாவையும் உன்னையும் சேர்த்து ஊர் வம்பு விதைத்தபோது, மௌனியாக வாளாவிருந்தாயே, உண்மையை வள்ளியிடம் விளக்கியிருக்கலாமே. செய்தாயா? தன்மானம் உனக்குப் பெரிதாய்ப் போய்விட்டது. போயிருந்தால், உண்மையை வள்ளி அறிந்திருப்பாளே. இப்போது அவளைக் குறை கூறுகிறாய். தவறு உன்னுடையதுதான். பெண்மை மென்மையானது. வாழைக்குருத்திலே கீறு விழுந்து விட்டால் அது நீக்கமுடியாதது. ஓடிவரும் புதுவெள்ளத்துக்கு அணைபோட்டால்; அது கட்டுமீறி இன்னொரு பாதையைத் தேடித்தான் ஓடும். இப்போது சொல், தெளிவான புதுப் புனல் களங்கமுடையதா? பட்டுப்போன்ற இளங்குருத்திலே முள்ளைப்போட்டு இழுத்துவிட்டது நீதானே. நல்லவேளை அது கிழிந்துவிடவில்லை. கீறலோடாவது வாழத் துடிக்கிறது'.

''வாழட்டும்...'' முருகேசனின் இதழ்கள் கண்ணீரிற் பளபளத்து அசைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது கல்லோயாச் சந்தியிலே நின்றிருந்தது ரயில்வண்டி. திருமலைப் பெட்டியைக் கழற்றி விட்டு, கொழும்பு நோக்கிப் புறப்பட்டபோது தட்புட்டென்று அவசர அவசரமாக ஓடிவந்து நாலைந்து காக்கிச் சட்டைகள் ஏறிக்கொண்டன.

மஞ்சுளா இருந்த அந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியிலே ஒரு தமிழ்ப்பெண் கூட இல்லை. நாலைந்து சிங்களப் பெண்கள் பொலநறுவையிலே ஏறியிருந்தார்கள். அங்கும் இங்கும் துளாவிய அந்த இராணுவ வீரர்களின் கண்கள், மஞ்சுளா இருந்த பக்கமாகத் திரும்பின. பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தஅந்த இருக்கையிலேதான் இடம் காலியாயிருந்தது. சிங்களப் பெண்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிராக மூன்று வீரர்கள் அமர்ந்து கொண்டார்கள். மற்ற இருவரும் மஞ்சுளா இருந்ததிற்கு எதிராக இருந்த இருக்கையிலே அமர்ந்தார்கள்.

இந்தக் காக்கிச் சட்டைகளுக்கு மாத்திரம் சட்டம் விதிவிலக்கோ என்னவோ யார் கண்டார்கள். இல்லாவிட்டால் பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் இவர்கள் துணிச்சலாக அமர்வார்களா.

வண்டி படிப்படியாக வேகத்தை அதிகரித்துக் கொண்டிருந்தது. மஞ்சுளாவின் இதயமும் சடுதியாக வேகத்தைக் கூட்டிக்கொண்டு 'திக்திக்' என்று அடிக்கத் தொடங்கியது. எத்தனை நேரம் தான் குனிந்தகுனியாக விருப்பது? நிமிர்ந்த, கண்ணுக்கு எதிரே அந்தக் காக்கிச் சட்டை ஆரடர்கள். அதிலே ஒருத்தன் பார்க்கப் பயங்கரமாகவிருந்தான். மற்றவன் சற்று அழகாகக் காணப்பட்டான். அந்தத் தடித்த ஆசாமி ஏறிய நேரத்திலிருந்தே, மஞ்சுளாவையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். கடைக்கண்ணால் அவனின் பார்வையிலே இருக்கும் ஒவ்வொரு கணமும் அவளின் உடலும் நடுங்கியது. தன்னந்தனிமையாகப் புறப்பட்டுவிட்டதன் அபாயத்தை இப்போது தான் மஞ்சுளா உணர்ந்தாள். மற்றவீரன் தடித்த ஆசாமியின் பார்வையைக் கவனித்தாலும், பேசாமலேயிருந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தடியன் ஏறியதிலிருந்தே எதிரிலிருக்கும் பெண்ணை வைத்தகண் வாங்காது வெறித்தனமாகப் பார்ப்பது. அவனுக்கு அருவருப்பாயிருந்ததோ என்னவோ, அவளுக்குச் சற்று ஆறுதல் தருவதுபோல கேட்டான்.

''எங்க போறது?...'' சிங்களத் தமிழ்.

''கண்டிக்கு...'' என்ருள் வேண்டா வெறுப்பாக.

''உங்கள நாம எங்கோ பாத்தது நினைப்பு. ...யேஸ் ...யேஸ், வெற்றிக்கலோ ஹொஸ்பிட்டல்'' ''யேஸ், அயம் ஏ நேர்ஸ்...'' அவள் ஆங்கிலத்தில் சொன்னுள். அவனுக்கு ஆஙகிலம் தெரியும் என்பதிலே சற்று ஆறுதலடைந்தாள் மஞ்சுளா.

''கைண்ட்லி ரெல்மி சிஸ்ரர்...'' அவன் ஆங்கிலத்திலே தொடங்கினுன்.

''சகோதரி, மட்டக்களப்பு விமான நிலையம் கட்டப் படுகிறதே, ஆலையடிச் சோலையிலே, ஒரு தேநீர்க் கடையிருந்ததே; தெரியுமா? அதிலே ஒரு பெண் இருந்தாள். உங்கள் வயதுதானிருக்கும். பெயர் திரேசா அவளைத் தெரியுமா? அந்த வீரனின் குரல் கரகரத்தது. கண்கள் கூடக் கலங்குவது போலிருந்தது.

''எனக்குத் தெரியாது'' என்று அவள் பதிலளித்தாள். அதற்குமேல் அந்தவீரன் பேசவில்லை.

இப்போது கூட அந்தத் தடியன் மஞ்சுளாவைக் குத்திப் பிடுங்குவதுபோல பார்த்துக்கொண்டேயிருந்தான். அந்த வெறிப்பார்வை ஆங்கிலத்தில் பேசிய அந்த வீரனுக்கு அவமானம் தருவதாயிருந்தது. அவனிடம் திரும்பி சிங்களத்தில் ஏதோ சொன்னுன். அதற்கு அவன் சிங்களத்தில் தந்த பதில்?

''அசல் சாமான்டா, நீ சும்மாகிட'' 'இந்த முரடனேடு இனியும் பேசுவதில் பயனில்லை' என்பதுபோல அந்தவீரன் தலைகுனிந்தான். மஞ்சுளாவுக்கு இது தர்மசங்கடமாயிருந்தது. அந்த முரடனின் பார்வை சகிக்க முடியவில்லை. நேரம் போகப்போக அவனின் சேஸ்டைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தன. தப்பித்தவறி அவன் தலை நிமிரும்போது அவன் கண்ணடித்தான்; பல்லைக்காட்டினன். அவள் காலின்பக்க மாக அவனின் கால்கள் நீண்டு நீண்டு வந்தன. எவ்வளவு தூரம் ஒதுங்கிக் கொள்ள முடியுமோ, அவ்வளவு தூரம் தன் கால்களை இருக்கைக்கு கீழே திணித்தாள். ஆனல் அவனின் கால்கள் அவளின் காலைச் சுரண்டின.

சகிக்க முடியாதவளாக, அவள் எழுந்தாள். இந்த நரகக் கிடங்கில் இருப்பதைவிட, கக்கூசுக்குள்ளேயே மூக்கைப் பிடித்துக் கொண்டு நின்று விடலாம் என எண்ணினளோ என்னவோ கக்கூசை நோக்கி நடந்தாள்.

சிங்களச் சிட்டுக்களும் முரட்டுக் காக்கிச் சட்டை களும் சேஸ்டைளில் ஈடுபட்டிருந்தன. மஞ்சுளாவோடு பேசிய வீரன் கூட பெட்டி ஓரமாக நித்திரை மயக்கத்திலே சரிந்திருந்தான்.

மஞ்சுளா கக்கூசை நோக்கிப் போவதைக் கண்ட அந்தத் தடியன் சட்டென்று எழுந்தான். அவள் கக்கூசைத் திறந்து உள்ளே காலெடுத்து வைத்துவிட்டாள். ஒரே தாவில் தாவினன் அந்தத் தடியன். கதவைச் சாத்தப்போன அவளின் கரத்தை இறுகப்பற்றியபடி அவனும் உள்ளே புகுந்தான்.

'வீல்' என்று வெடித்தது மஞ்சுளாவின் பயங்கர அலறல்! கண்மூடிப்போன அந்த வீரன் பதறித் துடித்துக் கொண்டெழுந்து, அதே கக்கூசை நோக்கிப் பாய்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. செங்கமலம்

'ஆருயம் வெள்ளி
அதரால சாயுமட்டும்
பூராய காரமச்சான் - எனக்கொரு
புள்ள தந்தா லாகாதோ?'

வெயர்த்து விருவிருத்து, ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு, அவள் வெலவெலத்துப் போனாள். இன்னும் ஒரே யொருகணம் போயிருந்தால் அந்தத் தடியனின் மிருக வெறிக்கு அவள் பலியாகியேயிருப்பாள்.

எதிர்பாராத விதமாக தன்னைப் பின்னால் யாரோ வெடுக்கென்று இழுத்தெறிந்தபோது அந்தத் தடித்த காக்கிச்சட்டை கதிகலங்கிச் சரிந்தது. சிவ பூசையிலே கரடி புகுந்தாலும் பாதகமில்லை. கடித்து உதறிவிட்டபோது, ஆத்திரம் சும்மா இருக்குமா? பல்லை நறநறவென்று கடித்த படி இழுத்த வீரனை நோக்கிப் பாய்ந்தான் தடியன். இராணுவப் பயிற்சித் தளத்தில் கற்றுத்தந்த மல்யுத்த வகைகள் அங்கு பயன்படவில்லை. முரட்டுத்தனமான காட்டுமிராண்டிப் பாய்ச்சலும் கூச்சலும் கட்டிப்புரண்டன. அந்தக் கொம்பாட்மென்ட்டே, தலைகீழாக மாறிக்கொண்டிருந்தது. ஒருவனின் கடைவாயினால் உதிரம் கொட்டியது. மற்றவனின் மூக்குத் துவாரத்தால் இரத்தம் ஒழுகியது. நரமாமிசம் தின்னும் மிருகத்தனத்தோடு அவர்கள் கட்டிப்புரண்டு கதிகலக்கினார்கள்.

குஸ்தி விளையாட்டுக்கு இடம் விட்டு ஒதுங்கிக்கொள் வதுபோல, எஞ்சிய காக்கிச்சட்டைகள் நான்கு உட்பட எல்லாப் பிரயாணிகளும் ஒரு மூலையிலே நெருங்கியடித்துக் கொண்டு ஒதுங்கி நின்றிருந்தனர். அந்த நெருக்கத்தைப் பயன்படுத்திக்கொண்ட காக்கிச்சட்டைகளும் காடைக்குஞ் சுகளும் பொலநறுவையிலே ஏறிக்கொண்ட மாடப்புறுக்களை நெருக்கி அமுக்கி ஏதேதோ செய்தன. காக்கிச்சட்டை ஒன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருவது முன்வந்து அவர்களை விலக்கிவிட நினைக்கவில்லை. எத்தனை நேரம் குஸ்தி நடக்கிறதோ அத்தனை நேரத்துக்கும் அவர்களுக்கு வேட்டைதான் - புரு வேட்டை!

தன்னைக் காப்பாற்ற வந்த வீரனை மற்றத்தடியன் கீழே தள்ளி, தலையைத் தரையோடு மோதுவதைப் பார்த்து நிற்கமுடியவில்லை மஞ்சுளாவுக்கு. இப்படியே விட்டால், அவன் செத்தான். அவளாகவே பாய்ந்து அபாயச் சங்கிலியை இழுத்தாள். புகையிரதம் பயங்கரமாகக் குலுக்கிக் கொண்டு நின்றது.

புகைவண்டி அதிகாரிகளும் பொலிசாரும் அந்த இடத்தை நெருங்கிய பிறகுதான், விழித்துக்கொண்டவர்களைப்போல அந்தக் காக்கிச் சட்டைகள் சண்டை போட்டவர்களைப் பிரித்தெடுத்தார்கள். அத்தனை காக்கிச்சட்டைகளும் அந்தக் 'கொம்பாட்மென்ட்'டை விட்டிறங்கி அழைத்துச்செல்லப்பட்ட பிறகுதான் வண்டி மீண்டும் நகரத் தொடங்கியது.

பெண்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகள் வெறிச்சோடிக் கிடந்தன. அதிலே போயமர்ந்து சற்று நிம்மதியோடு மூச்சை இழுத்துவிட்டாள் மஞ்சுளா. நல்லவேளை, அவர்களுக்கிடையே சண்டைமூண்ட காரணத்தை யாரும் கவனிக்கவில்லை போலிருந்தது. இல்லையானால் அவளை விசாரித்துத் தொந்தரவு படுத்தியிருப்பார்கள்.

எங்கோ மூலையிலே நின்றிருந்த பொலநறுவைப் புருக்கள் இப்போதுதான் அவள் எதிரிலே வந்தமர்ந்தன. மஞ்சுளாவை அந்தப் புருக்கள் வெறிக்க வெறிக்கப் பார்த்தன. காக்கிச் சட்டைகள் பறந்துபோனதற்குக் காரணம் அவள்தான் என்ற அங்கலாய்ப்போடு அப்படிப் பார்த்தனவோ என்னவோ!

கண்டிப் புகையிரத நிலையத்தில் நர்ஸ் சந்திரிகா, மஞ்சுளாவை எதிர்கொண்டழைத்து வீட்டுக்குக் கூட்டிச் சென்றாள். சந்திரிகா ஒரு தமிழ் - சிங்களக் கலப்புப்பெண் தகப்பன் தமிழன். தாய் சிங்களத்தி. ஒன்றாக நர்ஸ் 'ரெயினிங்' இருந்தவர்கள். மஞ்சுளாவின் மதிப்புக்குரிய தோழிகளில் ஒருத்தி சந்திரிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இரவு துளிகூட நித்திரையில்ல, என்ன மஞ்சு உன் கண்களே சொல்லுது. சந்திரிகா கேட்டாள்.

''தூக்கமா? உங்கட ரெயிலிலா? அதுவும் செக்கன்ட் கிளாஸ் கொம்பாட்மென்டிலா? கேள்விகளை அடுக்கினுள் மஞ்சுளா

''ஏன்?'' என்றது சந்திரிகாவின் கீச்சுக்குரல். மஞ்சுளா நடந்ததை ஆதியோடந்தமாகச் சொன்ஞள்.

''அரசாங்கமே காடையர் அரசாங்கம், காடைத்த னம் நடக்காமலிருக்குமா? ஏதோ உன்ட நல்லகாலம். அந்த ஆறு காக்கிச் சட்டையில ஒருத்தருவது மனிதத்தன்மை யோட இருந்ததைச் சொல்லு''

மனிதத் தன்மையோடு நடந்துகொண்ட அந்த இரா ணுவ வாலிபனுக்கு நன்றிகூடச் சொல்ல வாய்ப்புக் கிடைக் கவில்லை. பெயர் விலாசமாவது தெரிந்தால்...? ஒருவன் அந்த வாலிபனை சுகதபாலாவோ சுகததாஸாவோ என்றழைத்த தைக் கேட்டதுபோல இருக்கிறது. ஆனுல் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவ்வளவுடனேயே அந்தக் கதையும் சிந்தனையும் நின்றுவிட்டன.

அந்தவீரன் வேறுயாருமல்ல, என்றோ ஒரு நாள் தேனீர்க்கடைக்காரியின் மகள் திரேசாவோடு இன்பவெள் ளத்தில் மூழ்கிய அதே சுகததாஸதான். திரேசா என்ன இருந்தாலும் புத்தம்புதிய கன்னி - தமிழ்க்கன்னி. அவளோடு நேர்ந்த ஒரு கணநேரக் கலப்பிலோ என்னவோ, அவனிடம் ஒரு வைராக்கியமான மனிதத்தன்மை குடிகொண்டிருந்தது தான் இழைத்த தவறு எந்தப் பெண்ணுக்காவது எவரால் இழைக்கப்பட்டாலும், உயிரைத் தந்தாவது அதைத் தடுத்தே தீரவேண்டும் என்ற உறுதி அவனையறியாமலே அவனுள் வேலை செய்து கொண்டிருந்தது. அந்த உணர்ச்சிதான் இன்று நர்ஸ் மஞ்சுளாவைக் காத்தது. இதை மஞ்சுளா எங்கே அறியப் போகிருள்?

பிரயாண அலுப்புத்தீரச் சற்றுக் கண்ணயர்ந்தாள் மஞ்சுளா. மாலை, நான்கு மணிக்கு பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு ஒரு 'ரெலிபோன்கோல்' எடுத்தாள். முத்து வேலோடு பேசமுடிந்தது. நான் கண்டியில்தான் நிற்பதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் சினேகிதி ஒருத்தியின் அழைப்பின்பேரில் வந்ததாகவும் தெரிவித்தாள். அன்று தனக்குப் பாடம் இல்லையெனவும் அடுத்தநாளையப் பாடத்துக்காக இலேசாகப் புரட்டிப் பார்ப்பதாகவும் முத்து சொன்னான். பல்கலைக்கழகத்தைப் பார்க்க வர ஆசைதானென்றும் பரீட்சை நாட்களில் தொந்தரவு தரக்கூடாதென்றும் கூறிய மஞ்சுளா' 'பரீட்சையின் கடைசி நாள் எது? எனவும் வினவினாள். அவன் பதில் சொன்னான். 'ஓகோ, அப்போ இடையிலே இரண்டு நாட்கள்தான்' என்றாள் அவள். தந்தி அடித்ததைப்பற்றி முத்து கேட்டபோது, தான் கண்டி வரவிருந்ததைச் சும்மா தெரிவித்ததாக மழுப்பினாள். ''நாளை மறுநாளோடு எனது பாடங்கள் சரி. க்கடைசிநாள் எனக்குப் பாடமில்லை. ஓய்வுதான். அன்றைக்கு வாருங்களேன்'' என்றான் முத்து. 'சரி' என்று அவள் 'றிசீவரை வைத்தாள்.

'கடைசிநாள் ஓய்வு. அப்பாடா இனிப் பயமேயில்லை. கடைசி நாளும் பாடம் என்றுதான் வள்ளி நினைத்திருக்கிறாள். பாவம்; நாளை மறுநாள் சாயந்தரம் விஷயத்தைக் கூறி, உடனே புறப்படவேண்டியதுதான்' மஞ்சுளாவுக்கு இப்போது சற்று ஆறுதலாகவிருந்தது.

இரண்டு நாட்கள் இரண்டு வருடங்களாக நகர்ந்தன.

விடைத்தாள்களைக் கட்டிக்கொடுத்துவிட்டு விடுதிக்குப் போக ஆயத்தமாகிக்கொண்டிருந்த முத்துவேலுவிடம் யாரோ தேடுவதாக அறிவிக்கப்பட்டது.

''வணக்கம்; மிஸ்டர் முத்து'' மஞ்சுளா கரம் குவித்தாள்.

"வணக்கம்; நாளைக்குத்தான் வருவதாகச் சொன்னீங்க''

''நாளைவரை காத்திருக்க முடியல்ல''

''வாங்க விடுதிக்குப் போகலாம்...''

''இல்லை...''

"ஏன்? பல்கலைக்கழகத்தைப் பார்க்கவந்தால் இங்க நிண்டே பாத்திடலாமா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீடு பற்றியெரியும்போது சிகரட் குடித்துக்கொண்டிருப்பாங்களா?..."

"என்ன மஞ்சுளா?" முத்துவேல் அதிர்ச்சியோடு கேட்டான்.

அவள் விஷயத்தைச் சொன்னபோது அவனால் நம்ப முடியவில்லை, பேரதிர்ச்சியாயிருந்தது அவனுக்கு. 'கிழக்கு மேற்கைத் தழுவிக்கொள்ளலாம்; வடதுருவம் தென்துருவத்தோடு சேர்ந்து உறவாடலாம், ஆனால் வடிவேலுவை வள்ளி மணப்பதா? அதற்கு வள்ளி உடன்பட்டாளா? முத்துவுக்கு மூளை சுழன்றது.

"நீங்க நம்பமாட்டீங்க; எனக்குத் தெரியும். இதப் பாருங்க..." என்று திருமண அழைப்பையும் வள்ளி தனக்கெழுதிய கடிதத்தையும் தன்பையிலிருந்தெடுத்து நீட்டினாள் மஞ்சுளா.

'திருமண அழைப்பு!'

அதைப் பார்த்ததும் ஆவேசம் கொண்டதுபோல முகம் மாறியது முத்துவேலுவுக்கு.

'இது நடக்காது; நடக்கவிடமாட்டேன்' என்று இந்த உலகமே அதிர — தொண்டைகிழியக் கத்தவேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஆனால் மஞ்சுளாவுக்கு வள்ளி எழுதியிருந்த அந்தக் கடிதத்தை வாசித்தபிறகு அவன் அடங்கிப் போனான். மஞ்சுளாவை நிமிர்ந்து பார்த்தான்.

"இதுக்கு என்ன செய்யவேணுமென்கிறீங்க?" மிக அமைதியாக அவன் கேட்டான்.

"என்னிட்டக் கேக்கிறீங்களா?" அவள் அவனையே திருப்பிக்கேட்டாள். அந்த வார்த்தைகள் ஏதோ ஒருவிதத் துடிப்போடு வெளிப்பட்டன. அதற்கும் அவன் பேசவில்லை. அமைதியாகவே அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"இது நடக்கக்கூடாது. நடக்கவே கூடாது எப்படியாவது தடுத்தேயாகவேணும். முத்து; இது உங்களாலதான் முடியும்" கலவரம் நிறைந்த குரலிலே, பணிவு தொனிக்க அவள் புலம்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிஸ்டர்! வள்ளி மனப்பூர்வமாக இதுக்குச் சம்மதிக்கிறுள்...'' முத்துவேல், மஞ்சுளாவின் உண்மையான உள்ளத்தை திட்டவட்டமாக அறிந்துகொள்ள இப்படியொரு அம்பை ஏவினுன்.

''முத்து, நீங்க இப்படிப் பேசுவீங்களெண்டு நான் நினைக்கல்ல. இது நடக்கலாமா? நடந்துதெண்டா அத்தனை பாவமும் பழியும் என்னைச் சும்மா விடாது எண்ட மனச்சாட்சியே என்னைக் கொன்றுபோடும். நான் பொடிந்து சாம்பலாப் போவேன். இந்தப் பாதகத்துக்கு நான் பலியாக வேணுமா?

''இல்ல சிஸ்டர்; நீங்க எப்படிப் பாவத்துக்கு ஆளாக முடியும்? பாவம் புண்ணியமெண்டு வாழ்வைப் பாழாக்கிக் கொள்வது கோழைத்தனம் சிஸ்டர். வள்ளி தனக்கென ஒரு வாழ்வை அமைத்துக்கொள்ளப் போகிறுள்.''

''முத்து நீங்க என்ன சுயஉணர்வோடதான் பேசுறீங்களா? அல்லது விளையாடுறீங்களா? உங்க தங்கைக்கும் அத்தானுக்கும் இடையில வளர்ந்த காதல் விளையாட்டெண்கிறீங்களா? முத்து, வள்ளி எனக்கு அக்கா, நீங்க அண்ணர். வள்ளி எனக்காகத் தன் காதலையே தியாகம் செய்து போட்டுக் குழியில விழப்போறு. அதேவேளையில எனக்குச் சொர்க்கமா? நன்றியில்லாம இந்தச் சொர்க்கத்தை நான் ஏற்றுக்கொண்டா எனக்கு நரகம் கிடைக்காதா? ஒரு அபலையிட வாழ்வைப் பலியிட்டுக் கிடைக்கும் சொர்க்க போகத்தைவிட எனக்கு நரகம் மேலானது. அதிகம் யோசிக்காதீங்க. அவங்கட அழியாத அன்பு நீங்க அறியாததல்ல. இவ்வளவும் நீங்க எனக்காகப் பேசுறீங்க எனக்குத் தெரியும். இந்த விஷயத்தை நீங்ககேள்விப்பட்டதும், உங்களுக்கேற்பட்ட அதிர்ச்சியும் துடிப்பும்எனக்குத் தெரியும். உங்க தங்கை நான். அக்காட வாழ்வுக்காக உங்க காலைப் பிடிக்கவும் தயார். உங்க ஒருவரால தான் இதத் தடுக்க முடியும். ஏன் பேசாம நிற்கிறீங்க?''

''இல்ல மஞ்சுளா; இப்ப என்ன செய்யச் சொல்லுறீங்க?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படியாவது இதைத் தடுக்கவேணும். அதே முகூர்த்தத்தில உங்க அத்தானுக்கும் வள்ளிக்கும் திருமணம் நடக்கவேணும். அவ்வளவுதான். இரவு ரெயினுக்கே புறப் படுவம். எதை யோசிக்கவும் இப்போ நேரமில்ல நாளைக்கு திருமணநாள் ஞாபகமிருக்கா. நான் காரோட வருவேன். புறப்படத் தயாராயிருங்க. நான் வாறன்" மஞ்சுளா முத்துவேலுவின் விடைக்காக காத்திருக்கவில்லை. நடந்து மறைந்து விட்டாள்.

"பாவம், நல்லவள்" முத்துவேலுவின் இதழ்கள் முணு முணுத்தன. கால்கள் வீடுதியை நோக்கி நடந்தன.

மாலை ஐந்து மணியிலிருந்தே, மட்டக்களப்பு நகர வீதிகளில் - குறிப்பாக மாந்தீவு - ஆஸ்பத்திரி வீதியில் அயறிங் கார்கள் அடிக்கொரு தடவை பறந்தனவென்றல் அதன் காரணம் 'மாஸ்ட்டர்ப் பொடியன்' வடிவேலுவின் கல்யாணம்தான்.

வடிவேல் எஸ். எஸ். ஸியோடு படிப்பித்தாலும் மாஸ்ட்டர்தான். அந்தக் கிராமத்திலே, குறிப்பிடக் கூடிய குடும்பம் பொன்னுத்துரைப் போடியாரின் குடும்பம். ஒரு மாஸ்டருக்கும், போடியரின் மகளுக்கும் திருமணமென்றல் சும்மா சாதாரணமா? அதுவும் அவள் 'சப்புச்சுப்பான பொம்புளையா? பேராதனையிலே பி. எஸ். ஸி படிப்பவனது தங்கை! நாளை வடிவேல் அந்தப் பிஎஸ்ஸிக்கு மைத்துனன்.

கார்களின் டிக்கிகளுக்குள்ளே போத்தல்கள் சாக்கு களுக்குள் 'கிளிங்கிளிங்' போட்டன. அவை சோடாப் போத்தல்களோ? சுடுதண்ணிப் போத்தல்களோ? யார் கண்டார்கள்!

அந்தியங்கை இருட்போர்வையால், தன்வண்ண, மேனியை மறைக்கத் தலைப்பட்டாள். 'இரணியன்பட்ட' நேரமும் கடந்து, கொக்குக் குருவிகளும் அடங்கிவிட்டன கன்னங்கரேலென்ற இருள்படிந்து இரண்டு மணிநேரங்கள் சும்மா நடந்து விட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இலுப்பையடி வீட்டிலே இப்போதும் இருள் தான் ஆதிக்கம் செய்து கொண்டிருந்தது. இன்னும் விளக்குக்கூட ஏற்றப்படவில்லை.

அந்த ஓலைக் குடிசையின் திண்ணையிலே குந்தி, முளங் கால்களை இருகைகளாலும் கட்டிக் கொண்டு, அந்தக் கையிடுக்குகளுக்கிடையே முகத்தைப் புதைத்தபடியே, இன்னும்தான் அமர்ந்திருந்தது அந்த உருவம். வெள்ள மாகப் பெருக்கெடுத்த கண்ணீரலைகள் இமைக் கரைகளை கரைத்து உடைப்பெடுத்து, தாளம்பூநிற முன்கைகளைக் குளிப்பாட்டி, முளங்கால்களால் சிந்தி, ஆடையில் ஊறி ஈரலித்தன. கண்ணீர்க் கோளங்கள் சுண்டி, வற்றிப்போக, இன்னும் எங்கிருந்துதான் பெருக்கெடுக்கிறதோ அந்தக் கண்ணீர்.

"ஆருயம் வெள்ளி
அதரால சாயுமட்டும்
பூராய காறமச்சான் - எனக்கொரு
புள்ளதந்தா லாகாதோ"

எவளோ ஒருத்தி, எப்போதோ எதற்கோ பாடிய கவியொன்று, அவள் எண்ணத்திலே புகுந்து மின்னியது. 'அந்தப்பெண் எதற்காக ஏங்கிக் கிடந்து எதிர்பார்த்து இரந்தாளோ, அது கிடைத்ததற்கு நான் அழுகிறேன்...ம்... என்ன உலகு' விரக்தியோடு தனக்குள்ளே சிரித்துக் கொண் டாள் அவள்.

"புள்ள, செங்கமலம்!" வீடு இருளில் மூழ்கித் திணறுவதைக் கண்ட தாயின் குரல்தான் அவளை உணர்வு பெறச் செய்தது.

"என்னடி இது? இருட்டுக்குள்ள இஞ்சதான் குந்தித் திரிக்கயா? வெளக்குங்கூடக் கொழுத்த எண்ணும, அப்பிடி என்னடி எழவு உழுந்து போச்சி?...

"கொழுத்தத் தானம்மா..."

"ஒன்ன மடுவுக்க வச்ச அண்டைக்குத்தான்டி எனக்கு நெஞ்சிக்க நெருக்கென்ன உழும். இல்லாட்டி நீயென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழந்தையா, குஞ்சியா? குஞ்சிக்கு மணங் கினயே! நீ ஆடின ஆட்டத்துக்கு, என்னடி அழுகை? நெனேக்க நெனேக்க நெருப்பாப் பத்துது. மானமா, மரியாதையா வாழ்ந்தேனே இத்தினே காலத்துக்கு, ஒரு நாய் வாய் தொறந்திரிக்குமா?... அதுக்குவந்து பொறந்தது ஒரு கொறளி!...ம், என்னத்துக்குப் பேச,...

களம் உதறிக் கொணர்ந்த இரண மணியை மூலே யிலே இறக்கி வைத்துவிட்டுத் திரும்பினுள் அந்தத் தாய்.

செங்கமலம் பள்ளிக்குப் போகத் தொடங்கிய ஆரம் பத்திலேயே, கணவனே இழந்துவிட்டுத் தவித்தவள் அந்தத் தாய். அமரி, அமரி என்றுதான் அவளேப் பேரிளம் பெண் களெல்லாம் அழைத்தார்கள். ஆனுல் அமராபதி என்ற அழ கான பெயர் அந்தத் தாயுடையது. அவளும் அத்தனே வய தானவளல்லள். அவள்பெற்ற முதற்குழந்தையும் கடைசிக் குழந்தையும் இந்தச் செங்கமலந்தான். செங்கமலத்துக்கு இன்னும் பதினெட்டு வயது பூர்த்தியாகவில்லே. கணவனே இளமையிலேயே இழந்துவிட்டு. இந்தப் பதின்மூன்று வரு ஷத்துக்கும் வாழ்ந்து விட்டாள். சுர்மாவா? செங்கமலம் பள்ளிசெல்லக் கால்லெடுத்து வைத்தபோது தானும் கணவ னுமாகக் கட்டிய கனவுக் கோட்டையை நனவாக்கிவிடத் தான் அமராவதி ஓடாக உழைத்தாள். கணவன் கட்டி வைத்துவிட்டுப்போன 'நெல்லுக்கொட்டை' எத்தனே வரு ஷத்துக்குப் போதும்? கழுத்திலே - கையிலே கிடந்தவையெல் லாம், செட்டியின் கடையிலே தஞ்சம் புகுந்தன. மீட்கும் பேச்சுக்கே இடமில்லே. ஒரு குமரியைக் கட்டிக்காத்து இத் தனேக்கும் படிக்க வைப்பதென்ருல், சமானியமா? அவள் களத்துக்குக் களம் வியர்வையைக் கொட்டி வாயை வயிற் றைக் கட்டி சம்பாதித்ததுதான் கொஞ்சமா? நஞ்சமா? அடுத்த மார்கழிக்கு எஸ். எஸ். ஸி. எடுக்கவிருந்த செங்க மலம், இடையிலே இப்படி, வாயும் வயிறுமாக, வீட்டோடு வீழ்ந்து கிடந்து, கண்ணீராய்க் கொட்டுவதைக்காண, அம ராவதியின் பெற்ற வயிறு பற்ருமலிருக்குமா?

தன் மகள் செங்கமலம் 'கொன்வென்ட்'டில படிப் பதை எத்தனே பெருமையோடு சொல்லிக்கொள்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெருமையொன்றுக்கே, காலமெல்லாம் பேயாய் உழைக்கலாம் என்று தோன்றுமே அவளுக்கு. செங்கமலம் எஸ். எஸ். ஸி. பாஸ்பண்ணிவிட்டால் போதும். அவள் அழகுக்கும் குணத்துக்கும் 'நான் முந்தி நீ முந்தி என்று எத்தனை மாப்பிள்ளைகள் வருவார்கள்! சீதனம் எதற்கு அவளுக்கு? இப்படியெல்லாம் கனவுகண்டு பூரித்து ஏங்கிக் கிடந்த அந்தத் தாயின் வயிற்றில் நெருப்பைக் கொட்டி விட்டு, இப்படித் திண்ணையொட்டிலே, குந்தி, மார்பாலே கண்ணீர் வடித்தெறியும் மகளைக்காண, அமராவதிக்கு ஆத்திரம் மட்டுமா? அழுகை அழுகையாக வந்தது. அந்த ஆற்ருமையால், அருமையாக வளர்த்த செங்கமலத்தை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிவிட்டாள்.

அத்தனையையும் தாங்கிக்கொண்டு ஒரு பேச்சுப்பேசாமல், தன்மேசையிலிருந்த சிமிலி விளக்கை ஏற்றினுள் செங்கமலம். மூலையில் நின்ற அமராவதிக்கு, மகளின் முகத்தை அந்த வெளிச்சத்தில் காண வாயும் வயிறும் கொதித்தது.

செங்கமலம் பள்ளிக்குப் போகும்போது அந்தமேசையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள் இப்படிப் புழுதிபடிந்து கிடந்ததுண்டா? இல்லை; அந்தக் குழந்தையின் தாளம்பூ நெற்றியும் மாதுளங் கன்னங்களும், வண்டுக்கண்களும், மதுவூறும் இதழ்களும் இப்படி வாடியுலர்ந்து புழுதி படிந்து கிடந்ததுண்டா? அந்தத் தலையைத்தான் எண்ணெய்தடவி, எத்தனையழகாக வகிடெடுத்துப் பின்னல் போட்டிருப்பாள்! - அது தேடுவாரற்றுப் பறந்து கிடக்கிறது.

அவள் வெள்ளை வெளேரென்ற துகிலுடுத்தி, புத்தகத்தைக் கையிலேந்தி, தெய்வ கன்னிகைபோல பள்ளிக்குச் செல்லும் காட்சி நினைவிலே மின்னியது. அது பொய்யாய், பழங்கதையாய், கானலாய் வெறும் கனவாய்... அமராபதியின் நெஞ்சம் பதைத்தது.

சிமிலி விளக்கிலே தெரிந்த மகளின் முகத்தை, பெருமூச்சோடு மீண்டும் பார்த்தாள். கண்கள் சிவந்து முகம்வீங்கி, பரிதாபமாய்க் காட்சி தந்தது அது. கண்ணீர் ஓடிவற்றிய கன்னங்கள் வெளிறிக் கிடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எனக்கு வந்த ஆத்திரத்தில எப்படித் திட்டிப் போட்டன்!' - தான் திட்டிய வார்த்தைகளை, நினைத்துப் பார்க்கவே பயப்பட்டாள் அந்தத்தாய்.

'ஒண்டும் நடக்கப்படாது. கடவுள் காக்கவேணும்.' அப்படியில்லையென்று, நன்மையைப்போல ஒரு தீமை நேர்ந்து விட்டால், அமராபதி தாங்குவாளா? அந்தப் பெற்றமனம் தாங்குமா? இந்த எலும்புக்கூட்டிலே' உயிரை ஒட்டவைத்துக் கொண்டிருப்பது யாருக்காக?

'கடவுளே, இந்தப் பொல்லாத நாவால, தெரியாமத் திட்டிப்போட்டன். நீதான் காப்பாத்து.' - தனக்குள்ளே தாய்மனம் தவித்தது.

''செங்கமலம்; நீஎன்ன கோலமாயிரிக்காய், போய் முகத்தக் கழுவு புள்ள.'' - தாயின் பரிவான சொற்கள், செங்கமலத்தின் இதயத்தில் சற்று இதம் தந்தன. அவள் முகம் கழுவிக்கொண்டு வந்தாள்.

''வா போடியாருட்ட போயிட்டு வருவம்...''

''ஏனம்மா?'' செங்கமலம் மறுக்கத் தெரியாமல் கேட்டாள். தன்காதலனுக்கு - இல்லை, கணவனுக்கே ஒருத்தி நாளை மனைவியாகப் போகிறுள். அவள் வீட்டுப் படியை மிதிக்க எந்தப்பெண் ஒருப்படுவாள்?

''இந்தக் கலியாணம் நடக்கிறதா பாப்பம். சாகத் துணிஞ்சா, சமுத்திரம் முழங்கால்தான். உன்னை இந்தக் கதிக்காக்கிப்போட்டு, அவன் உல்லாசமா தாலி கட்டுறதப் பாப்பம்!''

''அம்மா!...'' செங்கமலத்தின் குரல் இரந்தது... ''இது உன்னையும் என்னையும் தவிர, ஆருக்கம்மா தெரியும்? இண்டைக்கில்லாட்டி, நாளையோட, என்னோட இதுவும் மறஞ்சி போகட்டும்''

''அடியே பாதகத்தி!...'' மகளின் வாயை சட்டென்று பொத்திஞள் அமராபதி.

''என்ன பேச்சிடி இது? இதுக்குமா துணிஞ்சிட்டாய்?...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா அவர், அவங்க எவ்வளவு செலவு செய்து ஆயத்தப்படுத்தியிருப்பாங்க?... நாளைக்குக் கலியாணம். அதுக்குள்ள அவருக்கு இந்த அவமானம்..."

இவளை என்னென்பது? அந்தப் படுபாதகனையுமா இன்னும் இப்படி அன்பு செய்கிறாள்!

ஆமாம்! பெண்மை அத்தனை உயர்வானதுதான். ஒரு கணமாயினும் கணவனாக வரித்து விட்ட ஒருவனை, எந்த இன்னலிழைத்த போதும் துன்பத்துக்குள்ளாக்க ஒரு பெண் மனம் இடந்தராது. ஒரு சிறுதுளி அவமானத்துக்கு அவன் ஆளாகவும் அந்த மனம் சம்மதியாது. அதுதான் பெண்மையின் தனியான உயர்ந்த பண்பு. இந்தச் செங்கமலமும் பெண்மையின் உயர்ந்த பண்புக்கு ஒரு மணிவிளக்கு.

அவளுக்கு, தன்சுகம்; ஏன் தன் உயிரே பெரிதல்ல. தன் காதலன் அவமானப்படக் கூடாது எப்படியிருக்கிறது?

கடைசிவரை அமராபதியின் பேச்சுக்குச் செங்கமலம் இடந்தரவில்லை - மறுத்துவிட்டாள். தாயும் விட்டுவிட்டாள். இத்தனை நாளையும்விட, மகளைப்பற்றிய இன்றையப்பயம் அமராபதிக்குப் பெரும் திகில் விளைவித்தது. கண்ணிலே எண்ணெய் விட்டுக் கொண்டிராவிட்டால், செங்கமலம் இரவைக்கே ஏதாவது செய்துகொண்டுவிடப்போகிறாள்! விடியா விடியுமட்டும், விடிந்து பொழுதேறுமட்டும் அந்தத் தாயின் கண்களில் துளி நித்திரையே வரவில்லை.

காலை ஆறே காலுக்கே, வண்டி மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தையடைந்து விட்டது. மஞ்சுளா ஒரு 'அயறிங்' காரைப்பிடித்து, முத்துவேலுவையும் அழைத்துக் கொண்டு, தன் வீட்டுக்கு வந்தாள். காரை வீதியிலே நிற்கச் சொல்லியிருந்தாள் மஞ்சுளா.

"ஏன்?" - என்றான் முத்துவேல்.

"இனித்தான் இயந்திர சுழியிலே நாம இயங்க வேணும்" என்றாள் அவள்.

"எனக்கு ஒண்டும் புரியல்ல, தடுப்பது பெரிய காரியமில்ல ஆனா, பின்னுக்கு விளைவையும் யோசிக்க வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வடிவேல் எதுக்கும் துணிஞ்சவன். எப்பிடித்தான் இதை...'' என்று முடிக்காமலே யோசனையிலாழ்ந்தான் முத்துவேல்.

''எனக்குத் தெரியாது முத்து, இப்பிடி யோசித்துக் கொண்டிருக்க இனி நேரமில்ல. உங்க அத்தானையும் பொன்னியையும் நான்போய் அழைச்சிட்டு வாறன் அவங்க அங்கிருப்பது, ஆபத்து''

''நீங்களே போறீங்களா?...''

''எனக்குப் பயமில்ல, துணிவிருக்கு. ஆனா நீங்க இப்ப அங்க வருவது கூடாது.''

''சரி'' என்றான் அவன். அவள் காரை எடுத்துக் கொண்டு போய்விட்டாள்.

முத்துவேலுவுக்கு மூளை குழம்பியது. கல்யாணமென்றால் சும்மாவா? இருபக்கத்திலும் எவ்வளவு செலவாகியிருக்கும்? என்ன இருந்தாலும் அப்பா அவனுக்கு ஒரு வார்த்தை அறிவிக்கவில்லையே. அதை நினைக்கத்தான் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

'இந்தக் கலியாணம் நடக்கவே கூடாது.' அதே முகூர்த்தத்தில் முருகேசனுக்கும் வள்ளிக்கும் பதிவுத் திருமணம் நடத்தியே தீர்வது. அதுதான் திட்டம் வள்ளி மறுக்கவா. பார்ப்போம்?

எப்படித் திட்டம் உருவானாலும், வடிவேல் 'போக்கிரி' என்ற ஒரு பயங்கர உணர்வும் இதயத்தின் மூலையிலே தலை நீட்டத்தான் செய்தது. அதனால் தெளிவு பிறக்கவில்லை. அவன் யோசித்துக்கொண்டே சோபாவில் சாய்ந்து கிடந்தான்.

பதினைந்து நிமிடத்திலே கார் மீண்டும் திரும்பி வந்தது. மஞ்சுளா, பொன்னி, முருகேசன் - மூவரும் இறங்கி வந்தார்கள்.

முத்துவைக் கவனித்த பொன்னி, ''ஏன் இப்படி யோசிக்கிறயள்? என்று உற்சாகத்தோடு கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்படி வாங்க'' என்று அழைத்தாள். முத்துவின் காதோடு காதாக எதையோ முணுமுணுத்தாள்.

முத்துவேலுவின் வதனம் மலர்ந்தது. தெளிவு பிறந்தது.

''சிஸ்டர், நமக்கு வெற்றிதான்'' என்ருன் துள்ளிக் குதித்தபடி.

''எப்படி? என்ன குசுகுசு மந்திரம் போட்டீங்க?'' மஞ்சுளா, கண்களை அகலவிரித்து வியப்பும் உற்சாகமும் கும்மாளமிட வினவிஞள்.

''அதெல்லாம் தானே தெரியவரும்'' முத்துவேல் இப்படிச் சொன்ஞன்.

''சரி, சரி, வாருங்க சாப்பிட ''மஞ்சுளா மூவரையும் அழைத்துக் கொண்டு பின்கட்டை நோக்கி நடந்தாள்.

## 17. சரியான தண்டனை

'பழிகள்தான் வந்தாலும்
பத்தெட் டிறுத்தாலும்
கழுவி லிருந்தாலும் - இப்ப
காண்பேன்டி உன்னை'

பொன்னுத்துரைப் போடியாரின் வீடு திருவிழாக் கோலம் பூண்டிருந்தது 'பெற்ரோமக்ஸ்' விளக்குகள் அந்தப் பிரதேசத்தையே பட்டப்பகலாக்கிக் கொண்டு கண்களைக் கூசச் செய்தன. 'காடுவெட்டி' நூற்சேலைகள் உடுத்திய பேரிளம் பெண்டிர் தொடக்கம், நவீன 'ஜோர்ஜட்' சாரிகளை உடுத்திய பட்டுப் பூச்சிகள்வரை அவசர அவசரமாக அங்குமிங்கும் பறந்த வண்ணமிருந்தன. மாப்பிள்ளை வீட்டிலிருந்து புறப்பட்ட மோட்டார் ஊர்வலம் புதூர்ச் சந்தியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்து, சுமைதாங்கியில் முடங்கி, சேற்றுக்குடா ஆற்ரேர வீதியால் வந்து. வீச்சுக்கல்முனை மணல் வீதியைத் தாண்டி, மீண்டும் திமிலதீவு வீதியையடைந்து மணமகள் இல்லத்தையும் அடைந்து விட்டது.

"பழிகள்தான் வந்தாலும்
பத்தெட்டிறுத்தாலும்
கழுவிலிருந்தாலும்—இப்ப
கண்டேனடி உன்னை"

காரின் பின் இருக்கையிலே 'ராஜா' மாதிரி வீற்றிருந்த மாப்பிள்ளை வடிவேலுவின் மனம் கூவிபாடியது. 'பாவமென்று அவன் அன்று காரில் ஏற்றிவிடப் போனபோது, எத்தனை திமிர் அவளுக்கு! திரும்பிக் கூடப் பார்த்தாளா? இன்று... வடிவாக மாட்டிக் கொள்ளப் போகிருள். அந்தக் கள்ளி வெள்ளி ...ம்...ம்' என்று உணர்ச்சி நரம்புகள் துடித்தன. 'வடிவேலுவை நீயே அறியப் போகிருயடி; பொறுத்திரு' - உள்ளம் வெறிகொண்டு துள்ளியது அவனுக்கு

முகூர்த்தத்துக்கு இன்னும் அரைமணி நேரந்தான் மிச்சமிருந்தது. வருடங்களையும், மாதங்களையும், நாட்களையும், மணிகளையும் விழுங்கி இன்னும் முப்பது நிமிடம் பாக்கியிருக்கிறது. அதன்பின் வள்ளி யாரோ ஒருத்தனின் சொத்து. இத்தனை ஆண்டுகளும் அவளின் உடல், பொருள் ஆவியனைத்தையும் யாருக்கு உடமையாக்கி, அந்த எண்ணத்திலே, இன்பக் கனவுகள் ஆயிரம் கண்டாளோ அதே ஆடவனை இன்னும் முப்பது நிமிடங்களில் அவள் மனத்தாலும் நினைக்கக் கூடாது. அவள் இனி அத்தானின் சொத்தல்ல, அயலவனின் சொத்து.

எதை எண்ணித்துணிந்து செயலாக்கியும் விட்டாளோ, அதே முடிவுக்கு இந்தக் கடைசி வேளையிலே பயந்து, நடுநடுங்கி அங்கலாய்த்துத் தவித்தது வள்ளியின் இதயம்.

எல்லாம் முடிந்துவிட்டது. அந்த முடிவு விளிம்பின் ஒரேயொரு அணு, இன்னும் பாக்கியிருக்கிறது. இதோ; அந்தப் பாக்கியும் முடிந்துவிடப் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வள்ளி! மாப்பிள்ளை மணவறைக்கு வந்தாச்சு...'' குதூகலத்தோடு ஓடிவந்த மணப்பெண்ணின் தோழி, மணமகளின் முகத்தைக் கண்டதும் அயர்ந்து நின்று விட்டாள். இதற்கிடையிலே, யாரோ ஒரு பெண்ணின் குரல்;

''பொம்புளையக் கூட்டி வரட்டாம்; கூட்டிற்று வாங்க'' என்றவாறே ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தது.

''உம்; வள்ளி! எழும்பு; எழும்பு'' என்று அவளின் மட்டங்கள் பம்பரமாட்டின.

வள்ளியின் கண்களை நீர் திரையிட்டது. முகத்தை இருகைகளிலும் புதைத்துக் கொண்டு அவள் விசும்பி விசும்பி அழுதாள்.

''என்னடி இது?... என்று ஒருத்தியை ஒருத்தர் பார்த்துக் கண்களைச் சிமிட்டினர்.

''சந்தோஷமாய்ச் சிரித்துக் கலகலப்பாக இருக்க வேண்டிய இந்த நேரத்துல. எந்தப் புத்தியில்லாதவளும் அழுவாளா?......,என்று யாரோ ஒரு அம்மாள் வள்ளியின் தோளைப்பிடித்து உலுப்பித் தேற்ற முயன்றாள்.

வள்ளி கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள். அதற்குமேல் அவள் அழவில்லை. அழுகையையும், சிரிப்பையும், துக்கத்தையும், சந்தோஷத்தையும், இன்பத்தையும், துன்பத்தையும் ஏதோ ஒரு நொடியிலே கடந்துவிட்டது போன்ற, ஒரு தனித்துவத்தோடு, அவள் முகம் உணர்ச்சியற்றுக் காணப்பட்டது.

அழுகையால் அலங்கோலமாகியிருந்த அவள்முகத்தை யாரோ குளிர்ந்த நிரலால் துடைத்துவிட்டார்கள். அருகில் நின்ற இன்னொருத்தி, பௌடரை மிருதுவாகத் தடவி, அந்த முகத்துக்கு ஒருவித மெருகேற்றினாள்.

நிர்மலமாகி, ஒருவிதச் செழுமையும் வரட்சியும், எழிலும் இனிமையும், கவர்ச்சியும் கனிவும் ததும்பிய அவள் முகத்தைப் பார்த்து, ஒவ்வொருவரும் ''வடிவேல் கொடுத்துவைத்தவன் தான்'' என்று நெஞ்சுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளோ அனைத்தையும் கடந்தவளாக, பலிபீடம் நோக்கி, பூசாரியின் காற்சுவட்டோடு நடக்கும் வெள்ளாட்டைப் போல, அறிந்தும் அறியாதவளாக, உணர்ந்தும் உணராதவளாக நடந்துகொண்டிருந்தாள் அவள் மணவறைநோக்கி, பெண்ணினம் பின்தொடரும் தெய்வமகள் போல நடந்து கொண்டிருந்தாள்.

வாழைகள் நட்டுத் தோரணமிட்டிருந்த அந்த வாசலிலே, ஒரு பெரிய நீலக்கார் வந்து நின்றது.

அதன் பின் இருக்கையில் மூன்று இளம்பெண்கள் அமர்ந்திருந்தார்கள். நடுவில் இருந்த பருவப்பெண் மணமகளுக்கு வேண்டிய அத்தனை அம்சங்களுடனும் அலங்காரங்களுடனும் திகழ்ந்தாள். புத்தப்புதுப் பட்டாடை புனைந்து கூந்தலில் பூவைத்து அழகாக அலங்கரிக்கப்பட்டு, நவநாகரீகத் தோற்றத்தோடு பழைய அலங்கரீப்பும் பின்னித்தழுவ அவள் காணப்பட்டாள். ஆனால் அவள் வதனத்தில் மாத்திரம் திருமணப் பொலிவுக்கும் புன்முறுவலுக்கும் பதிலாக, பீதியும் இனி என்ன நடக்குமோ என்ற அச்சமும் நிழலிட்டன.

மணப்பந்தலிலிருந்தவர்கள் வேடிக்கை பார்க்க, விழுந்தடித்துக் கொண்டு ஓடிக் காரைச் சூழ்ந்து குவிந்து கொண்டார்கள்.

வீமண்ணன், யாரோ பெரிய மனிதர்கள் கல்யாணத்துக்கு வந்திருக்கிறார்கள் என்ற எண்ணத்தோடு, பன்னீர்ச் செம்பும் சந்தனக் கிண்ணமுமாக ஓடோடி வந்தார் காரின் முன்கதவைத் திறந்து கொண்டு இறங்குபவர்களைக் கண்டதும் பேயறைந்தவர் போலானார். திரும்பி உள்ளே செல்லவே அவனுக்குக் கைகால்கள் இயங்கவில்லை.

காரிலிருந்து இறங்கியவன், நேராக உள்ளே பாய்ந்தான்.

அப்போதுதான் மணமகள் வள்ளி மாப்பிள்ளையின் பக்கமாக மணவறையில் அமரக் கால்தூக்கி வைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வள்ளீ!'' ஆவேசம் பிடித்ததுபோல அவன் போட்ட கூச்சல் அந்த மணப்பந்தலை மட்டுமா, அந்த வீட்டையே அதிர வைத்தது. அதற்கப்பாலும் எதிரொலித்தது. வள்ளி அதிர்ந்துபோய், உடல் அனைத்துமே நடுநடுங்க நிமிர்ந்து பார்த்தாள்.

''வள்ளி, நீ அமரவேண்டிய இடமல்ல இது. இதற்குரியவள் இதோ வாருள்.'' - துளிகூடத் தளம்பாது உறுதியாக திட்டவட்டமாக, தெறித்தாற்போல், கண்டிப்பாகக் கட்டளை பிறப்பித்தது அவனின் குரல். அவனின் உறுதி நிறைந்த இடது கரம், வாசற்பக்கமாகச் சுட்டிக் காட்டியது.

அங்கே?... வள்ளியின் கண்கள் குத்திட்டு நின்றன. ஏன் அங்கிருந்த சிற்றெறும்புகூட அங்கேதான் முகத்தைத் திருப்பி விழிகளைப் படரவிட்டது.

இரண்டு இளம்பெண்கள், ஒரு இளம்பெண்ணை கைத் தாங்கலாகப் பிடித்து அழைத்து வந்தார்கள். ஒருத்தி நர்ஸ் மஞ்சுளா, மற்றவள் பொன்னி. நடுவிலே யார் அது? யார் அது? திருமணக்கோலத்தில், சோர்ந்து துவளும் அந்தப் பெண் யார்? வள்ளி திகைப்பும் வியப்பும், பிடித்துந்தச் செயலற்று நின்றுவிட்டாள்.

புது மாப்பிள்ளை வடிவேலுவின் தலை ஒரே ஒருகணம். நிமிர்ந்தது; அடுத்தகணம் தொப்பென்று கவிழ்ந்தது. அவனின் இதயத்து இரத்த நாளங்கள் ஐசாக உறைந்து விட்டனவா? திருமணக் கோலத்தோடு துவண்டு சோர்ந்த அந்தப் பருவப்பெண்ணை, அவன் கண்கள் தீண்டிய கணமே, அவன் ஏன் அப்படித் திடுக்கிடவேண்டும்? மறுதடவை நிமிர்ந்துகூடப் பார்க்கமுடியாத அளவுக்கு, என்ன மந்திரம் நடந்து விட்டது?

முத்துவேல் அதற்குமேல் ஒரு வார்த்தை பேசவில்லை. அடித்துப் போட்டதுபோல அத்தனை பேரும், அதிர்ந்து போய் நின்றிருந்தார்கள். முத்துவேலுவின் கைகளும் கண்களும் காட்டிய சைகைகளின்படி, பொன்னியும் மஞ்சுளாவும் அந்தப் பெண்ணை, மணவறையிலே மெதுவாக, அமரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார்கள். அந்தப் பெண் இப்போதும் மயக்கநிலையிலேயே இருந்தாள். பொன்னியையும் மஞ்சுளாவையும் தவிர, எந்தப் பெண்ணுமே உதவிக்கு வரக்காணோம். பூட்டிவைத்திருந்த பொன் நகைகளையும், பொட்டுதிப்போன புடவைகளையும் கட்டி, அந்தஸ்தை விளம்பரப்படுத்த வந்திருந்த போடிமார்களின் மனைவிகள் முதல், நைலன், ஜார்ஜட் - றெஸ்லட், இந்தவகையிலே ஒரு தினுசாக மினுங்கும் பட்டுப்பூச்சிகள் வரை ஒன்றுவது உதவிக்கு வரக்காணோம். அவர்களின் கண்கள் மாத்திரம் விந்தையோடு வேடிக்கை பார்த்தன.

இத்தனையையும் பார்த்து நின்றிருந்த முத்துவேலுவுக்கு ஆத்திரந்தான் வெடித்தது.

''நீங்களெல்லாம், பெண்களா பிசாசுகளா?''

தன் உணர்ச்சியின்றியே மரத்துப்போய் நின்றிருந்த வள்ளிக்கு உணர்வு பிறந்தது. அவளே முன்வந்து, மயங்கிச் சோர்ந்திருந்த அந்தப் பெண்ணுக்குத் தன் தாவணித் தொங்கலால் விசிறத் தொடங்கினாள். இதைக் கண்ணுற்ற அவள் வயதுத் தோழிகள் தாங்களும் உதவிக்கு வந்தார்கள். அவர்களைத் தாங்கிப் பிடிக்க விட்டுவிட்டு மஞ்சுளா அங்கே வைக்கப்பட்டிருந்த, பன்னீர்ச் செம்பையெடுத்து அவள் முகத்தில் தெளித்தாள்.

இத்தனை அமளியும் இங்கு நடந்துகொண்டிருக்க, முத்து தன் தந்தையை அழைத்துக் கொண்டு, தனியான இடத்துக்குப் போனான். தந்தையிடம் அவன் முதல் கேட்ட கேள்வி இதுதான்;

"அப்பா, நான் செத்துப்போனன் என்டதுதான் உங்க நினைப்பா?"

அவர் என்ன பதில் சொல்வார்? முகம் கறுத்துப் போகத் தலை கவிழ்ந்து நின்றிருந்தார்.

''மணவறையில அமரவச்சோமே அந்தப் பெண் ஆரெண்டு தெரியுமா?''

அவன் கடுமையாக, நீதிமன்ற வழக்கறிஞர் கேட்கும் பாணியிலேதான் கேட்டான். அவர் தெரியாதென்று தலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் அசைத்தார். பேச அவருக்கு ஏது வாய்? முத்து வேலுவுக்குத் தெரியாமல் முடித்து விடலாமென்ற வீமண்ணரின் தூபத்துக்குத் தலையாட்டியவர்தானே! பேசத் துணிவு பிறக்குமா?

''செத்துப்போன வயிரமுத்து வட்டவிதானை, அவருடை மகள். அமரியக்காவுக்கு ஒரேயொருமகள் செங்கமலம், அவள்தான் அது. இப்ப தெரியுதா?

''வயிரமுத்துட பெட்டையா?'' இப்போதுதான் முதல் தடவையாக, அவர் முத்துவேலுவின் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்தார்.

''அந்தப் பெட்டைக் கென்ன? அவளை ஏன் மணவறையில...'' அந்தப் பார்வை முத்துவேலுவை இப்படிக் கேட்டது. அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. அதற்கிடையில், வாசலில் உறுமிக் கொண்டு வந்து நின்ற 'ஜீப்' வண்டி அவனின் கவனத்தை ஈர்த்துவிட்டது. அவன் மாத்திரமல்ல, அத்தனை உயிர்களையும் அந்த 'ஜீப்' திரும்பவைத்து விட்டது.

அதிலிருந்து ஒரு 'இன்ஸ்பெக்ட'ரும் இரு 'கான்ஸ்டபிள்'களும் இறங்கி உள்ளே வந்தார்கள். அத்தனை உள்ளங்களும் திடுக்கிட்டன. அத்தனை கண்களும் பரபரப்போடு அகலத் திறந்தன.

முத்துவேலுவுக்கே அது அதிர்ச்சியாய் இருந்தது. பொலிசுக்குத் தகவல் கொடுத்தது யார்? அவனுக்கே அது தெரியாது.

அவசரமாக மஞ்சுளா அவனை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவன் முகத்திலேற்பட்ட மாறுதலை அவள் கவனித்து விட்டாள். அவனை வாய்திறக்க விடவில்லை மஞ்சுளா. கண்களால் பேசிய பேச்சு, மஞ்சுளாவின் சைகைகளைப் புரிந்து கொண்டு, மீண்டும் அந்தப் பொலிஸ்காரர்களை நோக்கினான். அவனது உள்ளம் அப்போதுதான் சாதாரண நிலைக்கு மீண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முத்து, இவர்தானே உங்க அப்பா?'' மஞ்சுளா முத்துவைக் கேட்டாள். முத்துவேலுவிடமிருந்து பதில் பிறக்கு முதலே, அவரை அவள் நேருக்கு நேராகப் பார்த்தாள்.

''இந்தச் சதிக்கு நீங்களும் உடந்தையாமே!'' - மஞ்சுளாவின் குரலுக்கு முத்துவின் தந்தை அதிர்ந்து போனார்.

''எந்தச் சதி?'' அவரின் குரலே நடுங்கியது.

பொலிஸ்காரர்கள் மணவறைப் பக்கமாகச் சென்று விட்டதால், அத்தனைபேரும் அங்கேயே கவனமாயிருந்தனர். இந்தப்பேச்சுகள் மஞ்சுளா - முத்துவேல் - முத்துவின் தந்தை மூவரிடையேதான் அடங்கின.

மஞ்சுளா போடியார் பொன்னுத்துரைக்குப் புதியவள். அந்தப்பெண் போட்ட புதிய 'இடி' அவரைக்கதி கலக்க வைத்தது.

''எந்தச் சதி?...'' அவர் மீண்டும் கேட்டார் முத்துவேலுவைப்பார்த்து அவள் கண்களால் பேசிவிட்டுச் சொன்னாள்.

''மயங்கிக் கிடக்கிறளே அந்தப்பெண், செங்கமலம்; அவளின் தாய் பொலிசிலே 'என்றி' போட்டிருக்கிற தனது மகளிடமிருந்து வடிவேலுவைப் பிரித்து, உங்கள் மகளுக்கு மணஞ்செய்ய முயன்றீர்களாம். ஒருபெண்ணின் வாழ்வைக் கெடுக்கச் செய்த சதிமுழுதுக்கும் நீங்கள் தான் பொறுப்பாளி.''

''என்னது?''

'அதுதான் பொலிஸ்காரர்கள் வந்திருக்கிறர்கள்.... இவ்வளவுதான் எனக்குத் தெரியும்.''

''இதென்ன அநியாயமிது? இதெல்லாம் எனக்கொண்டும் தெரியாதே. ஆருட்டயிருந்து பிரிச்சனும்?...''

''ஆருட்டயிருந்து? மயங்கிக் கிடக்கிற செங்கமலத்திடமிருந்து; வடிவேல்தான், அவள் காதலன் - கணவன் - எல்லாம். அவள் இப்ப மூன்றுமாதம். படித்துக் கொண்டிருந்த அந்தப் பிள்ளையைக் கெடுத்து, நடுத்தெருவில் தள்ளிப்போட்டு வந்த கசபோக்கிலிக்கு, இங்க கலியாணம் நடக்குது, கலியாணம்! வயதுபோன, புத்தியுமா இப்படிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழாப்போகணும்? மூளை கீளை குழம்பிப் போச்சா? எல்லா ருக்கும் பயித்தியம் தானு?

நாளையோட செத்துப்போறதெண்டா, நாணயம், ரோசம், மானம், மரியாத தேவல்ல. இருக்கிறவங்களுக் கெல்லாம், ஏன் இப்படி ஊத்தையைக் கிளறி நாத்த மெடுக்கப் பண்ணணும்? வயதுபோனு மூளையுமென்ன களி மண்ணுப் போறதா? பெத்த மகன் என்னத்துக்கு? ஒரு வார்த்தை சொல்லக்கூடாது தான்...'' சாதாரணமாகப் பேசத்தொடங்கிய முத்து, ஆத்திரம் மீறி ஏதோவெல்லாம் பேசிக்கொண்டு போனுன். அது இன்னும் முற்றும் போலி ருந்தது. மஞ்சுளா குறுக்கிட்டாள்.

''போதும் போதும், இதைவிட்டுத்து, இப்ப நடக்கி றதைக் கவனியுங்க...''

''என்னத்தைக் கவனிக்கிற? நமக்கு இங்க என்ன இருக்கு? எங்காவது தலைக்கறுப்புக் காணுமல் தொலைந்து விடவேண்டியதுதான். அவங்கவங்கட மனம்போல அனுப விக்கட்டும் வாறதை.''

போடியாரின் முகம் கலக்கத்தால் தவித்தது. அதைப் பார்க்க மஞ்சுளாவுக்குப் பரிதாபமாயிருந்தது. அவர் மஞ்சு ளாவைப் பார்த்தார்.

''இதுக்கிப்ப என்ன செய்யிற?'' கேட்டார்.

''வெளியதெரிஞ்சா வெக்கக்கேடு, கலியாணம் நடந் துதான் தீரணும்...'' மஞ்சுளா சொன்னுள்.

''பொலிசு வரைக்கும் போனபிறகு வெளியவேற தெரியவேணுமா? முத்து குறுக்கிட்டான்.

''நீங்க சும்மா இருங்க.'' அவள் அவனை அடக்கினுள்.

''முகுத்தத்துல கலியாணம் நடக்கட்டும், வடிவேலு வுக்கும் செங்கமலத்துக்கும். அதே நேரத்தில உங்க மகளுக் கும் நடந்தாகணும். பொலிசைச் சமாளித்துப் போடலாம்.

''அதுக்கு அவன்?...''

''மாப்பிள்ளை வடிவேல் சம்மதிக்க வேணுமா? அதுதானு தயக்கம்? அவன் நாங்க செங்கமலத்தைக் கொணர்ந்த நேரத்திலிருந்தே, தலையைக் கவிழ்ந்தவன்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர நெஞ்சழுத்தம் எங்கேயிருக்கு? இனி மறுக்கவா? அதுவும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் முன்நிலையில்?''...

போடியாருக்கு வேறு வழி தெரியவில்லை. இன்னொன்றை நினைத்துத்தான் அவர் தனக்குள்ளே தவித்தார். 'வள்ளிக்கு அதேநேரத்திலே எப்படி முடிப்பது? முருகேசன் உடல்படுவானோ?...'

''என்ன யோசிக்கிறயள்?'' மஞ்சுளா கேட்டாள்.

''இல்ல, வள்ளிட இதப்பற்றித்தான்...''

''ஏன் இதில என்ன தடங்கல்?... அவங்க அத்தானுக்கு வள்ளி...'' மஞ்சுளாவின் வார்த்தைகள் திட்டமாக ஒலித்தன.

''முருகேசன் அப்பிடியொண்டும் உங்க வீட்டு நாயில்ல உஞ்சு எண்டதும் ஓடிவரவும், அடியெண்டதும் ஓடிப்போகவும். தன்மானம் எல்லாருக்கும்தான் இருக்கு அவனும் ஒரு ஆண்பிள்ளைதான், இத்தனை அவமானத்துக்குப் பிறகு, அவனை நததிப்போக வெக்கமில்ல? தூ...'' முத்துவேல் ஆத்திரத்தோடு காறித் துப்பினான்.

போடியாருக்கு அழும்நிலை வந்துவிட்டது. தலையைக் கவிழ்ந்து திரும்பிக் கொண்டார்.

''முத்து இப்படி வாங்க'' அழைத்துச் சென்றாள் மஞ்சுளா. ''பாவம் வயதுபோன காலத்துல இப்படி வதைக்காதீங்க. நடந்தது நடந்துபோச்சு இனி நடப்பது நடக்கட்டும்''

''சரி நேரம் போகுது. இன்னும் கால்மணி நேரந்தானிருக்கு... ம்...'' சிரித்தான் முத்துவேல். ''எனக்கு இதெல்லாம் பார்க்க ஏதோ சினிமாவில பாக்கிற மாதிரியிருக்கு மஞ்சுளா! நாம இப்படியே விட்டுட்டுப் போனால் எபபடி?...''

''அதெல்லாம் தானே சரிவரும், வாருங்க இங்கே, நான் கூப்பிட்டா உங்க தங்கச்சி வரமாட்டாள். நீங்கதான் பிடிச்சுக்கொண்டு காருல ஏத்துங்க. இங்க எல்லாம் நடக்கிறபடி நடக்கும். இன்னும் என்ன தயக்கம்? 'இன்ஸ்பெக்டர்' நடேசன் முன்நின்றே இந்தக் கலியாணத்த இங்க நடத்திமுடிப்பார்... உம், நடவுங்க...'' மஞ்சுளா அவசரப் படுத்தினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ. அப்ப சரி...'

முத்துவேல் மணவறையை நோக்கி நடந்தான். வடிவேலுவின் குனிந்ததலை இன்னும் நிமிரவில்லை. செங்கமலம் மயக்கம் தெளிந்து நிமிர்ந்திருந்தாள். அவள் முத்துவேலுவைத் தீனமாகப் பார்த்தாள். அந்தக் கண்கள் நன்றி கூறுமல் கூறின. 'இன்ஸ்பெக்ட'ரும் 'கான்ஸ்டபிள்'களும் பந்தலில் போட்டிருந்த இரும்புக் கதிரைகளில் அமர்ந்திருந்தனர். அவர்களை நெருங்கினன் முத்துவேல்.

"சேர், இனி உங்க பொறுப்புத்தான்..."

"அதெல்லாம் நடக்கிறபடி, நடக்கும் நேரமாகுது. நீங்க போங்க என்ருர் 'இன்ஸ்பெக்டர்' நடேசன்.

முத்துவேலுவின் கண்கள் அந்தப் பந்தலில் குழுமியிருந்த பெண்குழாம் எங்கணுமே துளாவி ஏமாந்தன. அவன் போகும்போது செங்கமலத்துக்கு விசிறிக் கொண்டுதானே நின்றிருந்தாள் வள்ளி. அதிக நேரம் அவன் நிற்கவில்லை. வாசலையடைத்துக் கொண்டிருந்த, பெண்களையெல்லாம் விலக்கிக் கொண்டு, உள்ளே புகுந்தான்.

உள்வீட்டின் மூலையிலே ஏமாற்றத்தின் பிம்பமாக கேவிக்கேவி அழுது கொண்டிருந்தாள் வள்ளி. கல்யாணம் நின்றது ஏமாற்றமல்ல; கானல் நீரை நம்பித் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டது எத்தனை பெரிய அவமானம்!

பெண்புத்தி பின்புத்திதானு? அப்படி மணப்பதானுல் வேறு யாரையாவது மணந்திருக்கலாம். போயும் போயும் இந்த வடிவேலுவை மணக்கத் துணிந்த முட்டாள்தனத்துக்கு இந்தத் தண்டனை போதாது. சித்திரவதை வேண்டும். தன் காதலனையே இன்னொருத்திக்கு விட்டுக் கொடுக்கப் போய், தன்னைவிடப் பரிதாபமான பேதைப்பெண் ஒருத்தியின் காதலனை - இல்லை கணவனை, தட்டிப் பறிக்கத் துணிந்த குற்றம் மன்னிக்கக் கூடியதா? வள்ளிக்கு இது போதாது. அவளை அந்த மணப்பந்தலின் நடுவிலே கட்டி வைத்து இரத்தம் சொட்டச் சொட்டத் திருக்கைவாலால் அடிக்க வேண்டும். அதுதான் தனக்குத் தகுந்த தண்டனை என்று அவள் ஒருகணம் நினைத்தாள். அதுவும் போதாது. வள்ளிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிறப்பிலே மணவாழ்வு கிட்டவே கூடாது சாகும் வரை - இல்லை ஏழேழு பிறப்புக்கும் அவள் கன்னியழியா மலேயிருக்க ஒருசாபம் கிடைக்க வேண்டும் 'வள்ளி உனக்கு அதுதான் சரி' வள்ளிக்கு வள்ளியே இப்படியொரு தண்டனை விதித்துக் கொண்டு அழுது வடித்தாள்.

இந்த வேளையிலேதான் முத்துவேல் திடுமென்று பிரவேசித்தான். அவன் ஒரு பேச்சுப் பேசவில்லை. அந்த மணக்கோலத்துடனேயே, அவள் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துச்சென்று, காரின் பின்கதவைத்திறந்து தள்ளிவிட்டான். மஞ்சுளாவும் பொன்னியும் வள்ளியின் இருபுறமும் 'டக்' கென்று அமர்ந்து கொண்டார்கள். அந்த அழகிய நீலக்கார் ஒய்யாரமாகப் புறப்பட்டது.

## 18. சங்கமம்

'தேமல் அழகி பெண்ணாக
திருநீற்றுப் பொட்டழகி
மார்பழகி வள்ளிப்பிள்ளை - உன்னை
மறக்கமனம் கொள்ளுதில்லே'

பெண்கள் வியப்புக்கிடமான விசித்திரப் பிராணிகள், அத்தனை இரகசியங்களையும், துன்பப்புயலால் உருவாகும் துயரச் சுழிகள் அத்தனையையும், வெகு சுலபமாக, ஆழமான கடல்போல அடிமனத்திலே புதைத்துக் கொண்டு, மற்றவர்களின் திருப்திக்காக, மற்றவர்களின் இன்பத்துக்காகப் புன்னகை செய்ய அவர்களாலேதான் முடியும். அதிலும் மஞ்சுளா முதன்மையானவள். மேகத்துக்கு தன்னை நீராக்கி நிலத்திலே கொட்டத்தான் தெரியும். அதன்பின் அந்த மேகம் இருந்த இடம் தெரியாமலே மறைந்து விடுகிறது. மேகத்துக்கு ஒரு பெயர் மஞ்சு. அந்த மேகத்தைவிட ஒருபடி உயர்ந்தவள் மஞ்சுளா. இந்த மஞ்சுளாவின் அன்புமழையில் தழைக்காத மனிதப் பயிர்கள் இருக்கமுடியாது. அந்த அன்பினால் தனக்கென்று எதையும் அவள் சிறைப்படுத்தியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. அப்படி நினைத்தாலும் அது நடக்கவே நடக்காது. மற்றவர்களுக்கு அன்பைக் கொட்டுவதால் அவள் தன்னை அழித்துக் கொள்வதுமில்லை. புதுப்புது அனுபவங்களை, எந்தப் புழுக்கத்தையும் மனத்தோடு கட்டிக் கொண்டு அனுபவிக்கிறாள். அதனாலேதானோ என்னவோ, அவள் மற்றவர்களின் திருப்திக்காக, நினைப்பது நடந்து முடிகிறது. அதே நேரத்திலே அவளுக்காக அவள் நினைப்பது நடக்காமலே போகிறது. அதற்காக அவள் விரக்தி கொள்வதில்லை. தன்னையே அழித்துக் கொள்வதுமில்லை. தனது வாழ்க்கையை ஏதோ ஒரு பரிசோதனைக்காக அர்ப்பணிப்பதுபோல அவள் வாழ்கிறாள். அந்தப் பரிசோதனையின் முடிவை இயற்கையின் நியதிக்கே விட்டிருப்பதாகத் தோன்றுகிறது. அதனாலேதான் அவள் மேகத்தைவிட மேலானவள்!.

ஏதோ ஒரு மூலையிலே நின்று, சலனமில்லாத இருட் குழம்பை ஊடுருவி, எல்லையில்லாத வானத்தின் அடித்தளத்திலே அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்த நட்சத்திரங்களைக் கவனித்தவாறே இப்படி எண்ணமிட்டான் முருகேசன்.

வடிவேலுவுக்குப் புத்தி வந்ததா அல்லது புத்தி வந்ததுபோல நடந்து கொண்டானா? கல்யாணம் முடிந்த கையோடேயே அவன் தனது வீட்டுக்குச் செங்கமலத்தோடு புறப்பட்டுவிட்டான். மாப்பிள்ளையாகப் பவனி வந்தது போலவே, கல்யாண ஊர்வலமும் நடந்து அவன் வீட்டையடைந்தது. முடிவுவரை அந்த 'இன்ஸ்பெக்டர்'ரும் 'கான்ஸ்டபிள்'களும் அவனோடேயே வந்தார்கள். ஊர்வலத்துக்குப் பொலிஸ்பாதுகாப்புத் தேடிக்கொண்டதுபோல, ஒரு கௌரவமாக அதை மக்கள் நினைத்தார்கள். விஷயம் தெரியாதவர்கள் செங்கமலத்தை வள்ளியென்றுதான் நினைத்தார்கள். விஷயம் தெரிந்தவர்கள் தமக்குள்ளேயே குசுகுசுத்துக் கொண்டார்கள்.

முருகேசன் - வள்ளி திருமணம் ஒன்றும் தாம் தூம் என்று நடைபெறவில்லை. அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் சந்நிதியில் குறிப்பிட்ட முகூர்த்த நேரத்திலே வள்ளியின் கழுத்திலே தாலியேறியது. அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்ததன்படி மஞ்சுளாவின் வீட்டிலே திருமணப் பதிவுக்காரர் காத்திருந்தார். ஆலயத்திலிருந்து திரும்பியகையோடேயே திருமணப்பதிவு அமைதியாக நடைபெற்றது. அந்த அழகிய நீலக்கார் அவர்களை மீண்டும் ஏற்றிக்கொண்டு ஒய்யாரமாக நகர்ந்து, வள்ளியின் வீட்டையடைந்ததும், மங்கிப்போயிருந்த விளக்குகள் தூண்டிவிடப்பட்டன. உறங்கிப்போய்ச் சோபையிழந்திருந்த அந்தப் பிரதேசம் விழித்துக்கொண்டு பொலிவுற்றுத் திகழ்ந்தது.

கனவுபோல நடந்து கழிந்த இவ்வளவையும் ஒரு தடவை கண்முன்னே கொணர்ந்து நிறுத்தி, ஒதுக்கிவிட்டுத் தனக்குள்ளே சிரித்தான் முருகேசன்.

முத்துவேல், மஞ்சுளா, பொன்னி மூவரும் பந்தலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். பொன்னுத்துரைப் போடியார் எங்கோ ஒரு மூலையிலே முடங்கிக் கிடந்தார்.

''கார்க்காறன் காத்து நிக்கிறான்'' என்றாள் பொன்னி கொட்டாவியை ஒரு மாதிரியாக அடக்கிக் கொண்டு.

''மஞ்சுளா, உங்க இன்ஸ்பெக்டர் அத்தானுக்கு இப்போதே நன்றி சொல்லவேணும் போலிருக்கு. நானும் வாறேனே...'' முத்து மஞ்சுளாவிடம் கேட்டான்.

''அதொண்டும் அவசரமில்ல. நாளைக்குச் சொல்லலாம். மணி பன்னிரெண்டாகுது. நான் போய்வாறன்.'' மஞ்சுளா எழுந்தாள்.

''என்ன இது? அண்ணு ஒரு பக்கத்துல, மச்சாள் ஒரு பக்கக்துல, சந்திக்காத துருவம்போல நிற்குதுகள். எல்லாரும் விட்டுத்துப் போனு? பொன்னி இப்படி இழுத்தாள்.

''முத்து...!'' காலெடுத்து வைத்த மஞ்சுளா திரும்பி நின்றாள்.

''என்ன சிஸ்டர்?'' முத்துவேல் கேட்டான்.

''உங்க மச்சானை ரூமுக்கு கொண்டு போவது உங்க பொறுப்பு. நான் வள்ளியக்காவைக் கவனிக்கிறன். ம்... எழும்புங்கோ...''

முத்துவேல் சிரித்துக் கொண்டேயெழுந்து முருகேசனைத் தேடிப்போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வளவு மூலையிலே கிடந்த விறகுக் கட்டொன்றிலே வலது காலை வைத்து, அதிலே கையை ஊன்றி, முகத்துக்கு அணைகொடுத்தபடி நின்றிருந்தான் முருகேசன்.

''என்னடாப்பா இது? என்னோடை கோபமா? வள்ளியோடயா? ஆரோடயெண்டாலும் கட்டி மூலையில போட்டுத்து, நடக்கிறதப்பார். நடந்ததைத் திரும்பத் திரும்ப நினைக்கிறவன் கோழையாம். இங்க பாருடாப்பா முருகு, இவ்வளவு நாளும்தான் நீவேற, அவள்வேற. வள்ளி இப்ப உன்ட சொத்து நீ கடித்துச் சுட்டாலும் சரி, சுட்டுக் கடித்தாலும் சரி - உம்; வா...'' முருகேசனின் கையைப் பிடித்து உள்ளே இழுத்து வந்து, அந்த ரூமுக்குள்ளே தள்ளிவிட்டு, சிரித்துக்கொண்டே திரும்பினான் முத்துவேல்.

அந்தச் சாதாரண அறைக்குள்ளே போனதுமே, மயக்கம் வரும்போலிருந்தது முருகேசனுக்கு. ஊதுவர்த்திகள் எங்கிருந்தோ புகைந்து மணம் பரப்பின. பவள மல்லிகை மலர்கள் அந்தக் கட்டிலின் வெண்பரப்பிலே சிரித்துக்கொண்டு, சுகந்தத்தை அள்ளிக் கொட்டின. கிண்ணத்திலே தன்னை சேருக்கிக்கொண்டு மற்றவர்களின் திருப்திக்காகக் கமகமத்துக் கிடந்தது சந்தனம்.

'சாம்பலாகிப்போகும் அந்த ஊதுவர்த்திகள்; விடிய முதலே சருகாகிப்போகும் பவள மல்லிகை; பூசியவுடனேயே உடலின் காங்கை தாங்காது உலர்ந்து உதிரப் போகும் சந்தனக் குழம்பு...

'எல்லாமே மற்றவர்களுக்குக் கணநேர இன்பத்தையளித்துத் தம்மையே அழித்துக்கொள்பவைதாம். ஆனால், தன்னைத் தனக்குள்ளே அழித்துக்கொண்டு தன்னை அழியாதவளாகக் காட்டி நடித்துக்கொள்கிறாளே மஞ்சுளா, அவள் உயர்ந்தவள்தான். அவள் உயர்ந்தவளானால், அவளைப் பெற்ற — அவள் பிறந்த பெண்மை உயர்ந்தது. அப்போது இந்த வள்ளியும் உயர்ந்தவள்தான். அப்படியானால் அவள் வடிவேலுவை மணக்க ஒருப்பட்டது?...

'அது அவள் தவறல்ல; ஆண்மையின் தவறு - இந்த முருகேசனின் தவறு அவளைப் பிணைத்திருந்த அன்புத் தளையை இழுத்து இறுக்காது, நெகிழவிட்டது முருகேசனின் தவறு. சரிதான்; மூச்சை ஆழமாக இழுத்துவிட்டவாறே ஒருவிதச் சோர்வோடு, அந்தப் படுக்கையிலே சாய்ந்தான் முருகேசன். ஆனால் நெடுநேரம் அவனால் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து அந்த யன்னலோரமாக நடந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையே எரித்துப் புகைச்சுருளை வெறும்வெளியிலே கலக்க விட்டு திருப்தியடையும் அந்த ஊதுவத்தியில் மின்னும் சாம்பல் மூடிய தணற்பகுதியை உற்றுநோக்கிக்கொண்டு நெடுநேரம் நின்றிருந்தான்.

கதவுக்கு அப்பால் ஏதோ அரவம் கேட்டது. "இங்க பாருங்கக்கா, என்ட சொல்லை நீங்க கேட்கல்ல?... பிறகு வலோற்காரம்தான் நடக்கும்..." சந்தேகமில்லை. அது மஞ்சுளாவின் குரல்தான்.

இரண்டொரு நிமிடங்களில் சார்த்தியிருந்த கதவு உள்ளாகத் திறந்துகொண்டது. வள்ளியைக் குண்டுகட்டாகத் தூக்கியபடியே சிரித்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள் மஞ்சுளா. கதவோரத்தில் நின்று, தலையை உள்ளே நீட்டிக் கொண்டு பொன்னியும் சிரித்தாள். அந்தக் கட்டிலிலே வள்ளியை அப்படியே மல்லாக்காகக் கிடத்திவிட்டு, அவள் ஓட்டமாக வெளியே ஓடிக் கதவைப் படீரென்று இழுத்து மூடினாள். கையடிப்பும் சிரிப்பும் சற்றுநேரம் கும்மாளமிட்டன. வெளிப்புறம் தாட்பாளிடும் ஒலி கேட்டது.

மஞ்சுளாவோ, முருகேசனோ எதிர்பார்த்ததுபோல வள்ளி எழுந்து வெளியே ஓடமுயலவில்லை. பிடுங்கிப் போட்ட வள்ளற்கீரைபோல, அவள் அப்படியே கண் மூடிக் கிடந்தாள். பின், கண் திறந்தாள். ஊதுவத்திகள் புகையைச் சுருளவிட்டுக்கொண்டிருந்த அந்த யன்னலோரத்துக்கு ஓடின. உடனே, அவள் சட்டென்று துடிப்போடு எழுந்தாள். எழுந்தவளால் எடுத்தடிவைக்க முடியவில்லை. தடுமாறி எப்படியோ நடந்து, பக்கவாட்டிலிருந்த மற்ற யன்னலண்டை சென்று பற்றுக்கோடாக, யன்னற் கம்பிகளைப் பற்றியவாறே நின்றிருந்தாள்.

விநாடிகள் நிமிடங்களாகின. நிமிடங்கள் மணிகளாகின. ஒருமணிநேரத்தை விழுங்கிவிட்ட திருப்தியோடு கடிகாரத்தின் சிறிய தடித்தமுள் ஒருமணியெனச் சுட்டிக் காட்டிக் குதூகலித்தது.

இன்னும் முருகேசன் வைத்த சிலைமாதிரி அப்படியே தான் நின்றிருந்தான். அந்த வைரம் பாய்ந்த இதயத்தில் தளர்வு தெரியவில்லை; வயல் வேலையால உரம்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கமோ என்னவோ கால்கள் சோர்ந்து இடுப்புவலி யெடுக்கவில்லை.

ஆனால் வள்ளிக்கோ அது இயலவில்லை. அப்படியே அவள் கீழே சுவரோரமாக அமர்ந்து, கையை நிலத்திலே ஊன்றித் தலையைக் குனிந்துகொண்டாள்.

அவன் என்ன கல்லா? சதையாலும் நரம்பாலும் எலும்பாலும் ஆன மனிதன்தானே!

அடுத்த ஒருமணி நேரத்தையும் காலதேவன் விழுங்கி விட்டான். மணி இரண்டு, இன்னும் எத்தனையோ வினாடி களும் நிமிடங்களும் விடைபெற்றுக்கொண்டே நகர்ந்தன.

அந்தச் சிறிய 'ரீப்போ'யில் இருந்த, சிறிய மணிக் கூட்டின் மெல்லிய ஒலியைவிட, காதலில் ஊடி, அந்த ஊடலைத் தரிக்கவுமாற்றாது தன்மானத்தை அழிக்கவு மாற்றாது தவிக்கும் இரண்டு ஜீவன்களின் உயிர்மூச்சுக்கூட ஓடுவது தெரியவில்லை. அத்தனை அமைதிஅங்கு நிலவியது.

சற்றுநேரத்தில் புத்தம்புது வேட்டி சரசரத்தது. முரு கேசன் கட்டிலைநோக்கி நகர்ந்தான். அதில் கையைத் தலைக்கு அணைகொடுத்தவாறே சாய்ந்து கிடந்தான்.

வள்ளி தலைகிழப்பிப் பார்த்தாள். அவளால் இனியும் அப்படியேயிருக்க முடியவில்லை. எழுந்தாள். கால்மாட்டி னோரமாக கணநேரம் நின்று தயங்கினாள். அந்த நிலையும் நிலைக்கவில்லை. ஓவென்று அழவேண்டும்போல் தொண்டை விம்மியது. மார்பு நெடுமூச்சால் கனத்தது; கண்கள் கலங்கி நீர்த்திரை கட்டின; கால்கள் நடுங்கின. அப்படியே மண்டி யிட்டு, அமர்ந்து, கட்டிலில் கிடக்கும் அவனது பாதங் களைக்கட்டி முகம் புதைத்தாள்.

அவள் விசும்பி விசும்பி அழுதாள். அவன் பாதங்கள் கண்ணீரில் நனைந்து ஈரலித்தன. கண்ணீரால் அவன் பாதங் கள் கழுவப்பட்டன. ஆயினும் இன்னும் சுடுநீர்த்துளிகள் அவன் பாதங்களை வருடி வழிந்தன.

முருகேசனின் கல்லான நெஞ்சம் பாகாக உருகியது. துடிதுடித்துக் கதறியது. அவனால் மேலும் அவன் நெஞ்சத் தைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. அவனையறியாமலே எழுந் தான். நா தளுதளுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வள்ளி...'' தன் இரு கைகளாலேயே அவள் தோள் களைப் பற்றி நிமிர்த்திஞன்.

"அழுகிருயா?..." அவன் கேட்டான். அதற்கென்று தான் தேக்கிவைத்திருந்ததுபோல் பொலபொலவென்று கண்ணீர் கொட்டியது. 'மன்னித்து விடுங்கள் அத்தான் என்று அவள் வாய் திறக்கவில்லை. தீனமாக - குழந்தை போல வட்டமான அவள் விழிகள் அதைக் கேட்டுக் கெஞ் சின.

சந்தனம் தடவியிருந்த அவன் மார்பிலே குங்குமம் குலவிய அவள் முகமதி புதைந்தது. மிருதுவான அவள் தோள்களை அன்பில் இழைந்த அவன் கரங்கள் வருடின — வளைத்துக்கொண்டன.

அங்கு பேச்சுக்கு இடமில்லை. ஆஞல் அவனின் மனம் தனக்குள்ளே கண்மூடி இசைத்தது :

தேமல் அழகி பெண்ணுக
திருநீற்றுப் பொட்டழகி
மார்பழகி வள்ளிப்பிள்ளை — உன்னை
மறக்கமனம் கொள்ளுதில்லே'

என்ருே ஒன்ருகி, இடையிலே இழை நெக்குவிட்டுத் தளர்ந்து, தூரத்தூர நெகிழ்ந்த இதயங்கள், மீண்டும் நெருக்கமாகிச் சங்கமித்துப் பின்னிப் பிணைந்தன. ஒன்றில் ஒன்று நெகிழ்ந்து ஒன்றில் ஒன்றுஉருகி, ஒன்றில் ஒன்று கலந்து - அத்துவிதமாகி, ஒன்ருகக் கைகோத்து இன்பத் தடாகத்தில் முக்குளித்துத் திளைத்தன.

அதே நேரத்திலே, அந்த எவளோ ஒருத்தி மஞ்சுளா மஞ்சத்தில் நிம்மதியாக இமைகளை மூடித்துயில முற்பட் டாள். அந்த இமைகளுக்குள்ளே அவன் தோன்றிஞன்.

''மஞ்சு நீ மழை முகிலல்ல, அதைவிட மேலானவள்'' அவள் புன்னகைத்தாள். ஆஞல் அந்த இமைகளை மீறி விழிக்கோணங்களில் அவளை அறியாமலே துளிகள் பனித்து கன்னங்களை வருடின.

முற்றிற்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் செய்திகள்

## கல்முனை ''வியூகம்''

கல்முனைப் பகுதியின் இலக்கிய முனைப்புகள் காலத்துக்குக்காலம் பளிச்சிடுவதை தமிழ் இலக்கிய உலகம் நன்கு அறியும். இஸ்லாமியநூல் வெளியீட்டுப் பணியகம் நூல்களை வெளியிடுவதும், கல்முனை எழுத்தாளர் சங்கம் முதலிய அமைப்புகள் அவ்வப்போது இலக்கியப்பணிகளில் ஈடுபடுவதும் பிரசித்தம். இப்போது கல்முனையில் மற்றொரு இலக்கிய அமைப்பாக ''வியூகம்'' தோன்றியுள்ளது. அர்த்தமுள்ள பெயர் கவிஞர் மு. சடாட்சரன் அவர்களின் வழிகாட்டுதலில் காத்திரமான இலக்கியப்பணிகளில் 'வியூகம்' ஈடுபடும் என எதிர்பார்க்கிறோம்.

## ''மண்டூர் பிள்ளைத்தமிழ்'' வெளியீடு

களுவாஞ்சிகுடி பிரதேச கலாசாரப் பேரவையின் நூல் வெளியீட்டுத் திட்டத்தின்கீழ் முதுபெருங் கவிஞர், சைவமாமணி வி. விசுவலிங்கம் அவர்களின் ''மண்டூர் பிள்ளைத்தமிழ்'' என்னும் செய்யுள் நூல் முதல் பிரசுரமாக வெளிவந்துள்ளது. இதன் வெளியீட்டு விழா களுவாஞ்சிகுடியில் 6-3-88ல் நடைபெற்றது. மட்டக்களப்பு கல்வி மாவட்டத்தின் பிரதம கல்வி அதிகாரி திரு. க. தியாகராசா இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இவ்வைபவத்தில் சைவப்புலவர் சா. தில்லைநாதன் (அதிபர்) சிவச்செல்வி திருமதி பாக்கியரெத்தினம், இலக்கியமணி அழகேசமுதலியார் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

## ஏறுவூர் இலக்கியப்பேரவையின் ''கீழ்வான் சுவடுகள்''

ஏறுவூர் இலக்கியப்பேரவையின் கன்னி வெளியீடான ''கீழ்வான் சுவடுகள்'' கவிதைத் தொகுதி விரைவில் வெளிவரவிருக்கிறது. இத்தொகுதியில் முஸ்லிம் கவிஞர்களான, யூ. எல். தாவூத் சௌகத் கமால், அலெக்தர் எம். இஸ்மாலெப்பை, காத்தாங்குடிக் கவிராயர், வாழைச்சேனை அமர், எம். ஐ. எம். சுபைர், இளங்கோ அமிர், முதலியோரின் கவிதைகள் இடம்பெறுகின்றன. மூத்த முஸ்லிம் கவிஞ்ஞரான ஜனாப் யூ. எல். தாவூத் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அழகி:

இலக்கியமணி செல்வராச கோபாலின் ''தமிழழகி'' மகா காவியம் கனடாவில் கொம்பியூட்டர் அச்சகத்தில் தயாராகிக் கொண்டிருக்கிறது. 10 தொகுதிகளாக வெளி வரவுள்ள இம்மகோன்னத வெளியீட்டில் 9 காண்டங்களும். ஒவ்வொரு காண்டத்துக்கும் 9 படலங்களாக மொத்தம் 81 படலங்களும் ஒவ்வொரு படலத்துக்கும் 7 அங்கங் களாக மொத்தம் 567 அங்கங்களும் உள்ளன. ஒவ்வொரு அங்கத்திலும் 20 பாடல்களாக மொத்தம் 11340 பாடல் களும், பிற உதிரிப்பாடல்களும், சேர்ந்து மொத்தம் 12000 பாக்கள் இக்காவியத்தில் இடம் பெறுகின்றன. இக்காவியத்தின் பத்தாவது தொகுதியில் தொகுப்பு விபரங்கள் இடம் பெறவுள்ளன.

## "இயேசு புராணம்"

கனடாவில் வசிக்கும் இலக்கியமணி க. தா. செல்வ ராசகோபால் ''றிபளக்ஸ்'' அச்சகம் நிறுவி, கொம்பி யூட்டர் அச்சுமுறையில் ''நிழல்'' மாசிகை வெளியிட்டு வருவதுடன், அவ்வப்போது நல்ல நூல்களையும் வெளியிட்டு வருவது பற்றிய செய்திகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. அவர் கடைசியாக வெளியிட்டுள்ள ''இயேசு புராணம்'' மிக அழகிய முறையில் வெளிவந்துள்ளது. சுமார் 1057 பாக்களைக் கொண்ட இந்நூல், மட்டக்களப்புக்குப் பெருமைதரும் வகையில் பல செய்திகளைக் கொண்டுள்ளது.

## மட்டக்களப்பு இலக்கிய முயற்சிகளுக்கு மாநகர முதல்வர் ஊக்குவிப்பு

அண்மையில் நடைபெற்ற நூல் நிலைய ஆலோசனைக் கூட்டத்தில் இலக்கிய முயற்சிகளை விஸ்தரிக்கும் பல கருத்துக்களை மாநகர விசேட ஆணையாளர் திரு. சின்னையா தெரிவித்தார். வெளிநாட்டு உதவியுடன் 3 மாடி நூல் நிலைய அரங்கு அமைத்தல் நாவல் ஒன்று வெளியிடுதல் (உதயம் பிரசுரம் மூலம்) முதலியன இவற்றுள் அடங்கும். கனடாவில் வதியும் இலக்கியமணி க. தா. செல்வராசா கோபால் அவர்களின் நூல் வெளியீட்டு முயற்சிகளும் இக் கூட்டத்தில் பாராட்டப்பட்டன.

தொகுப்பு: 'மணி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதங்கள்

Ramakrishna Mission,
(Sri Lanka Branch)

Ramakrishnapuram
(Kalladi - Uppodai)
Batticaloa. (Sri Lanka)
23-01-1988

..........எம்மையும் ஒரு பொருட்டாகமதித்து விழாவில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்தமைக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தங்கள் அனைவருக்கும் தெரிவிப்பதுடன் கிழக்கிலங்கை எழுத்தாளர்களின் நாவல்களை காலாண்டுக்கு ஒன்று வீதம் வெளியிடும் ''உதயம்'' திட்டத்தின் கீழ் இடம்பெறும் இந்த விழா நல்லமுறையில் அமைந்து, இதைத் தொடர்ந்துவரும் விழாக்களுக்கு வழிசமைக்க வேண்டுமென பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரை மனதாரப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

சுவாமி ஜீவனானந்த

— ○ — — ● — — ○ —

''சிவநெறிப் புலவர்''
க' கனகராசா ஜே. பி.
உரிமையாளர்,
மில்க்வைற் சோப் தொழிற்சாலை

''திருஆலவாய்''
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
19-02-88.

தங்கள் உதயம் வெளியீடு கிடைக்கப்பெற்றோம். இத்துடன் ரூபா 101/-க்குரிய காசோலை அனுப்பியுள்ளோம்.

... ... ... ... ... ... தங்கள் வெளியீடு இலக்கியத்தையும், சமூகப் பண்பாட்டையும் நன்கு விளக்குகின்றது. தங்கள் பணி தொடரட்டும். எங்கள் ஆசீர்வாதங்கள்...

இப்படிக்கு,
க. கனகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr. S. Maunaguru**
B. A. Hons. Dip-in-Ed., M. A.

Dept. of Fine Arts,
University of Jaffna,
Thirunelvely, Jaffna.
23-02-1988.

... ... ... ... ... ... புத்தக வெளியீட்டுத்துறையில் உங்கள் முயற்சி சிரமம் தருவது. எனினும் பயன் மிக்கது. கிழக்கின் வாழ்வு தனித்துவமானது. அங்கு நிலவும் சமூக அமைப்பும், தொழில் முறைகளும், உறவு முறைகளும், சடங்கு சம்பிரதாயங்களும், வாழ்க்கைமுறைகளும், ஏனைய பிரதேசங்களிலிருந்து வித்தியாசமானவை. அவற்றை ஊனோடும், உதிரத்தோடும் தரும் தாக்கங்கள் இதுவரை அங்கிருந்து வராதிருப்பது பெரும் குறையே. இக்குறை உங்கள் வெளியீட்டகத்தின் மூலம் நீங்குமென எதிர் பார்க்கிறேன். ... ... ... ...

அன்புள்ள,
**சி. மௌனகுரு**

— ○ — — ● — — ○ —

**இலக்கியமணி ஆரையூர், நல். அளகேச முதலியார் அவர்களின் வாழ்த்து**

## உதயம் வாழியவே!

இன்பந் துய்க்கும் வாவியின் மீன்
இசைந்து மகிழ நம் தேனாட்டு
மண்ணில் கமழும் பெரிய ரோடு
மாசற மருவும் இளைஞர்ருக்கும்
அன்பிற் கனிந்த அறிஞருக்கும்
அனைத்து ஊக்கும் தாசருக்கும்
உன்னமா யெழு சக்தியினால்
ஊன்றும் உதயம் வாழியவே ...........

**நல். அளகேசமுதலியார்.**

''குமுதா''
பிரதான வீதி,
ஆரையம்பதி,
27-01-1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**த. பேரின்பம்**

ஆலையடிவேம்பு,
அக்கரைப்பற்று.
10-03-88

அன்புடையீர்,

உதயம் திட்டத்தின் கீழ் நாவல் இலக்கியங்களைத் தொடர்ந்து வெளியிடுவதென்ற நல்ல முயற்சியை வாழ்த்துகிறோம்

மேற்குறிப்பிட்ட முயற்சியில் நானும் ஒரு சாந்த தாரனுகச் சேர விரும்புகிறேன். பூரண விபரங்களை அனுப்பி வைக்கவும்.

அன்புடன்,

**த. பேரின்பம்**

— ○ — — ● — — ○ —

**நற்பிட்டிமுனை பளீல்** B. Sc.

நற்பிட்டிமுனை - 05
கல்முனை.
07-03-1988

அன்புடையீர்,

நீண்ட நாட்களாக எமது பிரதேசத்தில் தேவைப்பட்டுக் கொண்டிருந்த, மிகப் பொறுப்பு வாய்ந்த உங்கள், ''உதயம்'' முயற்சிபற்றி தெய்வதரிசனம் - நாவல் மூலம் அறிந்தேன். முதலில் உதயம் சளைக்காமல் வெளிவர என்வாழ்த்துக்கள்

எனது நாவலொன்றையும் ''உதயம்'' வெளியீடாக்கி வெளியிட விரும்புகின்றேன். உங்கள் பதில் கிடைத்ததும் நாவலை அனுப்பிவைப்பேன்.

அன்புடன்,

**நற்பிட்டிமுனை பளீல்**

---

தொகுப்பு:- ''ராம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS FROM :

# SOUTHERN STATIONERS

DEALERS IN

PRINTING MATERIALS & STATIONERY

88/8, First Cross Street,

COLOMBO-11.

Tele 01 - 27032.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from:

*M. N. Shanthy & Co.*

DEALERS IN

PRINTERS REQUISITES

**88, MALIBAN STREET, COLOMBO - 11.**

Tele: 01 - 25683.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திமிலைத்துமிலன்

நாடறிந்த கவிஞர், கடந்த கால் நூற்றுண்டுக்கு மேலாக கவிதை, கட்டுரை, சிறுகதை நாவல், நாடகம் முதலிய சகல இலக்கியத்துறைகளிலும் முத்திரை பதித்தவர். பரிசுகள் பல பெ[illegible] மட்டக்களப்பு ஆசி[illegible] கலாசாலையில் விரிவுரையாள[illegible] கடமையாற்றும் இவரது இயற்பெயர் எஸ். கிருஷ்ண[illegible] இலக்கியத்துறை மட்டும் அல்லாது ஓவியம், சிற்பம் மு[illegible] துறைகளிலும் சாதனைகள் புரிந்து, கண்காட்சிகளும் நட[illegible]யவர். இவரது ஆக்கங்கள் பல இருப்பினும் நூலுருவில் [illegible] வந்தவை சிலவே. அவை,

1. நீரரா மகளிர்
2. கொய்யாக் கனிகள்
3. நெஞ்சம் மலராதோ
4. அழகுமுல்லை
7. மஞ்சு நீ மழை முகில் அல்ல.

— அன்புமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org